2022 ජූලි 28
2022 யூலை 28
28th July 2022

NAOSL

# 2018 අංක 19 දරණ ජාතික විගණන පනතේ 14 වන වගන්තිය ප්‍රකාරව පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කරනු ලබන විගණකාධිපති ත්‍රෛවාර්ෂික වාර්තාව

# 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 14 ஆவது பிரிவின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் மூன்றாண்டு அறிக்கை

# Triennial Report of the Auditor General presented in parliament in terms of Section 14 of the National Audit Act, No. 19 of 2018

එකොළොස් වන කාණ්ඩය - 01
பதினோராவது தொகுதி - 01
Eleventh Volume - 01

## දිස්ත්‍රික් ලේකම් කාර්යාල
## மாவட்ட செயலகங்கள்
## District Secretariats

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE



**பொருளடக்கம்**


| | | |
|---|---|---|
| | அறிமுகம் | 02 |
| 01. | கொழும்பு மாவட்ட செயலகம் | 03 |
| 02. | கம்பஹா மாவட்ட செயலகம | 09 |
| 03. | களுத்துறை மாவட்ட செயலகம | 19 |
| 04. | காலி மாவட்ட செயலகம | 30 |
| 05. | மாத்தறை மாவட்ட செயலகம | 51 |
| 06. | அம்பாந்தோட்டை மாவட்ட செயலகம | 81 |
| 07. | மாத்தளை மாவட்ட செயலகம | 108 |
| 08. | கண்டி மாவட்ட செயலகம | 115 |
| 09. | நுவரெலியா மாவட்ட செயலகம | 130 |
| 10. | இரத்தினபுரி மாவட்ட செயலகம | 137 |
| 11. | கேகாலை மாவட்ட செயலகம | 144 |
| 12. | பதுளை மாவட்ட செயலகம | 152 |
| 13. | மொனராகலை மாவட்ட செயலகம | 157 |
| 14. | அனுராதபுரம் மாவட்ட செயலகம | 176 |
| 15. | பொலன்னறுவ மாவட்ட செயலகம | 192 |
| 16. | திருகோணமலை மாவட்ட செயலகம | 209 |
| 17. | மட்டக்களப்பு மாவட்ட செயலகம் | 218 |
| 18. | அம்பாறை மாவட்ட செயலகம | 224 |
| 19. | முல்லைத்தீவு மாவட்ட செயலகம | 234 |
| 20. | யாழ்ப்பாண மாவட்ட செயலகம் | 239 |
| 21. | வவுனியா மாவட்ட செயலகம | 246 |
| 22. | முல்லைத்தீவு மாவட்ட செயலகம் | 249 |
| 23. | மன்னார் மாவட்ட செயலகம் | 252 |
| 24. | புத்தளம் மாவட்ட செயலகம | 261 |
| 25. | குருநாகல் மாவட்ட செயலகம | 276 |

**கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் மூன்றாண்டு நிலைமை அறிக்கை - மாவட்ட செயலகங்கள் (2018, 2019, 2020)**

---

2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் 25 மாவட்ட செயலகங்கள் மற்றும் அதன் கீழ் செயற்படுகின்ற 328 பிரதேச செயலகங்களின் நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையினதும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்படுவதுடன் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்களை உள்ளடக்கிய அறிக்கை அந்தந்த ஆண்டுகளின் போது பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அந்த ஆண்டுகளில் உள்ளடக்கப்பட்ட எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்களுக்கிடையே மேலும் தீர்க்கப்படாதுள்ள பாராளுமன்றம் கவனம் செலுத்த வேண்டுமென நான் கருதும் முக்கியமான அவதானிப்புக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 14 ஆவது பிரிவின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற இந்த மூன்றாண்டு நிலைமை அறிக்கை மூலம் சமர்ப்பிக்கப்படுகின்றது.

## 2. அறிமுகம்

---

25 மாவட்ட செயலகங்களின் கீழ் 328 பிரதேச செயலகங்கள் செயற்படுவதுடன் வருடாந்த வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டிலிருந்து நிதிஏற்பாடு ஒதுக்கப்படுகின்றது. 25 மாவட்ட செயலகங்களின் கீழ் நிர்வகிக்கப்படுகின்ற பிரதேச செயலகங்களில் ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்குரிய அலுவலகங்கள் நடாத்திச் செல்லப்படுகின்றது. ஓய்வூதியத் திணைக்களம், சமூர்த்தி அபிவிருத்தி திணைக்களம், சமூக சேவைகள் திணைக்களம் போன்ற பல்வேறு அரசாங்க நிறுவனங்களின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக அலுவலகங்கள் நடாத்திச் செல்லப்படுகின்றன.

2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் 25 மாவட்ட செயலகங்களின் கீழ் ரூபா 78,728 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 72,343 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாட்டில் ரூபா 6,385 மில்லியன் சேமிக்கப்பட்டிருந்தது.

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் மூன்றாண்டு அறிக்கை
# (2018, 2019, 2020)

---

| கொழும்பு மாவட்ட செயலகம் | | | | |
|---|---|---|---|---|
| 2018 - | | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | | |
| 2019 - | | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | | |
| 2020 - | | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | | |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பிரதான குறைபாடுகள் | | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அது தொடர்பான தற்போதைய நிலைமை |
| | | | | |
| 01. | மாவட்ட செயலகத்தின் பதிவேடுகளின் பிரகாரம் அரசாங்கத்தின் உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கில் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 208,611,369 ஆக இருந்ததுடன் திறைசேரி பதிவேடுகளின் பிரகாரம் அந்த மீதி ரூபா 209,560,063 ஆகும். இதற்கு காரணமாக 2013 ஆம் ஆண்டு முதல் 08 வருடங்களை விஞ்சியிருந்த போதிலும் தீர்த்து வைக்கப்படாதிருந்த ரூபா 1,150,694 தொகையான இணக்கம் செய்யப்படாத வரவு மீதி மற்றும் மீளாய்வாண்டின் போது ரூபா 202,000 தொகையான | திறைசேரி பதிவேடுகள் மற்றும் திணைக்கள பதிவேடுகளின் பிரகாரம் வேறுபாட்டிற்குரிய இணக்கம் செய்யப்படாத மீதிகளை விரைவாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ரூபா 1,150,694 தொகையான இணக்கம் செய்யப்படாத வரவு மீதி தொடர்பாக நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்காக உரிய அறிக்கை உள்நாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சிற்கும் அரசாங்கத்தின் கணக்குகள் குழுவிற்கும் அனுப்பப்பட்டிருந்ததுடன் இந்த சம்பவத்திற்கு பொறுப்பு வாய்ந்த தற்போதைய அரசாங்க சேவையில் இருக்கின்ற உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுப்பதற்காக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றதுடன் | 08 வருடங்களை விஞ்சிய ரூபா 1,150,694 தொகையான இணக்கஞ் செய்யப்படாத வரவு மீதி தீர்த்து வைக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பிழையான செலவு வைத்தல் மீதி என்பன காணப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | செலவின தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 202,000 பிழையான செலவு வைத்தல் 2021 மார்ச் மாதம் திறைசேரி அச்சிடல் குறிப்புக்களின் மூலம் சரிசெய்யப்பட்டுள்ளது. | |
| | | | | |
| 02. | இடமாற்றலாகிச் சென்றமை, மரணமடைந்தமை, ஓய்வு பெற்றுச் சென்றமை, வேலை நீக்கம் செய்யப்பட்டமை மற்றும் சேவையை விட்டுச் சென்றமை போன்ற காரணத்தின் அடிப்படையில் தற்போது சேவையில் இல்லாத உத்தியோகத்தர்கள் மற்றும் 20 ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டிய நிலுவைக் கடன் மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 1,389,130 ஆக 2021 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் காணப்பட்டதுடன் அந்த மீதி 02 வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலத்திலிருந்து அறவிட வேண்டியதாக காணப்பட்டது. | உரிய ஊழியர்களிடமிருந்து நிலுவை கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 10 வருடங்களை பூர்த்தி செய்த அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு பிணையின்றி கடன் வழங்கும் அரசாங்கத்தின் கொள்கையின் அடிப்படையில் இவ்வாறான நிலைமை ஏற்பட்டுள்ளது. அதற்கு புறம்பான காரணங்களினால் ஏற்பட்டிருந்த நிலுவைக் கடன் மீதியை அறவிடுவதற்கு எங்களால் சகல நிறுவன ரீதியான மற்றும் சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | 2022 பெப்ரவரி வரையிலும் அவ்வாறே காணப்பட்டது. |
| | | | | |
| 03. | பொது வைப்பு (பழைய) கணக்கில் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 10,000,000 தொகையான வரவு மீதிக்காக 13 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் 2019 ஒக்தோபர் 15 ஆந் திகதிய 269/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 3.7 ஆம் | இந்த வரவு மீதியை தீர்த்து வைப்பதற்கு சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | பொது வைப்புக் கணக்கில் காணப்படுகின்ற ரூபா 10 மில்லியன் வரவு மீதியை ஏடுகளிலிருந்து பதிவழிப்பதற்கு உள்நாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது. அமைச்சின் மூலம் பணிப்பாளர் நாயகம், அரச நிதி திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. 2021 மே | 2022 பெப்ரவரி வரையிலும் ரூபா 10,000,000 தொகையான வரவு மீதி தீர்த்து வைக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம் தீர்த்து வைப்பதற்கு முடியாதிருந்தது. | | 04 ஆந் திகதி மீள்நினைவூட்டல் கடிதமும் அனுப்பப்பட்டுள்ளது. இது தொடர்பாக எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் யாவும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | |
| | | | | |
| 04. | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 570(அ) இன் பிரகாரம் காணி இழப்பீடு வைப்புச் செய்யப்பட்ட திகதி முதல் 10 வருடங்கள் கடந்ததன் பின்னர் காலாவதியான வைப்பாக அரசாங்கத்தின் வருமானத்தில் செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகத்திற்குரிய 11 வைப்புக்களில் ரூபா 3,962,668 தொகை காணப்பட்டதுடன் 2021 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் அந்த மீதிகளை தீர்த்து வைப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் தீர்த்து வைக்கப்படாத வைப்புக்களை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 11 காணி வைப்புக்கள் தொடர்பாக தற்போது உரிய நிறுவனங்களில் இருந்தும் செயற்திட்ட செயல்முன்னேற்றம் கோரப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அந்த வைப்புக்களையும் விரைவாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | மேலும் தீர்த்து வைக்கப்படாத 03 வைப்புக்கள் காணப்பட்டன. |
| | | | | |
| 05. | கணிப்பீடு செய்தல் மற்றும் மாற்றீடு செய்தல் வழுக்கள், ஓய்வூதியம் இரு தடவை செலுத்தப்பட்டமை, ஓய்வூதியகாரர்கள் மரணமடைந்ததன் பின்னர் அது தொடர்பாக உறுதிப்படுத்தப்படாமல் தொடர்ந்தும் ஓய்வூதியம் செலுத்தியமை, இராணுவ ஓய்வூதியத்திற்காக இரு | ஓய்வூதியம் சரியாக கணிப்பீடு செய்து பரீட்சிக்கப்பட்டதன் பின்னர் செலுத்துவதற்கும், மரணமடைந்த ஓய்வூதியக் காரர்கள் தொடர்பாக நாளதுவரையாக்கப்பட்ட தகவல்களைப் பெற்று ஓய்வூதியத்தை நிறுத்துவதற்கும், மேலதிகமாக | அந்த மீதிக்கு மேலதிகமாக செலுத்தியவைகள் ஆண்டின் போது ஒன்றுசேர்க்கப்பட்டு முன்கொண்டு வரப்படுகின்றது. இந்த நிலைமையில் ஓய்வூதிய திருத்தங்கள், மருத்துவ காரணங்களின் அடிப்படையில் முன்னரே ஓய்வூவு பெறச்செய்தமை மற்றும் 55 வருடங்கள் வரை ஓய்வூதியம் செலுத்துதல் போன்ற முப்படை | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மேலதிக கொடுப்பனவுகளின் அளவு ரூபா 24,207,556 ஆகும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | தடவை வாழ்க்கைச் செலவு படி செலுத்தியமை போன்ற பல்வேறு காரணங்களின் அடிப்படையில் கொழும்பு மாவட்டத்தின் 13 பிரதேச செயலகங்களுக்குரிய அதிகார பிரதேசத்தில் ஓய்வூதியகாரர்களுக்கு முறையற்ற வகையிலும் மோசடியாகவும் ஓய்வூதியம் மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 198 ஓய்வூதியக் காரர்களுக்கு அவ்வாறு மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்த போதும், தொடர்ந்தும் அறவிட வேண்டியதாகக் காணப்பட்ட ஓய்வூதியப் பெறுமதி ரூபா 23,958,120 ஆக இருந்ததுடன் அந்த தொகையில் ரூபா 22,347,228 தொகை 05 வருடங்களுக்கு குறைவான காலம் மற்றும் ரூபா 1,610,892 தொகை 5-10 வருடங்களுக்கிடையிலான காலத்திலிருந்தும் அறவிட வேண்டியதாக காணப்பட்டது. | செலுத்தப்பட்ட பணத்தை அறவிடுவதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | செயற்பாடுகளில் ஓய்வூதியம் மேலதிகமாக செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தமை, ஓய்வூதியகாரர்கள் மரணமடைந்த திகதி மற்றும் அது அந்த பிரதேச செயலகத்திற்கு அறிக்கையிடப்பட்ட திகதிக்கும் இடையே ஏற்படுகின்ற மேலதிக கொடுப்பனவுகள் (அனேகமாக ATM இயந்திரம் மூலம் உறவினர்கள் பணத்தை பெற்றமை), வாழ்க்கைச் செலவுகள் மேலதிகமாக செலுத்தப்பட்டமை அறிக்கையிடப்பட்டிந்தது. (விசேடமாக இராணுவ அங்கவீனர்கள் மற்றும் தங்கியிருப்போர்களுக்கான படிகளின் போது) ஓய்வூதிய மாற்றீடுகள் மற்றும் ஓய்வூதிய முரண்பாடுகளை கணிப்பிடும் போது ஏற்படுகின்ற வழுக்கள், ஓய்வூதியகாரர்களுக்கு ஒன்றிணைக்கப்படாத சம்பளம் செலுத்தப்பட்டமை போன்றவை இதற்கான காரணமாக இருந்தது. இந்த மேலதிகமாக செலுத்துதலை குறைத்தல் தொடர்பாக எடுக்கக்கூடிய தீர்வுகள் தொடர்பாக அனைத்து பிரதேச செயலகங்களில் கணக்காளர்களின் கீழும், ஓய்வூதிய பிரிவு காணப்படுவதுடன் அவர்களின் கடமைப்பரப்பில் ஓய்வூதியம் தொடர்பாக கவனம் செலுத்தப்படுகின்றமை வசதியீனமாக | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | இருந்தமையினால் ஓய்வூதியத்திற்காக தனியாக கணக்காளர் ஒருவரை நியமித்தல் போன்ற விடயங்கள் தொடர்பாக குறிப்பிட்ட சந்தர்ப்பங்கள் அநேக சந்தர்ப்பங்களின் போது ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்திற்கு கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் தற்போது இருக்கின்ற ஆகக்குறைந்த பயிற்சி உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தி இந்த நிலைமையை குறைப்பதற்கு எங்களினால் தொடர்ந்தும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | |
| | | | | |
| 06. | 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் கொழும்பு மாவட்ட செயலகத்தில் தீப்பிடித்ததனால் ஏற்பட்ட பாதிப்பிற்கு 08 வருடங்கள் மற்றும் மஹரகம பிரதேச செயலகத்தில் தீப்பிடித்தினால் ஏற்பட்ட இழப்பிற்கு 05 வருடங்களுக்கும் மேற்பட்ட காலம் கடந்திருந்தது. எனினும் அந்த இழப்பீடுகளை அறவிடுவதற்கோ அல்லது பதிவழிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்படாதிருந்த நட்டங்கள் மற்றும் இழப்புக்களின் பெறுமதி முறையே ரூபா 92,606,688 மற்றும் ரூபா 629,492 ஆக கூட்டுமொத்தமாக ரூபா 93,203,180 ஆக இருந்தது. 08 | இழப்புக்கள் மற்றும் நட்டங்கள் தொடர்பாக பரிசோதனைகளை மேற்கொண்டு அதற்கு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களுக்கும், ஊழியர்களுக்கும் எதிராக நடவடிக்கை எடுத்தல் மற்றும் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டம் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் மீளளிப்புச் செய்வதற்கும் மற்றும் விபத்திற்கான இழப்புக்களை தீர்த்து வைப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | மாவட்ட செயலகம் மற்றும் மஹரகம பிரதேச செயலகத்திற்கான தீ ஏற்பட்டதற்குரிய பொலிஸ் விசாரணைகள் இன்னும் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வில்லை. அதனால் கோவையின் நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு ஆலோசனை கோரி 2021 சனவரி 15 ஆந் திகதிய கடிதமொன்று உள்நாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது. | அந்த தீயினால் ஏற்பட்ட நட்டங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வருடங்கள் கடக்கும் வரையிலும் இது தொடர்பான பொலிஸ் விசாரணைகள் பூர்த்தி செய்யப்படாதிருந்தமையினால் அந்த இழப்புக்களை அறவிடுவதற்கோ அல்லது பதிவழிப்பதற்கோ முடியாதிருந்தது. | | | |
| | | | | |
| 07. | கொழும்பு, தெஹிவளை, கொலன்னாவ, கெஸ்பாவ மற்றும் ஹோமாகம போன்ற பிரதேச செயலகங்கள் நடாத்திச் செல்லப்படுகின்ற காணிகளின் உரித்து அந்த பிரதேச செயலகங்களுக்கு சொந்தமாக இல்லாதிருந்ததுடன் அவைகளின் உரித்தை கையேற்பதற்காக இதுவரையிலும் முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. உரித்து பிரதேச செயலகத்திற்கு சொந்தமாக இல்லாத இந்த காணிகளில் நிர்மாண நடவடிக்கைகளுக்காக அந்த பிரதேச செயலகங்களினால் அரசாங்கத்தின் பணம் கணிசமான அளவில் செலவிடப்பட்டிருந்தது. | பிரதேச செயலனங்கள் அமைந்துள்ள காணிகளும் சட்ட ரீதியான உரித்தை கையேற்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கொழும்பு பிரதேச செயலக காணி - அளவிடல் கட்டளைகளைப் பெற்று மிகுதி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் தெஹிவளை பிரதேச செயலகத்தின் காணிகள் தொடர்பாக மாவட்ட பொறியியலாளர் பிரிவினால் மிகுதி நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படுகின்றமையும், கொலன்னாவ பிரதேச செயலக காணிகளை கையேற்பதற்கு தேவையான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு உரிய பிரதேச செயலாளர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | கையேற்பதற்கான நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வில்லை. |
| | | | | |
| 08. | மஹரகம நகர அபிவிருத்திக்காக காணிகளை கைப்பற்றுவதன் கீழ் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான காணிகள் நகர அபிவிருத்தி | உரிய நிதி ஏற்பாடுகளைப் பெற்று இழப்பீட்டுப் பணத்தை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இதற்காக இலங்கை போக்குவரத்துச் சபைக்கு செலுத்த வேண்டிய ரூபா 112 மில்லியன் நிதிஏற்பாடு பொதுத் திறைசேரியிலிருந்து கோரப்பட்டுள்ளதுடன் அது | இதுவரை கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அதிகார சபை கையேற்றிருந்த போதிலும் 2016 பெப்ரவரி 02 ஆந் திகதிய மதிப்பீட்டு திணைக்களத்தின் இழப்பீட்டு பணம் மதிப்பீட்டின் பெறுமதியான ரூபா 112 மில்லியன் போக்குவரத்துச் சபைக்கு செலுத்தப்பட்டிருக்கவில்லை. | | கிடைத்ததன் பின்னர் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |

| | | | | |
|---|---|---|---|---|
| **கம்பஹா மாவட்ட செயலகம்**<br>------------------------------------------------ | | | | |
| 2018 - | | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | | |
| 2019 - | | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | | |
| 2020 - | | முனைப்பழியற்ற அபிப்பிராயம் | | |
| **கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பிரதான குறைபாடுகள்**<br>---------------------------------------------------- | | **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை**<br>---------------------------- | **நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள்**<br>---------------------------- | **அது தொடர்பான தற்போதைய நிலைமை**<br>---------------------------- |
| 01. | மினுவாங்கொடை பிரதேச செயலகத்திற்கு சொந்தமான காணிக்காக உரித்துறுதியொன்று காணப்படாமையின் காரணமாக அப்பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே கட்டான பிரதேச செயலக கட்டிடத்திற்குரிய காணி ரூபா 15,000,000 தொகையில் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த காணியின் உரித்து காணி மறுசீரமைப்பு | சொத்துக்களை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | இது தொடர்பாக திறைசேரி கணக்குகள் பணிப்பாளர் நாயகத்துடன் நடைபெற்ற கூட்டத்தின் போது தொடர்ந்தும் கலந்துரையாடப்பட்டிருந் ததுடன் மினுவாங்கொடை பிரதேச செயலாளரினால் மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு எழுத்துமூலமும் அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக மீண்டும் ஒரு தடவை உரிய மதிப்பீட்டாளருடன் கலந்துரையாடி 2020 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னர் உரிய நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | 2022 பெப்ரவரி வரையிலும் சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டிருக் க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆணைக்குழுவிற்கு உரியதாக இருந்ததுடன் பியகம பிரதேச செயலக அலுவலகக் கட்டிடத்திற்குரிய காணியின் பெறுமதி ரூபா 28,000,000 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த காணியின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | | |
| | | | | |
| 02. | பிரதேச செயலகத்தின் மூலம் அல்லது பிரதேச செயலக அதிகாரத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட திவுலப்பிட்டிய, வத்தளை, கட்டான, கம்பஹா, அத்தனகல்ல, ஜா-எல மற்றும் தொம்பே என்ற பிரதேச செயலகங்களுக்குரிய சேவைக் கட்டிடம் / 97 உத்தியோகபூர்வ செவன அலுவலக கட்டிடங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | உரித்தை கையேற்று கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இந்தக் காணிகளில் அநேகமானவை பிரதேச சபைக்குச் சொந்தமானவையாக இருந்தமையால் மதிப்பீடு செய்வதற்கு முடியாதிருந்தமையை அறியத்தருகின்றோம். குறிப்பாக மாவட்ட செயலகத்திற்கு சொந்தமாக இல்லாதிருந்த நடைமுறையல்லா சொத்துக்களை கணக்கீடு செய்வதில் பிரச்சினைகள் ஏற்பட்டிருந்தமையால் இது தொடர்பாக திறைசேரி கணக்குகள் பணிப்பாளர் நாயகத்துடன் கலந்துரையாடி சரியான வேலைத் திட்டமொன்று ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2022 பெப்ரவரி வரையிலும் செலவிடப்பட்ட பணம் கணக்கீடு செய்யப்படாதிருந்த துடன் காணிகளை கையேற்பதற்கு தேவையான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| | | | | |
| 03. | ஓய்வூதியத் திணைக்களத்தின் நிதியேற்பாட்டின் கீழ் கம்பஹா மாவட்டத்தில் உள்ள 13 பிரதேச செயலகங்களின் மூலம் ஓய்வூதியம் பெற்றிருந்த 72 பேர்கள் மரணமடைந்தமையை அறிவிப்பதற்கு தாமதமடைந்தமையின் காரணமாக ஓய்வூதியக் | மேலதிகமாக செலுத்தப்பட்டவைகளை மீள அறவிடுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இந்த மேலதிக செலுத்துதல் செயற்பாடுகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் மற்றும் உரிய நடவடிக்கைகளை எடுத்தல் ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தின் பொறுப்பாகும். எனினும் கடந்த 10 வருடங்களில் எனது மேற்பார்வையின் கீழ் பிரதான கணக்காளரின் பங்களிப்புடன் பிரதேச செயலாளர்களுக்கும் கணக்காளர்களுக்கும் தேவையான | மேலதிக செலுத்துதல்களை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | காரர்கள் மரணமடைந்ததன் பின்னர் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 9,539,450 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | | ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது. இந்த மேலதிகமாக செலுத்தப்பட்ட பணத்தில் அநேகமான அளவு அறவிடப்பட்டுள்ளமையை அறியத்தருகின்றோம். | |
| | | | | |
| 04. | களணி பிரதேச செயலகப் பிரிவில் இரண்டு கிராம சேவை உத்தியோகத்தர்களினால் சலுகை அடிப்படையில் மோட்டார் சைக்கிள் பெற்றிருக்கும் போது 60 வயதை பூர்த்தி செய்வதற்கு முன் ஓய்வூதியம் பெற்றுச் சென்றமையால் சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் ரூபா 283,420 தொகை மீள அறவிடப்பட வேண்டியிருந்த போதும், 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதும் அந்த பணத்தை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க ஓய்வு பெற்றுச் செல்வதற்கு முன் அறவிட வேண்டியிருந்ததுடன் ஓய்வூதியக் பணிக் கொடையிலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமை தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்துருக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அறவிட வேண்டிய மோட்டார் சைக்கிள் பணத்தை எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2022 பெப்ரவரி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| | | | | |
| 05. | மஹர பிரதேச செயலகத்தில் 2014 யூலை 15 ஆந் திகதி ஏற்பட்ட காப்பகத்தில் பணம் தொலைந்தமை தொடர்பாக நிதிப்பிரமாணம் 104(1)(அ) இன் பிரகாரம் இடம்பெற்ற இறுதி பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் அந்த பணம் தொலைந்து போனமை தொடர்பாக பிரதேச செயலாளர், கணக்காளர், நிதி உதவியாளர் மற்றும் காசாளர் என்ற | நட்டத்தை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | 2021 மே 02 ஆந் திகதி வழங்கப்பட்ட பரிசோதனை அறிக்கை உள்நாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அவரினால் வழங்கப்படுகின்ற ஆலோசனையின் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | 2022 பெப்ரவரி வரையிலும் அங்கீகாரம் வழங்கப்பட்டு வருடமொன்றிற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் அறவிடப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | உத்தியோகத்தர்களின் கடமை நடவடிக்கைகளில் காணப்பட்ட குறைபாடுகள், கவனமின்மை மற்றும் மேற்பார்வை செய்யாமையின் காரணமாக ஏற்பட்டிருந்தமையால் இதன் மூலம் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை அந்த நான்கு உத்தியோகத்தர் களிடமிருந்தும் அறவிட வேண்டியிருந்தமைக்கான முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2020 செப்தெம்பர் 22 ஆந் திகதிய கடிதத்தில் அந்த அறவிடலுக்கான பரிந்துரை மற்றும் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் உரிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| | | | | |
| 06. | அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண இணக்கக் கூற்றின் பிரகாரம் மரணமடைந்த, ஓய்வுபெற்றுச் சென்ற, வேலை நீக்கம் செய்யப்பட்ட மற்றும் சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர் களிடமிருந்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடல் நிலுவையாக காணப்பட்ட மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 4,236,665 ஆகும். | அறவிடுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | அந்தக் கடன் மீதியை அறவிடுதல் தொடர்பாக பிரதேச செயலகங்களுக்கு தொடர்ந்தும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | 2022 பெப்ரவரி அளவில் அறவிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றது. |
| | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 07. | 03 பொது வைப்புக் கணக்குகளில் 1150 சந்தர்ப்பங்களின் போது வைப்புச் செய்யப்பட்ட, இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலவதியான பெறுமதி ரூபா 298,476,498 ஆன மீதி தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இழப்பீட்டு செலுத்துகைகளை தீர்த்து வைப்பதற்காக விசேட வேலைத் திட்டம் ஒன்று ஈடுபடுத்தப்பட்டுள்ள துடன் அதிவேக வீதிக்கான கைப்பற்றலின் கீழ் இழப்பீட்டு பணம் போதியளவு இல்லாமையினால் வழங்கப்படாத இழப்பீட்டு பணத்தின் அளவு அதிகமாகும். இணக்கப்பாடொன்று கிடைக்கும் வரை உரிய இழப்பீட்டு பணம் வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மேலும் காணிப் பிரச்சினைகள், இழப்பீட்டு நலனாளிகள் வெளிநாடு சென்றமை போன்ற காரணங்களின் அடிப்படையில் இந்த இழப்பீட்டு பணத்தை தீர்த்து வைப்பதிலும் தாமதங்கள் ஏற்பட்டிருந்தது. எனினும் இந்த வைப்பு மீதி 2021 ஆம் ஆண்டில் இயலுமானவரை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிறுத்தி வைத்தல் பணம் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக் க வில்லை. |
| | | | | |
| 08. | 2020 ஆம் ஆண்டின் போது மினுவாங்கொட பிரதேச செயலகப் பிரிவில் மினுவாங்கொட நாலந்தா ஆண்கள் பாடசாலையில் குழாய் கிணறொன்று நிர்மாணித்து நீர்ப்பம்பி கூடமொன்றை பொருத்தி குடிநீரை வழங்குவதற்காக ரூபா 1,000,000 மதிப்பீடு செய்யப்பட்ட தொகையில் செயற்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டு ரூபா 800,714 செலவினமொன்று செய்யப்பட்டதன் பின்னர் எதிர்பார்க்கப்பட்ட நலன்களை | கிடைக்கின்ற நிதியேற்பாட்டின் மூலம் பொதுமக்களுக்கு ஆகக்கூடிய சேவையொன்றை வழங்கும் வகையில் செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் செயற்திட்டம் இடைநடுவில் நிறுத்தி வைத்தல் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் போது அமுல்படுத்தப்பட்ட சில செயற்திட்டங்களை அமுல்படுத்தும் போது ஏற்பட்ட பிரச்சினைகள் மற்றும் ஏதாவது அமுல்படுத்தலின் வசதியீனங்களால் நிறுத்தி வைக்க வேண்டி ஏற்பட்டிருந்தது. | மதிப்பீடு செய்யப்பட்ட தொகையான ரூபா 1,000,000 இல் ரூபா 800,714 செலவிடப்பட்டிரு ந்த போதிலும் மிகுதி வேலைகள் 2022 பெப்ரவரி வரையிலும் மேற்கொள்ளப்ப டாமல் கைவிடப்பட்டிருந் தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிறைவேற்றாமையின் அடிப்படையில் செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது. | | | |
| | | | | |
| 09. | மீரிகம பிரதேச செயலகப் பிரிவில் 15 நில செவன செயற்திட்ட அலுவலகங்களை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும் 08 அலுவலகங்கள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. மிகுதி 07 செயற்திட்டங்களுக்காக 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 1,433,909 செலவினம் செய்யப்பட்டு கைவிடப்பட்டிருந்தது. 2020 ஆம் ஆண்டின் போது அவற்றின் நிர்மாண வேலைகளை பூர்த்தி செய்வதற்காக ரூபா 12,566,092 நிதியேற்பாட்டை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் நிதியேற்பாடு கிடைத்திருக்கவில்லை. | கிடைக்கின்ற நிதியேற்பாட்டின் மூலம் பொது மக்களுக்கு ஆகக்கூடிய சேவையினை வழங்கும் வகையில் செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்ததுடன் இடைநடுவில் நிறுத்தி வைப்பதன் மூலம் மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் பயனற்றதாக இருந்தமை தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் போது அமுல்படுத்தப்பட்ட சில செயற்திட்டங்களை அமுல்படுத்தும் போது ஏற்பட்டிருந்த பிரச்சினைகள் மற்றும் ஏதாவது அமுல்படுத்தலின் வசதியீனங்களால் நிறுத்தி வைப்பதற்கு ஏற்பட்டிருந்தது. | 2018 ஆம் ஆண்டு ரூபா 1,433,909 செலவிடப்பட்டிருந்த போதிலும் மிகுதி வேலைகள் 2022 வரையிலும் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| | | | | |
| 10. | 2018 ஆம் ஆண்டின் போது பிரதேச உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்திலிருந்து ஒதுக்கப்பட்ட ரூபா 50 இலட்சம் தொகையில் களணி பிரதேச செயலகம் மூலம் திப்பிட்டிகொட சேவைத் தொகுதி நிர்மாணிக்கப்பட்டிருந்தது. | கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு முன் உரித்து தொடர்பாக கவனம் செலுத்தப்படல் வேண்டும். | நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | கடமை நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அந்தக் கட்டிடத்தில் கிராம உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர் மற்றும் விவசாய உத்தியோகத்தர் போன்ற சகல உத்தியோகத்தர்களினதும் கடமை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டு 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் பிரதேச சபைக்கு உரித்தான காணியில் நிர்மாணிக்கப்பட்டமையால் மேற்கூறப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு அந்த சேவைக் கட்டிடத்தில் கடமை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பிரதேச சபையினால் சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| | | | | |
| 11. | 2019 ஆம் ஆண்டிற்காக மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களுக்காக 08 நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 6404 செயற்திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் அதில் ரூபா 1,426,707,694 பெறுமதியான 4975 செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்க வில்லை. | அங்கீகரிக்கப்பட்ட நிதியேற்பாடு களிலிருந்து உச்ச அளவில் பயன்படுத்துதல் வேண்டும். | கருத்துக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | 2019 ஆம் ஆண்டிற்காக மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களுக் காக 08 நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 6404 செயற்திட்டங்கள் அங்கீகரிக்கப்பட் டிருந்தது. அதில் ரூபா 1,426,707,694 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | பெறுமதியான 4975 செயற்திட்டங்கள் அமுல்படுத்தப் பட்டிருக்கவில்லை. |
| | | | | |
| 12. | மினுவாங்கொடை, திவுலப்பிட்டி மற்றும் தொம்பே என்ற பிரதேச செயலக அதிகார பிரதேசங்களில் 2012 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து மூடப்பட்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை 11 ஆக இருந்ததுடன் அவை ஆக்கபூர்வமான நடவடிக்கைக்காக ஈடுபடுத்தப்பட்டிருக்க வில்லை. | மூடப்பட்டுள்ள பாடசாலைகளை பிரதேச செயலகத்திற்கு கையேற்று ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மினுவாங்கொடை, திவுலப்பிட்டி மற்றும் தொம்பே என்ற பிரதேச செயலக அதிகார பிரதேசங்களில் 2012 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து மூடப்பட்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை 11 ஆக இருந்ததுடன் அவற்றை ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருக்க வில்லை. |
| | | | | |
| 13. | பிரதேச செயலகம் மூலம் ஓய்வூதியம் செலுத்தப்படுகின்ற சகல நபர்களுக்காகவும் ஓய்வூதியக் கோவையொன்று பேணிச் செல்லப்பட வேண்டியிருந்த போதிலும் 09 பிரதேச செயலகங்களில் ஓய்வூதியம் பெறுகின்ற 426 நபர்களுக்காக கோவைகள் | கோவைகளை நாளதுவரை யாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கோவையின்றிய ஓய்வூதியக்காரர்களின் தகவல்கள் கோரப்பட்டுள்ளதுடன் அவர்கள் மிகவும் வயதான நபர்களாக இருந்தமையாலும், அநேகமாக விதவைகள் ஓய்வூதியம் பெறுபவர்கள் தமது வாழ்க்கைத் துணையின் தொழில் விபரங்கள் அல்லது நிறுவனம் தொடர்பான அறிவு காணப்படாமை, தகவல்களை பெற்றுக் கொள்வதில் | பிரதேச செயலகங்களின் மூலம் ஓய்வூதியம் செலுத்தப்படுகின்ற சகல நபர்களுக்காகவும் ஓய்வூதியக் கோவையொன்று பேணிச் செல்லப்பட |

| | | | | |
|---|---|---|---|---|
| | பேணிச் செல்லப்பட்டிருக்க வில்லை. | | வசதியீனமாக இருந்தது. உரிய நபர்களிடமிருந்து சரியான தகவல்களை கோரப்பட்டுள்ளதுடன் சில கோவைகள் தயாரிக்கப்பட்டுள்ள துடன் சில நிறுவனங்கள் மூடப்பட்டிருந்தமையால் தகவல்களை பெறுவதற்கு முடியாதிருந்தது. தற்காலிக கோவைகள் ஓய்வூதியத் திணைக்களத்தின் மூலம் எதிர்காலத்தில் அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உரிய உத்தியோகத்தர் களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | வேண்டியிருந்த போதிலும் 09 பிரதேச செயலகங்களில் ஓய்வூதியம் பெறுகின்ற 426 நபர்களுக்காக கோவைகள் பேணிச் செல்லப்பட்டிருக் க வில்லை. |
| | | | | |
| 14. | அத்தனகல்ல பிரதேச செயலக அதிகார பிரதேசத்தில் காணி படி பத்திர நலனாளிகளுக்கு சட்டரீதியான உரித்து கையளிக்கக்கூடியவர்களுக்காக தமது உரித்தை கையளிக்க முடியுமாக இருந்த போதிலும் பணத்திற்கு விற்கப்பட முடியாதிருந்த போதும் அநேகமான மக்கள் அனேகமான குடியிருப்புக்களில் படி பத்திர நலனாளிகள் தமது காணிகளை பணத்திற்கு விற்பனை செய்திருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் தற்போது வரையிலும் படி பத்திர உரித்துடைய காணிகளில் குடியிருக்காத சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டது. 4 | குறித்த படி பத்திர நலனாளிகள் காணி கூறுகள் தொடர்பாக காணப்படுகின்ற பிரச்சினைகளை தீர்த்து கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | குடியிருப்புக்களில் 04 காணிக் கூறுகள் தொடர்பாக காணி ஆணையாளரின் அங்கீகாரத்தின் கீழ் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | அத்தனகல்ல பிரதேச செயலக அதிகார பிரதேசத்தில் காணி பத்திர நலனாளிகளுக் கு சட்டரீதியான உரித்து கையளிக்கக் கூடிய அவர்களுக்காக தமது உரித்து கையளிக்க முடியுமாக இருந்த போதிலும் பணத்திற்கு விற்பனை செய்ய முடியாதிருந்தை மயும் அனேகமான குடியிருப்புக்களி |

| | | | | |
|---|---|---|---|---|
| | குடியிருப்புக்களில் காணப்பட்ட 10 காணி கூறுகளுக்கு உரியவர்கள் தமது காணிகளை விற்பனை செய்திருந்ததுடன் 17 காணிகளில் படி பத்திர நலனாளிகள் அல்லாதவர்கள் குடியிருந்து வருகின்றனர். 07 காணிகளில் எந்தவொரு குடியிருப்பாளர்களும் இல்லாதிருந்ததுடன் 34 காணிகளில் அனுமதியற்ற குடியிருப்பாளர்கள் இருந்து வருகின்றனர். | | | ல் படி பத்திர நலனாளிகள் தமது காணிகளை பணத்திற்கு விற்பனை செய்திருந்தமை அவதானிக்கப்பட்டது. படிபத்திர உரித்தாளர்கள் தமது காணியில் குடியிருக்காத சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டது. 04 குடியிருப்புக்களில் காணப்பட்ட 10 காணி கூறுகளுக்குரியவர் கள் தமது காணிகளை விற்பனை செய்திருந்ததுடன் 17 காணிகளில் படி பத்திர நலனாளிகள் அல்லாதவர்கள் குடியிருந்து வருகின்றனர். 07 காணிகளில் எந்தவொரு குடியிருப்பாளரும் இல்லாதிருந்ததுடன் 34 காணிகளில் அனுமதியற்ற வகையில் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | குடியிருந்து வருகின்றனர். |

**களுத்துறை மாவட்டச் செயலகம்**

-----------------------------------------------------

| | | | | |
|---|---|---|---|---|
| 2018- | | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | | |
| 2019- | | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | | |
| 2020- | | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | | |
| | | | | |
| **கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பிரதான குறைபாடுகள்** ----------------------------------------------------- | | **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை** ---------------------------- | **நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள்** ---------------------------- | **அது தொடர்பான தற்போதைய நிலைமை** ------------------------------ |
| 01. | பாலிந்தநுவர பிரதேச செயலகப் பிரிவில் 836 ஈ பெலேந்த மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் பெலன்வத்த காணியில் 2003-2012 ஆம் ஆண்டுகளுக்கு இடையிலான காலத்தில் 181 காணிக் கூறுகள் படைவீரர்களுக்காக வழங்கப்பட்டிருந்த போதிலும் அதில் 20 காணிக் கூறுகளில் மாத்திரம் படைவீரர்கள் குடியிருந்து வருகின்றனர். | தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கி படைவீரர்களை குடியமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ரணவிரு சேவை அதிகார சபை மற்றும் மாகாண காணி ஆணையாளரிடம் விசாரணை செய்து படைவீரர்கள் அல்லது ஏனைய பொருத்தமான குடும்பங்களை குடியமர்த்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். | காணி உரித்தற்ற ஏனைய படைவீரர்களுக்காக இந்த காணிகளை வழங்குவதற்கு ரணவிரு சேவை அதிகார சபை முன்மொழிவு செய்திருந்ததுடன் அது இன்னும் அமுல்படுத்தப் பட்டிருக்கவில்லை. |
| | | | | |
| 02. | இங்கிரிய பிரதேச செயலகப் பிரிவில் 620 ஜீ மஹ இங்கிரிய கிராம உத்தியோகத்தர் பிரிவிற்குரிய இமகிர காணியில் 22 கூறுகளும், 620 நிமலகம கிராம உத்தியோகத்தர் பிரிவில் எந்துறுகல வத்தே காணியில் 26 கூறுகளும் ஆக 48 | விரைவாக உரித்துறுதியை வழங்கி சகல காணிக்கூறுகளிலும் படைவீரர்களை குடியமர்த்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | - மேற்படி - | காணப்படுகின்ற பிரச்சினைகளை தீர்த்து படைவீரர்களை குடியமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் அந்த நடவடிக்கைகள் இதுவரை பூர்த்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| | காணிக்கூறுகள் 2010 ஆம் ஆண்டில் படைவீரர்களுக்காக வழங்கப்பட்டிருந்தது. இந்த காணிக் கூறுகளுக்கு இடையில் இதுவரையில் 13 காணிக்கூறுகள் மாத்திரம் படைவீரர்களுக்காக வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்கான உரித்துறுதி இதுவரை வழங்கப்பட்டிருக்கவில்லை. | | | செய்யப்பட்டிருக்க வில்லை. |
| | | | | |
| 03. | அகலவத்த பிரதேச செயலகப் பிரிவில் 829 பீ குக்குலந்தல கிராம உத்தியோகத்தர் பிரிவிற்குரிய பிம்புறுவத்த கப்புஹேன காணியில் 81 காணிக் கூறுகள் 2009 திசெம்பர் 08 ஆந் திகதி படைவீரர்களுக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் இதுவரையில் அதில் 3 குடும்பங்கள் மாத்திரமே குடியிருந்து வருகின்றனர். இந்தக் காணிகளுக்கு இடையே சில காணிகள் தற்போது விற்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | படை வீரர்களை குடியமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் விற்பனை செய்ய முடியாத பிரகாரம் கட்டுப்பாட்டு திட்டமொன்றை ஏற்படுத்துதல் வேண்டும். | - மேற்படி - | குடியிருந்து வருகின்ற மூன்று பேர்களும் படை வீரர்களாக இல்லாதிருந்ததுடன் எஞ்சிய 78 காணிக் கூறுகளில் எந்த ஒருவரும் குடியிருக்கவில்லை. |
| | | | | |
| 04. | களுத்துறை பிரதேச செயலகத்திற்காக புதிய நான்கு மாடிக் கட்டிடம் ஒன்றை நிர்மாணிக்கும் செயற்திட்டம் ரூபா 108.48 மில்லியனில் 2017 பெப்ரவரி 13 ஆந் திகதி | வேலை பூர்த்தி செய்யப்படாமை தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்படாதிருந்த துடன் மிகுதி வேலைகளை பூர்த்தி | 2020 ஆம் ஆண்டின் போது புதிய ஒப்பந்தகாரர் ஒருவருக்கு நிர்மாண நடவடிக்கைகள் கையளிக்கப்பட்டுள்ளது. | நிர்மாண நடவடிக்கைகள் 2022 பெப்ரவரி 11 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அது 2018 மே 20 ஆந் திகதி அளவில் வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. எனினும் இந்த வேலைகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்ததுடன் மொத்த வேலை அளவில் 22.5 சதவீதம் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 42.9 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. | செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | | |
| | | | | |
| 05. | களுத்துறை மாவட்டத்தில் 14 பிரதேச செயலக பிரிவுகளில் அனுமதியற்ற வகையில் பிடித்து வைத்துள்ளதாக இனங்காணப்பட்ட 11,225 காணிக்கூறுகளுக்கு இடையே மீளாய்வாண்டில் 73 காணிக் கச்சேரிகள் நடாத்தப்பட்டு 759 காணிக் கூறுகள் மாத்திரம் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. | அனுமதியற்ற காணிகளை ஒழுங்குமுறைப்படுத்தும் நடவடிக்கைகளை துரிதப்படுத்தி பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விரைவாக காணிகளை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு பிரதேச செயலாளர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 4849 அனுமதிப் பத்திரங்கள் மற்றும் 341 படி பத்திரங்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தன. |
| | | | | |
| 06. | பேருவளை பிரதேச செயலகப் பிரிவில் மூங்ஹேன சங்கமித்தா நீர் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக ரூபா 2,341,259 தொகை தேசிய நீர் வழங்கல் மற்றும் நீர் வடிகாலமைப்பு சபைக்கு 2018 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. எனினும், வீதிகளை உடைப்பதற்காக | மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் செலுத்த வேண்டிய பணத்தை செலுத்தி செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | செயற்திட்டம் அமுல்படுத்தப் படாமையால் தேசிய நீர் வழங்கல் மற்றும் நீர் வடிகாலமைப்பு சபைக்கு செலுத்தப்பட்ட பணத்தை மீள அறவிடுமாறு பேருவளை பிரதேச செயலாளருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | உரிய பணம் 2022 சனவரி வரையிலும் அறவிடப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஏற்படுகின்ற பௌதீக இழப்பிற்காக மேல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் செலுத்த வேண்டிய ரூபா 1,941,970 தொகை செலுத்தாமையினால் 2020 யூன் 10 ஆந் திகதி வரையிலும் உரிய செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முடியாதிருந்தது. | | | |
| | | | | |
| | | | | |
| 08. | களுத்துறை மாவட்டத்திற்கு உரிய 13 பிரதேச செயலக அதிகார பிரதேசங்களில் இயற்கை அனர்த்தங்களினால் முழுமையான பாதிப்பிற்கு உட்படுகின்ற மற்றும் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தினால் அதிக ஆபத்தானமையினால் அகற்றப்பட வேண்டிய இனங்காணப்பட்ட குடும்பங்களுக்காக ‘‘வீட்டிற்கு வீடொன்று’’ எண்ணக்கருவின் அடிப்படையில் 879 வீடுகளை அமைப்பதற்கு 2017 ஆம் ஆண்டு முதல் 2020 திசெம்பர் 31 வரை கிடைத்திருந்த ரூபா 1,363,413,225 தொகையான நிதியேற்பாட்டில் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நலனாளிகளுக்கு ரூபா 929,986,597 தொகை | ஆபத்துடன் காணப்படுகின்ற பிரதேசங்களில் உயிர் வாழ்கின்ற நபர்களை பாதுகாப்பான இடங்களில் குடியமர்த்தும் நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ளப்படல் வேண்டும். | உரிய வீடுகளை நிர்மாணிக்கும் நடவடிக்கைகளை விரைவுபடுத்துமாறு பிரதேச செயலாளர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | மீள் குடியமர்த்தும் நடவடிக்கைகள் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் முடிவடைந்திருக்க வில்லை. சில நலனாளிகளை குடியமர்த்துவதற்காக அரசாங்கத்திடமிருந்து வழங்கப்பட்டுள்ள காணிகளில் குடியமர்வதை நிராகரித்துள்ளனர் . |

| | | | | |
|---|---|---|---|---|
| | வழங்கப்பட்டிருந்தது. எனினும் இலக்கிடப்பட்ட வீடுகளின் எண்ணிக்கையில் 606 மாத்திரம் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் நலனாளிகளை வரவழைத்து 273 வீடுகளை பூர்த்தி செய்து கொள்வதற்கு உத்தியோகத்தர்கள் தவறியிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | | |
| | | | | |
| 09. | 2020 ஆம் ஆண்டு அமுல்படுத்தப்பட்ட சப்பிரிகம செயற்திட்டத்தின் வீதிகள் நிர்மாணிக்கும் வேலைகளுக்காக பிரதேச செயலகத்தினால் பணம் செலுத்தும் போது வீதியின் நியமம் தொடர்பாக உறுதிப்படுத்துவதற்காக உள்ளடக்க சக்தி பரிசோதனை (Cube test) மற்றும் வீதியின் தடிப்பம் தொடர்பான பரிசோதனை அறிக்கை (Core test) அடிப்படையாக கொள்ளப்பட்டிருந்தது. எனினும், பணம் செலுத்துவதற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட ஆராய்ச்சி அறிக்கை வெற்றியளிக்காமை, போலியான அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டமை, ஆய்வு கூடம் சமர்ப்பித்த வெற்றியளிக்காத அறிக்கை, வெற்றியடைந்த | முறையான பரிசோதனை யொன்று மேற்கொண்டு பொறுப்பு வாய்ந்த தரப்பினரை இனங்காண்பதற்கும் பிழையான அறிக்கையின் அடிப்படையில் கொடுப்பனவு செய்யப்பட்டமையால் அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை கணிப்பிட்டு தீர்த்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | பிரச்சினையுடனான ஆராய்ச்சி அறிக்கை தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்காக வழிகாட்டிக் கோவையொன்று விநியோகிக்கப் பட்டுள்ளது. | 2022 பெப்ரவரி வரையிலும் பிழையான அறிக்கையின் அடிப்படையில் செலுத்தப்பட்ட பணம் அறவிடப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அறிக்கையாக மாற்றப்பட்டமை போன்ற மோசடியான நடவடிக்கைகள் மற்றும் அறிக்கைகளில் ஏனைய குறைபாடுகளுடன் நிர்மாணிக்கப்பட்ட 141 நிர்மாண செயற்திட்டங்களுக்காக கூட்டுமொத்தமாக ரூபா 82,087,610 ஒப்பந்தகாரர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. | | | |
| | | | | |
| 10. | மேல் மாகாண பிரதி பிரதம செயலாளர் (பொறியியலாளர்) இனால் அங்கீகரிக்கப்பட்ட விலைப் பட்டியலின் பிரகாரம் வீதி வடிவமைப்பு வேலைகள் (Form Work) இற்காக ஈடுபடுத்தப்பட வேண்டிய ஒரு சதுர மீற்றருக்காக ரூபா 1,335 தொகை அல்லது ரூபா 943 தொகைக்கு பதிலாக ரூபா 3,351 வீதம் உள்ளடக்கப்பட்டு 162 சப்பிரிகம செயற்திட்ட வடிவமைப்பு வேலைகளுக்காக 07 பிரதேச செயலகங்களினால் ரூபா 22,351,434 தொகை மேலதிகமாக ஈடுபடுத்தப்பட்டு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவு செய்யப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | முறையான பரிசோதனை யொன்றை மேற்கொண்டு மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ள பணத்தை அறவிடுவதற்கும் பொறுப்பு வாய்ந்த தரப்பினர் தொடர்பாக சரியான நடவடிக்கையும் எடுக்கப்படல் வேண்டும். | பிரச்சினையுடனான கொடுப்பனவு தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்காக ஆலோசனைக் கோவையொன்று விநியோகிக்கப் பட்டுள்ளது. | பாணந்துறை பிரதேச செயலகத்திடமிருந்து அறவிட வேண்டிய பணத்தில் ரூபா 2,319,870 தொகை மாத்திரம் அறவிடப்பட்டுள்ளது. ஏனைய மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ள பணம் அறவிடப் பட்டிருக்கவில்லை. |
| | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 11. | வீதி கொங்கறீட் இடும் போது கொங்கறீட் போக்குவரத்துச் செய்வதற்காக அங்கீகரிக்கப்பட்ட கட்டணத்திற்கு மேலதிகமாக பிழையாக போக்குவரத்து கட்டணம் உள்ளடக்கப்பட்டு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் வலல்லாவிட்ட பிரதேச செயலகத்தினால் ஒப்பந்தகாரர்களுக்கு ரூபா 5,124,709 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - | 2022 பெப்ரவரி வரையிலும் மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ள பணம் அறவிடப்பட்டிருக்க வில்லை. |
| | | | | |
| 12. | தொடங்கொட பிரதேச செயலகத்தினால் நிர்மாண வேலைகளுக்காக ஈடுபடுத்தப்பட்ட மில்லிமீற்றர் 37.5 கருங்கல் கன மீற்றரின் அங்கீகரிக்கப்பட்ட விலை ரூபா 2,400 இற்கு பதிலாக ஒரு கனமீற்றருக்காக ரூபா 3,134 ஆக உள்ளடக்கப்பட்டு 115 சப்பிரிகம செயற்திட்டத்திற்காக நிர்மாணிக்கப்பட்ட தொடங்கொட பிரதேச சபைக்கு கூட்டுமொத்தமாக ரூபா 1,180,823 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - | மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ள தொகை நிறுத்தி வைத்தல் பணத்தில் குறைத்துக் கொள்வதற்கு தொடங்கொட பிரதேச சபையுடன் இணங்கியிருந்த போதிலும் உரிய பணம் அறவிடப் பட்டிருக்கவில்லை. |
| | | | | |
| 13. | 76 வீதிகளுக்காக தார் இட்டு பூர்த்தி செய்யும் போது சிப் கல் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் சிப் கல்லிற்காக மணல் | - மேற்படி - | - மேற்படி - | 2022 பெப்ரவரி வரையிலும் மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ள பணம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஈடுபடுத்தப்பட்டதாக காண்பித்து மிகை மதிப்பீட்டின் அடிப்படையில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அதன் அடிப்படையில் ஹொரண பிரதேச செயலகத்தினால் ஒப்பந்தகாரர்களுக்கு ரூபா 844,196 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | | | அறவிடப்பட்டிருக்க வில்லை. |
| | | | | |
| 14. | வீதிகளுக்காக பயன்படுத்தப்பட்ட ABC அளவு வீதி மேற்பகுதியின் தன்மையின் பிரகாரம் தீர்மானிக்கப்பட வேண்டிய போதிலும் ஹொரண பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் கொங்கிறீட் இடப்பட்ட 78 வீதிகளுக்காக மில்லிமீற்றர் 76 என்ற ஒரே உயரத்தில் வீதியின் மேற்பரப்பில் ABC இடும் அடிப்படையாகக் கொண்டு ABC இடுவதற்காக கூட்டுமொத்தமாக ரூபா 3,456,347 தொகையான அசாதாரண மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. | அசாதாரண மதிப்பீட்டின் அடிப்படையில் மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ள பணம் இனங்காணப்பட்டு அரசாங்கத்திற்கு அறவிட வேண்டியிருந்ததுடன் பொறுப்பு வாய்ந்த தரப்பினர் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | - மேற்படி - | - மேற்படி - |
| | | | | |
| 15. | வீதிகளுக்காக ஈடுபடுத்தப்பட்ட ABC அளவு வீதி மேற்பரப்பின் தன்மையின் பிரகாரம் தீர்மானிக்கப்பட வேண்டிய போதிலும் பாலிந்தநுவர பிரதேச செயலக அதிகார | - மேற்படி - | - மேற்படி - | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| | பிரதேசத்தில் கொங்கிறீட் இடப்பட்ட 147 வீதிகளுக்கிடையே 94 வீதிகளுக்காக ABC மற்றும் கொங்கிறீட் என்பன ஒரே அளவில் உள்ளடக்கப்பட்டு அசாதாரண மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அதன் அடிப்படையில் ஒப்பந்தகாரருக்கு மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | | | |
| | | | | |
| 16. | வீதி நிர்மாணிக்கும் வேலைகளின் வடிவமைப்பு வேலைகளுக்காக மதிப்பீடு தயாரிக்கும் போது பிழையானதாக விலை மதிப்பீடு ஈடுபடுத்தப்பட்டமையால் 13 செயற்திட்டங்களுக்குரிய மிகை மதிப்பீடு செய்யப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் பண்டாரகம பிரதேச செயலகத்தினால் ரூபா 1,770,939 தொகை ஒப்பந்தகாரர்களுக்கு மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | முறையான பரிசோதனை யொன்றை மேற்கொண்டு மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ள பணத்தை அறவிடுவதற்கும் பொறுப்புவாய்ந்த தரப்பினர் தொடர்பாக சரியான நடவடிக்கையும் எடுக்கப்படல் வேண்டும். | - மேற்படி - | மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ள பணத்தை அறவிடும் விபரங்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கையிடப் பட்டிருக்கவில்லை. |
| | | | | |
| 17. | சகல மாவட்ட செயலாளர்களுக்கும் பிரதேச செயலாளர்களும் முகவரியிடப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் அனுப்பப்பட்டுள்ள 2019 மே 14 ஆந் திகதிய SEC/2029/02 ஆம் இலக்க முத்திரைக் கட்டண | நிலுவை முத்திரைக் கட்டணத்தை விரைவாக அறவிட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். | நிலுவை முத்திரைக் கட்டணத்தை அறவிடுவதற்காக பிரதேச செயலாளர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிலுவை முத்திரைக் கட்டணத்தை அறவிட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | சுற்றறிக்கையின் பிரகாரம் வெளிநாட்டு மதுபான அனுமதிப்பத்திரத்துடன் விநியோகிக்கப்படுகின்ற AFL1, AFL2, AFL3 மற்றும் AFL4 என்ற மதுபான அனுமதிப் பத்திரங்கள் மற்றும் போத்தல்களில் அடைக்கப்பட்ட கள்ளின் அனுமதிப்பத்திரங்களுக்காக 10 பிரதேச செயலகங்களினால் 2006 ஆம் ஆண்டு முதல் 2020 திசெம்பர் 31 வரை அறவிட வேண்டிய கூட்டுமொத்தமாக ரூபா 21,534,500 நிலுவை முத்திரைக் கட்டணம் அனுமதிப்பத்திரதாரர்களிடம் இருந்து அறவிடுவதற்கு 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| | | | | |
| 18. | களுத்துறை மாவட்டத்தின் 04 பிரதேச செயலகங்களில் 70 ஓய்வூதியகாரர்களுக்காக நிரந்தர அல்லது தற்காலிக ஓய்வூதியக் கோவையொன்று காணப்படாதிருந்தமை, ஓய்வூதியக் கோவையின்றி ஓய்வூதியம் செலுத்தப்படுகின்றமை அவதானிக்கப்பட்டதுடன் மீளாய்வாண்டின் போது மாத்திரம் கூட்டுமொத்தமாக ரூபா 12,252,253 தொகை அவ்வாறு செலுத்தப்பட்டிருந்தது. | கோவையின்றிய ஓய்வூதியகாரர்கள் தொடர்பாக முறையான பரிசோதனை யொன்றை மேற்கொண்டு பிழையான கொடுப்பனவுகளை தவிர்ப்பதற்காக கட்டுப்பாட்டு முறைமையொன்று அறிமுகப்படுத்துதல் வேண்டும். | ஓய்வூதிய கோவைகளை பரீட்சித்து குறைபாடுகளை சரிசெய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | 2022 பெப்ரவரி வரையிலும் தற்காலிக கோவைகளேனும் தயாரித்து பூர்த்தி செய்யப்பட்டிருக்க வில்லை. |

| காலி மாவட்ட செயலகம்<br>--------------------------------------- | | | | |
|---|---|---|---|---|
| 2018 - | | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | | |
| 2019 - | | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | | |
| 2020 - | | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | | |
| **கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பிரதான குறைபாடுகள்**<br>----------------------------------------------------- | | **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை**<br>---------------------------- | **நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள்**<br>---------------------------- | **அது தொடர்பான தற்போதைய நிலைமை**<br>------------------------------ |
| | | | | |
| 01. | 03 பிரதேச செயலகங்களினால் அந்த அலுவலகங்களுக்கு இணைந்ததாக 08 சமுர்த்தி வங்கி சங்கங்களின் மூலம் பல்வேறு கடன் நிகழ்ச்சித் திட்டத்திற்காக 70,181 கடன் கடனாளிகளுக்கு ரூபா 381 மில்லியன் ஒட்டுமொத்த கடன் தொகை வழங்கப்பட்டிருந்தது. 856 கடனாளிகளுக்கு வழங்கப்பட்டிருந்த கடன் தொகையில் ரூபா 46.58 மில்லியன் தொகை காலாவதியாகிய கடனாக இருந்தது. 335 கடனாளிகளுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 11.28 மில்லியன் கடன் அறவிட முடியாக் கடனாகவும் இனங்காணப்பட்டிருந்தது. | காலாவதியாகிய கடனை விரைவாக அறவிடுவதற்கான முறையான வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்ததுடன் கடன் விண்ணப்பித்துள்ள சகல நபர்களினதும் தகைமைகளை பரீட்சித்து கடனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | காலாவதியான கடன் தொடர்பாக செயல் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தின் போது கலந்துரையாடப் பட்டிருந்ததுடன் உரிய கடனாளிகளுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே கடனை அறவிடுவதற்காக பொலஸ் நிலைய பொறுப்பதிகாரியின் உதவியை பெற்றுக் கொள்வதற்கும், பிணக்குகள் தீர்க்கும் சபைக்கு அனுப்புவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்தக் கடனாளிகள் வங்கியின் பங்குதாரர்களாக இருந்தமையால் காலாவதியாகிய போதிலும் இந்தக் கடன் செலுத்தப்படுகின்றது. | 2022 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு 19 பிரதேச செயலகங்களுக் குரிய சமுர்த்தி வங்கிச் சங்கங்களில் காலாவதியான கடன் பணத்தின் பெறுமதி ரூபா 623 மில்லியனமாக இருந்ததுடன் அறவிட முடியாக் கடன் தொகை ரூபா 166 மில்லியன் ஆகும். |

| | | | | |
|---|---|---|---|---|
| 02. | உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் காலி பட்டிணமும் சூழலும் பிரதேச செயலகப் பிரிவில் ஒரு செயற்திட்டத்திற்காக ரூபா 2 மில்லியன் வீதம் 17 நில செவன செயற்திட்டங்களுக்காக 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 4,776,000 நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. 2018 செப்தெம்பர் 05 ஆந் திகதி வரையிலும் 12 செயற்திட்டங்களின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் மாஇட்டிப்பே, வெலிவத்த, சங்கமித்தபுர, களுவெல்ல மற்றும் தங்கெதர நில செவன செயற்திட்டங்களை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்க வில்லை. | செயற்திட்டத்தை ஆரம்பித்து மக்களுக்கு பொது சேவைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | காலி மாநகர சபையின் அங்கீகாரம் கிடைக்கப் பெறாமை, தேர்தல் ஆணைக்குழுவின் ஆலோசனையின் அடிப்படையில் செயறதிட்டங்கள் ஆரம்பிக்கப்படாமை, தெரிவு செய்யப்பட்ட நிலக்கூறுகள் போதியளவில் காணப்படாமை போன்ற காரணங்களினால் 05 நில செவன செயற்திட்டங்களின் வேலைகளை ஆரம்பிப்பதற்கு முடியாதிருந்தது. | மாஇட்டிப்பே, வெலிவத்த, சங்கமித்தபுர, களுவெல்ல நில செவன செயற்திட்டங்கள் 2022 பெப்ரவரி வரையிலும் நிர்மாணிக்கப் பட்டிருக்கவில்லை. |
| | | | | |
| 03. | கிராமங்களை விரிவுபடுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நாகொட பிரதேச செயலகத்தினால் நபர்களை குடியமர்த்துவதற்காக 467 ஏக்கர் அளவான எப்தொப்வத்த பெயருடைய காணியை அரசாங்கத்திற்கு கையேற்கும் நடவடிக்கைகள் 1999 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2018 யூலை 13 ஆந் திகதி வரையிலும் அந்தக் காணியை | தோன்றியுள்ள பிரச்சினைகளை விரைவாகத் தீர்த்து வைத்து இந்தக் காணிகள் கிராமங்களை விரிவுபடுத்தும் நிகழ்ச்சித் திட்டத்திற்காக ஈடுபடுத்தப்படல் வேண்டும். | 40 அனுமதியற்ற குடியிருப்பாளர் களிடமிருந்து உரித்தினை மீளப் பெற்றுக்கொள்ளும் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. மரங்களை வெட்டும் நடவடிக்கைகள் தொடர்பாக பொலிசிற்கு முறைப்பாடு செய்து வழக்குத் தொடருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் காணியின் உரித்து | காணியினை அரசாங்கத்திற்கு கையேற்று ஆட்களை குடியமர்த்தும் நடவடிக்கைகள் 2022 பெப்ரவரி வரையிலும் இடம்பெற்றிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | கையேற்கும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வில்லை. மேலும் பொதுமக்களை குடியமர்த்துவதற்காக இந்தக் காணியை கைப்பற்றுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அது குடியிருப்பதற்கு பொருத்தமற்ற நிலைமையில் காணி காணப்பட்டமை, கைப்பற்றப்பட்ட காணிகளுக்குரிய காணிகள் உரிய நோக்கங்களுக்காக ஈடுபடுத்தப்படும் வரை அந்தக் காணிகளில் அனுமதியற்ற குடியிருப்பாளர்களினால் பாதுகாத்துக் கொள்வதற்கு முடியாதிருந்தமை, பகிர்ந்தளிக்கப்பட்ட காணி உரித்துக்கள் இன்றி ஏனைய தரப்பினருக்கு கையளிக்கப்பட்டமை, உரிய காணிகளில் காணப்பட்ட கணிசமான காடுகள் அனுமதியற்றவர்களினால் துப்பரவாக்கப்பட்டமை மற்றும் அதன் மூலம் கணிசமான சுற்றாடல் பாதிப்பொன்று ஏற்பட்டமை போன்ற விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | தொடர்பான வழக்கு விசாரணைக்குரிய தீர்ப்பு இதுவரை வழங்கப்பட்டிருக்க வில்லை. | |
| | | | | |
| 04. | பலபிட்டி பிரதேச செயலகத்தின் கீழ் காணப்படுகின்ற 34 ஓய்வூதியக் கோவைகள் 16/2015 முரண் தகவல்கள், ஓய்வூதியப் படிகள் மற்றும் ஓய்வூதிய அதிகரிப்பு பெறுமதி, தொடர்ச்சியான | தகவல்களைப் பெற்று ஓய்வூதிய முரண்பாடுகளை சரிசெய்து கொடுப்பனவு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் | தொடர்ந்தும் திருத்த நடவடிக்கைகள் செய்யப்பட வேண்டிய கோவைகளின் எண்ணிக்கை 34 ஆக இருந்ததுடன் உரிய நிறுவனங்களினால் தகவல்கள் | 07 ஓய்வூதிய கோவைகளில் ஓய்வூதிய திருத்தங்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளது. மேலும் 27 கோவைகளுக்குரிய |

| | | | | |
|---|---|---|---|---|
| | சேவைக் காலம் போன்ற தகவல்கள் இல்லாமையின் காரணமாக அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 14/2019 இன் பிரகாரம் ஓய்வூதிய திருத்தங்களை செய்வதற்கு முடியாதிருந்தது. பிரதேச செயலகத்தின் மூலம் உரிய நிறுவனத்திற்கு இந்தக் குறைபாடுகள் தொடர்பாக அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் 2020 மே 28 ஆந் திகதி வரையிலும் அந்தப் பணிகளை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது. | எடுக்கப்படல் வேண்டும். | கிடைத்தவுடன் இந்த ஓய்வூதிய கோவைகளில் திருத்த நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டி இருந்தமையையும் இது எங்களின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட விடயமாக இருந்தமையையும் அறியத்தருகின்றோம். | ஓய்வூதிய திருத்தங்களுக்கு தேவையான ஆலோசனை கோரி 2020 ஆகஸ்ட் 14 ஆந் திகதி ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்திற்கு கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ள போதிலும் ஆலோசனை கிடைத்திருக்க வில்லை. |
| | | | | |
| 05. | ஹிக்கடுவ பிரதேச செயலகத்திற்கு உரிய தொடன்தூவ பொது சந்தை நிர்மாணிப்பதற்காக மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் மூலம் பட்டுவத்த கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள 0.1709 ஹெக்டயர் அளவான மாதரம்முல்ல, கும்புறுஓவிட்ட காணியைக் கைப்பற்றும் நடவடிக்கைகள் 1999 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் காணி கைப்பற்றுவதற்கு ரூபா 20 இலட்சம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 5 இலட்சம் மாத்திரம் பிரதேச செயலகத்தில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. மிகுதி பணம் செலுத்தாமையின் அடிப்படையில் இழப்பீடு செலுத்துதலை உள்ளடக்கி | உரிய தரப்பினருக்கு அறிவித்து மதிப்பீடு செய்து உள்ள பணத்தை பெற்று காணியைக் கைப்பற்றுவதற்கும் உரிய நிர்மாணங்களை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | காணி கைப்பற்றுவதற்குரிய மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த பணம் கோரப்பட்ட நிறுவனத்தினால் பிரதேச செயலகத்தில் வைப்புச் செய்யப்படாதிருந்த மையால் கோவையின் மிகுதி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முடியாதிருந்தது. | மதிப்பீடு செய்யப்பட்ட தொகை 2022 பெப்ரவரி வரை பிரதேச செயலகத்தில் வைப்புச் செய்யப்படாதிருந்த மையால் காணியைக் கைப்பற்றும் நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | காணி கைப்பற்றும் நடவடிக்கைகள் இடைநடுவதில் நிறுத்தப்பட்டிருந்தது. | | | |
| | | | | |
| 06. | ஹிக்கடுவ பிரதேச செயலகப் பிரிவில் மோதர பட்டுவத்த கிராம உத்தியோகத்தர் பிரிவிற்குரிய 0.243 ஹெக்டயர் அளவான பிம்புறுதெனிய காணி, மீன்பிடி மற்றும் நீர்வளங்கள் அமைச்சின் மூலம் மீன்பிடி வீடமைப்பு முன்மொழிவுத் திட்டத்தை அமுல்படுத்தும் நோக்கத்திற்காக உள்ள காணி கைப்பற்றும் சட்டத்தின் 38(ஆ) உப ஏற்பாட்டின் பிரகாரம் 1995 ஆம் ஆண்டின் போது அரசாங்கத்திற்கு சொந்தமாக்கப்பட்டு இதுவரையில் 20 வருடங்களுக்கு அண்ணளவான காலம் கடந்திருந்த போதிலும் மேற்கூறப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. | காணி கைப்பற்றும் நோக்கமான வீடமைப்பு முன்மொழிவுத் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | மேற்கூறப்பட்ட காணி கைப்பற்றும் நோக்கத்திற்காக பயன்படுத்தப் படாமையால் கிராமத்தை விரிவுபடுத்திலின் கீழ் காணியின்றிய மக்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக காணி அமைச்சிலிருந்து கோரப்பட்டுள்ளது. மேற்கூறப்பட்டுள்ள கைப்பற்றுதலின் நோக்கங்களை திருத்துவதற்கான பரிந்துரைகள் காணி அபிவிருத்தி அமைச்சிற்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும் இதுவரை அமைச்சினால் நோக்கங்கள் திருத்தப்பட்டு அனுப்பப்பட்டிருக்க வில்லை. | காணி கைப்பற்றும் முன்மொழிவினை திருத்தி தருமாறு காணி அமைச்சிற்கு அறிவித்து அனுப்பப்பட்ட போதிலும் அது இதுவரையிலும் திருத்தப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டிருக்க வில்லை. |
| | | | | |
| 07. | ஹிக்கடுவை பிரதேச செயலகப் பிரிவில் குமார வித்தியாலயம் அமைந்துள்ள காணி சுற்றுலா மேம்படுத்தல் பணிகளுக்காக றுகுணு சுற்றுலா பணியகத்திற்கு 30 வருடங்களுக்கு நீண்ட கால வாடகை அடிப்படையில் வழங்குவதற்கு 2016 யூலை 07 ஆந் திகதிய கடிதம் மூலம் | காணி வாடகைக்கு வழங்கும் நோக்கத்தை அமுல்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | முறையான அங்கீகாரமின்றி றுகுணு சுற்றுலா பணியகம் வெளி நிறுவனமொன்றுடன் ஏற்படுத்திய உடன்படிக்கையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கலாக இருந்தமையினால் | காணி வழங்கியதன் நோக்கத்தை நிறைவேற்றும் முறையில் 2022 பெப்ரவரி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. பிரதேச செயலாளருக்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | காணி ஆணையாளர் நாயகத்தினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. றுகுணு சுற்றுலா பணியகத்தினால் இந்தக் காணி 2016 ஏப்ரல் 05 ஆந் திகதி முதல் 30 வருட காலத்திற்காக தனியார் நிறுவனமொன்றிற்கு அங்கீகாரமின்றி உப வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. வாடகை உடன்படிக்கை 2017 நவம்பர் 21 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டிருந்தது. தனியார் நிறுவனத்திற்கு காணியை உப வாடகைக்கு வழங்கியதால் மேற்கூறப்பட்ட சுற்றுலா மேம்படுத்தல் நோக்கங்களை நிறைவேற்றாதிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது. | | அவற்றினை அகற்றுதல் பிரச்சினையுடனான நிலைமை ஏற்பட்டிருந்தமையால் மிகுதி நடவடிக்கைகளுக்காக ஆலோசனை வழங்குமாறு தென் மாகாண காணி ஆணையாளர் திணைக்களத்திற்கு மீண்டும் கோரப்பட்டுள்ளது. | மாதத்திற்கு ரூபா 320,000 தொகை செலுத்தப்பட்டிருந்த துடன் அங்கீகாரமின்றி உப வாடகைக்கு வழங்கி மாதமொன்றிற்கு ரூபா 350,000 தொகை உழைக்கப் பட்டிருந்தது. அதன் பிரகாரம் உப வாடகைக்கு வழங்கியதன் காரணமாக சுற்றுலா மேம்படுத்தல் பணிகளுக்காக நீண்ட கால வாடகை அடிப்படையில் வழங்கும் நோக்கம் நிறைவேற்றப் பட்டிருக்கவில்லை. மேலும் சட்டத்திற்கு முரணாக இருந்ததுடன் வாடகைக்கு வழங்குதல் தொடர்பான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| | | | | |
| 08. (i) | பட்டகன்வில அரசாங்க அதிபரின் உத்தியோகபூர்வ இல்லம் நிர்மாணிக்கப்பட்ட காணியின் பாதுகாப்பினை நோக்காகக் கொண்டு கேபியன் அணையொன்றை நிர்மாணிக்கும் வேலை இரண்டு பகுதிகளாக பிரித்து பெறுகை பணிகள் இரண்டாக | கேபியன் அணை நிர்மாணிப்பதற்கு முன் களப் பரிசோதனை மேற்கொண்டு தேவையான தொழில்நுட்பங்களை பயன்படுத்தி செயற்திட்டம் | இது அதிக ஆபத்துடன் விரைவாக நிறைவேற்றக்கூடிய செயற்திட்டமாக இருந்தமையால் தனியான செயற்திட்டமாக நிறைவேற்றுவதற்கு அதிக காலம் எடுத்திருந்தமையாலும், | 2022 பெப்ரவரி வரையிலும் கேபியன் அணைக்கட்டில் ஏற்பட்ட பாதிப்பு நல்ல நிலைக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. காப்புறுதி இழப்பீடு |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஒப்பந்தகாரருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. 2019 மார்ச் 15 ஆந் திகதி மேற்கூறப்பட்ட வேலையின் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டு மாவட்ட செயலாளருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. இந்தப் பெறுகை பணிகள் மேற்கூறப்பட்ட தகைமையினை விட அனுபவமுள்ள ஒப்பந்தகாரருக்கு கையளிக்கப்படாமை, உரிய நியமத்துடனான மூலப்பொருட்கள் பயன்படுத்தப்படாமை மற்றும் பயிற்சி பெறாத ஊழியங்கள் பயன்படுத்தப்பட்டமையின் காரணமாக 2019 ஒக்தோபர் 24, 25 ஆந் திகதிகளில் கேபியன் அணை பாதிப்பிற்கு உட்பட்டமையின் காரணமாக அரசாங்கத்திற்கு ரூபா 7,690,295 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது. | அமுல்படுத்தப்பட வேண்டும். மேலும் சரியான நியமங்களை உடைய மூலப்பொருட்கள் பயன்படுத்தப்படாமை தொடர்பாகவும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் அறிக்கையின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமை தொடர்பாக பொறுப்பு வாய்ந்த நபர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | செயற்திட்டம் இரண்டாக கூறுவிலை முறைமையில் நிறைவேற்றப்பட்டிருந்தமை அறிவிக்கப்பட்டிருந்தது. மேலும் ஒப்பந்தம் கையளிக்கப்பட்டுள்ள ஒப்பந்தகாரர் இரண்டு பேரும் மேற்கூறப்பட்ட அனுபவத்துடன் இருந்ததுடன் அவ்வாறான ஒப்பந்தகாரருக்கு பயிற்சி பெற்ற ஊழியர்கள் குழுவொன்று காணப்படுகின்றமை அறிவிக்கப்பட்டிருந்தது. மேலும் பயன்படுத்தப்பட்ட மூலப்பொருட்களின் நியமம் தொடர்பாக கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்டிருந்த கருங்கல்லின் அளவு சிறிய அளவில் அதிகரித்தமையால் பிரயோக ரீதியில் நிர்மாணத்தின் போது ஈடுபடுத்தப்பட்ட கல்லின் அளவு சிறிய அளவில் வித்தியாசம் ஏற்பட்டிருந்தமையும், இந்த நிர்மாணம் Gravity Retaining Wall ஒன்றாக இருந்தமையால் கல்லின் அளவு சிறிய அளவில் அதிகரித்தமை அந்த இடத்திற்கு தாக்கமாக இல்லாதிருந்தமை மேலும் அறிவிக்கப்பட்டிருந்தது. அந்த பாதிப்பிற்கு உட்பட்ட பகுதியை | கோரப்பட்டிருந்த போதிலும் நிர்மாண காலத்தில் ஏற்பட்ட பாதிப்பாக இல்லாதிருந்தமையால் காப்புறுதி இழப்பீடு செலுத்துதல் நிராகரிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பரிசோதனையொன்று நடாத்துவதற்கு 2020 நவம்பர் 16 ஆந் திகதி மூன்று நபர்களையுடைய குழுவொன்று நியமிக்கப்பட்ட போதிலும் அந்தக் குழுவின் அறிக்கையின் பரிந்துரை தொடர்பாக கணக்காய்வின் போது ஏற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தது. மேலும் இதற்கான பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர் தொடர்பாக பரிசோதனைகளை நடாத்தி இழப்பை மீளளிப்புச் செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | மீண்டும் நல்ல நிலைக்கு கொண்டு வருமாறு ஒப்பந்தகாரருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக மேலும் அறிவிக்கப்பட்டிருந்தது. | |
| | | | | |
| (ii) | ஐந்து முறை கொண்டு வருவதற்காக டொரமெஸ் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அது கட்டமைப்பு ரீதியான நிர்மாணத்திற்கான தொழில்நுட்ப முறைமையொன்றாக இருந்தமை குறிப்பிடப்பட்டிருந்தது. அவ்வாறான டொரமெஸ் பயன்படுத்தப்பட்டமைக்கு உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்படாதிருந்த மையினால் இதற்காக செலுத்தப்பட்ட ரூபா 1,018,604 மேலதிக செலுத்துதல்களாக அவதானிக்கப்பட்டது. | மதிப்பீடுகளில் காண்பிக்கப்பட்டுள்ள பிரகாரம் போதியளவான Terra -mesh ஈடுபடுத்தப்பட்ட மைக்கான பௌதீக சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். | 2019 திசெம்பர் 03 ஆந் திகதி கணக்காய்வு உத்தியோகத்தர்கள் கேபியன் அணைக்கட்டை பரீட்சித்திருந்தமையும் டொராமிஸ் மேலிருந்து முதலாவது மட்டம் வரை ஈடுபடுத்தப்பட்டு நிர்மாணிக்கப் பட்டிருந்தமை தொழில்நுட்ப உத்தியோகத்தர் சுட்டிக் காட்டியிருந்ததுடன் தேவையாயின் மிகுதி மட்டங்களிலும் டொராமிஸ் ஈடுபடுத்தப்பட்டமையை காண்பிக்க முடியுமென அறிவிக்கப்பட்டிருந்தது. | கொடுப்பனவுகளுக்கு ரிய சகல இடங்களையும் மேவுகை செய்யும் வகையில் டொரமெஸ் பயன்படுத்தப் பட்டிருந்ததா என ஏற்றுக்கொள்ளக் கூடிய சான்றுகள் 2022 வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக் கவில்லை. |
| | | | | |
| 09. | 1971 ஆம் ஆண்டு முதல் 1991 ஆம் ஆண்டு வரை பிணை வைப்புச் செய்த 35 உத்தியோகத்தர்களுக்கு உரிய வங்கி பாஸ் புத்தகம் மாவட்ட செயலகத்தில் வைக்கப்பட்டிருந்தது. இந்த பிணை வைப்பு தொடர்பாக பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு 2020 மே வரையும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய 35 பாஸ் புத்தகங்கள் தொடர்பாகவும் பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் அதன் தற்போதைய செயல் முன்னேற்றத்தை கணக்காய்விற்கு காண்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | தகவல்கள் வழங்க முடியுமாயிருந்த சகல பாஸ் புத்தகங்களும் உரிய அலுவலகங்களுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் தகவல்களை கண்டறிவதற்கு முடியாதிருந்த 35 பாஸ் புத்தகங்கள் இதுவரை | பிணை வைப்புக்களுக்குரிய 35 பாஸ் புத்தகங்கள் இதுவரை தகவல்கள் கண்டறிவதற்கு முடியாமல் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | காணப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | |
| | | | | |
| 10. | கரந்தெனிய பிரதேச செயலகத்தில் 2006 ஆம் ஆண்டில் ஏற்பட்டிருந்த காசோலை மோசடியின் காரணமாக அத்திகதி முதல் கட்டுநிதி கணக்கில் உருவாகியிருந்த ரூபா 194,086 தீர்க்கப்படாத மீதி 14 வருட காலம் முதல் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட போதிலும் அதனை தீர்த்து வைப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தீர்க்கப்படாத கட்டுநிதியை விரைவாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இது தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | 2021 செப்தெம்பர் வரை கட்டுநிதி மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. சட்டரீதியான நடவடிக்கைகள் 2022 பெப்ரவரி வரையிலும் முடிவடைந்திருக்க வில்லை. |
| | | | | |
| 11. | வேலை நீக்கம் செய்யப்பட்ட உத்தியோகத்தரிடமிருந்து மேலும் அறவிட வேண்டிய ரூபா 108,248 தொகை 02 வருடங்கள் முதல் 04 வருடங்கள் வரையான காலம் முதல் அறவிடப்படாமல் காணப்பட்டது. | வேலை நீக்கம் செய்யப்பட்ட உத்தியோகத்தரிடமி ருந்து அறவிட வேண்டிய கடன் மீதி தொடர்பாக பொருத்தமான நடவடிக்கைகள் விரைவாக எடுக்கப்படல் வேண்டும். | நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை. | பந்தியில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்கள் அவ்வாறே காணப்படுகின்றது. |
| | | | | |
| 12. | 2017 ஆம் ஆண்டில் வெள்ளநீரினால் பாதிப்புக்கு உட்பட்ட ஆதனங்களுக்கான இழப்பீடு செலுத்துதல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | | |
| (i) | 2017 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்திற்கு | ஒரே வகையான விடயங்கள் | அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் | பந்தியில் குறிப்பிடப்பட்ட |

| | | | | |
|---|---|---|---|---|
| | உட்பட்ட ஆதனங்களுக்காக இழப்பீடு செலுத்தக் கூடிய பிரகாரம் நீர்ப்பாசனம், நீர் வளங்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் இரண்டு சுற்றறிக்கைகள் விநியோகிக்கப்பட்டிருந்தது. ஒரு சுற்றறிக்கை 2018 மே திகதியின்றி விநியோகிக்கப்பட்டிருந்த துடன் அந்த சுற்றறிக்கைக்குரிய அனர்த்தங்களுக்கு உட்பட்ட ஆதனங்களுக்காக ரூபா 100,000 ஆகக்கூடிய இழப்பீட்டு தொகையொன்று செலுத்த முடியுமாக இருந்தது. பிரதேச செயலகத்தினால் இழப்பீடு செலுத்துவதற்காக உரித்தாக்கி கொள்ளப்பட்ட சுற்றறிக்கை 2017 யூன் 05 ஆந் திகதி விநியோகிக்கப் பட்டிருந்ததுடன் அந்த சுற்றறிக்கைக்கு உரிய ரூபா 2.5 மில்லியன் ஆகக் கூடிய இழப்பீட்டுத் தொகை செலுத்த முடியமாக இருந்தது. அதன் பிரகாரம் அந்த சுற்றறிக்கையை பயன்படுத்தி நாகொட பிரதேச செயலகத்தில் மேற்கொள்ளப்பட்டு இழப்பீடு செலுத்தியதன் காரணமாக ரூபா 100,000 தொகைக்கு மேற்பட்ட இழப்பீடு செலுத்தப்பட்டிருந்த வியாபாரிகளின் எண்ணிக்கை 122 ஆக இருந்ததுடன் செலுத்தப்பட்ட பணம் ரூபா | தொடர்பாக இரண்டு சுற்றறிக்கைகள் விநியோகிக்கப்பட்டமை தொடர்பான விடயங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். | விநியோகிக்கப்பட்ட 2017.06.05 ஆந் திகதிய NDRSC/01/04/01/2017 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள ஆலோசனையின் பிரகாரம் 261 செலவினத் தலைப்பில் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் விநியோகிக்கப்பட்ட 2018.06.08 ஆந் திகதிய DSG/SVC/12/39-2018 ஆம் இலக்க ஆலோசனைக் கடிதத்தின் மூலம் 2017 மே மாதம் அனர்த்த நிலைமையினால் பாதிப்பிற்கு உட்பட்ட ஆதனங்களுக்காக இழப்பீடு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | அவதானிப்புக்கள் அவ்வாறே காணப்படுகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | 56.98 மில்லியன் ஆக இருந்தது. அவ்வாறே ஒரே வகையான விடயம் தொடர்பாக சுற்றறிக்கை இரண்டு விநியோகிக்கப் பட்டமை தொடர்பான விடயங்கள் வெளிப்படுத்த படவேண்டியிருந்தது. | | | |
| | | | | |
| (ii) | தனித்தனியாக இரண்டு வியாபார நிலையங்கள் நடாத்திச் சென்றமைக்கான ஏற்றுக் கொள்ளக்கூடிய எழுத்து மூல சான்றுகள் காணப்படாதிருக்கும் போது ஒரேயொரு வியாபார நிலையமொன்றை நடாத்திச் சென்ற கணவர் மற்றும் மனைவி என்ற இரண்டு பெயரும் முறையே ரூபா 2,000,000 மற்றும் ரூபா 1,521,000 ஆக கூட்டுமொத்தமாக ரூபா 3,521,000 இழப்பீடு செலுத்தப்பட்டிருந்தது. | இழப்பீடு செலுத்துவதற்கு முன் இரண்டு வியாபார நிலையங்கள் காணப்பட்டதா என உறுதிப்படுத்தும் சகல சான்றுகளையும் பெற்று அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அலுவலக ரீதியில் வியாபார பெயரை பதிவு செய்யும் பதிவேட்டின் பிரகாரம் வியாபார பெயர் பதிவு பெறப்படாதிருந்த போதும், அநேக காலமாக பிரதேசத்தில் காணப்பட்ட வியாபார நிறுவனங்கள் இரண்டாக இருந்தமை அவதானிக்கப்பட்டிருந்த மையால் இழப்பீடு செலுத்தப்பட்டிருந்தது. | இரண்டு வியாபார நிலையங்கள் காணப்படுகின்ற மைக்கு இதுவரை சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வில்லை. |
| | | | | |
| (iii) | வெள்ளத்தினால் பாதிப்பிற்கு உள்ளான ஆதனங்களுக்கு இழப்பீடு செலுத்துவதன் கீழ் மீள்குடியிருப்பு செயற்திட்டத்திற்குரிய எல்பிட்டிய பிரதேச செயலகத்தில் இருந்து ரூபா 243,000 இழப்பீடாக கோரியிருந்த நபருக்கு ரூபா 1,266,587 தொகை மேலதிகமாக இழப்பீடு செலுத்தப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சாதாரண நபர் ஒருவருக்கு மதிப்பீடு செய்தல் தொடர்பான அனுபவம் காணப்படாதிருந்தமை அறிவிக்கப்பட்டிருந்த துடன் இழப்பீடு மீளளிப்புச் செய்யும் அடிப்படையாக கொள்வதாயின் தேசிய அனர்த்த உதவி சேவை நிலையம் 9(V) படிவத்தில் அவ்வாறான எந்தவொரு மேலதிக கொடுப்பனவும் | வீடமைப்புக் குழுவின் மூலம் மதிப்பீடு செய்வதற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட தகவல்கள் என்ன என்பது தொடர்பாக அவதானிக்கப்பட வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | மேற்கொள்ளப்பட வில்லை. | |
| | | | | |
| 13. | 2020 ஆம் ஆண்டிற்காக விவசாயிகளின் நம்பிக்கை பொறுப்பு நிதிய மானியத்தின் கீழ் 08 விவசாய செயற்திட்டங்களுக்காக ரூபா 3,899,885 தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் விவசாய அமைச்சிலிருந்து நிதியேற்பாடு ஒதுக்கப்படாமையினால் அந்த செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | உரிய நிறுவனத்தின் மூலம் நிதியேற்பாட்டை பெற்று செயல்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | அந்த செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக அமைச்சிலிருந்து நிதியேற்பாடு கிடைக்காதிருந்தமையால் அமுல்படுத்தப்பட்டிருக்க வில்லை. | நிதியேற்பாட்டை பெற்றுக் கொள்வதற்கு தேவையான அறிக்கை தொடர்பாக கவனம் செலுத்துதல் விவசாய அமைச்சினால் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| | | | | |
| 14. | பசுமை விவசாய பூங்காவை தாபித்து அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்திற்காக ரூபா 1,500,000 முன்மொழிவொன்று விவசாய அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2020 ஆம் ஆண்டின் போது செயற்திட்டத்திற்காக நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | பசுமை விவசாய பூங்காவை தாபித்து அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம் விவசாய அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த துடன் நிதியேற்பாடு ஒதுக்கப்படாமையால் அந்த செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | - மேற்படி - |
| | | | | |
| 15. | 2020 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் கீழ் 07 பிரதேச செயலகங்களினால் 13 விவசாய செயற்திட்டங்களுக்காக விவசாய அமைச்சிலிருந்து ரூபா 3,153,015 தொகையான நிதியேற்பாடு கோரப்பட்டிருந்த போதிலும், உரிய நிதியேற்பாடு | - மேற்படி - | இந்த செயற்திட்டத்திற்காக நிதியேற்பாடு கிடைக்காமையினால் அமுல்படுத்தப்பட வில்லை. | பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புக்கள் அவ்வாறே காணப்படுகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | கிடைக்காமையினால் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | | | |
| | | | | |
| 16. | பிரதேசத்தில் சேதன விவசாயங்களை மேம்படுத்துவதற்காக சேதன பசளை உற்பத்தி செய்வதற்கு உள்ள சந்தர்ப்பம் மற்றும் பிரச்சினைகளை உள்ளடக்கி அறிக்கையொன்றை வழங்குமாறு விவசாய அமைச்சின் ஊடாக அறிவிக்கப்பட்டிருந்ததுடன் பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் மாவட்டத்திற்குரிய செயற்திட்ட முன்மொழிவொன்று ரூபா 12,192,470 மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியின் கீழ் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதற்காகவும் 2020 ஆம் ஆண்டில் நிதியேற்பாடு ஒதுக்கப்படாமையின் காரணமாக செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | - மேற்படி - | நிதியேற்பாடு ஒதுக்கப்படாமையினால் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புக்கள் அவ்வாறே காணப்படுகின்றது. |
| | | | | |
| 17. | விவசாய அமைச்சின் செயலாளரின் தலைமையில் நடைபெற்ற 2019 மே 29 ஆந் திகதிய குழுக்கூட்டத்தின் அறிக்கையின் பிரகாரம் வனவிலங்குகளினால் ஏற்படுகின்ற பிரச்சினைகளை குறைப்பதற்கு முடியுமான நடவடிக்கையாக வாயு ரைபிள் மூலம் வனவிலங்குகளை | அமைச்சு செயலாளரின் தீர்மானத்தை அமுல்படுத்துவதற்கு கணக்கீட்டு உத்தியோகத்தர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இந்தப் பணிகள் பாதுகாப்பு அமைச்சு மற்றும் விவசாய அமைச்சு, கமநல அபிவிருத்தி திணைக்களம், வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம், வனசீவராசிகள் அமைச்சு மற்றும் கால்நடை | 2022 பெப்ரவரி வரையிலும் முன்மொழியப்பட்ட பணிகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | விரட்டுவதை உள்ளடக்கிய 06 விடயங்கள் கலந்துரையாடப்பட்டிருந்த போதிலும் 2020 திசெம்பர் 31 வரை அந்த பணிகளில் எதுவும் அமுல்படுத்தப் பட்டிருக்கவில்லை. | | உற்பத்தி, சுகாதார திணைக்களம் மற்றும் நில அளவையாளர் திணைக்களத்தின் மூலம் நிறைவேற்றுவதற்கு முன்னுரிமை நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | |
| | | | | |
| 18. | விவசாய ரீதியான பிரதேசங்களின் பயிர்களுக்கு சேதத்தை ஏற்படுத்துகின்ற உயிரினங்களின் பாதிப்பினை குறைப்பதற்காக நிலைபேறான வேலைத் திட்டமொன்றை தயாரிப்பதற்கு விவசாய அமைச்சின் செயலாளரினால் சகல மாவட்ட செயலாளர்களிடமிருந்தும் தகவல்கள் கோரப்பட்டிருந்ததுடன் அதற்காக விரிவான அறிக்கையொன்று அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எனினும் அந்தப் பிரச்சினைகள் தொடர்பான நிலைபேறான வேலைத் திட்டமொன்று இதுவரை தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | விவசாய மக்களுக்காக நிலைபேறான தீர்மானத்தை எடுக்கக் கூடிய மாவட்ட விவசாய குழு கூட்டங்களுக்கு மாத்திரம் வரையறுக்கப்படாமல் அந்த தீர்மானத்தை அமுல்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இந்த செயற்திட்டம் விவசாய அமைச்சின் மூலம் அமுல்படுத்தப்படுகின்றமையால் இதன் பொறுப்புக்கள் அமைச்சு, திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளதுடன் அதற்குரிய துறைசார்ந்த தகவல்கள் விவசாய அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | 2022 வரையிலும் வனவிலங்குகளின் பாதிப்பினை குறைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| | | | | |
| 19. | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மூன்று வைப்புக் கணக்குகளுக்கு உரியதாக 02 வருடங்களுக்கும் 05 வருடங்களுக்கும் இடையில் மற்றும் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தீர்க்கப்படாதிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி முறையே | உரிய மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | 2022 பெப்ரவரி வரையிலும் அதே நிலைமையில் காணப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ரூபா 93.81 மில்லியன் மற்றும் ரூபா 199.37 மில்லியன் ஆக காணப்பட்டது. இது தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 571(2) மற்றும் (3) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| | | | | |
| 20. | காலி பட்டிணமும் சூழலும் பிரதேச செயலகத்தின் மூலம் சப்பிரி கமக் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 1,000,000 தொகையான மக்குளுவ இலக்கம் 29 முதலாவது ஒழுங்கையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள பக்க வடிகாண், நீர் இறுதியாக வடிந்து செல்லும் வாய்க்கால் வீதிக்கு தொடர்புபடுகின்ற விதத்தில் சரியான மட்டத்தில் (Level) பூர்த்தி செய்யப்படாதிருந்தமையால் அந்த செயற்திட்டம் சுகாதார பிரச்சினைகள் அநேகமாக ஏற்பட்டு பூரணமற்ற செயற்திட்டமாகி இருந்தது. | சாத்தியவள ஆய்வு முறையாக மேற்கொண்டு சுகாதார பிரச்சினைகள் ஏற்படாத வகையில் செயற்திட்டங்கள் பூரணப்படுத்தப்பட வேண்டும். | இந்த பிரச்சினைகள் தொடர்பாக 2020.12.24 ஆந் திகதி பிரதேச செயலகத்தில் நடைபெற்ற பிரதேச இணைப்புக் குழுக் கூட்டத்தின் போது கலந்துரையாடப்பட்ட துடன் நகராதிபதியினால் மிகுதி செயற்திட்ட பகுதிகளை பூர்த்தி செய்து எழுந்திருந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதாக உடன்பட்டிருந்தார். | 2022 பெப்ரவரி வரையிலும் அதே நிலைமையில் காணப்பட்டது. |
| | | | | |
| 21. | பொதுத்திறைசேரியின் ஒன்றிணைந்த முகாமைத்துவ முறைமை நிகழ்ச்சித் திட்டம் (Intergrated Trassury Management System) இன் கீழ் கரந்தெனிய பிரதேச செயலகத்திற்கு நிதி அமைச்சின் மூலம் 2018 | திறைசேரி செயலாளரின் ஆலோசனையின் பிரகாரம் உரிய செயற்திட்டத்தை செயற்திறனாக கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை | பொதுத்திறைசேரி ஒன்றிணைந்த முகாமைத்துவ முறைமை நிகழ்ச்சித்திட்டத்தை விரைவாக அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | 2022 பெப்ரவரி வரையிலும் உரிய நிகழ்ச்சித் திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | நவம்பர் 11 ஆந் திகதி 06 கணனிகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் 2021 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் நிகழ்ச்சித் திட்டம் அமுல்படுத்தப்படாமையின் காரணமாக அந்த கணனிகளுக்காக செலவிடப்பட்ட செலவினம் சிக்கனமற்றதாக இருந்தது. | எடுக்கப்படல் வேண்டும். | | |
| | | | | |
| 22. | எல்பிட்டிய பிரதேச செயலகப் பிரிவில் காணி இன்றிய மக்களுக்கு காணிகளை வழங்கும் செயற்திட்டத்தின் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த காணிகளுக்காக உரிய நலனாளிகளுக்கு வழங்குவதற்கு தயாரிக்கப்பட்ட 445 படி பத்திரங்கள், பகிர்ந்தளிப்பதற்கு முடியாமல் 38 வருட காலத்திலிருந்து பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டிருந்தது. அந்த படி பத்திரங்கள் சனாதிபதியினால் 1982-2009 இற்கு இடையிலான காலப் பகுதியின் போது கையொப்பம் இடப்பட்டிருந்ததுடன் 02 படி பத்திரங்கள் கையொப்பமிடப்பட்டிருக்க வில்லை. மேற்கூறப்பட்ட படி பத்திரங்களுக்கு இடையே 142 படி பத்திரங்கள் காணிப் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் 303 படி பத்திரங்களை பதிவு செய்யும் நடவடிக்கைகளும் | படி பத்திரங்கள் தொடர்பாக அந்தந்த காலத்தில் பகிர்ந்தளித்தல் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்ததுடன் படி பத்திர நலனாளிகளை இனங்கண்டு அவர்களுக்கு படி பத்திரங்களை கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | படி பத்திரதாரர்கள் முன்வராமையால் இந்த படி பத்திரங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதில் பிரச்சினைகள் ஏற்பட்டிருந்தன. | படி பத்திரதாரர்களை இனங்கண்டு அவற்றை வழங்குவதற்கு 2022 பெப்ரவரி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | | | |
| | | | | |
| 23. | நியாகம பிரதேச செயலகத்தில் காணிப் பிரிவில் 1987 மற்றும் 1997 காலப்பகுதியில் படி பத்திர நலனாளிகளுக்கு பகிர்ந்தளிக்க முடியாதிருந்த 384 படி பத்திரங்கள் அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்ததுடன் அதனிடையே 26 படி பத்திரங்கள் சரியான மேற்பார்வையின்றி இருந்தமை மற்றும் ஏனைய முகாமைத்துவ நலிவுகளின் காரணமாக இரண்டு தடவை தயாரிக்கப்பட்டிருந்தது. மேலும் 1987 முதல் 1997 காலப்பகுதியில் விநியோகிக்கப்பட்டிருந்த 14 படி பத்திரங்கள் 2021 பெப்ரவரி 05 வரையும் காணிப் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | குறுகிய காலத்தில் தீர்வினை வழங்குவதற்கு வசதியீனமானதால் படி பத்திரங்கள் தொடர்பாக இந்த வருட இறுதிக்கு முன்னர் நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப் படுவதுடன் 09 அனுமதிப் பத்திர நலனாளிகளுக்கு விரைவாக வழங்குவதற்கும், கொவிட் நிலைமையின் காரணமாக பணிகளில் சதவீதம் குறைவடைந்தமையையும் மேலும் அறியத் தருகின்றோம். | - மேற்படி - |
| | | | | |
| 24. | Covid - 19 தொற்று நோயின் காரணமாக நிதி உதவிகளை செலுத்துதல்<br>-------------------------------------------- | | | |
| | மாவட்ட செயலாளரின் கீழ் காணப்படுகின்ற மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் அலுவலகம், பிரதேச செயலகங்கள் மற்றும் ஏனைய பிரிவுகளில் Covid-19 தொற்று நோய் நிலைமையின் காரணமாக | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | வாழ்வாதாரங்களை இழந்திருந்தமையை உள்ளடக்கிய பல்வேறு வகைப்படுத்தல்களின் கீழ் நிதி உதவிகளை வழங்குதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன. | | | |
| i. | Covid-19 தொற்று நோய் நிலைமையின் காரணமாக நிதி உதவிகளை வழங்குவதற்காக 2020 மே மாதம் இறுதி வரையிலும் காலி மாவட்ட செயலகத்தின் கீழ் காணப்படுகின்ற 19 பிரதேச செயலகங்கள் மற்றும் அதன் கீழ் தாபிக்கப்பட்டுள்ள 68 சமுர்த்தி வங்கிகளுக்கு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் மூலம் அனுப்பப்பட்டிருந்த மொத்தப் பணம் ரூபா 2,382.65 மில்லியன் ஆகும். அதில் ரூபா 308.44 மில்லியன் மீள அனுப்பப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தேறிய ரீதியில் கிடைத்த பணம் ரூபா 2,074 மில்லியனாக இருந்ததுடன் மொத்த கொடுப்பனவுகள் ரூபா 2,557.77 மில்லியன் ஆக இருந்தமையினால் சமுர்த்தி வங்கி சங்கங்களின் நிதியங்களில் இருந்து ரூபா 483.56 மில்லியன் நலனாளிகளுக்கு செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அந்தப் பணம் சமுர்த்தி அபிவிருத்தி | சமுர்த்தி வங்கி நடவடிக்கைகளை பாதிப்பின்றி பேணிச் செல்வதற்கு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்திற்கு அறவிட வேண்டியிருந்த ரூபா 483,560,780 தொகையான பணம் விரைவாக மீளளிப்புச் செய்யப்பட வேண்டும். | நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | 2022 பெப்ரவரி வரையிலும் சமுர்த்தி வங்கி சங்கங்களில் இருந்து செலுத்தப்பட்ட ரூபா 483.56 மில்லியன் தொகை மீளளிப்புச் செய்யப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | திணைக்களத்திலிருந்து மீளளிப்புச் செய்ய வேண்டியிருந்தது. | | | |
| | | | | |
| ii. | பலப்பிட்டி பிரதேச செயலகப் பிரிவில் 86-டி ஆந்தாதொல கிராம உத்தியோகத்தர் பிரிவில் 17 நபர்களுக்காக ஒரு தடவையின் போது ரூபா 5,000 வீதம் 02 அடிப்படையின் கீழ் ரூபா 170,000 கூட்டுமொத்தமாக செலுத்தப்பட்டிருந்த மையினால் அந்த 17 நபர்களுக்கு மாத்திரம் ரூபா 85,000 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | Covid நலன்கள் செலுத்துதல் ஒரு அடிப்படையை தெரிவு செய்து அதற்காக மாத்திரம் மேற்கொள்ளப்படல் வேண்டும். | நலனாளிகளை இனங்காணும் போது ஊனமுற்ற மற்றும் முதியோர் செயலக அலுவலகங்களிலிருந்து வழங்கப்படுகின்ற நலன் உரித்துக்களை கவனத்தில் கொள்ளாமல் நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஆலோசனை வழங்கப்பட்டுள்ள போதிலும் அதன் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததை அறியத்தருகின்றோம். | மேலதிகமாக செலுத்தப்பட்ட ரூபா 85,000 தொகை 2022 பெப்ரவரி வரையிலும் அறவிடப்பட்டிருக்க வில்லை. |
| | | | | |
| iii. | பட்டிணமும் சூழலும் மற்றும் அக்மீமன பிரதேச செயலகங்களுக்குரிய Covid 19 இன் கீழ் நலன்கள் கிடைக்காமை தொடர்பாக 2020 மே 01 ஆந் திகதி முதல் 2020 மே 27 ஆந் திகதி வரை கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளின் கூட்டுமொத்தம் 41 இற்காக செலுத்துவதற்கு குழு பரிந்துரை கிடைத்திருந்ததுடன் 2021 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் படிகள் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | தகைமை பெற்ற நலனாளிகளை கால ரீதியில் நிர்ணயித்து கொவிட் நலன்கள் செலுத்துதல் வேண்டும். | செலுத்துவதற்காக பரிந்துரை கிடைத்திருந்த போதிலும் நிதியேற்பாடு மற்றும் நிதி கிடைக்கப் பெறாமையின் காரணமாக இதுவரையும் செலுத்தப்பட்டிருக்க வில்லை. | 2022 பெப்ரவரி வரையிலும் முறைப்பாடு களுக்காக Covid நலன்கள் செலுத்தப் பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |
| iv. | காலி பட்டிணமும் சூழலும் பிரதேச செயலகத்திற்குரிய தலாபிட்டிய கிராம உத்தியோகத்தர் பிரிவில் Covid 19 நலன்கள் செலுத்தும் போது ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் இரட்டை அடிப்படையில் 25 நபர்களுக்கு நலன்கள் செலுத்தப்பட்டமையின் காரணமாக கூட்டுமொத்தமாக ரூபா 250,000 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | Covid நலன் செலுத்துதல் எதாவதொரு அடிப்படை தெரிவு செய்து அதற்காக மாத்திரம் மேற்கொள்ளப்படல் வேண்டும். | நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை. | 25 நபர்களுக்கு மாதத்திற்கு ரூபா 10,000 வீதம் இரண்டு அடிப்படையின் கீழ் மேலதிகமாக செலுத்துதல்கள் 2020 பெப்ரவரி வரையிலும் அறவிடப்பட்டிருக்க வில்லை. |
| | | | | |
| 25. | சமுர்த்தி உத்தியோகத்தர் ஒருவர் திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்தின் திவிநெகும அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவியில் நியமனக் கடிதத்தின் நிபந்தனைகளை கவனத்தில் கொள்ளாமல் உத்தியோகத்தர் உள்ளபடியான பதவியின் கடமைக்கு உரித்தான சம்பளத்திற்கு மேலதிகமாக தென்மாகாண அபிவிருத்தி அதிகார சபையின் மாதாந்த தலைவர் படி, எரிபொருள் படியுடன் தொலைபேசி படியுமாக அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி முதல் 2020 யூன் மாதம் வரை முறையற்ற பிரகாரம் தலைவர் பதவிக்கு உரித்தான படிகளாக கூட்டுமொத்தமாக ரூபா 654,729 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | நியமனக் கடிதத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | தலைவர் பதவிக்கு நியமிப்பதற்கு அங்கீகாரம் பெறுவதற்கு முன் தலைவருக்கு உரித்தான படியாக பெறப்பட்டிருந்த ரூபா 654,729 தொகை 2022 பெப்ரவரி வரையிலும் அறவிடப்பட்டிருக்க வில்லை. |

| **மாத்தறை மாவட்டச் செயலகம்**<br>----------------------------------------------------- | | | | |
|---|---|---|---|---|
| | 2018 - | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | | |
| | 2019 - | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | | |
| | 2020 - | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | | |
| | | | | |
| **கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பிரதான குறைபாடுகள்**<br>----------------------------------------------------- | | **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை**<br>---------------------------- | **நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள்**<br>---------------------------- | **அது தொடர்பான தற்போதைய நிலைமை**<br>------------------------------ |
| | | | | |
| 01. | 2018 ஆம் ஆண்டிற்காக 11 பன்முகப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்திற்காக ரூபா 8,505,000 நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்தது. 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 7,911,281 தொகையான நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருந்தது. ரூபா 596,800 நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த ஒரு நிகழ்ச்சித் திட்டம் மாத்திரம் நடைமுறை வேலையாக இருந்தது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | கணக்காய்வின் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன. | | | |
| i. | மாத்தறை மெத்தவத்த நெல் களஞ்சியத்தை திருத்துவதற்காக மாத்தறை மாவட்ட செயலாளருக்கு 2017 ஆகஸ்ட் 22 ஆந் திகதி நெல் சந்தைப்படுத்தல் சபையின் மூலம் ரூபா 2,198,354 முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. மாவட்ட செயலகத்தினால் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு தனியார் நிறுவனமொன்றிற்கு ரூபா 9,841,705 தொகையில் (பெறுமதிசேர் வரியின்றி) ஒப்பந்தம் கையளிக்கப்பட்டு 2017 நவம்பர் 22 ஆந் திகதி ரூபா 1,968,342 தொகை வேலை ஆரம்பித்தல் முற்பணமாக செலுத்தப்பட்டிருந்தது. அதற்கு அடுத்தால் அமைந்துள்ள பல்கலைக்கழக கல்லூரி மாணவர்களின் எதிர்ப்பினால் 2018 சனவரி மாதம் முதல் திருத்த நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக முறையான நடவடிக்கை ஒன்று பின்பற்றப்படாமல் திருத்த வேலைகள் கைவிடப்பட்டிருந்தன. | பல்கலைக்கழக கல்லூரியின் எதிர்ப்பு தொடர்பாக அவர்களுடன் இணக்கப்பாட்டிற்கு வந்து பொருத்தமான நடவடிக்கை ஒன்று எடுத்திருக்கவில்லை. | 2019 ஏப்ரல் மாதத்தின் போது நெல் சந்தைப்படுத்தும் சபையிலிருந்து கிடைத்த ரூபா 3,000,572 தொகையில் ஒப்பந்தகாரருக்கு செலுத்த வேண்டிய தொகையை தீர்த்து வைப்பதற்கும் அதன் போது வழங்கப்பட்ட முற்பணத்தை அறவிடுவதற்கும் முடியுமாக இருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. | பல்கலைக்கழக கல்லூரியின் எதிர்ப்பின் காரணமாக திருத்த நடவடிக்கைகள் இடைநடுவதில் நிறுத்தப்பட்டிருந்த துடன் இந்தக் கட்டிடம் பயன்பாடின்றி காணப்பட்டது. |
| | | | | |
| 02. | 1979 இன் 7 ஆம் இலக்க அரசாங்கத்தின் காணிகள் (உரித்தை மீளப் பெறல்) | 1979 இன் 7 ஆம் இலக்க அரசாங்கத்தின் | பதிவேடுகளை தயாரித்து பேணிச் செல்லல் மற்றும் | அரசாங்கத்தின் காணிகள் மற்றும் புதிதாக இனங்காண |

| | | | | |
|---|---|---|---|---|
| | சட்டத்திற்கு இணங்க காணிக் கட்டளை 175 மற்றும் 179 இன் பிரகாரம் அரசாங்கத்தின் காணிகளை இனங்கண்டு பதிவேடுகளுக்கு கொண்டு வருதல் அல்லது வரைபடங்களை இனங்காண்பதுடன் தரவு முறைமையொன்றை பேணிச் செல்லல் வேண்டும். எனினும் மாத்தறை மாவட்ட செயலகம் மற்றும் திஹகொட பிரதேச செயலகங்கள் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | காணிகள் (உரித்தை மீளப் பெறல்) சட்டத்தின் பிரகாரம் அரசாங்கத்தின் காணிகளை குறிப்பாக இனங்கண்டு பதிவேடுகளுக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நாளதுவரையாக்கல் தொடர்பில் கவனம் செலுத்துமாறு பிரதேச செயலாளர்கள் கலந்துரையாடலின் போது பிரதேச செயலாளர்களுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | முடியுமான காணிகள் தொடர்பான சகல தரவுகளையும் உள்ளடக்கிய அறிக்கையொன்று (தகவல்கள், வரைபடத் தொகுதிகள் மற்றும் அருகதை தன்மை, Google Map) தயாரிக்கப்படுகின்றது. |
| | | | | |
| 03. | காணிக் கட்டளை இலக்கம் 180 இன் கீழ் கிராம உத்தியோகத்தர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள பொறுப்புக்களை நிறைவேற்றுவது தொடர்பில் அரசாங்கத்தின் காணிகளை குறிப்பாக இனங்காண்பதற்கு உரிய தரவு முறைமையொன்று பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. இதனால் அனுமதியற்ற பிடித்து வைத்தல்கள் மற்றும் மண் நிரப்புதல்கள் தொடர்பான அறிக்கையிடல் போன்ற பணிகள் மந்த கதியில் நிறைவேற்றப்பட்டிருந்தது. | காணிக் கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | காணி தொடர்பான நடவடிக்கைகள் பிரதேச செயலக மட்டத்தில் மேற்கொள்ளப் படுவதுடன் கணக்காய்வு ஐயவினாவில் காண்பிக்கப்பட்டுள்ள குறைபாடுகள் தொடர்பாக உரிய உத்தியோகத்தர் களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | 2022 பெப்ரவரி வரையிலும் அரசாங்கத்தின் காணிகளை சரியான பிரகாரம் இனங்காணல் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வில்லை. |
| | | | | |
| 04. | மாத்தறை மற்றும் திஹகொட பிரதேச செயலகங்களுக்காக தயாரிக்கப்பட்ட | இனங்காணப்பட்ட அரசாங்கத்தின் காணிகள் தொடர்பாக | மாத்தறை பிரதேச செயலகம் இது | 2022 பெப்ரவரி வரையிலும் 10 காணிகள் அந்த |

| | | | | |
|---|---|---|---|---|
| | அறிக்கைகளில் இனங்காணப்பட்ட அரசாங்கத்தின் காணிகளாக பெயரிடப்பட்டிருந்த அளவில் கூட்டுமொத்தமாக 38 ஏக்கர் அளவான 13 காணிகள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டு காணி மறுசீரமைப்பு, பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக மற்றும் ஆக்கபூர்வமாக ஈடுபடுத்துவதற்கான படிமுறைகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. சில காணிகள் அனுமதியற்ற வகையில் பயன்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டிருந்தது. | பின்தொடர் நடவடிக்கைகளை செய்து மறுசீரமைப்பு மற்றும் பாதுகாப்பு மேற்கொள்ளும் வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தொடர்பாக உரிய உத்தியோகத்தர் களுக்கு அறிவித்துள்ளதுடன் அந்த குறைபாடுகள் எதிர்காலத்தில் ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | நிலைமையிலேயே காணப்பட்டது. |
| | | | | |
| 05. | மாத்தறை பிரதேச செயலகத்தில் அரசாங்க காணிகளை நீண்ட கால வாடகை அடிப்படையில் வழங்கும் போது 10 சந்தர்ப்பங்களுக்கு உரியதாக 2008 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை காணியை பயன்படுத்துதல் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் காணி தொடர்பாக நீண்டகால வாடகை முறி தயாரித்தல் 2018 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இதனால் அந்தக் காணிகளிலிருந்து அரசாங்கத்திற்கு உழைக்க | நீண்டகால வாடகை முறியை தயாரித்தல் பணிகள் சரியான மேற்பார்வையில் நிறைவேற்றுவதன் மூலம் காணியிலிருந்து அரசாங்கத்திற்கு உழைக்கக் கூடியதாக இருந்த வருமானத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இந்தக் காணி தொடர்பாக மிகுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றது. | 2022 பெப்ரவரி வரையிலும் இந்த வாடகை முறியை வழங்குதல் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | கூடியதாக இருந்த வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | | | |
| | | | | |
| 06. | திஹகொட பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் காணியினை அரசாங்கத்திற்கு கைப்பற்றுதல் தொடர்பான தெலம்புகஹஹேன, பூலேஉடுகரஹேன, குஞ்சிகந்தஹேன மற்றும் தென்னஹேன ஒன்றிணைக்கும் காணி அளவில் 2.5184 ஹெக்டயர் அளவாக இருந்தது. அந்தக் காணியை கைப்பற்றுவதற்காக 2011 யூலை 29 ஆந் திகதிய கைப்பற்றல் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல் விநியோகிக்கப்பட்டு 38(அ) உப ஏற்பாட்டின் கீழ் 2012 மே 25 ஆந் திகதி வர்த்தமானி அறிவித்தல் விநியோகிக்கப்பட்டிருந்தது. 2018 பெப்ரவரி 07 ஆந் திகதி வரையிலும் இந்த காணியை கைப்பற்றும் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | காணி தொடர்பான பணிகளை மேற்கொள்ளும் போது காலரீதியில் பின்தொடர் நடவடிக்கைகளை செய்து விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கைப்பற்றுவதற்கு உத்தேசித்துள்ள காணிகளுக்கு ஆரம்ப வரைபடத் திட்டம் மற்றும் கூறுகளாக்கப்பட்ட விபரங்களை பெற்றுக் கொள்வதற்காக 2019 சனவரி 24 ஆந் திகதி அளப்பதற்கான கோரிக்கையொன்று அளத்தல் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டிருந்ததாக காண்பிக்கப்பட்டுள்ளது. | 2022 பெப்ரவரி வரையிலும் அதே நிலைமையில் காணப்பட்டது. |
| | | | | |
| 07. | மாத்தறை மாவட்டத்தில் வெலிகம, அக்குரஸ்ஸ, மாத்தறை, முலட்டியன மற்றும் கும்புறுபிட்டி பிரதேச செயலகங்களின் கீழ் மூடப்பட்டிருந்த 10 பாடசாலைகளும் மாத்தறை, | பிரதேச செயலகங்களின் கீழ் வருகின்ற அரசாங்கத்தின் காணிகள் மற்றும் கட்டிடங்களை இனங்கண்டு அது | தகவல்களை வழங்குமாறு காணிகள் தொடர்பாக காணிப் பிரிவிற்கும், கட்டிடங்கள் தொடர்பாக நிர்வாக உத்தியோகத்தருக்கும் ஆலோசனை | 2022 பெப்ரவரி வரையிலும் மூடப்பட்டிருந்த 10 பாடசாலைகள், 06 இல்லங்கள், 05 கட்டிடங்கள், 10 சனசமூக |

| | | | | |
|---|---|---|---|---|
| | முலட்டியன, மாலிம்பட மற்றும் அத்துரலிய பிரதேச செயலகங்களின் கீழ் பயன்படுத்தப்படாத அலுவலகங்கள் மற்றும் 06 உத்தியோகபூர்வ இல்லங்களும் வெலிபிட்டிய, வெலிகம, கிரிந்த புகுல்வெல்ல மற்றும் மாத்தறை பிரதேச செயலகங்களின் கீழ் ஆடைக்கைத்தொழில்கள் செயலிழந்தமையின் காரணமாக அதில் காணப்பட்ட 05 கட்டிடங்களும் வெலிகம, வெலிப்பிட்டிய, மாத்தறை மற்றும் கொட்டப்பொல பிரதேச செயலகங்களின் கீழ் நிர்மாணிக்கப்படுகின்ற 10 சனசமூக மண்டபங்களும் வெலிபிட்டிய மற்றும் மாத்தறை பிரதேச செயலகங்களின் கீழ் காணப்பட்ட கூட்டுமொத்தமான 05 ஏக்கர் அளவான 02 காணிகளும் முல்லட்டியன, மாத்தறை மற்றும் பஸ்கொட பிரதேச செயலகங்களின் கீழ் முறையே பல்நோக்கு கட்டிடம் ஒன்று, 02 வாராந்த சந்தைகள் மற்றும் தாய் சேய் நிலையமும், முலட்டியான பிரதேச செயலகத்தின் கீழ் காணப்பட்ட “லங்கம பாசல ஹொந்தம பாசல” (அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை) இன் கீழ் | தொடர்பான காலரீதியான நடவடிக்கை எடுத்து உரிய சொத்துக்களை ஆக்கபூர்வமானதாக பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | மண்டபங்கள், 02 காணிகள் மற்றும் கட்டிடம் மற்றும் 06 நிர்மாண செயற்திட்டங்கள் என்பன அதே நிலைமையில் காணப்பட்டன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிர்மாணிக்கும் 02 செயற்திட்டங்களும் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | | | |
| | | | | |
| 08. | ஹக்மன பிரதேச செயலகத்திற்கு சொந்தமான அரசாங்கத்தின் காணியொன்று 1996 ஆம் ஆண்டு முதல் கூட்டுறவு சங்கத்தினால் உரித்து கோரப்பட்டிருந்ததுடன் வாடகை உடன்படிக்கை காலரீதியில் திருத்தப்படாமை மற்றும் நீண்டகால வாடகை முறியை தயாரிக்காமையின் காரணமாக அரசாங்கத்திற்கு வாடகை வருமானம் இழக்கப்பட்டிருந்தது. நில அளவையாளர் அறிக்கையின் பிரகாரம் அனுமதியற்ற 04 குடியிருப்பாளர்கள் காணியின் ஒரு பகுதியை உரித்து கோரியிருந்தமை காண்பிக்கப்பட்டு அதன் பின்னர் கோவை செயலிழந்து காணப்பட்டது. | காலரீதியில் வாடகை உடன்படிக்கையை திருத்த வேண்டியிருந்ததுடன் நீண்டகால வாடகை முறியை குறித்துரைத்த திகதியில் தயாரித்து வாடகை வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். அவ்வாறே அனுமதியற்ற குடியிருப்பாளர்கள் தொடர்பாகவும் விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இந்த அனுமதியற்ற பிடித்துவைத்தல்கள் மேற்கொள்ளப்பட்ட ச.ன.ச சங்கத்திற்கு காணியின் உரித்தை வழங்கியதன் பின்னர் இருந்தமையினால் அந்த சங்கத்தின் பொது முகாமையாளருடன் கலந்துரையாடி வாடகை உரித்துறுதி வரைவில் குறிப்பிடப்பட்ட காணி அளவை திருத்துவதற்கும் மற்றும் அனுமதியற்றவர்கள் தொடர்பான தீர்மானமொன்றை எடுப்பதற்கும் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதற்கும் ஹக்மன பிரதேச செயலாளருக்கு அறிக்கையிடப் பட்டுள்ளது. | 2022 பெப்ரவரி வரையிலும் அதே நிலைமையில் காணப்பட்டது. |
| | | | | |
| 09. | தெவிநுவர பழைய பிரதேச செயலக கட்டிடம் அரசாங்கத்தின் காணிக் கட்டளை சட்டத்தின் கட்டளை 191(2) இற்கு இணங்காத வகையில் 1997 ஒக்தோபர் 04 ஆந் திகதி | அரசாங்கத்தின் காணிகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு காணிகள் கட்டளைச் சட்டத்தின் கட்டளைகள் எச்சந்தர்ப்பத்திலும் | இந்த செயற்பாடுகளுக்குரிய கடிதங்கள் அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது. | 2022 பெப்ரவரி வரையிலும் வாடகையை அறவிடுவதற்கான நடவடிக்கைகளோ அல்லது காணியை கையேற்கும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | கூட்டுறவு சங்கத்திற்கு உடன்படிக்கையொன்றின் மூலம் வாடகைக்கு வழங்கப்பட்டு திருத்தப்பட்ட வாடகைப் பணம் செலுத்துவதற்கு தவறியமையின் அடிப்படையில் 2019 மார்ச் 30 இல் உள்ளவாறு ரூபா 6,910,183 வருமானம் நிலுவையாக காணப்பட்ட போதிலும் நீண்ட கால வாடகைமுறி தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பின்பற்றப்படல் வேண்டும். அதன் பிரகாரம் வாடகை உடன்படிக்கை தயாரிக்கும் போது காணி ஆணையாளரின் அங்கீகாரம் பெறப்பட வேண்டியதுடன் காணப்படுகின்ற வாடகை உடன்படிக்கை காலரீதியில் திருத்தப்பட்டு வாடகைப் பணம் குறித்துரைத்த பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | | நடவடிக்கைகளோ இடம்பெற்றிருக்க வில்லை. |
| | | | | |
| 10. | மாத்தறை பிரதேச செயலகத்தில் ரிட்ரிட் வத்த காணியில் 10 பேர்ச் படியான 22 காணிக் கூறுகள் கைத்தொழிலாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப் பட்டிருந்ததுடன் ஒரு கைத்தொழிலாளருக்கு மிகுதி காணிப் பகுதியையும் வழங்குமாறு பிரதேச செயலாளரிடம் கோரிக்கை விடப்பட்டு அளத்தல் நடவடிக்கைகளுக்காக ரூபா 57,500 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2017 ஆம் ஆண்டில் அந்த நிறுவனம் மூடப்படும் வரை நீண்டகால | அரசாங்கத்தின் காணிகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் போது காலரீதியில் வாடகை உடன்படிக்கை தயாரிக்கப்பட்டு அரசாங்கத்திற்கு அறவிட வேண்டிய வாடகை வருமானம் சேகரிக்கப்படல் வேண்டும். | நீண்டகால வாடகை முறியொன்றை தயாரிப்பதற்காக 04 நிறுவனங்களின் இணக்கப்பாடு பெற வேண்டிய போதிலும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் பரிந்துரை மாத்திரம் கிடைத்திருந்ததுடன் இந்தக் காணி பிரதேச சபைக்கு சொந்தமாக இருந்தமையால் நில வாடகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக காண்பிக்கப் பட்டுள்ளது. | தற்போது இந்த நிறுவனம் மூடப்பட்டிருந்தமையால் அந்த நிறுவனத்திற்கான அளவிடல் கட்டளை இரத்துச் செய்யப்பட்டிருந்ததுடன் காணியை அனுமதியற்ற பயன்பாட்டிலிருந்து விலக்கி கொள்வதற்கு கைத்தொழில் அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட கைத்தொழில்களுக்காக நீண்டகால வாடகைமுறியின் கீழ் |

| | | | | |
|---|---|---|---|---|
| | வாடகைமுறி தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | | | காணியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.<br><br>வாடகை அங்கீகாரம் பெறுவதில் தாமதம் ஏற்படுவதற்கு சந்தர்ப்பம் உள்ளமையினால் தற்போது கைத்தொழிலாளர்களின் கோரிக்கையின் படி நீண்டகால வாடகை முறி தயாரிக்கப்படும் வரை தென் மாகாண காணி ஆணையாளரின் அங்கீகாரத்தின் கீழ் வருடாந்த அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டிருந்ததுடன் மதிப்பீட்டுத் திணைக்களத்திலிருந்து கிடைத்த மதிப்பீட்டின் பிரகாரம் வருடாந்த வாடகைப் பணம் அறவிடப்படுகின்றது. |
| | | | | |
| 11. | மூடப்பட்டிருந்த மாத்தறை / வெரதுவ பண்டாரநாயக்க வித்தியாலயத்தின் நிலம் 2012 பெப்ரவரி 15 ஆந் திகதி தொழில்பயிற்சி நிலையமொன்றுக்காக விகாரையொன்றிற்கு கையளிக்கும் போது அரசாங்கத்தின் காணிகள் கட்டளைச் சட்டத்தின் | அரசாங்கத்தின் காணிகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் போது அரசாங்கத்தின் காணிக் கட்டளைகள் பின்பற்றப்பட வேண்டியிருந்ததுடன் சரியான வாடகை உடன்படிக்கையை தயாரித்து அதன் | இவ்வாறான முறையற்ற செயற்பாடுகளை தவிர்த்துக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | வெரதுவ பண்டாரநாயக்க வித்தியாலயத்திற்குரிய மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்ட சகல நிலுவைப் பணமும் அறவிடப்பட்டுள்ளதுடன் புகையிரத செயற்திட்டம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | கட்டளை இலக்கம் 200 இற்கு இணங்க நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் கணக்காய்வுத் திகதி வரையிலும் தொழில்பயிற்சி நிலையமொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை. விகாரை மற்றும் சீன கம்பனியினால் ஏற்படுத்தப்பட்ட 02 வாடகை உடன்படிக்கையின் நிபந்தனை இலக்கம் 02 இன் பிரகாரம் வாடகை செலுத்தாதிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்ததுடன் ஆரம்ப வாடகை உடன்படிக்கை இதுவரையும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. கணக்காய்வின் பின்னர் பிரதேச செயலாளருக்கு விகாராதிபதி ரூபா 895,000 தொகை செலுத்தியிருந்த போதிலும் மேலும் ரூபா 1,790,000 தொகை அறவிடுவதற்கு காணப்பட்டது. | பிரகாரம் வாடகை வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அவ்வாறே விரைவாக நிலுவை வாடகை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | | முடிவடைந்திருந்த மையால் சீன கம்பனியிலிருந்து உரித்தை தமக்கு கையளிக்குமாறு தற்போது சன்றா கம்பனிக்கு வருடாந்த வாடகை முறையொன்றின் கீழ் அந்தக் காணியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது |
| | | | | |
| 12. | 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் 294 குடும்பங்களை மீள்குடியமர்த்துவதற்காக செலவின விடய இலக்கம் 130-02-08-12-2202 இன் கீழ் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டுமொத்தமாக ரூபா 361,933,604 செலவினமொன்று செய்யப்பட்டிருந்தது. இது | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | | |
| i. | மாத்தறை பிரதேச செயலகத்தின் மூலம் காணியொன்றை கொள்வனவு செய்வதற்காக நலனாளி ஒருவருக்கு ரூபா 400,000 வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறே இன்னுமொரு நலனாளிக்கு வழங்கப்பட்ட நிதி உதவித் தொகையில் அவரின் மகனின் காணி ரூபா 400,000 தொகையில் கொள்வனவு செய்து வீடுகளை நிர்மாணிப்பதற்காக மேலும் ரூபா 500,000 தொகையும் வழங்கப்பட்டிருந்தது. எனினும், இந்த இரண்டு நலனாளிகளும் 2019 திசெம்பர் மாதம் வரையிலும் வீட்டினை நிர்மாணித்தல் மற்றும் ஆபத்தான இடத்தை விட்டு விலகுதல் என்பன இடம்பெற்றிருக்கவில்லை. | நிதி உதவி வழங்கும் போது நலனாளிக்கு சலுகை வழங்குவதைப் போல நிதிப் பிரமாணம் தொடர்பாகவும் கவனம் செலுத்த வேண்டியிருந்ததுடன் நிதி உதவி வழங்கப்பட்ட நோக்கம் நிறைவேற்றப்பட்டதா எனவும் பரீட்சிக்கப்பட வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | 2022 பெப்ரவரி வரையிலும் அதே நிலைமையில் காணப்பட்டது. |
| | | | | |
| ii. | மாத்தறை பிரதேச செயலகத்தில் ஒரு நபரின் வீடு, புவிச்சரிதவியல் அறிக்கையின் பிரகாரம் திருத்தங்கள் மேற்கொண்டு மீண்டும் பயன்படுத்துவதற்கு பரிந்துரை வழங்கப்பட்டிருந்த போதிலும் மத்திய மண்சரிவு ஆபத்துடன் வேறொரு காணியொன்றை கொள்வனவு செய்வதற்காக ரூபா 1,600,000 வழங்கப்பட்டிருந்தது. | புவிச்சரிதவியல் ஆய்வு அறிக்கையில் வழங்கப்பட்டிருந்த பரிந்துரையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வீட்டில் குடியிருப்பாளர்கள் குடியிருந்த போதிலும் தரச்சான்றிதழ் இதுவரையிலும் வழங்கப்பட்டிருக்க வில்லை. | இந்த வீட்டினை நிர்மாணிப்பதற்கான சகல பணமும் பிரதேச செயலகத்தினால் விடுவிக்கப் பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |
| iii. | தெவிநுவர பிரதேச செயலகத்தில் நபரொருவருக்கு வீடொன்றுடன் காணியொன்றை கொள்வனவு செய்வதற்காக ரூபா 1,558,000 தொகை வழங்கப்பட்டிருந்த போதிலும் கொள்வனவு செய்யப்பட்ட காணியின் உரித்துறுதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | நலனாளிக்கு வழங்கப்பட்ட நிதியுதவிக்காக தேவையான அடிப்படையான ஆவணங்கள் சரியாக பெறப்படல் வேண்டும். | உரித்துறுதியை உள்ளடக்கிய கோவையை பரீட்சிக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | 2022 பெப்ரவரி வரையிலும் உரித்துறுதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| | | | | |
| 13. | பிட்டபெத்தர பிரதேச செயலகத்தின் புதிய ஐந்து மாடிக் கட்டிட நிர்மாணம் ---------------------------------------------- | | | |
| i. | கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கான மேட்டை வெட்டியதன் காரணமாக மண்சரிவு அபாயமொன்று காணப்படுவதாக தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனத்தினால் 2019 ஒக்தோபர் 22 ஆந் திகதிய அறிக்கையில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | புவியியல் ஆய்வு அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். | மண் மேடு உடைந்து விழும் ஆபத்தொன்று காணப்படுகின்ற மையால் அதற்காக தற்காலிக தீர்வாக நீர் வழிந்தோடிச் செல்லும் முறையை முறையாக கட்டுப்படுத்துதல் மற்றும் இடம் மேவுகை செய்யப்பட்டுள்ளது. | நீண்டகால தீர்வாக மேற்கொள்ளப்பட வேண்டிய கட்டிட நிர்மாணம் தாமதமடைந்தமை தொடர்பாக பல்வேறு முறையிலும் பல சந்தர்ப்பங்களின் போது ஒப்பந்தகார நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| | | | | |
| ii. | முற்பண காப்புறுதியின் காலம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்த போதிலும் 2019 நவம்பர் 30 ஆந் திகதி வரையிலும் செலுத்தப்பட்ட முற்பணத் தொகையில் ரூபா 11,333,175 தொகை (வற் | அரசாங்கத்திற்கு ஏற்படக்கூடிய நட்டங்களை இனங்கண்டு அவற்றை குறைப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | - | இந்த முற்பணத்தை தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் கட்டிடத்தின் மிகுதி வேலைகளுக்காக மதிப்பீடொன்று |

| | | | | |
|---|---|---|---|---|
| | உடன்) அறவிடுவதற்கு எஞ்சியிருந்தது. | | | தயாரித்து அமைச்சிற்கு சமர்ப்பிக்கப் பட்டுள்ளது. |
| | | | | |
| iii. | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரிவு 13.1 மற்றும் 13.2 இன் பிரகாரம் முறையான காப்புறுதி உடன்படிக்கையொன்று சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் சமர்ப்பிக்கப்பட்ட காப்புறுதி உடன்படிக்கை காலம் விஞ்சி காணப்பட்டது. மேலும் உடன்படிக்கையின் பிரிவு 27.1 இன் பிரகாரம் சகல மாதங்களிலும் நாளதுவரையாக்கப்பட்ட Programme for the works ஒப்பந்தகாரர்களிடமிருந்து பெறப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கையின் பிரகாரம் காப்புறுதி உடன்படிக்கை மற்றும் Programme for the works பெறப்பட வேண்டியிருந்ததுடன் அவ்வாறு இல்லாதவிடத்து உடன்படிக்கையின் பிரகாரம் பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | இந்த காப்புறுதி மேவுகைக் காலத்தை நீடிக்குமாறு பல சந்தர்ப்பங்களின் போது ஒப்பந்தகார நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் ஒப்பந்தகாரர் களிடமிருந்து ஒவ்வொரு மாதத்தின் போதும் நாளதுவரையாக்கப்பட்ட ஒப்பந்த முகாமைத்துவத்திற்கான நிகழ்ச்சித் திட்டமொன்றை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட பொறியியலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக அறிக்கையிடப் பட்டுள்ளது. | 2022 பெப்ரவரி அளவில் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளது. |
| | | | | |
| 14. | மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 100,940,000 தொகையான திஹகொட பிரதேச செயலகத்தின் புதிய மூன்றுமாடி கட்டிட நிர்மாணித்தல் திணைக்கள பெறுகை குழுவின் எல்லையை விஞ்சுகின்றமையினால் ரூபா 99,971,000 தொகையில் திருத்தப்பட்ட மதிப்பீடொன்று | மொத்த கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்ததுடன் தொடர்புடைய பெறுகைகள் வழிகாட்டியின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | அத்தியவசியமல்லாத வேலை விடயங்கள் மாவட்ட பொறியியலாளரின் பரிந்துரையின் பிரகாரம் அகற்றி மாவட்ட செயலக பெறுகை எல்லை வரை மதிப்பீட்டை திருத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள |

| | | | | |
|---|---|---|---|---|
| | தயாரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பெறுகை செயற்பாடுகளின் மூலம் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட சிக்கனம், செயற்திறமை மற்றும் வினைத்திறமைகளை உச்சப்படுத்தும் நோக்கம் தவறவிடப்பட்டிருந்தது. | | | துடன் அதன் பிரகாரம் பெறுகை நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ளப் பட்டிருந்தது. |
| | | | | |
| 15. | மாத்தறை மாவட்ட திட்டமிடல் செயலகத்தினால் 2019 ஆம் ஆண்டின் போது அமுல்படுத்தப்பட்ட 08 நிகழ்ச்சித் திட்டங்களுக்குரிய 44 செயற்திட்டங்கள் தேசிய போட்டியாளர் கேள்வி கோரல்களுக்காக மாத்தறை மாவட்ட செயலகத்தில் 2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பெறுகை நடவடிக்கைகளுக்கான பெறுகைக்குழு / தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு படியாக ரூபா 2,529,000 தொகை செலுத்தப்பட்டிருக்கும் போது பெறுகைகள் வழிகாட்டிக் கோவையில் காட்டப்பட்டுள்ள விடயங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வில்லை. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.9.1 இன் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்யப்படுவதாக காண்பிக்கப்பட்டுள்ளது. | இந்த நிலைமை 2022 பெப்ரவரி வரையிலும் சரிசெய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| | | | | |
| 16. | அரசாங்கத்தின் காணிகள் நீண்ட கால வாடகைக்கு வழங்குதல் தொடர்பாக 11 பிரதேச செயலகங்களில் 194 கோவைகள் பராமரிக்கப்பட்டிருந்ததுடன் 08 கோவைகள் மாத்திரம் நீண்டகால வாடகை முறியை | நீண்டகால வாடகை உடன்படிக்கையை தயாரிக்கும் பணிகள் சரியான மேற்பார்வையுடன் காலரீதியில் நிறைவேற்றுதன் மூலம் | எதிர்காலத்தில் சரி செய்யப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. | மாத்தறை, தெவிநுவர, திக்வெல்ல, திஹகொட மற்றும் மாலிம்பட பிரதேச செயலகங்களுக்குரிய காணிகளுக்கிடையே நீண்டகால வாடகை |

| | | | | |
|---|---|---|---|---|
| | தயாரித்து அரசாங்கத்திற்கு வருமானம் அறவிடப்படுகின்றது. | காணிகளிலிருந்து அரசாங்கத்திற்கு உழைக்கக்கூடியதாக இருந்த வருமானத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | | அறவிட முடியுமான காணிகளுக்குரிய மிகுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றது. |
| | | | | |
| 17. | அரசாங்கத்தின் காணிகள் தொடர்பான தரவுகள் e-Slims பெயருடைய தகவல் முறைமையொன்றை உள்ளடக்குதல் 2016 ஒக்தோபர் மாத இறுதியளவில் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் கிரிந்த புகுல்வெல்ல, மாத்தறை மற்றும் மாலிம்பட மற்றும் திஹகொட என்ற 04 பிரதேச செயலகங்களினால் அந்த இலக்கு 2019 நவம்பர் 11 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | தொடர்புடைய கடிதத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் உரிய பணிகளை விரைவாக பூர்த்தி செய்தல் வேண்டும். | உரிய தரவுகள் e-Slims தகவல் முறைமைக்கு விரைவாக நாளதுவரையாக்கு வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | கிரிந்த புகுல்வெல்ல, மாத்தறை, மாலிம்பட மற்றும் திஹகொட பிரதேச செயலகங்களின் தகவல்கள் தொடர்ந்தும் e-Slims தகவல் முறைமையில் நாளதுவரையாக்கப் படுகின்றது. |
| | | | | |
| 18. | தெவிநுவர பிரதேச செயலகத்தில் காணிகள் இல்லாத நபர்களுக்காக பகிர்ந்தளிக்கும் நோக்கில் கிராமங்களை விரிவுபடுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 14 ஏக்கர் 28.9 பேர்ச் அளவான நிலத்தில் 04 காணிகளுக்காக 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் ரூபா 70.7 மில்லியன் இழப்பீடாக செலுத்தி கைப்பற்றும் செயற்பாடுகள் | காணிகள் தொடர்பான பணிகளை மேற்கொள்ளும் போது காலரீதியில் பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | காணிக் கச்சேரி ஊடாக தெரிவு செய்யப்பட்ட நபர்களின் தகவல்கள் நாளதுவரையாக்கப்பட வேண்டியிருந்தமையால் மற்றும் மீண்டும் அவர்களுக்காக காணி கச்சேரியொன்றை நடாத்துவதற்கு முன்மொழியப்பட்டிருந்த மையால் அதற்காக தென்மாகாண காணி ஆணையாளரின் | கைப்பற்றப்பட்ட போதும் நோக்கத்திற்காக இதுவரை ஈடுபடுத்தப்படாதிருந்த காணிக்காக நாம்பட்டுன்ன கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள கொரக்கபந்துரஹேன காணி, கலல்ல தெற்கு கிராம உத்தியோகத்தர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் 2019 ஒக்தோபர் 30 ஆந் திகதி வரையிலும் கைப்பற்றும் நோக்கத்திற்காக ஈடுபடுத்தப்படாமல் அந்தக் காணி விளைவற்றுக் காணப்பட்டது. | | அங்கீகாரம் கோரப்பட்டுள்ளதுடன் அதற்காக LCD 1, 2, 3 அறிக்கை மற்றும் தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனத்தின் அறிக்கை பெற்றுக் கொண்டதன் பின்னர் உதவி காணி ஆணையாளருக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அதன் பின்னர் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படுமென அறிக்கையிடப் பட்டுள்ளது. | பிரிவில் அமைந்துள்ள மாறகஹவத்த, ஜூவன்கங்கானம்கே வத்த, கொடகந்துறவத்த ஒன்றிணைந்த காணியாக இனங்காணப் பட்டிருந்ததாக தெவிநுவர பிரதேச செயலாளருக்கு அறிக்கையிடப் பட்டுள்ளது. போதியளவான இழப்பீட்டு பணம் கிடைக்கப்பெறாமை மற்றும் காணி உரிமையாளர்களின் எதிர்ப்புக்களின் காரணமாக இழப்பீட்டுப் பணத்தை வழங்கி பூர்த்தி செய்யப்படும் வரை காணியை பகிர்ந்தளிப்பதில் தாமதம் ஏற்பட்டிருந்ததுடன் தற்போது வரையில் இழப்பீட்டு பணம் தொடர்பான பிரச்சினைகளை தீர்த்து வைக்கப்பட்டுள்ளதாக அறிக்கையிடப் பட்டுள்ளது. |
| | | | | |
| 19. | 2008 ஆகஸ்ட் 20 ஆந் திகதிய 2008/4 ஆம் இலக்க காணி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் | தொடர்புடைய சுற்றறிக்கை ஆலோசனையின் | காணிக் கச்சேரி ஊடாக இனங்காணப்பட்ட நபர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு | 2022 பெப்ரவரி வரை இதற்கான நடவடிக்கைகள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | பிரகாரம் தயாரிக்கப்பட்ட காணியற்றவர்களை பதிவு செய்யும் பதிவேட்டின் பிரகாரம் 11 பிரதேச செயலகங்களில் தகைமை பெற்ற 11,033 நபர்கள் இனங்காணப்பட்டிருந்ததுடன் அந்த விண்ணப்பதாரர்களுக்கு (மாத்தறை, தெவிநுவர) பிரதேச செயலகங்கள் தவிர) பகிர்ந்தளிப்பதற்கு போதியளவான காணி ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவிலும் காணப்படாதிருந்தமையினால் மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையின் 2.3 இல் குறிப்பிடப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்க வில்லை. | பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பொருத்தமான காணி கிராமங்களை விரிவுபடுத்தலின் கீழ் தற்போது இனங்காணப்பட்டுள்ள துடன் கைப்பற்றும் நடவடிக்கைகள் முடிவடைந்ததன் பின்னர் அந்தக் காணிகளை தகைமை பெற்றவர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| | | | | |
| 20. | மாவட்ட செயலகத்திற்கு சொந்தமான கெப் வண்டியொன்று 2018 சனவரி 01 ஆந் திகதி முறையான அனுமதியொன்றை பெற்றுக் கொள்ளாமல் சாரதியினால் ஓடிச்செல்லும் போது ஏற்பட்ட 02 விபத்துக்களினால் சாரதியின் வேலை நீக்கப்பட்டிருந்தது. எனினும், விபத்து ஏற்பட்டு 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நட்டத்தின் கூட்டுமொத்தமான ரூபா 882,394 தொகையை | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நிதிப் பிரமாணம் 104(4) இன் இறுதி பரிசோதனை அறிக்கை கிடைத்திருந்ததுடன் மிகுதி நடவடிக்கைகள் விரைவாக பூர்த்தி செய்யப்படுமென குறிப்பிடுகின்றோம். | சாரதியின் ஓய்வூதியக் பணிக்கொடை யிலிருந்து மேற்கூறப்பட்ட நட்டத்தை அறவிடுமாறு 2021.07.31 ஆந் திகதிய கடிதத்தின் ஓய்வூதிய திணைக்களத்திடம் கோரப்பட்டுள்ளது. 2022 பெப்ரவரி வரையிலும் அந்த நட்டம் அறவிடப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கோ / அறவிடுவதற்கோ மற்றும் அதற்குரிய பொறுப்பு வாய்ந்த தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுத்தலும் தொடர்ச்சியாக தாமதமடைந்திருந்தது. எனினும் உரிய சாரதி 2019 நவம்பர் 21 ஆந் திகதி ஓய்வுபெற்றுச் சென்றிருந்தார். | | | |
| | | | | |
| 21. | 1976 ஆம் ஆண்டு தும்பு கைத்தொழிலுக்காக அரசாங்கத்திற்கு கைப்பற்றப்பட்டிருந்த 02 ஏக்கர் 19 பேர்ச் அளவான மாத்தறை பிரதேச செயலகப் பிரிவில் மடிஹ கிழக்கு மற்றும் மேற்கு பிரிவுகளுக்குரிய காணியில் மடிஹ மேற்கு பிரிவிற்குரிய 01 றூட் 36 பேர்ச் அளவான காணியில் சமுர்த்தி அதிகார சபையினால் ரூபா 2,139,000 செலவில் சமுர்த்தி பொதுச்சங்க அலுவலகம் நிர்மாணிக்கப்பட்டு 18 வருடங்கள் அளவிலான காலம் நடாத்திச் செல்லப்பட்டிருந்தது. பிரதேச செயலாளர் காணி ஆணையாளர் நாயகத்தின் முறையான அங்கீகாரமின்றி காணி கைப்பற்றல் நோக்கத்திற்கு புறம்பாக சமுர்த்தி அதிகார சபைக்கு தென்மாகாண பிரதம அமைச்சிற்கு காணியின் உரித்தைக் கையளிப்பதற்கு | அரசாங்கத்தின் காணியை கையளிக்கும் போது பின்பற்றப்பட வேண்டிய செயற்பாடுகள் முறையான திட்டமொன்றின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | மாத்தறை பிரதேச செயலாளரினால் தென் மாகாண கைத்தொழில் அமைச்சின் செயலாருக்கு கடிதம் ஒன்றின் மூலம் இந்தக் காணிப் பகுதி சமுர்த்தி அதிகார சபைக்கு கையளிப்பதற்காக எமக்கு விடுவிக்குமாறு கோரப்பட்டிருந்ததாக பிரதேச செயலாளர் அறிக்கையிட்டிருந்தார். உரிய காணி தொடர்பான சகல விபரங்களும் தெளிவாக்கப்பட்டு மிகுதி நடவடிக்கைகளுக்காக ஆலோசனை வழங்குமாறு காணி அமைச்சின் செயலாளருக்கு கடிதம் மூலம் கோரப்பட்டிருந்ததுடன் காணியின் உரித்தை மீண்டும் தமக்கு கையளிக்குமாறு தென் | 2022 பெப்ரவரி வரையிலும் உரிய பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | | மாகாண பிரதம அமைச்சின் செயலாளருக்கும் கோரப்பட்டுள்ளதாகவும் பிரதேச செயலாளர் அறிக்கையிட்டிருந்தார். | |
| | | | | |
| 22. | மாத்தறை பிரதேச செயலகத்தில் பொருத்தப்பட்டுள்ள மின்பாரந்தூக்கிக்காக பொருத்தும் செலவினம், பராமரிப்பு செலவினம் மற்றும் சேவைச் செலவினமாக கூட்டுமொத்தமாக ரூபா 4,082,211 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் 2015 மார்ச் மாதம் புதிய அலுவலகம் திறக்கப்பட்ட திகதி முதல் இதுவரையிலும் மின்பாரந்தூக்கி செயற்பாடின்றி காணப்படுகின்றமையால் மேற்கூறப்பட்ட பணம் பயனற்ற செலவினமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | அரசாங்கத்தின் நிதி செயற்திறனாக பயன்படுத்தப்படல் வேண்டும். | உரிய பழுதுபார்த்தல் நடவடிக்கைகளுக்காக அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்த வேண்டிய மதியுரைச் சேவைக் கட்டணமாக பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள தொகையில் செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | 2022 பெப்ரவரி வரையிலும் மின்பாரந்தூக்கியை நாளதுவரையான நிலைமைக்கு கொண்டு வருதல் தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. |
| | | | | |
| 23. | கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம் மாவட்ட செயலகம் மற்றும் 13 பிரதேச செயலகங்களில் இனங்காணப்பட்ட காணி அளவான 42.6527 ஹெக்டயரின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு நிதியல்லா சொத்துக்கள் | விரைவாக இந்த நடவடிக்கைகளை பூர்த்தி செய்து அந்த காணிகளின் பெறுமதி அறிக்கைகளுக்கு கொண்டுவரல் வேண்டும். | நிதியல்லா சொத்துக்களின் அறிக்கையிலும் மற்றும் கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் அறிக்கையிலும் சொத்துக்களின் குறியீட்டு அலகுகளுடன் சமமானதாக இல்லை. அவ்வாறே | தற்போது சரிசெய்யப்படுகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | தொடர்பான கூற்றில் உள்ளடக்கப்படாதிருந்த துடன் 03 பிரதேச செயலகங்களுக்குரிய காணிகளின் அளவை இனங்காண்பதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் பயன்படுத்துகின்ற மாதிரிகளின் நிதி ரீதியான பெறுமதியை குறிப்பிடுவதற்கு அந்த படிவத்தில் வசதிகள் வழங்கப்பட்டிருக்க வில்லை. | |
| | | | | |
| 24. | 2016 ஒக்தோபர் 05 ஆந் திகதிய HAF/ADMIN/DRIVERS/ 2016/23 ஆம் இலக்க உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் உதவி செயலாளர் (நிர்வாகம்) இன் கடிதத்தின் மூலம் மேல் மாகாண போக்குவரத்து அமைச்சின் மாகாண அரசாங்க சேவையின் சாரதி சம்பளங்களை மீளளிப்புச் செய்தலின் கீழ் 2016 ஒக்தோபர் முதல் மாவட்ட செயலகத்திற்கு நியமிக்கப்பட்டிருந்த போதிலும் 2019 ஒக்தோபர் முதல் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரை செலுத்தப்பட்ட ரூபா 542,070 தொகையான சம்பளம் மற்றும் படிகள் மீளளிப்புச் செய்யப்படாதிருந்ததுடன் இந்த நியமித்தல்களுக்காக முறையான அங்கீகாரமும் காணப்படவில்லை. | இந்த சம்பளம் செலுத்துதல் மற்றும் பதவிகளை முறைமைப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இது தொடர்பாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதுடன் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. | இது தொடர்பாக 2020 பெப்ரவரி வரையிலும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வில்லை. |
| | | | | |
| 25. | மாத்தறை பிரதேச செயலகத்திற்கு சொந்தமான அரசாங்கத்தின் வீடு | தாபன விதிக் கோவையின் XIX | இந்த உத்தியோகபூர்வ இல்லத்தில் பிரதேச செயலாளர் ஒருவர் | 2022 பெப்ரவரி வரையிலும் இந்த நடவடிக்கைகள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | முறையற்றதாக 2014 ஆகஸ்ட் மாதம் முதல் 2017 யூலை 12 ஆந் திகதி வரையான காலத்திற்காக இன்னுமொரு பிரதேசத்தின் பிரதேச செயலாளருக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் தாபன விதிக் கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 5.7 ஆம் பிரிவின் பிரகாரம் வீட்டு வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஆம் அத்தியாயத்தின் 5.7 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | குடியிருப்பதாயின் அந்தக் கால எல்லைக்காக அவரிடமிருந்து வீட்டு வாடகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மாத்தறை பிரதேச செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | பூர்த்தி செய்யப்பட்டிருக்க வில்லை. |
| | | | | |
| 26. | கம்பெரலிய விரைவான கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (RRDP) 2019 இன் கீழ் வெலிகம தேர்தல் பிரிவில் மத நிலையத்திற்காக சூரிய வலுசக்தி வசதியை வழங்கும் செயற்திட்டத்தின் கீழ் வெலிகம பிரதேச செயலகப் பிரிவில் 41 வணக்கஸ்தலங்கள் மற்றும் வெலிபிட்டிய பிரதேச செயலகப் பிரிவில் 34 வணக்கஸ்தலங்கள் என்பவற்றிற்கு சூரிய வலுசக்தி பொருத்தப்பட்டிருந்ததுடன் சூரிய வலுசக்தி அதிகார சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த களப் பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் உரிய பிரகாரம் நிறைவேற்றப்படாத வேலைப் பகுதி மற்றும் மேலும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டியதாக குறிப்பிடப்பட்டு | இந்த நிலைமை சரிசெய்யப்படல் வேண்டும். | 10 சதவீத நிறுத்தி வைத்தல் பணம் நிறுத்தி வைக்கப்பட்டு இந்தப் பணம் விடுவிக்கப்பட்டுள்ளது. | 2022 பெப்ரவரி வரையிலும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மாவட்ட செயலாளருக்கு அறிவிக்கப்பட்டிருக்கும் போது அந்தக் குறைபாடுகள் மற்றும் அபிவிருத்திகள் ஒப்பந்தகாரரிடமிருந்து நிறைவேற்றப்படாமல் 03 நிறுவனங்களுக்கு 75 சூரிய சக்தி உபகரணங்கள் பொருத்துவதற்காக வரியின்றி ரூபா 32 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. | | | |
| | | | | |
| 27. | மாத்தறை நில்வளா அபிவிருத்தி செயற்திட்டம் 2018-2020 இற்காக உள்நாட்டு அலுவல்கள் மற்றும் மாகண சபைகள் உள்ளூராட்சி அமைச்சிலிருந்து மாத்தறை மாவட்ட செயலகத்திற்கு 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்காக கூட்டுமொத்தமாக ரூபா 715 மில்லியன் வழங்கப்பட்டிருந்ததுடன் 2019 சனவரி 10 ஆந் திகதிய MNPEA/PLN/2019 ஆம் இலக்க தேசிய கொள்கைகள் பொருளாதார அலுவல்கள் மற்றும் மீள் குடியமர்த்துதல் அமைச்சின் செயலாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்திட்ட முன்மொழிவு தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்க வில்லை. இந்த செயற்திட்டத்தின் பணிகள் | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | இது தொடர்பாக 2022 பெப்ரவரி வரையிலும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு விடயப் பொறுப்பு அமைச்சரிடமிருந்து அங்கீகரிக்கப்படாமல் அமுல்படுத்தப்பட்டிருந்தது. | | | |
| | | | | |
| 28. | 2019 நவம்பர் 20 ஆந் திகதிய BD/GPS/ISS/09 /01/NA/2019 ஆம் இலக்க சகல மாவட்ட செயலாளர்களுக்கும் முகவரியிடப்பட்ட திறைசேரி செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் தற்போது வேலை ஆரம்பிக்கப்படாத செயற்திட்டங்களை மீண்டும் மீளாய்வு செய்து அறிவிக்கும் வரை தற்காலிகமாக கைவிடுமாறு அறிவிக்கப்பட்ட போதும் அதற்கு இணங்காத வகையில் 2020 திசெம்பர் மாதம் 23 ஆந் திகதி மாவட்ட செயலகத்தின் பெறுகைகள் குழுவினால் கூட்டுமொத்தமாக ரூபா 254.4 மில்லியன் தொகையான நீர்க்குழாய்களை நீடிக்கும் புதிய 14 செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்குரிய பெறுகை தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. | உரிய கடிதத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | மாவட்ட இணைப்பு குழுக்கூட்டத்தின் தீர்மானத்தின் அடிப்படையில் திறைசேரி செயலாளருக்கு அறிவித்து அவ்வாறு மேற்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | 2022 பெப்ரவரி வரையிலும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| | | | | |
| 29. | நில்வளா எலிய செயற்திட்டத்திற்குரிய மதிப்பீட்டு பெறுமதியின் கூட்டுமொத்தம் ரூபா 78.6 மில்லியனான 09 நிர்மாண வேலைகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 3,844,624 | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இந்த காப்புறுதியின் செல்லுபடிக் கால எல்லையை நீடித்து தருமாறு ஒப்பந்தகாரருக்கு ஆலோசனை | முறையான பிரகாரம் நிதியேற்பாடு கிடைக்காமையின் காரணமாக செயலாற்றல் பிணை முறிகளின் செல்லுபடிக் |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆன 09 செயலாற்றல் பிணை முறிகளின் செல்லுபடிக் கால எல்லையை விஞ்சி 02 மாதங்களுக்கும் 11 மாதங்களுக்கும் இடையிலான வீச்சில் காணப்பட்ட போதிலும் உரிய நிர்மாண வேலைகள் முடிவடையாதிருந்ததுடன் ஒப்பந்த கால எல்லையும் நீடிக்கப்பட்டிருக்கவில்லை. | | வழங்கப்பட்டுள்ளதாக காண்பிக்கப்பட்டுள்ளது. | காலத்தை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் படாதிருந்ததாக கணக்காய்விற்கு அறிவிக்கப் பட்டிருந்தது. |
| | | | | |
| 30. | 2020 மே 15 ஆந் திகதிய DSM/DPS/Nilwala/24/2019 ஆம் இலக்க மாவட்ட செயலாளர் மாத்தறை மூலம் செயலாளர் அரச நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு முகவரியிடப்பட்ட கடிதத்தின் மூலம் செயற்திட்டத்திற்குரிய 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பௌதீக மற்றும் நிதி செயல் முன்னேற்றம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதன் போது பௌதீக செயல்முன்னேற்றம் 100 சதவீதமாக காண்பித்து கையில் உள்ள பட்டியலாக 48 வேலைகளுக்குரிய கூட்டுமொத்தமான ரூபா 400.55 மில்லியன் பெறுமதியுடைய பட்டியல்கள் காணப்படுவதாக குறிப்பிட்டு அதற்குரிய கட்டுநிதியை வழங்குமாறு கோரப்பட்டிருந்தது. எனினும், | செயல்முன்னேற்ற அறிக்கை சமர்ப்பிக்கும் போது சரியான நிலைமையை காட்டுவதற்கும் இந்த செயற்திட்டத்தை விரைவாக பூர்த்தி செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தேசிய நீர்வழங்கல் மற்றும் நீர் வடிகாலமைப்புச் சபையின் ஊடாக அமுல்படுத்தப்படுகின்ற செயற்திட்டங்களுக்காக வேலை ஆரம்பிப்பதற்கு முன் பணம் செலுத்தியமைக்கு இது காரணமாக இருந்ததாக காண்பிக்கப்பட்டுள்ளது. | தேசிய நீர்வழங்கல் மற்றும் நீர் வடிகாலமைப்புச் சபையினால் அமுல்படுத்தப் படுகின்ற 06 செயற்திட்டங்களின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக கணக்காய்விற்கு அறிவிக்கப் பட்டிருந்தது. ஏனைய 04 செயற்திட்டங்கள் 2022 பெப்ரவரி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அந்தக் கையில் உள்ள பட்டியல்களாக சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 329 மில்லியனுக்குரிய வேலைகளில் எந்தவொரு பௌதீக செயல்முன்னேற்றமும் காணப்படவில்லை. | | | |
| | | | | |
| 31. | செயற்திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட வேண்டிய 05 வேலைகளுக்காக தேசிய போட்டியாளர் கூறுவிலை கோரும் முறையின் மூலம் செய்திப்பத்திரிகையில் அறிவித்தல்கள் பிரசுரித்து கூறுவிலை கோரப்பட்டிருந்த போதிலும் பின்னர் அந்த செயற்திட்டங்களில் பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாமல் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் செய்திப் பத்திரிகை அறிவித்தல்களுக்காக செலவிடப்பட்ட கூட்டுமொத்தமான ரூபா 166,174 தொகை விளைவற்ற செலவினமாக இருந்தது. | இந்த விளைவற்ற செலவினம் தொடர்பாக சரியான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | மதிப்பீட்டினை திருத்துவதற்கு ஏற்பட்டமையினால் இந்த நிலைமை ஏற்பட்டிருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. | இது தொடர்பாக 2022 பெப்ரவரி வரையிலும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| | | | | |
| 32. | பெறுகை நடைமுறைகளுக்கு புறம்பாக மற்றும் உடன்படிக்கை கைச்சாத்திடப்படாமல் மாக்கந்துர டெனி ஹித்தெட்டடிய விளையாட்டு மைதானம், அக்குரஸ்ஸ எல்லேவல கனிஷ்ட வித்தியால விளையாட்டு மைதானம், திக்வெல்ல வலஸ்கல கரப்பந்து | செயற்திட்டத்தை அமுல்படுத்தும் போது பெறுகை நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | பெறுகைகளுக்கு புறம்பாக நடவடிக்கை எடுத்தல் தொடர்பாக பொறுப்புவாய்ந்த தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | விளையாட்டு மைதானம் மற்றும் யட்டியன வயலஸ்வத்த காணியில் விளையாட்டு மைதானம் என்ற செயற்திட்டங்களின் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. | | | |
| | | | | |
| 33. | மாத்தறை/கிரிந்த புகுல்வெல்ல மகா வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்வதற்காக 2019 ஆம் ஆண்டில் ரூபா ஒரு மில்லியன் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டு அதில் ரூபா 898,582 தொகை செலவிடப்பட்டு தூர பார்க்கும் கொட்டகை நிர்மாணிக்கப்பட்ட போதிலும் அது நெருக்கடியான பிரகாரம் மாவட்ட செயலகத்தின் திட்டமிடல் பிரிவினால் ரூபா 2.16 மில்லியன் செலவில் பகல்/ இரவு கரப்பந்து மைதானம் தயாரிக்கப்பட்டமையினால் பயனற்ற செலவினமாக இருந்தது. செயற்திட்டத்தை பூர்த்தி செய்ததன் பின்னர் பெறுகை நடைமுறைகளை போல முழுமையான விசாரணை அறிக்கைகள் மற்றும் சாத்தியவள அறிக்கைகள் பெறல் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | செயற்திட்டத்தை அமுல்படுத்தும் திட்ட முறைமை சரியாக பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தரினால் பரீட்சிக்கப்பட்ட சந்தர்ப்பத்தின் போது மேற்கொள்ளப்பட்ட வேலைப் பகுதியை காண்பித்து உரிய முழுமையான விசாரணை அறிக்கைகள் வழங்கப்பட்டிருந்ததாக காண்பிக்கப்பட்டுள்ளது. | 2022 பெப்ரவரி வரையிலும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| | | | | |
| 34. | துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறை அலுவல்கள் அமைச்சின் நிதியேற்பாட்டின் | விரைவாக இந்த பணத்தை அறவிடுவதற்கு | இந்த பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை | இந்தப் பணத்தை அறவிடுவதற்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | அடிப்படையில் அமுல்படுத்தப்பட்ட சிங்கராஜ விசேட ஒன்றிணைந்த கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கொங்கிறீட் வீதி நிர்மாணிப்பதற்காக ரூபா 5.9 மில்லியன் தொகையான உடன்படிக்கை பெறுமதியில் தனியார் நிறுவனமொன்றுடன் 2019 யூலை 05 ஆந் திகதி உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன் 2019 செப்தெம்பர் 03 ஆந் திகதி வரையிலும் ஒப்பந்தத்தின் வேலைகள் உடன்படிக்கையின் பிரகாரம் பூர்த்தி செய்யப்பட வேண்டும். எனினும், ஒப்பந்த காரரினால் அத்திகதியில் வேலை பூர்த்தி செய்யப்படாதிருந்தமையால் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ஒப்பந்த காரருக்குரிய செயலாற்றல் காப்பீட்டின் செல்லுபடிக் காலம் கடந்திருந்த ரூபா 296,417 பெறுமதியில் ரூபா 130,998 தொகையை அறவிடுவதற்கு உத்தியோகத்தர்களுக்கு முடியாதிருந்தது. அதனால் ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்ட ரூபா 475,146 தொகையான செலவினம் விளைவற்ற செலவினமாக இருந்தது. | நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்ததுடன் நிறைவேற்றப்படாமல் கைவிடப்பட்ட செயற்திட்டங்களின் நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்காக சரியான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். | எடுக்கப்படுவதாக காண்பிக்கப்பட்டுள்ளது. | இதுவரையிலும் முடியாதிருந்தது. |
| | | | | |
| 35. | மாவட்ட செயலகத்தினால் நிலைபேறான அபிவிருத்தி | நிலைபேறான அபிவிருத்தி | எதிர்காலத்தில் 14 நோக்கங்களின் | 2021 ஆம் ஆண்டின் போதும் நடவடிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிகழ்ச்சி நிரல் 2030 தொடர்பாக 2020 ஆம் ஆண்டின் போதும் கூடிய கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. ஆண்டின் போது கிடைத்த நிதியேற்பாட்டின் அடிப்படையில் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் 03 இனங்காணப்பட்டிருந்த துடன் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030 இன் பிரகாரம் 14 நோக்கங்கள் தொடர்பில் எந்தவொரு கவனமும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | நோக்கங்களை அடைந்து கொள்வது தொடர்பில் கவனம் செலுத்தப்படல் வேண்டும். | பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி திட்டத்தை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக காண்பிக்கப்பட்டுள்ளது. | எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| | | | | |
| 36. | 2018 சனவரி 24 ஆந் திகதிய 05/2018(1) ஆம் இலக்க அரச நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கையின் திருத்தப்பட்ட 2008 பெப்ரவரி 06 ஆந் திகதிய 05/2008 ஆம் இலக்க சுற்றறிக்கையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பிரகாரம் பிரஜைகள் அல்லது சேவை பெறுநர்கள் விஞ்ஞாபனம் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட வேண்டிய போதிலும் மாத்தறை மாவட்ட செயலகம் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தயாரித்து அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக காண்பிக்கப்பட்டுள்ளது. | 2022 பெப்ரவரி வரையிலும் அவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| | | | | |
| 37. | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 1733 ஆகவும் உள்ளபடியான ஊழியர் | அத்தியவசிய பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மிகையினை முறையான பிரகாரம் | அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | 2022 பெப்ரவரி வரையிலும் அதே நிலைமையில் காணப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை 1623 ஆகவும் இருந்தமையினால் பதவியணியினரில் காணப்படுகின்ற 141 வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மற்றும் 31 பேர்களையுடைய மிகை பதவியணியினரை முறையான பிரகாரம் அங்கீகரித்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முறைமைப்படுத்திக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | | |
| | | | | |
| 38. | 2018 சனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க அரச நிர்வாகச் செயலாளரின் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் மனித வள திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் ஒட்டுமொத்த பதவியணியினர்களுக்காகவும் மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையின் இணைப்பு 1 இன் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எதிர்காலத்தில் மனிதவள திட்டமொன்று தயாரித்து அதனை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | 2022 பெப்ரவரி வரையிலும் அதே நிலைமையில் காணப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| **அம்பாந்தோட்டை மாவட்ட செயலகம்**<br>------------------------------------------------------------- | | | | |
| | 2018 - | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | | |
| | 2019 - | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | | |
| | 2020 - | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | | |
| **கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பிரதான குறைபாடுகள்** | | **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை** | **நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள்** | **அது தொடர்பான தற்போதைய நிலைமை** |
| 01. | விளையாட்டு துறை அமைச்சின் மூலம் 2017 ஆம் ஆண்டின் போது றுகுண மாகம்புற நிர்வாக கட்டிடத் தொகுதியில் அமுல்படுத்தப்பட்ட நடைபாதை நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக வேலை விடய இலக்கம் 10 இற்காக ரூபா 2,113,447 தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. பட்டியல்களின் பரிசோதனையின் போது மதிப்பீடு செய்யப்பட்ட வேலைகளுக்காக ரூபா 751,601 தொகையும், மேலதிக வேலைக்காக ரூபா 273,258 தொகையும், மேலதிக வேலைக்காக ரூபா 1,015,468 தொகையும் ஆக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட வேலைப் | செயற்திட்டத்தை திட்டமிடும் போது முன் ஆய்வின் பின்னர் சகல வேலைகளையும் உள்ளடக்கி மதிப்பீடு தயாரித்தல் வேண்டும். | செயற்திட்டத்தை திட்டமிடுதலில் பிரச்சினைகள் இருந்ததாக செயற்திட்டத்தை செய்து கொண்டு போகும் போது தெளிவாகியிருந்தது. இவ்வாறான நிர்மாணங்களுக்கு முன்னர் அனுபவம் இதற்கு பிரதான காரணமாக இருந்தது. மேலதிக வேலை மற்றும் மிகை வேலைக்காக அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளது. எதிர்பார்க்கப்பட்ட விளைவுகள் இதுவரை முழுமையாக அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்த போதிலும் | எதிர்பார்க்கப்பட்ட விளைவை இதுவரை முழுமையாக அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்த போதிலும் தொடர்ந்தும் மேம்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றது. இதன் போது இரண்டாவது கட்டம் அமுல்படுத்தாதிருப்ப தற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பெறுமதியில் 61 சதவீதம் அளவு மேலதிக மற்றும் மிகை வேலைகளுக்காக செலுத்தப்பட்டிருந்தது. மேலும் இந்த செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்ட திகதி முதல் 2019 மே மாதம் வரை செயற்திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | எதிர்காலத்தில் தொடர்ந்தும் அதனை மேம்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | |
| | | | | |
| 02. | மாவட்ட செயலகத்தினால் 10 செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக பெலியத்த பிரதேச செயலகத்திற்கு 2018 நவம்பர் மாதத்தின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 7,100,000 நிதியேற்பாட்டில் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் எந்தவொரு செயல்முன்னேற்றமும் பெறப்பட்டிருக்கவில்லை. | வழங்கப்பட்டுள்ள நிதியேற்பாட்டை ஆக்கபூர்வமான அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்துதல் வேண்டும். | அமைச்சினால் கணக்காண்டின் இறுதியின் போது நிதியேற்பாடு வழங்கப்பட்டமையினால் அதன் பிரகாரம் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொண்டு பணிகளை பூர்த்தி செய்வதற்கு போதியளவான காலம் காணப்படாமை, குளம் மற்றும் அணைக்கட்டுக்களை மீளமைக்கும் செயற்திட்டங்களை அமுல்படுத்தும் சந்தர்ப்பத்தின் போது அதிக மழையினால் இடையூறுகள் ஏற்பட்டிருந்ததன் காரணமாகவும் உரிய செயற்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது. | 2022 பெப்ரவரி வரையிலும் செயற்திட்டம் நிறைவேற்றப் பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |
| 03. | கிரிந்த ஊரணிய பிரதேசத்தின் கடலில் மூழ்கியிருந்த "ரெவ்ஹெர" என்ற பெயருடைய கப்பலின் பாகங்களை அகற்றும் பணிகள் 2010 ஆம் ஆண்டின் போது கடற்றொழில் கூட்டுறவுச் சங்கத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. அதற்காக அந்த சங்கத்தினால் மாவட்ட செயலகத்தில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 3,500,000 வைப்புப் பணம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி மீள செலுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த கொடுப்பனவின் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன. | | | |
| i. | வைப்பு பணம் மீள செலுத்தும் போது பணம் வைப்புச் செய்யப்பட்ட அடியிதழ் இரண்டில் மூலப்பிரதி, உறுதிச்சீட்டுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | நிதிப்பிரமாணத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வைப்பாளர்களினால் நிழற்பட பிரதி சமர்ப்பிக்கப்பட்டிருந்த துடன் எமது புத்தகத்தில் காணப்படுகின்ற பற்றுச்சீட்டுக்களின் உப பிரதிகளுடன் பரீட்சித்து சரியான தன்மை உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| | | | | |
| ii. | ஒப்பந்தகாரரை தெரிவு செய்யும் அடிப்படை தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதிப் பிரமாணத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கடற்படை, மீன்பிடி மற்றும் நீர் வளங்கள் திணைக்களம், தொல்பொருளியல் திணைக்களம், துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் | தெரிவு செய்யப்பட்ட அடிப்படை சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அமைச்சு, வர்த்தக கப்பல் பிரிவு, கடல் மாசடைதலை தடுக்கும் அதிகார சபை போன்ற நிறுவனங்களின் ஆலோசனை மற்றும் இணக்கப்பாட்டின் அடிப்படையில் உரிய சங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. | |
| | | | | |
| iii. | ஒப்பந்தத்தை கையளிக்கும் போது இரு தரப்பினருக்கும் இடையே முறையான நிபந்தனையுடன் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருக்க வில்லை. | நிதிப் பிரமாணத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இவ்வாறான செயற்பாடுகள் தொடர்பாக அனுபவம் காணப்படாமையின் அடிப்படையில் நிபந்தனைகளுடன் கடிதம் ஒன்று மூலம் உரிய சங்கத்திற்கு கையளிக்கப் பட்டிருந்தது. அதற்கு முறைமுகங்கள் மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு மற்றும் அரச நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. | உடன்படிக்கை யொன்று கைச்சாத்திடப் பட்டிருக்கவில்லை. |
| | | | | |
| iv. | ஒப்பந்ததாரர் பணிகளை பூர்த்தி செய்யாமல் அதிலிருந்து விலகியிருந்த போது வைப்பு பணம் மீள செலுத்தப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இன்றுவரையிலும் எஞ்சிய பகுதியை அகற்ற முடியாது காணப்பட்டது. | பணிகளை நிறைவேற்றா திருக்கும் போது வைப்புப் பணம் செலுத்தப்பட்டுள்ளது. |
| | | | | |
| v. | கப்பலிலிருந்து அகற்றப்பட்ட உடைந்த பாகங்களின் அளவு எவ்வளவு என அறிக்கையிடப்படாதிருந்த மையினால் அரசாங்க | நிதிப்பிரமாணத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அகற்றப்பட்ட உடைந்த பாகங்களின் அளவு கிராம உத்தியோகத்தர் மற்றும் கடல்சார் சுற்றாடல் அதிகார | முறையான அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வருமானத்திற்கு அறவிட வேண்டிய சகல பணமும் அறவிடப்பட்டமைக்கான சான்றுகள் காணப்படவில்லை. | | சபையின் மேற்பார்வையின் அடிப்படையில் அறிக்கை பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் அவைகள் நிறுக்கப்பட்டு அது சுங்க கட்டணம் செலுத்தப்பட்டதன் பின்னர் மாத்திரம் அகற்றுவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. | |
| | | | | |
| 04. | 2019 பெப்ரவரி 11 ஆந் திகதிய PS/NC/4/CP/ 41/2019 ஆம் இலக்க அமைச்சரவை குறிப்பு - சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு கடன் உதவி வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அரிசி உற்பத்தியாளர்களின் வரையறுக்கப்பட்ட கூட்டுறவு சங்கத்திற்கு 2019 ஏப்ரல் 05 ஆந் திகதி வழங்கப்பட்ட ரூபா 38,000,000 தொகையான வட்டியின்றிய கடன் பணம் 2019 ஒக்தோபர் 05 ஆந் திகதியளவில் ஆலை உரிமையாளர்களிடமிருந்து முழுமையாக அறவிட வேண்டியிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2020 யூன் 30 வரையிலும் ரூபா 26,445,848 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மீள அறவிடும் நோக்கில் தேசிய தேவைக்காக ஈடுபடுத்தப்பட்ட அரசாங்கத்திற்கு சொந்தமான பணத்தை குறித்த பணியின் இறுதியில் உரிய தரப்பினமிடமிருந்து அறவிட்டு திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்படல் வேண்டும். | 2020.06.18 ஆந் திகதி மாவட்ட செயலாளருக்கும் அரிசி ஆலை உரிமையாளர்களுக்கும் இடையே நடைபெற்ற கூட்டத்தின் போது ஆலை உரிமையாளர் களினால் 03 மாதம் சலுகைக் காலம் மற்றும் கடன் செலுத்தும் திட்டமுறையொன்றின் கீழ் அந்தக் கடனை செலுத்தி முடிவுறுத்துவதற்கு இணக்கப்பாடு ஏற்படுத்தப்பட்டிருந்தது. | அவ்வவ்போது மேற்கொள்ளப்பட்ட அறிவித்தல்களின் பிரகாரம் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர் களினால் தற்போது வரையில் ரூபா 15,361,483 செலுத்தப்பட்டு 2022 பெப்ரவரி மாதம் வரையிலும் ரூபா 22,638,517 தொகை அறவிடப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |
| 05. | 2009 மே 06 ஆந் திகதிய 1600/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி பத்திரத்தின் 10(1) ஆம் பந்தி மற்றும் 2003 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 1303/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி பத்திரத்தின் 15 ஆம் பந்தி – ஒக்கெவல பிரதேச செயலகப் பிரிவில் தனியார் காணியொன்றில் நடாத்திச் செல்லப்பட்ட கருங்கல் வேலைத்தளம், தமது தனிப்பட்ட காணியின் எல்லையை விஞ்சி அரசாங்க காணியில் 0.6227 ஹெக்டயர் நிலத்தில் அனுமதியற்ற வகையில் 10,911 கருங்கல் கியூப் அகழப்பட்டிருந்ததுடன் அதற்காக சுற்றறிக்கையின் பிரகாரம் பிரதேச செயலகத்தினால் அரசாங்கத்தின் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | அரசாங்கத்தின் காணிகள் மற்றும் ஆதனங்களை அனுமதியற்ற வகையில் பயன்படுத்துவதை தவிர்த்துக் கொள்வதற்கும் அனுமதியற்ற வகையில் பயன்படுத்தப்பட்ட ஆதனங்களுக்காக குறித்துரைத்த அரசாங்கத்தின் கட்டணங்களை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2019.12.12 ஆந் திகதி மாவட்ட செயலாளருடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போது அவதானிப்புக்கள் ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளது. | 2022 பெப்ரவரி வரையிலும் அறவீடுகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| | | | | |
| 06. | 2017 ஆம் ஆண்டின் மே மாதம் ஏற்பட்டிருந்த வெள்ளம் மற்றும் மண்சரிவின் காரணமாக மக்கள் வாழ்க்கையை நடாத்திச் செல்வதில் ஆபத்துடனான பிரதேசங்களில் மக்களுக்கு வேறொரு பிரதேசத்தில் குடியமர்த்தும் நோக்கில் 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது 06 பிரதேச செயலகப் பிரிவில் பாதுகாப்பான பிரதேசங்களில் | நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் நலனாளிகளை தெரிவு செய்வதற்கும் செயலாற்றல் மதிப்பீட்டின் பின்னர் பணத்தை விடுவிப்பதற்கும், பின்தொடர் நடவடிக்கைகளை தொடர்ச்சியாக | குடியிருப்பதற்காக வருகை தராத நபர்களுக்கு உடனடியாக புதிய வீட்டின் குடியிருப்பை உறுதிப்படுத்துமாறு பிரதேச செயலக மட்டத்தில் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | 2022 பெப்ரவரி வரையிலும் பாதுகாப்பான இடங்களில் குடியமர்த்தப் பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வீடுகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 127,450,000 தொகையான பணம் 91 நலனாளிகளுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் கணக்காய்வுத் திகதியான 2020 சனவரி 03 ஆந் திகதி வரையிலும் செயற்திட்டத்தின் நோக்கமான ஆபத்துடன் உள்ள பிரதேசங்களின் மக்களை புதிய வீடுகளில் மீள்குடியமர்த்துதல் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் கட்டுவன பிரதேச செயலகப் பிரிவில் கூட்டுமொத்தமாக ரூபா 11,025,000 தொகை வழங்கப்பட்டிருந்த 07 நலனாளிகளும், வீரகெட்டிய பிரதேச செயலகப் பிரிவில் ரூபா 1,575,000 தொகை வழங்கப்பட்டிருந்த புத்தியாகமவில் ஒரு நலனாளியும், ஒக்கெவல கெந்தகெட்டியவில் ரூபா 900,000 தொகை வழங்கப்பட்ட ஒரு நலனாளியும் மற்றும் பிலியத்த நெலுவயில் ரூபா 200,000 தொகை வழங்கப்பட்டிருந்த ஒரு நலனாளியும் பல்வேறு காரணங்களின் காரணமாக புதிய வீடுகளில் குடியிருக்காமல் ஆபத்துடன் உள்ள பிரதேசங்களில் குடியிருந்து வருகின்றனர். | மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | | |
| | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 07. | கிராம சக்தி மக்கள் தொழில்முயற்சி நிகழ்ச்சித் திட்டம் 1 ஆம் கட்டத்தின் கீழ் மாவட்டத்தில் 12 பிரதேச செயலகங்களின் 36 கிராம சக்தி மக்கள் சங்கங்களின் ஜீவனோபாய அபிவிருத்தி பணிகளுக்காக வழங்கப்பட்ட ரூபா 27,757,257 தொகை கணக்காய்வுத் திகதியான 2020 மே 15 ஆந் திகதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் ஒரு வருடம் அளவிலான காலம் சங்கங்களில் சேமிப்பாக காணப்பட்டது. | அரசாங்கத்திற்குச் சொந்தமான பணத்தில் பொதுமக்களின் நலன்புரியை நோக்காகக் கொண்டு செலவிடப்படாமல் நிறுத்தி வைப்பதற்கு இடமளிக்காமல் நிதியேற்பாட்டில் ஒதுக்கப்பட்டுள்ள செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கிராம சக்தி தொழில் முயற்சி கடந்த அரசாங்கத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டம் ஒன்றாக இருந்தமையால் அரசாங்க நிலைமையில் ஏற்பட்ட மாற்றங்களின் பிரகாரம் செயற்திட்டத்தை அமுல்படுத்துதல் தொடர்பாக ஆலோசனை கிடைத்திருக்க வில்லை. | 2022 பெப்ரவரி வரையிலும் இந்தப் பணம் சேமிப்புக் கணக்குகளில் வைப்பாக பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| | | | | |
| 08. | புதிய மூன்று மாடிக் கட்டிட நிர்மாணம் மற்றும் எல்லை மதில் நிர்மாணித்தல் பிரதேச செயலகம் - ஒக்கெவல ------------------------------------------------ | | | |
| i. | கட்டிடத்தை திட்டமிடல் மற்றும் பொறியியல் மதிப்பீட்டை தயாரிக்கும் போது நிலம் மற்றும் சேவைப் பங்களிப்பாளர்களின் தேவை தொடர்பாக கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை. நிர்மாணங்களை மேற்கொள்ளும் போது கட்டிடத் திட்டத்தில் மாற்றங்கள் மேற்கொள்ளப் பட்டிருந்ததுடன் மேலதிக வேலையாக 72 விடயங்களுக்காக ரூபா 5,405,626 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கட்டிடத் திட்டம் மற்றும் பொறியியல் மதிப்பீடு | நிர்மாணம் தொடர்பாக மதிப்பீடு தயாரிப்பதற்கு முன் நிர்மாண நிலம் தொடர்பான மற்றும் சேவைப் பங்களிப்பாளர்களின் தேவை தொடர்பாக கவனத்தில் கொள்ளல் வேண்டும். | முன்னாள் பிரதேச செயலகம் காணப்பட்ட நிலத்தின் முன் பக்கத்தில் திட்டமிடப்பட்ட கட்டிடம் வேறொரு நிலத்தில் நிர்மாணிப்பதற்கு ஏற்பட்டமையால் சீராக்கும் போது ஏற்பட்ட பிரச்சினையாக இருந்தது. | பதில் வழங்கப்பட்ட சந்தர்ப்பத்தில் காணப்பட்ட நிலைமை மாற்றமடைந்திருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | தயாரித்தல் மிகவும் நலிவான நிலையில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | | | |
| | | | | |
| ii. | பொறியியலாளர் மதிப்பீட்டின் பிரதான 3 வேலை விடயங்களில் ரூபா 5,484,292 தொகையான வேலை கைவிடப்பட்டிருந்தது.<br>எனினும் கைவிடப்பட்ட வேலைக்காக ரூபா 948,973 வேலை ஆரம்பிப்பு முற்பணத் தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. | நிறைவேற்றக்கூடிய வேலை விடயங்களுடன் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அந்த வேலை விடயங்களை நிறைவேற்றுவதை கண்காணித்தல் வேண்டும். | கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருந்த துடன் இந்த விடயத்திற்கான நிலத்தை அலங்கரிப்பதன் கீழ் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த மையினால் இந்த விடயங்களை நிறைவேற்றுதல் இந்த மதிப்பீட்டின் கீழ் நிறைவேற்றப்பட வில்லை. | 2022 பெப்ரவரி வரையிலும் சரிசெய்யப்பட்டிருக்க வில்லை. |
| | | | | |
| iii. | பொறியியலாளர் மதிப்பீட்டின் பிரகாரம் மின்சாரம் வழங்குவதற்காக ரூபா 2,245,030 தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் மேலதிக வேலை மற்றும் வெளிவேலைகளாக ஒட்டுமொத்த மின்சார முறைமைகளுக்காக ரூபா 4,996,348 தொகை செலுத்தப்பட்டிருந்தது.<br>மேலும் கட்டிடத்தின் மூன்று சுற்று மின்வழங்கலுக்காக ரூபா 12,175 தொகை போதியளவில் இல்லாத பொறியியலாளர் மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. | தயாரிக்கப்படுகின்ற பொறியியலாளர் மதிப்பீட்டில் அசாதாரண முரண்கள் காணப்பட முடியாது. | ரூபா 100 மில்லியன் நிதி எல்லையை விஞ்சியிருந்தமையால் இந்த செலவினம் மதிப்பீட்டிற்கு உள்ளடக்கப்பட வில்லை. | செலவின எல்லையினை விஞ்சுமாயின் அதற்குரிய அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். அவ்வாறு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. மதிப்பீடு செய்யப்பட்ட தொகையை குறைத்து காண்பிக்கப் பட்டுள்ளது. |
| | | | | |
| iv. | கட்டிடத்தின் வெளிவாரி அலங்காரம் மற்றும் கட்டிடங்களின் பாதுகாப்பிற்கு | நிர்மாணம் சரியாக பூர்த்தியுடன் நிறைவேற்றப்படல் | ஆரம்பத் திட்டத்தின் பிரகாரம் ஈடுபடுத்தப்பட்ட வயரிங் | மேலதிக கொடுப்பனவு களுக்காக |

| | | | | |
|---|---|---|---|---|
| | அச்சுறுத்தலாகும் வகையில் மின்சார வயர்கள் இழுப்பதற்காக பயன்படுத்தப்பட்ட கேசின் (CASING) வெளியில் தெரிகின்ற பிரகாரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. மேலும் பட்டியலின் Ex. 54 இன் கீழ் மின்சார விசிறிகளை பொருத்துவதற்கு ஆதாரமாக தயாரிப்பதற்கு ரூபா 282,225 தொகை செலுத்தியமை மேலதிக கொடுப்பனவாக அவதானிக்கப்படுகின்றது. | வேண்டும். வேலை விடயம் தொடர்பாக முன் அனுபவத்துடன் கூறுவிலை சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போது மேலதிக வேலையாக மீண்டும் கொடுப்பனவு செய்ய முடியாது. | குழாய்கள் பயன்படுத்த முடியாதிருந்தமையால் இவ்வாறு மேற்கொள்ளப்பட்டமை மற்றும் கூரை உயரமாக இருந்தமையால் மின்சார விசிறி கொழுவ வேண்டியிருந்த இடங்களில் தீராந்திகள் காணப்படாதிருந்த மையினால் தனியான கட்டமைப்பொன்று அமைப்பதற்கு ஏற்பட்டிருந்தமை. | அங்கீகாரம் பெறப்படாது இருந்ததுடன் அறவிடல்களும் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| | | | | |
| v. | மதிப்பீடு செய்யப்பட்ட விடய இலக்கம் C-1 இன் கீழ் மண் வெட்டுதல் மற்றும் செப்பனிடுதல் 900 கனமீற்றர் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் பட்டியலின் மூலம் அளவிடல் அறிக்கையில் தனி அளவீடாக இலங்கை நியமங்கள் (SLS 573) இற்கு முரணான வகையில் மேற்கொள்ளப்பட்ட 9552 கனமீற்றருக்காக ரூபா 1,930,432 தொகை செலுத்தப்பட்டிருந்தது.<br>மேலும் வெட்டி அகற்றப்பட்ட 9552 கனமீற்றர் மண்ணின் அளவு எவ்வாறான பணிகளுக்கு ஈடுபடுத்தப்பட்டிருந்தது என உறுதிப்படுத்தலும் கோவையில் காணப்படவில்லை. | மதிப்பீட்டு விடயத்தின் அளவு மற்றும் விடயத்திற்குரியதாக மேற்கொள்ளப்பட்ட வேலை அசாதாரண முரண்கள் காணப்பட முடியாதிருத்தல் வேண்டும். தொழில் வல்லுனர்கள் / தொழில்நுட்பவியலாளர்கள் தமது தொழிலை நிறைவேற்றும் போது தொழில் நியமங்கள் தொடர்பாக கவனத்தில் கொள்ள வேண்டியிருந்ததுடன் நிறைவேற்றப்பட்ட பணிகளை முறையாக பதிவேடுகளுக்கு கொண்டு வந்து வெளிப்படையாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | விரைவாக மதிப்பீடு தயாரிக்கப்பட்டமையால் நில அளவையாளர் அளவிடலின் பிரகாரம் கணிப்பிடப்பட்டு மண் வெட்டுதல் மேற்கொள்ள முடியாதிருந்தது. வெட்டி அகற்றப்பட்ட மண்ணிற்கு அருகில் அமைந்துள்ள பாடசாலை மற்றும் விகாரை போன்ற இடங்களில் அகற்றப்பட்டிருந்தது. | அங்கீகரிக்கப்பட்ட 900 கனமீற்றரை விஞ்சி 8652 கனமீற்றர் வெட்டி செப்பனிடுவதற்கு பணம் செலுத்தப் பட்டிருந்ததுடன் இவ்வாறு மேற்கொள்ளப் பட்டமைக்கான எழுத்து மூல சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| vi. | வேலையை ஆரம்பிப்பதற்கு முன்னர் வழங்கப்பட வேண்டிய வேலைத்திட்டம் (Work Shedule) மற்றும் செய்யப்பட்ட வேலைகளின் செயல்முன்னேற்றம், மிகுதி காலத்திற்காக புதிய வேலைத் திட்டம் என்பன பெறப்படாமல் கட்டிடத்திற்காக 6 1/2 மாதம் மற்றும் மதிலுக்காக 90 நாட்கள் காலமும் ஒப்பந்த தினம் நீடிக்கப்பட்டிருந்தது. மேற்கூறப்பட்ட விடயங்களின் பிரகாரம் பொறியியலாளர்கள் வேலைத் தளத்தில் சரியான மேற்பார்வை மேற்கொண்டிருந்தார்களா என கணக்காய்வின் போது பிரச்சினையுடையதாக இருந்தது. | நியாயமான காரணங்களின் அடிப்படையில் ஒப்பந்தக் காலம் நீடிக்கப்படல் வேண்டும். வேலைத்தளத்தை சரியான முகாமைத்துவத்துடன் பேணிச் செல்வதற்காக திட்டமிடல் வேண்டும். | கண்காணிப்பிற்காக போதியளவான தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் காணப்படாதிருந்த மையால் வேலைத் திட்டமொன்றும் பெறப்பட்டிருக்க வில்லை. நிலத்திலிருந்து மண் அகற்றுதல் தாமதடைந்தமை மற்றும் கல் அகற்றுவதற்காக வெடிப் பொருட்கள் வழங்க முடியாமையின் அடிப்படையில் காலநீடிப்புச் செய்யப்பட்டிருந்தது. மதில் நிர்மாணிக்கும் முதலாவது கட்டத்தின் தினம் நீடிக்கப்படாதிருக்கும் போது சமர்ப்பிக்கப்பட்ட விடயங்கள் நியாயமானதாக இருந்தமையால் இரண்டாவது தின நீடிப்பு வழங்கப்பட்டிருந்தது. | தேவையினை பூர்த்தி செய்யாது நாள் நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது. |
| | | | | |
| vii. | வேலையின் சேமிப்பாக காண்பிக்கப்பட்ட ரூபா 14,518,048 தொகையில் ரூபா 5,405,626 தொகையான மேலதிக வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும், இந்த மேலதிக வேலைக்காக ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் | மதிப்பீட்டு வேலை விடயத்திற்கு பதிலாக மேலதிக வேலை மேற்கொள்ளப் பட்டிருந்தது. அதனால் கழிவுப் பணம் குறைக்கப்படல் வேண்டும். | ஒப்பந்தகாரரின் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட வேலைகள் மற்றும் அந்த அளவில் 25 சதவீதம் வரை மாத்திரமே கழிவு செல்லுபடியாகும். | பதில் வழங்கப்பட்ட சந்தர்ப்பத்தில் காணப்பட்ட நிலைமையில் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | 2 சதவீத கழிவு ரூபா 108,113 கழிக்கப்பட்டிருக்க வில்லை. | | | |
| | | | | |
| viii | விலை அதிகரிப்பை கொடுப்பனவு செய்வதற்கு உடன்படிக்கையில் இணக்கப்பாடு காணப்படாதிருந்த போதிலும் இறுதி விலைப் பட்டியலின் மூலம் விலை அதிகரிப்பிற்காக ரூபா 3,324,543 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | சகல கொடுப்பனவுகளும் சட்டரீதியான வகையில் நிறைவேற்றப்படல் வேண்டும். | உடன்படிக்கை தயாரிக்கும் போது தாமத வழுக்கள் ஏற்பட்டிருந்தது. இதன் காரணமாக அதன் நலன் ஒப்பந்தகாரருக்கு உரித்தாகுவதுடன் அது செலுத்தப்படாது இருக்குமாயின் ஒப்பந்தகாரர் Arbitration நடவடிக்கைக்கு உட்படுத்துவார். அதன் போது விலை அதிகரிப்பும் செலுத்தப்பட்டு Arbitration செயற்பாட்டிற்காக ஒப்பந்தகாரருக்கு செலவாகும் பணமும் அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டியேற்படும். அதனால் விலை முரண்கள் செலுத்தப்பட்டிருந்த துடன் அது மேலதிக கொடுப்பனவு இல்லை. | உடன்படிக்கை தயாரிக்கும் போது தாமத வழுக்கள் ஏற்படுகின்றமையால் அதன் நலன்கள் ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டுள்ளது. |
| | | | | |
| ix. | உடன்படிக்கையின் பிரகாரம் மீள அறவிட வேண்டிய முற்பணப் பட்டியல் 01 முதல் 03 வரை 06 மாதங்களில் சரியான பிரகாரம் அறவிடப்படாமையின் காரணமாக ரூபா 5,558,482 | அரசாங்கத்தின் பணத்தை குறித்துரைத்த தினங்களில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எதிர்காலத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கேள்வி வைப்பு பதிவேடு (SBD) ஆலோசனை மற்றும் ஒப்பந்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டதன் | அரசாங்கத்தின் பணம் முறையற்று பயன்படுத்துதல் தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | தொகையான அரசாங்கத்தின் பணம் பயன்படுத்தப்படாமல் இருந்தது. | | பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு குறிப்பிட்டுக் கொள்கின்றோம். | |
| | | | | |
| x. | வேலை இறுதிப் பட்டியல் செலுத்தும் போது சேமிப்புக்கள் (Savings), கைவிடப்பட்ட வேலை, மேலதிகமாக ஆற்றப்பட்ட வேலைகளை உள்ளடக்கிய ஒப்பீட்டு ரீதியான கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை மேலும் ஒப்பந்தம் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டிய திட்டம் (AS build Drawing ), உரித்து கோரப்படாத சான்றிதழ், பூர்த்தி செய்யும் சான்றிதழ் என்பன பெறப்பட்டிருக்கவில்லை. இந்த நிலைமையின் அடிப்படையில் எதிர்காலத்தில் இவ்வாறு இதில் ஏற்படுகின்ற பல திருத்தங்களை சரிசெய்வதற்கு முடியாத நிலைமை எழுந்திருந்தமையும், உடன்படிக்கையின் பிரகாரம் கடப்பாடுகளை விடுவித்தமைக்கு உறுதிப்படுத்தல்கள் பெற்றுக் கொள்ளப்படாமையால் எதிர்காலத்தில் ஒப்பந்தகாரர் மேலும் கடப்பாடுகளை ஏற்படுத்துவதற்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | உத்தியோகத்தர்கள் தமது பொறுப்புக்களை சரியாகவும் வெளிப்படையாகவும் மேற்கொள்ளுதல் வேண்டும். | ஒப்பீட்டு ரீதியான கூற்றுக்களை தயாரித்தல் அத்தியவசியமற்றதாகும். மேலதிக வேலைப் பகுதி பட்டியல் மூலம் கண்டறிய முடியும். AS build drawings இற்காக மதிப்பீட்டு பணம் ஒதுக்கப்படாமையினால் அது மேற்கொள்ளப்பட வில்லை. உரித்து கோரப்படாத சான்றிதழ் பெற்றுக்கொள்ளல் பெரியளவிலான செயற்திட்டத்திற்காக மேற்கொள்ளப் படுகின்றமையால் அது மேற்கொள்ளப்பட வில்லை. | சரியான பிரகாரம் பெறப்பட வேண்டிய கடிதங்களை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 09. | 1987 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஏற்பட்டிருந்த மீளாய்வாண்டின் இறுதி வரையில் 12 மாதங்களுக்கும் 32 வருடங்களுக்கும் கால எல்லை கடந்திருந்த ரூபா 25,000 தொகைக்கு குறைந்த பெறுமதியுடைய 09 சம்பவங்களுக்குரிய கூட்டுமொத்தமாக ரூபா 73,253 தொகையான இழப்புக்கள் மற்றும் நட்டங்களும், ரூபா 25,000 தொகைக்கு மேற்பட்ட பெறுமதியுடைய 20 சம்பவங்களுக்குரிய கூட்டுமொத்தமாக ரூபா 8,233,211 பெறுமதியுடைய இழப்புக்கள் மற்றும் நட்டங்கள் தொடர்பாக கோவைகளின் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கோ அல்லது பதிவழிப்பதற்கோ தொடர்பான கோவைகளின் செயற்பாடுகள் தாமதமின்றி நிறைவேற்றப்படல் வேண்டும். | கோவைகளுக்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றது. | 2022 பெப்ரவரி வரையிலும் அந்த நிலைமை முழுமையாக சரிசெய்யப்பட்டிருக்க வில்லை. |
| | | | | |
| 10. | 2003 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை அம்பலந்தொட்ட பிரதேச செயலகப் பிரிவிலும் பின்னர் தங்காலை பிரதேச செயலகப் பிரிவிற்குமுரிய தெற்கு பட்டஅத்த பரண்டுகலயாயவில் அமைந்துள்ள 16 ஆம் இலக்க கல்லில் அமைந்துள்ள 04 ஏக்கர் அளவான அரசாங்கத்தின் காணி ஒரு நபரினால் நீண்டகாலமாக காணி உரித்து கோரப்பட்டமையின் | அரசாங்கத்தின் காணி தொடர்பாக அரசாங்கத்தின் காணிகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நிலுவைப் பணம் எதிர்காலத்தில் அறவிடப்படுவதுடன் திட்டமுறைமையை சரிசெய்து எதிர்காலத்தில் அனுமதிப்பத்திரத்தினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இந்தக் காணிக்கான அகழ்வு அனுமதிப் பத்திரம் வழங்கும் போது அந்தக் காணி சின்னக்கரை காணியாக கருதி வெளிப்படுத்தல் உரித்துறுதி சமர்ப்பிக்கப் பட்டுள்ளது. தனியார் நில அளவையாளர் ஒருவரை வரவழைத்து காணி அளக்கப்பட்டு உரித்தை |

| | | | | |
|---|---|---|---|---|
| | காரணமாக தமது பெயரில் வெளிப்படுத்தல் உரித்துறுதி தயாரித்து 2018 மார்ச் 14 ஆந் திகதி தங்காலை காணிப் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்திருந்தார். அரசாங்கத்தின் காணி அனுமதியற்ற பாவனைக்கு ஈடுபடுத்துதல் மற்றும் தமது பெயரில் பதிவு செய்தமை தொடர்பாக இரண்டு பிரதேச செயலகங்களினாலும் எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | உறுதிப்படுத்துமாறு பிரதேச செயலாளரினால் காணிக்கு உரித்து கோருகின்ற அவருக்கு அறிவிக்கப் பட்டிருந்தது. 2022 பெப்ரவரி வரையிலும் இதே நிலைமையில் காணப்பட்டது. |
| | | | | |
| 11. | அம்பலந்தொட்ட பிரதேச செயலகப் பிரிவில் லியன்கஸ்தொட்ட பிரதேசத்தில் நடாத்திச் செல்லப்பட்ட கருங்கல் வேலைத்தளம் ஆரம்பிக்கப்பட்ட 2017 ஒக்தோபர் 23 முதல் 2019 ஒக்தோபர் 16 வரை வெடிபொருட்கள் 26244 கிலோகிராம் விநியோகிக்கப்பட்டிருந்த துடன் புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்தின் உத்தியோகத்தர்களின் 2019 ஒக்தோபர் 16 ஆந் திகதிய களப்பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் அகழ்வு செய்யப்பட்ட மொத்த கருங்கல்லின் கனவளவு 12656 கியூப் ஆகும். அதற்காக செலவாகின்ற ஆகக்குறைந்த | உதவி வெடிப் பொருட்கள் கட்டுப்பாட்டாளாரினால் விநியோகிக்கப் படுகின்ற வெடிப்பொருட்கள் உரிய பணிகளுக்காக ஈடுபடுத்தப்படுகின்றதா என்பது தொடர்பாக முறையான பின்தொடர் நடவடிக்கைகளின் மூலம் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் இவ்வாறு மிகையான வெடிப்பொருட்கள் வெளித்தரப்பினருக்கு பகிர்ந்தளித்தல் தேசிய பாதுகாப்பு தொடர்பாகவும் ஆபத்தினை விளைவிக்க கூடியதாக இருந்தமையால் அது தொடர்பாக கவனம் | புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்க பணியகத்தின் தகவல்களினை பெற்று பதில் சமர்ப்பிக்கப்படும். | 2022 பெப்ரவரி வரையிலும் பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வெடிப்பொருட்களின் அளவு 6328 கிலோகிராம் ஆகும். அதன் பிரகாரம் எஞ்சிய வெடிபொருட்கள் 19916 கிலோகிராம் அதாவது விநியோகிக்கப்பட்ட அளவில் 76 சதவீதம் மிகையான வெடிபொருட்கள் என்ன பணிகளுக்காக ஈடுபடுத்தப்பட்டது என வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | செலுத்துதல் வேண்டும். | | |
| | | | | |
| 12. | 2011 சிறுபோகத்தில் நெல்லை கொள்வனவு செய்வதற்காக திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திலிருந்து கிடைத்த பணத்தில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஒரு கூட்டுறவுச் சங்கத்திற்கு 2011 ஆகஸ்ட் 11 ஆந் திகதி மாவட்ட செயலகம் வழங்கிய வட்டியின்றிய முற்பண தொகையில் ரூபா 5 மில்லியன் கணக்காய்வு திகதியான 2020 பெப்ரவரி 06 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | தேசிய தேவைக்காக வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்ட அரசாங்கத்தின் பணம் தாமதமின்றி அறவிட்டு திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்படல் வேண்டும். | இந்த பணத்தை அறவிடுவதற்கு தொடர்ச்சியாக நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும் இதுவரை அறவிடமுடியாதிருந்த துடன் எதிர்காலத்தில் சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | வழக்கு தொடர்ந்து பணத்தை அறவிடுவதற்கு முன் உடன்படிக்கையின் பிரகாரம் 5 ஆம் பிரிவின் கீழ் நடவடிக்கை எடுத்து பிணக்குகளை தீர்ப்பதற்காக அனுப்புவதற்கு ஆலோசனை கிடைத்துள்ளது. சரியான தீர்வினை பெற்றுக்கொள்ளும் வகையில் மிகுதி நடவடிக்கைகளை எடுப்பதற்காக விவசாய அமைச்சின் செயலாளருக்கு அறிக்கையிடப் பட்டுள்ளது. |
| | | | | |
| 13. | சமுர்த்தி நலனாளிகளை தெரிவு செய்யும் போது சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம உத்தியோகத்தர், | சுற்றறிக்கை ஆலோசனைகளுக்கு இணங்க நலனாளிகளை தெரிவு செய்து நலன்களை | தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | மாவட்டத்தின் முன்னுரிமை பதிவேடுகளுக்கு கொண்டு வரப்பட்ட 15817 நபர்களின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | பொருளதார அபிவிருத்தி உத்தியோகத்தர், சமூக அடிப்படைச் சங்கத்தின் தலைவர் என்ற உத்தியோகத்தர்களின் பங்குபற்றலில் ஆவணப்படுத்தப்பட்ட 21 நலனாளிகளை உடைய முன்னுரிமைப் பதிவேட்டின் ஒழுங்குமுறை கவனத்தில் கொள்ளப்படாமல் அம்பாந்தோட்டை பிரதேச செயலகப் பிரிவில் அறவனமுல்ல கிராம உத்தியோகத்தர் பிரிவில் முன்னுரிமைப் பதிவேட்டில் முதலாவது 07 பேர்களுடன் இறுதி 04 பேர்கள் சமுர்த்தி நிதியுதவி உரித்து வழங்கப்பட்டிருந்தது. | வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | | பெயர்ப் பதிவேடு பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப் பட்டுள்ளது. பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட அளவு 13227 ஆக இருந்ததுடன் முன்னுரிமைப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்ட முன்னுரிமையை கவனத்தில் கொள்ளாமல் நிதியுதவிகள் வழங்கப்பட்டிருந்தன. |
| | | | | |
| 14. | கணக்காய்வு பரிசோதனையின் பிரகாரம் அம்பாந்தோட்டை மற்றும் பெலியத்த பிரதேச செயலகங்கள் இரண்டிலும் 03 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் சரியான தகைமையுடன் முன்னுரிமைப் பதிவேட்டில் பெயர் குறிப்பிடப்பட்ட 30 குடும்பங்களுக்கும் முன்னுரிமை பதிவேட்டில் பெயர் குறிப்பிடப்படாத எனினும் தகைமையுடன் கூடிய 05 குடும்பங்களுக்கும் சமுர்த்தி நலன்கள் கிடைத்திருக்கவில்லை. | சுற்றறிக்கை ஆலோசனைகளுக்கு இணங்க குறித்துரைத்த நியதிகளின் பிரகாரம் நலனாளிகளை தெரிவு செய்து நலன்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | முன்னுரிமைப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்ட முன்னுரிமையை கவனத்தில் கொள்ளாமல் பணிப்பளார் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பதிவேட்டின் பிரகாரம் நிதியுதவிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - |
| | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 15. | நிதியுதவியை வழங்கும் நியதிகளின் முன்னுரிமைத் தன்மையை கவனத்தில் கொள்ளாமல் பெலியத்த பிரதேச செயலகப் பிரிவில் இரண்டு கிராம உத்தியோகத்தர் பிரிவில் வருமான வழிகள் உரித்தான 04 நலனாளிகளுக்கு சமுர்த்தி நலன்கள் வழங்கப்பட்டிருந்தன. | சுற்றறிக்கை ஆலோசனைகளுக்கு இணங்க நலனாளிகளை தெரிவு செய்து நலன்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | - மேற்படி - | பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்டு அனுப்பப்பட்ட பதிவேட்டின் பிரகாரம் நிதியுதவிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| | | | | |
| 16. | பெலியத்த, தங்காலை, ஒக்கெவல மற்றும் வீரகெட்டிய என்ற நான்கு பிரதேச செயலகப் பிரிவுகளில் 1209 நலனாளிகளுக்காக கம்பெரலிய வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வறுமையான குடும்பங்களுக்கு தற்காலிகமான கூரைகளை நிரந்தர கூரைகளாக மாற்றுவதற்காக 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 120,806,068 நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | | |
| | | | | |
| i. | மாவட்டத்தின் உயர்ந்த வறுமை நிலையில் உள்ள பிரதேச செயலகப் பிரிவு தெரிவு செய்யப்படாமல் குறைந்த வறுமை மட்டத்தில் உள்ள மேற்கூறப்பட்ட பிரதேச செயலகப் பிரிவு தெரிவு செய்யப்பட்டிருந்த | சுற்றறிக்கை ஆலோசனைகளில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளின் பிரகாரம் தகைமையான நலனாளிகளை தெரிவு செய்வதற்கு | நலனாளிகளை தெரிவு செய்யும் அதிகாரம் மாவட்ட செயலாளருக்கோ அல்லது அந்த உத்தியோகத்தருக்கோ உரித்தற்றிருந்ததுடன் எனினும், பிரதேச | 2022 பெப்ரவரி வரையிலும் அதே நிலைமையில் காணப்படுகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | போதிலும் நலன்களை தெரிவு செய்தல் முறையான திட்ட முறைமையின் பிரகாரம் இடம்பெற்றிருக்கவில்லை. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | செயலகங்களில் உரிய உத்தியோகத்தரை ஈடுபடுத்தி நலனாளிகள் தொடர்பாக பரீட்சித்து நிதியுதவிகள் வழங்குதல் மேற்கொள்ளப் படுகின்றது. | |
| | | | | |
| ii. | நலனாளிகளை தெரிவு செய்வதற்கு சரியான மற்றும் உரிய நியதிகளை ஈடுபடுத்தாமையால் 567 நலனாளிகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டில் 20 சதவீதம் முதல் 80 சதவீதம் வரையிலான அளவு மாத்திரம் செலுத்தப்பட்டிருந்ததுடன் மேலும் 86 நலனாளிகளுக்கு உதவிப் பணம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | நலனாளிகளை தெரிவு செய்யும் அதிகாரம் மாவட்ட செயலாளருக்குகோ அல்லது அந்த உத்தியோகத்தருக்கோ உரித்தற்றிருந்ததுடன் எனினும் பிரதேச செயலகங்களில் உரிய உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தி நலனாளிகள் தொடர்பாக பரீட்சித்து நிதியுதவிகள் வழங்கப்படுகின்றது. | - மேற்படி - |
| | | | | |
| 17. | ஏனைய அமைச்சு மற்றும் 07 திணைக்கங்களினால் வழங்கப்பட்ட நிதியேற்பாட்டின் எல்லையை விஞ்சி ரூபா 3,176,850 தொகை செலவிடப்பட்டிருந்தது. | வழங்கப்பட்ட நிதியேற்பாட்டு எல்லையின் அடிப்படையில் செலவினங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். | நிதியேற்பாட்டின் பற்றாக்குறை தொடர்பாக உரிய அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதியேற்பாட்டு பற்றாக்குறை தொடர்பாக உரிய அமைச்சிற்கு அறிவிக்கப்பட்ட போதிலும் அது தொடர்பான விடயங்கள் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| | | | | |
| 18. | வேலை நீக்கம் செய்யப்பட்டிருந்த இரண்டு உத்தியோகத்தர் களிடமிருந்து மீளாய்வாண்டில் திசெம்பர் 31 | அரசாங்கத்திற்கு அறவிட வேண்டிய கடன் மீதியை தாமதமின்றி அறவிடுவதற்கு | ரூபா 135,472 கூட்டுத்தொகையான கடன் மீதிக்காக உரிய கோவைகள் அரச சேவைகள் | 2022 பெப்ரவரி அளவில் அறவிடுவதற்கான நடவடிக்கைகள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | இல் உள்ளவாறு அறவிட வேண்டிய 04 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தை விஞ்சியிருந்த ரூபா 443,538 தொகையான செயற்பாடற்ற கடன் மீதியை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் ரூபா 308,066 தொகையான கடன் மீதியை அறவிடுவதற்கு சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றதுடன் மிகுதி கடன் மீதி ரூபா 8,000 தொகை தவணை மூலம் அறவிடப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | மேற்கொள்ளப் படுகின்றது. |
| | | | | |
| 19. | சேவையை விட்டுச் சென்ற 03 உத்தியோகத்தர் களிடமிருந்து கூட்டுமொத்தமாக ரூபா 314,515 தொகையான கடன் மீதி மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டியிருந்தது. இந்த கடன் மீதியை கடன்காரர்களிடமிருந்து அறவிடுவதற்கோ அல்லது அவ்வாறில்லையாயின் அவை தொடர்பாக தாபன விதிக்கோவையின் XXIV அத்தியாயத்தின் 4.5 ஆம் பிரிவின் பிரகாரம் பிணையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அரசாங்கத்திற்கு அறவிட வேண்டிய கடன் மீதியினை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கடன் மீதியை அறவிடுவதற்கு சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கடன் மீதியை அறவிடுவதற்கு சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. |
| | | | | |
| 20. | வைப்பு கணக்கு இலக்கம் 6000-0-0-16-0-43 இன் கீழ் பெறப்பட்ட கூட்டுமொத்தமாக ரூபா 794,692 தொகையான | நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கூட்டுமொத்தமாக ரூபா 170,644 தொகை தீர்க்கப்பட்டுள்ளது. | 2022 பெப்ரவரி வரையிலும் ரூபா 624,048 தொகையான |

| | | | | |
|---|---|---|---|---|
| | 09 நிறுத்தி வைத்தல் பண வைப்புக்கள் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 02 வருடங்களை விஞ்சியிருந்த போதிலும் உரிய வைப்பாளர்களுக்கு கொடுப்பனவு செலுத்துவதற்கோ அல்லது நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கோ நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | | மீதி அறவிட வேண்டி காணப்பட்டது. |
| | | | | |
| 21. | திஸ்ஸமஹாராம பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் பஹேகெதர அருகில் இருந்து சிங்ஹள கெதர வரையான வீதியின் பக்கசுவரை நிர்மாணித்தல் மற்றும் சிறு கற்களை பதிக்கும் செயற்திட்டத்தின் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட சிறு கொங்கறீட் கற்களில் 50 சதவீதமும் எதிர்பார்க்கப்பட்ட உள்ளடக்க சக்தி மட்டத்தினை விட குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | எதிர்பார்க்கப்பட்ட உள்ளடக்க சக்தி காணப்பட வேண்டிய பிரகாரம் பணிகள் நிறைவேற்றப்படல் வேண்டும். | உள்ளடக்க சக்தி சராசரியான பெறுமதி கணிப்பிடப்பட்டு $30NMM^{-2}$ இற்கு மேற்பட்டமையினால் அதன் பிரகாரம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளது. | எதிர்பார்க்கப்பட்ட உள்ளடக்க சக்தி மட்டத்தை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| | | | | |
| 22. | டேரபுத்தாஹயகம, ஸ்ரீ ராகல்கம, சியல்செத்கம என்ற கிராமங்கள் தொடர்பான உள்ளக வீதிகளுக்கு கிரவல் இட்டு அபிவிருத்தி செய்யும் போது கிரவல் கனமீற்றர் 96.2 குறைவாக ஈடுபடுத்தப்பட்ட மையினால் ரூபா 117,874 தொகை மேலதிகமாக | சரியான அளவிடைகளை பெற்று கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | மாவட்ட பொறியியலாளர் மூலம் ஆலோசனைகளை பெற்று அதன் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | மேலதிகமாக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் 2022 பெப்ரவரி வரையிலும் அறவிடப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | செலுத்துவதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. | | | |
| | | | | |
| 23. | 1987 முதல் 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஏற்பட்டிருந்த மீளாய்வாண்டின் இறுதி வரையில் 02 வருடங்களுக்கும் 33 வருடங்களுக்கும் இடையிலான காலம் கடந்திருந்த ரூபா 25,000 தொகைக்கு குறைவான பெறுமதியுடைய 09 சம்பவங்களுக்குரிய ரூபா 73,253 கூட்டுத்தொகையான நட்டங்கள் மற்றும் இழப்புக்கள் தொடர்பாக கோவைகளில் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் 1987 முதல் 2020 வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற ரூபா 25,000 தொகைக்கு மேற்பட்ட பெறுமதியுடைய 23 சம்பவங்களுக்குரிய கூட்டுமொத்தமாக ரூபா 8,538,572 பெறுமதியுடைய இழப்புக்கள் மற்றும் நட்டங்கள் தொடர்பாக கோவைகளின் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கோ அல்லது பதிவழிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | விசேட குழுவொன்றை நியமித்து தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | நிலைமை முழுமையாக சரிசெய்யப்பட்டிருக்க வில்லை. |
| | | | | |
| 24. | சிறிகோபுர புதிய நிர்வாக கட்டிடத் தொகுதிக்கு அடுத்தால் உத்தியோகத்தர்களின் வீடமைப்புத் தொகுதியில் | குறித்துரைத்த பிரகாரம் மீளளிப்புச் செய்யப்படல் வேண்டும். | உரிய உத்தியோகபூர்வ இல்லங்களில் குடியிருக்கின்ற உத்தியோகத்தர் களுக்கு நீர்க் கட்டணம் | உரிய உத்தியோகபூர்வ இல்லங்களில் குடியிருக்கின்ற உத்தியோகத்தர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | நீர்ப்பட்டியல் செலுத்தியதற்காக 2013 ஆம் ஆண்டு முதல் மீளளிப்புச் செய்யப்பட வேண்டிய ரூபா 2,578,309 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | | செலுத்துமாறு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ள துடன் அதன் பிரகாரம் எதிர்காலத்தில் நீர்க் கட்டணம் அறவிட்டு கணக்காய்விற்கு அறிக்கையிடப்படும். | களுக்கு நீர்க் கட்டணம் செலுத்துமாறு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ள துடன் அதன் பிரகாரம் எதிர்காலத்தில் நீர்க்கட்டணத்தை அறவிட்டு கணக்காய்விற்கு அறிக்கையிடப்படும் என அறிவிக்கப் பட்டுள்ளது. |
| | | | | |
| 25. | 2012 ஒக்தோபர் 25 ஆந் திகதி அரசாங்க கணக்குகள் குழுவின் 16 ஆவது தீர்மானத்தின் மூலம் "நகர அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் 2012 ஒக்தோபர் 12 வரை மாவட்ட செயலாளருக்கு கையளிக்கப்படாத மாவட்ட செயலாளருக்குரிய காணியில் நிர்மாணிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கான 22 உத்தியோகபூர்வ இல்லங்களை கைப்பற்றப்பட வேண்டும். அவ்வாறு கைப்பற்றப்பட்டதன் பின்னர் மேற்கூறப்பட்ட கட்டளைத் திகதியிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் அரசாங்கத்தின் கணக்குகள் குழுவிற்கு அறிக்கையிடுவதற்காக" கட்டளையிடப்பட்டிருந்த போதிலும் அந்தக் கட்டளை அமுல்படுத்தப்பட்டமைக்கான | 2012 ஒக்தோபர் 25 ஆந் திகதி அரசாங்க கணக்குகள் குழுவின் 16 ஆவது தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பல சந்தர்ப்பங்களின் போது நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு அறிவித்தல் மேற்கொள்ளப் பட்டிருந்ததுடன் இது தொடர்பாக சாதகமான பதில் எதுவும் கிடைத்திருக்கவில்லை. | பல சந்தர்ப்பங்களின் போது நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு அறிவித்தல் மேற்கொள்ளப்பட்டிரு ந்ததுடன் இது தொடர்பான சாதகமான பதில்கள் கிடைத்திருக்கவில்லை ல. |

| | | | | |
|---|---|---|---|---|
| | சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை. மேற்கூறப்பட்ட வீடுகளுடன் உள்ள நிலம் மஹாவலி அபிவிருத்தி அதிகார சபையிலிருந்து நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு கையளிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | | | |
| | | | | |
| 26. | அங்குணுகொலபெலஸ்ஸ பிரதேச நில அளவையாளர் அதிகாரியிடமிருந்து 2010 நவம்பர் 29 ஆந் திகதிய கடிதம் மூலம் சியாறப்பிட்டிய கிராம உத்தியோகத்தர் பிரிவில் கம்பன்வெல வீதியில் அமைந்துள்ள அரசாங்கத்திற்கு சொந்தமான காணியில் 02 றூட் மயான நிலத்திற்காகவும் 01 றூட் புத்தர் சிலைக்காகவும் ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த மயான நிலத்திற்காக ஒதுக்கப்பட்ட காணியில் அதற்கடுத்தால் உள்ள பன்சலயின் பங்களிப்பு சபையினால் அனுமதியற்ற வகையில் நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததாக கிராம உத்தியோகத்தர் மற்றும் பிரதேசவாசிகளினால் பல சந்தர்ப்பங்களின் போது பிரதேச செயலாளருக்கு அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2021 பெப்ரவரி 19 ஆந் திகதி வரையிலும் இந்த | காணிச் சட்டத்தின் கீழ் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | விகாராதிபதி மதகுருவினால் இந்த நிர்மாணங்கள் தொடர்ந்தும் மேற்கொள்ளப் படுகின்றமையால் அது தொடர்பாக தேவையான சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றது. | விகாராதிபதி மதகுருவினால் இந்த நிர்மாணங்கள் தொடர்ந்தும் மேற்கொள்ளப் படுகின்றமையால் அது தொடர்பாக தேவையான சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மயான நிலத்தில் அனுமதியற்ற நிர்மாணங்கள் தொடர்பாக காணிச் சட்டத்தின் கீழ் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| | | | | |
| 27. | சிறுவர் மற்றும் மகளிர் அலுவல்கள் அமைச்சினால் வழங்கப்பட்டிருந்த ரூபா 200,000 ஆரம்ப நிதியேற்பாட்டின் அடிப்படையில் கட்டுவன பிரதேச செயலகத்தில் பதிவு செய்துள்ள மகளிர் சங்கங்களின் அங்கத்தவர்களுக்கு ரூபா 5,000, ரூபா 10,000 மற்றும் ரூபா 15,000 வீதம் சுயதொழிலுக்காக கடன் வழங்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்த துடன் கடன் தவணை 10 மாதங்களின் போது 6 வீத வட்டியுடன் அறவிடுவதற்கும் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. இதன் கீழ் 39 கடனாளிகளினால் பெறப்பட்டிருந்த ரூபா 195,000 தொகை கடன் பண உடன்படிக்கையின் பிரகாரம் 10 மாதங்களில் செலுத்தப்படாதிருந்த மையினால் கணக்காய்வுத் திகதியான 2021 பெப்ரவரி 19 ஆந் திகதி வரையில் ரூபா 109,190 தொகையான நிலுவைக் கடன் மீதி காணப்பட்டது. மேலும் உடன்படிக்கையின் பிரகாரம் | உரிய கடன் பணம் மற்றும் வட்டி என்பவற்றை குறித்துரைத்த பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நிலுவையாக இருந்த கடனை மீள செலுத்துமாறு கடனாளிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த வட்டியை அறவிடுதல் தொடர்பாக ஆலோசனை பெறப்படாதிருந்ததுடன் அது அதிகார சபையின் மூலம் எடுக்கப்படுகின்ற இணக்கப்பாடாகும். பிரதேச அதிகார சபை ஊடாக அந்த இணக்கப்பாட்டை பெற்றுக் கொள்ளுமாறு உரிய உத்தியோகத்தர் களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிலுவையாக இருந்த கடனை மீள செலுத்துமாறு கடனாளிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது |

| | | | | |
|---|---|---|---|---|
| | 6 சதவீத வட்டியொன்று அறவிட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான குறித்துரைத்த அடிப்படையொன்றின்றி வட்டி அறவிடப்பட்டிருந்ததுடன், வட்டி அறவிடும் போது தவணைப் பணம் செலுத்தாத மாதத்திற்காக திரண்ட வட்டி அறவிடுதலும் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | | | |
| | | | | |
| 28. | வீரகெட்டிய பிரதேச செயலகப் பிரிவில் மெதமூலன வங்கி சமுர்த்தி சங்கத்தின் மூலம் கொவிட் 19 தொற்று நோய் சந்தர்ப்பத்தில் சலுகை அறுணலு கடன் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சமுர்த்தி பெறாத 23 நலனாளிகளுக்கு வழங்கப்பட்ட கூட்டுமொத்தமாக ரூபா 115,000 தொகையை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்துரைத்த பிரகாரம் கடன் தவணைப் பணம் அறவிடப்படுதல் வேண்டும். | சமுர்த்தி நிதி உதவி பெறாத சமூக அங்கத்தவர்களுக்காக சமுர்த்தி அறுணலு கடன் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கடன் வழங்க முடியுமாக இருந்தமையால் அவ்வாறு 23 நலனாளிகளுக்கு கடன் வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளது. | சமுர்த்தி நிதி உதவி பெறாத சமூக அங்கத்தவர் களுக்காக சமுர்த்தி அறுணலு கடன் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கடன் வழங்க முடியுமாக இருந்தமையால் அவ்வாறு 23 நலனாளிகளுக்கு கடன் வழங்கப்பட்டிருந்த துடன் அவற்றை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. |

| மாத்தளை மாவட்ட செயலகம் ------------------------------------- | | | | |
|---|---|---|---|---|
| | 2018 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | | |
| | 2019 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | | |
| | 2020 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | | |
| **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள பிரதான குறைபாடுகள்** ----------------------- | | **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை** -------------------- | **நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள்** | **அது தொடர்பான தற்போதைய நிலைமை** -------------------- |
| 01. | 2018 யூலை 18 ஆந் திகதிய 03/2018 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் மிகை பதவியணியினருக்கு சம்பளம் செலுத்த முடியாதென குறிப்பிடப்பட்டிருந்த போதும் மாவட்ட செயலகம் மற்றும் 06 பிரதேச செயலகங்களால் 07 பதவிகளில் 19 மிகை பதவியணியினருக்காக 2020 சனவரி முதல் 10 மாதங்களுக்காக ரூபா 1,870,300 தொகை சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தது. | மிகை பதவியணியினரை இடமாற்றம் செய்வதற்கு அல்லது அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நாவுல மற்றும் தம்புள்ள பிரதேச செயலகங்களுக்காக மொழி பெயர்ப்பாளர் பதவிகளை உருவாக்குவதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது. அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் அங்கீகாரத்திற்காக முகாமைத்துவ சேவைத் திணைக்களத்திற்கு அனுப்பபடுவதற்கு உள்நாட்டலுவல்கள் இராஜங்க அமைச்சிற்கு | முகாமைத்துவ சேவை அதிகாரியொருவர் மற்றும் அபிவிருத்தி ஒருங்கிணைப்பாளர் தவிர்ந்த ஏனைய மிகை அவ்வாறே காணப்படுகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அனுப்பப்பட்டுள்ளது. சாரதிகளை அமைச்சிற்கு மாற்றுவதற்குக் கோரப்பட்டுள்ளது. | |
| 02. | மாத்தளை பிரதேச செயலகத்தின் சபிரி கமக் திட்டத்தின் பட்டகொல்ல வீதிக்கு அருகே உள்ள வடிகாண் மற்றும் பஹல சனசமூக மண்டபத்திற்கு செல்லும் வீதியின் மதகின் நீளம் நிர்ணயிக்கப்பட்ட அளவினை விட குறைவாக இருந்தமையால் ரூபா 31,266 தொகை கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | செய்யப்பட்ட வேலைகளுக்காக மாத்திரம் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். | நிறுத்திவைத்தல் பணத்திலிருந்து மேலதிக கொடுப்பனவுகளை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுப்படும். | 2022 பெப்ரவரி 21 வரை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. |
| 03. | மாத்தளை பிரதேச செயலகத்தின் சபிரி கமக் திட்டத்தின் கீழ் ரூபா 500,000 ஆன நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தி தொரகும்புற உஹன கொடல்ல 15 குடும்பங்களுக்காக நீர் வசதிகள் வழங்கல் திட்டத்திற்கு குழாய்களை பதித்தல் மற்றும் வடி காண் வெட்டுவதற்காக ரூபா 29,538 தொகை கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது | நிறைவேற்றப்பட்ட நிர்மாணங்களில் நிறைவேற்றப்பட்ட உருப்படிகளில் மி.மீ சரியாக அளவிடப்பட வேண்டும | குறிப்பிட்டளவு தூரத்திற்கு வடிகால் அமைக்கும் நடவடிக்கைகள் மற்றும் குழாய்கள் அமைக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நீர்த் தேவைப்பாடு தொடர்பான தகவல்கள் பெறப்படுதல். | 2022 பெப்ரவரி 21 வரை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| 04. | சங்கமொன்று நிறுவப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ரூபா 840,000 பெறுமதியான 20 சோஜி தையல் இயந்திரங்கள் யட்டவத்த பிரதேச செயலகத்தினால் தனி நபர் ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்தன. | செயற்திட்டத்தின் அறிவுறுத்தலின் பிரகாரம் சங்கமொன்றின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். . | மீண்டும் இவ்வாறான குறைபாடுகள் இடம் பெறாமல் இருப்பதற்கு அதிகாரிகள் அறிவுறுத்தப்பட்டமை. | 2022 பெப்ரவரி வரை ஏற்பட்டிருந்த தவறைத் திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை . |
| 05. | லங்கல-பல்லேகம பிரதேச செயலாளர் அலுவலகத்தில் சமூர்த்தி அபிவிருத்தி ஊழியர்களாக மற்றும் மக்கள் பிரதிநிதியாக கடமையாற்றுகின்ற இரு ஊழியர்கள் இரு சந்தர்ப்பங்களின் கீழும் மோட்டார் சைக்கிள் பெற்றுக்கொண்டிருப்பினும் ரூபா 377,000 மீண்டும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | மேலதிமாக பெற்றுக் கொண்ட சைக்கிளுக்காக சந்தைப் பெறுமதி அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சம்பளத்திலிருந்து அறவிடுவதற்கு 7 சந்தர்ப்பங்களில் சமுர்த்தி பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டது. . | 2022 பெப்ரவரி வரை குறித்த தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. |
| 06. | நாவுல பிரதேச செயலாளர் அலுவலகத்தில் 50 ஏக்கர் பாதை மற்றும் கிளை சாலைகள் அபிவிருத்தி செயற்றிட்டத்தின் நிறைவேற்றப்படாத வேளைக்காக ரூபா 68,590 செலுத்தப்பட்டிருந்தது. | மேலதிக செலுத்தல்கள் மீண்டும் அறவிடல் மற்றும் பொறுப்பு கூற வேண்டிய ஊழியர்கள் தொடர்பாக அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். | பொறியியலாளரின் அறிவுறுத்தலின் அடிப்படையில் தொழிநுட்ப உத்தியோகத்தரின் மூலம் அறிக்கையொன்றை பெறுவதற்கு கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது. | 2022 பெப்ரவரி வரை குறித்த மேலதிக செலுத்தல்களை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. |
| 07. | மாத்தளை பிரதேச செயலகத்தின் 2020 ஆம் | உத்தேச செயற்திட்டங்களை | எதிர்காலத்தில் உத்தேச | செயற்படுத்தப்படாத |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆண்டிற்காக நிறைவேற்றுவதற்கு உத்தேசிக்கப்பட்ட 177 செயற்திட்டங்களில் ரூபா 26,500,000 பெறுமதியான 27 செயற்திட்டங்கள் செயற்படுத்தப்படாமல் அதற்காக வேறு செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருந்தன. இதன் காரணமாக பொதுமக்கள் தேவைப்பாட்டின் பிரகாரம் கிராமிய முகவர்களால் இனங்காணப்பட்ட செயற்திட்டங்களை செயற்படுத்த முடியாமல் இருந்தன. | நிறைவேற்றுவது தொடர்பாக கவனம் செலுத்த வேணடியதுடன் ஏனைய செயற்திட்டங்கள் செயற்படுத்தப் பட்டால் அதற்கான அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். | செயற்திட்டங்களை மட்டும் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல். | செயற்திட்டங்கள் பின்னர் செயற்படுத்தப் படுவதற்கான தகவல்கள் இருக்கவில்லை. . |
| 08. | நாவுல லிஹினிபிட்டிய நீர் முன்மொழிவுத் திட்டம் தொடர்பாக 2008 தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரை 06 சந்தர்ப்பங்களில் மொத்தம் ரூபா. 5,769, 793செலவில் நிர்மாணங்கள் மேற்கொள்ளப் பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் அச் செயற்திட்டத்தின் மூலம் எந்தவொரு பாவனையளாருக்கும் நீர் வழங்கப்பட்டிருக்கவில்லை. | பணம் விடுவிக்கப்பட்ட செயற்திட்டங்களில ிருந்து எதிர்பார்க்கப்பட்ட பலன்களைப் பெற நடவடிக்கை எடுத்தல். | செயற்திட்டத்தினை சமூக நீர் வழங்கல் திணைக்களத்திடம் ஒப்படைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. | 2022 பெப்ரவரி வரை செயற்திட்டங்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப் பட்டிருக்கவில்லை. |
| 09. | 2014 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் | பணம் வெளியிடப்பட்ட | தடுப்பதற்கான நடவடிக்கைகள் | 2022 பெப்ரவரி வரை |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆண்டு வரை 06 சந்தர்ப்பங்களில் 05 வேலைத்திட்டங்களின் கீழ் வழங்கப்பட்டிருந்த மொத்தம் ரூபா. 3,748, 000ஆகவும் நிதி ஒதுக்கீடுகள் மூலம் ரூபா.3 ,685, 398 செலவில் யடவத்த பிரதேச செயலாளர் அலுவலகம் மூலம் கஹவத்த குடி நீர் செயற்திட்டத்தின் நிர்மாணம் செய்யப்பட்டிருந்தது. அவ்வாறாயினும் அங்கு குறைபாடுகள் காரணமாக 2019 ஆம் ஆண்டின் இறுதியில் எந்தவொரு நீர் நுகர்வோருக்கும் நீர் வழங்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டங்க ளிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட பலன்களைப் பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் திட்டமிடலின்றி அரச நிதிகளின் செலவு தொடர்பாக மேலும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எடுக்கப் பட்டிருக்கவில்லை. | செயற்திட்டங்கள் உபயோகத்திற்கு எடுக்கப் பட்டிருக்கவில்லை. |
| 10. | யட்டவத்த பிரதேச செயலகத்திற்கு கிராம சக்தி மக்கள் செயற்திட்டத்தை பலப்படுத்துவதற்காக 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது வழங்கப்பட்ட தொகையில் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 666,935 தொகை விளைவற்ற வகையில் காணப்பட்டன. | கிடைத்துள்ள நிதி ஏற்பாடுகளை ஆக்கபூர்வமான செயற் திட்டங்களுக்காக ஈடுபடுத்துதல் வேண்டும்.. | - மேற்படி - | 2022 பெப்ரவரி வரை அந்த நிலைமையிலேயே காணப்பட்டது. |
| 11. | உக்குவல மற்றும் ரத்தொட்டை பிரதேச செயலக பிரிவுகளில் 2019 ஆம் ஆண்டில் “கம்பெரலிய | கொள்வனவு செய்யப்பட்ட கூரை தகரங்களை பகிந்தளிப்பதற்கு நடவடிக்கை | உக்குவெல – பரல மற்றும் ஷ்ரமய தோட்டக் கம்பனிகள் மூலம் பெறப்பட்டு மேற்கொண்ட | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிகழ்ச்சித்திட்டம்" இன் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 26,642,202 ஆன கூரை தகரங்களும் உபகரணங்களும் விளைவற்றுக் காணப்பட்டன. | எடுத்தல் வேண்டும்.. | நடவடிக்கைகளை எடுப்பதற்கு மாவட்டச் செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. கூரைத் தகடுகள் மற்றும் உபகரணங்கள் களஞ்சியப் படுத்தப்பட்டுள்ளன. | |
| 12. | ரத்தோட்டை பிரதேச செயலகத்தின் அடிப்படை வசதிகள் விசேட வேலைத்திட்டத்தின் கீழ் 2 இளைஞர் கழகங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா. 141,750 பெறுமதியான உடற்கட்டமைப்பு உபகரணங்கள் 11 குறைபாடாகக் காணப்பட்டன. | இளைஞர் கழகங்களுக்கு வழங்கப்பட்ட உபகரணங்கள் தொடர்பில் பின்தொடரலகள் மேற்கொள்ளப்படல் . | பின் தொடரல்கள் இல்லாமை தொடர்பாக கிராம சேவகருக்கு மற்றும் விளையாட்டு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. காணாமல் போன பொருட்களை திசெம்பர் 15 இற்கு முன்னர் நிறுவுமாறு சங்கத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | 2022 பெப்ரவரி வரை அந்நிலைமையிலே யே காணப்பட்டது. |
| 13. | ஆசிரிய தொழிலுக்காக விடுவிக்கப்பட்டு கணக்காய்வு திகதி வரை 03 ஆண்டுகளுக்கும் 06 ஆண்டுகளுக்கும் இடைப்பட்டிருந்த காலப்பகுதியை விஞ்சியிருந்த கலேவல பிரதேச செயலகத்தின் 08 உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 995,180 தொகையை அறவிடுவதற்கு | கல்வி அலுவலகத்திற்கு தெரியப் படுத்தப்பட்டு குறித்த பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | மாகாண கல்வி செயலகத்திற்கு அறிவிக்கப் பட்டுள்ளது. | 2022 பெப்ரவரி வரை 06 உத்தியோகத்தர் களிடமிருந்து குறித்த பணம் அறவிடப் பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| 14. | 4 பிரதேச செயலாளர் அலுவலகத்தினூடாக 37 அபிவிருத்தி செயற்றிட்டங்களுக்காக காணி கையகப்படுத்தப்படும் போது 1 தொடக்கம் 43 வருடங்கள் வரை காலம் கடந்து இருப்பினும் அக் கையப்படுத்தலின் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை . | காணி கையகப்படுத்தல் நடவடிக்கைகள் விரைவுப்படுத்தல் வேண்டும். | சமர்ப்பிக்கப் படவில்லை | மாத்தளை பாரிய நீர் வழங்கல் செயற்திட்டம் உடுப்பிஹில்ல ஸ்ரீ சரணங்கர வித்தியாலயம், ஹில்ல ஸ்ரீ சரணங்கர வித்தியாலயம், ஹு"ன்னஸ்கிரிய ஒலிபரப்பு நிலையம், கொஹொம்பிலி வெல நினைவுச் சின்னம், கந்தேமட இடம் பெயர்ந்தோருக்கா ன காணி சுவீகரிப்பு போன்ற நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ள துடன் ஏனைய அவதானிப்பில் மாற்றமில்லை. |
| 15. | மாத்தளை மாவட்ட செயலகத்தின் உதவிப் பணிப்பாளர் திட்டமிடல் (மேற்பார்வையாளர்) பதவிக்காக ஒரே உத்தியோகத்தருக்கு என்ற | மிகை உத்தியோகத்தர் வெற்றிடமாக உள்ள இடங்களுக்கு | சமர்ப்பிக்கப் படவிலலை. | 2022 பெப்ரவரி வரை அவதானிப்பில் மாற்றமில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வகையில் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதும் அதற்கு மேலதிகமாக உதவிப் பணிப்பாளர் திட்டமிடல் (மேற்பார்வையாளர்) பதவியொன்று மிகையாக பேணிச் செல்லப்பட்டு அதற்காக 2019 சனவரி முதல் 2020 திசெம்பர் வரை ரூபா 1,872,083 ஆன சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. | மாற்றப்பட வேண்டும். . | | |
| **கண்டி மாவட்ட செயலகம்** ---------------------------------- | | | | |
| | 2018 - | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | | |
| | 2019 - | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | | |
| | 2020 - | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | | |
| **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள பிரதான குறைபாடுகள்** ----------------------- | | **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை** -------------------- | **நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள்** | **அது தொடர்பான தற்போதைய நிலைமை** -------------------- |
| 01. | கங்கவட்ட கோரல பிரதேச செயலகத்திலிருந்து ஓய்வூதியம் பெற்று வந்த நபரொருவர் 16 ஆண்டுகள் 2 மாதங்களாக 2 ஓய்வூதியங்களை பெற்று ரூபா 2,064,377 ஆன மோசடியொன்றை செய்திருந்தார். இத்தொகை பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கான | ஓய்வூதிய கோவையை மாற்றியதன் பின்னர் கட்டாயமாக ஓய்வூதியம் பெறும் அலுவலகத் திலிருந்து அவரின் பெயர் அகறற்ப்படல் வேண்டும். மேலதிகக் | பரிசோதனை தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் ஓய்வூதிய திணைக்களத்திற்கும் கண்டி பொலிசுக்கும் 2019 பெப்ரவரி 8 ஆந் திகதி தொடர்பு படுத்தப் பட்டுள்ளதாகவும் எதிர்வரும் காலங்களில் ஓய்வூதிய பணிப்பாளரின் | மேலதிகமாகச் செலுத்தப்பட்ட ரூபா 1,847,709 ஆன தொகை விசேட அங்கீகாரம் பெறப்பட்டு விதவைகள் ஓய்வூதியத்திலிருந் து அறவிடப்படுவதற்கு ஓய்வூதியப் பணிப்பாளர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கொடுப்பனவுகள் அறவிடப் படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஆலோசணையின் பேரில் மேற்கொள்வதாகவும் அறியதருகின்றேன். | நாயகத்திற்கு பிரதேச செயலகத்தின் DS/KGK/2/12 ஆம் இலக்க 2021.12.31 ஆம் திகதிய கடிதத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது. மேலும் 2020 சனவரி மாதத்திலிருந்து மேற்படி ஓய்வூதியக்காரரின் (ஓய்வூதிய இலக்கம் 1603037) ஓய்வூதியம் நிறுத்தப்பட்டுள்ளது டன் 2021.03.02 ஆம் திகதி மரணித்தமையால் அது வரை ஈடுசெய்யப்பட்ட தொகை ரூபா 321,842 என்பது அறிக்கையிடப்பட்டி ருந்தது. |
| 02. | கங்க இஹலகோரல பிரதேச செயலகப் பிரிவில் அதிக ஆபத்துள்ள வலயமாக இனங்காணப்பட்ட பெரவில பிரதேசத்தில் 162 குடும்பங்களை குடியேற்றுவதற்காக குருந்துவத்த நகரிற்கு | அதிக ஆபத்துள்ள பிரதேசங்களில் வாழ்ந்து வரும் ஆட்களுக்காக வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளை பயன்படுத்தி குறிப்பிட்ட | தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பு முதலில் வழங்கிய இணக்கப்பாட்டின் பேரில் கொடுப்பனவு செய்யப்பட்ட போதும் பின்னர் இணக்கப்பாட்டை | மீள் குடியேற்றல் செயற்திட்டத்தின் முதலாம் கட்டத்தின் கீழ் காணி மற்றும் முதலாம் தவணைக்காக பணம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | அண்மையில் 25 ஏக்கர் அளவிலான தனியார் காணியொன்று ஒதுக்கப்பட்டு அக்காணியில் மீள்குடியேற்றுவதற்காக 153 குடும்பங்களுக்கு காணி வழங்கி வீடுகளை நிர்மாணிப்பதற்கு முதலாவது தவணையாக ரூபா 200,000 வீதம் 2018 ஆம் வருடத்தில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 2021 ஆம் வருடம் வரை அதில் 125 குடும்பங்கள் எவ்வித நிர்மாணமொன்றையும் மேற் கொள்ளாமல் அதிக ஆபத்துள்ள பிரதேசங்களில் வசித்து வந்தனர் | வீடுகளை நிர்மாணிப்பது தொடர்பாக பீன் தொடரல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.. | வழங்காமை காரணமாக மாற்று யோசனைகளின் பிரகாரம் மீள்குடியிருப்பிற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது. | வழங்கப்பட்ட 153 பயனாளிகளில் 33 பேர் உரிய தொகையைத் திருப்பிச் செலுத்தியுள்ளனர். இற்றை வரையில் மீள்குடியேற்றல் செயற்திட்டத்தின் முன்னேற்றம் பின்வருமாறு அறிக்கையிடப்பட்டிருந்தது.<br><br>வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு நான்காவது தவணை விடுவிக்கப்பட்டமை 09, மூன்றாம் தவணை விடுவிக்கப்பட்டமை 25, இரண்டாம் தவணை விடுவிக்கப்பட்டமை 10, அடித்தளம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டவை 06 உம் ஆகும். பயனாளிகளின் பணம் மீண்டும் வழங்கப்படவோ அல்லது வீடு கட்டும் பணிகள் நடைபெறவோ இல்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| 03. | கங்க இஹலகோரல பிரதேச செயலகப் பிரிவில் மண்சரிவு ஆபத்து காரணமாக மீள் குடியேற்றப்பட வேண்டிய 243 வீடுகளும் 36 தோட்ட வீடுகளும் இனங்காணப் பட்டிருந்தபோதிலும் 126 குடும்பங்கள் அதிக ஆபத்துள்ள பிரதேசத்திலேயே வசிக்கின்றனர்.அவர்களை பாதுகாப்பான பிரதேசங்களில் மீள்குடியேற்றுவதற்கு முறையான நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டிருக்காததுடன் இக்காணியில் வீதி அபிவிருத்தி செய்வதற்காக 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 1,929,960 ஆன செலவொன்று செய்யப்பட்டிருந்தது. . | அதிக ஆபத்துள்ள பிரதேசங்களில் வாழ்ந்து வரும் ஆட்களுக்காக வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளை துரிதமாக பயன்படுத்தி மீண்டும் குடியிருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பு முதலில் வழங்கிய இணக்கப்பாட்டின் பேரில் கொடுப்பனவு செய்யப்பட்ட போதும் பின்னர் இணக்கப்பாட்டை வழங்காமை காரணமாக மாற்று யோசனைகளின் பிரகாரம் மீள்குடியிருப்பிற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது. | இப்பிரிவிற்குரிய தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பின் மூலம் மீள் குடியேற்றத்திற்கு பரிந்துரைக்கப்பட்ட குடும்பங்கள் 243 என்பதுடன் குறிப்பிட்ட அனைத்து பயனாளிகளுக்கும் வழங்குவதற்கு அரசினால் கையகப்படுத்தப்பட் ட காணிகளில் போதியளவு காணிகள் இல்லாமையால் குறிப்பிட்ட மிகுதி பயனாளிகளுக்கு எதிர்காலத்தில் அரச காணிகளை வழங்குவதற்கு அல்லது மாற்று வாய்ப்புக்களுக்கு வழிகாட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகப் பிரதேச செயலாளர் அறிக்கை வெளியிட்டுள்ளனர். |
| 04. | மெததும்பர பிரதேசச் செயலகத்தினால் ஆபத்து | அதிக ஆபத்துள்ள பகுதிகளில் | மீள்குடியேற்றத்திற்காக 120 பேர் | மெததும்பர பிரதேசச் |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிறைந்ததாக இனங்காணப்பட்டிருந்த பிரதேசங்களில் வசிக்கும் 120 குடும்பங்களில் 07 குடும்பங்களை மட்டும் மீள்குடியேற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதுடன் மிகுதி 113 குடும்பங்களை மீள்குடியேற்றுவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் பட்டிருக்கவில்லை | வசிக்கும் குடும்பங்களை விரைவில் பொருத்தமான இடங்களில் குடியேற்று வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். . | இனங்காணப்பட்டுள்ளது டன் ஆரம்பக் கட்டத்தில் 07 பேருக்கான நட்டஈட்டுக் கொடுப்பனவு அங்கீகரிக்கப் பட்டிருந்தது. மிகுதி குடும்பங்களின் மீள் குடியேற்ற நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. . | செயலகப் பிரிவில் 17 குடும்பங்கள் மீள் குடியேற்றப்பட்டு முடிவடைந்துள்ளது டன், 16 குடும்பங்களுக் கான வீட்டு நிர்மாணங்கள் செய்யப்பட்டு வருவதாகவும், 87 பயனாளிகளின் மீள் குடியேற்றத்திற்காக காணிகளை எதிர்பார்த்துக் கொண்டிருப் பதாகவும், 04 பயனாளிகள் மீள் குடியேற்றத் திற்கான விருப்பமின்மையை எழுத்து மூலம் தெரிவித்துள்ள தாகவும், 49 பயனாளிகள் மீள் குடியேற்றத் திற்கான விருப்பமின்மையை வாய் மொழியாகவும் தெரிவித்தி ருந்தனர். பம்பரஹதெனிய கிராம சேவகர் பிரிவின் ''அகுருகமவத்த'' |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | எனும் பெயரில் அரச மரக் கூட்டுத்தாபனத் திற்கு சொந்தமான காணி கையகப்படுத்தப் பட்டு அது துண்டுகளாகப்பட்டு பயனாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படு வதற்கான நடவடிக்கை ஆரம்பிக்கப் பட்டுள்ளது. |
| 05. | திறமை அபிவிருத்தி, மகளிர் ஊக்குவிப்பு, கிராமிய அபிவிருத்தி மற்றும் வாழ்க்கை நிலைமையை உயர்த்துதல் மற்றும் பத்து இலட்சம் தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்துதல் என்ற அரசின் வேலைத்திட்டத்தின் கீழ் பயிற்சியொன்று மற்றும் 08 தொழிற்சாலைகளுக்காக ரூபா 9,781,156 பெறுமதியான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்தன. இந்த 08 தொழிற்சாலைகளில் 05 தொழிற்சாலைகள் மூடப்பட்டிருந்ததுடன் , இந்த உபகரணங்களில் ரூபா 2,998,344 பெறுமதியான உபகரணங்கள் அமைச்சு | அரச பணம் செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் குறிப்பிட்ட நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு அனுப்பப் படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | உபகரணங்களை ஒப்படைப்பதற்கான முறையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்ட போதிலும், அமைச்சினால் அது நடைமுறைப்படுத்தப்பட வில்லை. | தொழில் அமைச்சினால் 2016 ஆம் வருடத்தில் கண்டி மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 07 பிரதேசச் செயலகப் பிரிவுகளில் சிறு அளவிலான 08 தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டு இற்றை வரையில் அவை அனைத்தும் தற்போது செயற்படாமல் உள்ளன. அத்துடன் இந்த இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஒருங்கிணைப்புச் செயலாளரின் வீட்டில் களஞ்சியப் படுத்தப்பட்டிருந்தன. | | | பாதுகாப்பாக களஞ்சியப் படுத்துவதற்கு பொருத்தமான இடமொன்று அரச நிறுவனங்களில் இல்லாமையால் தொடர்ந்தும் அந்த மத்திய நிலையங்களை பராமரிக்கும் நிறுவனங்களில் தேக்கி வைக்கப்பட்டுள் ளன. அவ்வாறு தேக்கி வைக்கப்பட்டுள்ள இயந்திரம் மற்றும் உபகரணப் பொருட்கள் பதிவேட்டின் பிரகாரம் பௌதீக ரீதியாகப் பரிசோதிக்கப்பட்டி ருந்ததுடன் அவ்வறிக்கை மற்றும் அந்த இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பான பரிந்துரைகள் கைத்தறி ஆடைகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | இராஜாங்க அமைச்சின் செயலாளருக்கு எனது இலக்கம் KDS/4/11/3/7 மற்றும் 2021.07.22 ஆந் திகதிய கடிதமொன்றில் அனுப்பப்பட்டுள்ள துடன் இற்றைவரையில் எடுக்கப்பட வேண்டிய மேற்கொண்ட நடவடிக்கைகள் தொடர்பாக அறிவுறுத்தப்பட்டிரு க்கவில்லை. என்பது குறிப்பிடப் பட்டிருந்தது. |
| 06. | நுகவெல மத்திய மஹா வித்தியாலயத்தின் உள் விளையாட்டரங்கினை நிர்மாணிப்பதற்காக 2014 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை ரூபா 30,950,137 தொகை செலவிடப்பட்டும் அதன் வேலைகள் முடிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதி ஏற்பாடு வழங்கப்பட்ட பணிகள் தொடர்பாக பின் தொடரல் செய்யப்பட்டு குறிப்பிட்ட பணிகள் நிறைவேற்றப் படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | அவ்வப்போது வழங்கப்பட்ட நிதிஏற்பாடுகளின் பேரில் மதிப்பீடுகளுக்கரிய வேலைப்பகுதிகள் பூர்த்தி செய்யப்பட்டு அதிபருக்கு கையளிக்கப் பட்டுள்ளன. | 2017 வருடம் வரை பெறப்பட்ட ஒதுக்கங்களின் அடிப்படையில் செய்யப்பட முடியமானளவு நிர்மாணம் முடிக்கப்பட்டு 2017.02.17 ஆம் திகதி நுகவெல மத்திய மகா வித்தியாலயத்தின் அதிபருக்கு கையளிக்கப்பட்டிரு ந்ததுடன் உள்ளக விளையாட்டரங்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | பூரணமாக முடிப்பதற்காகத் தொடர்ந்தும் ரூபா 10 மில்லியன் ஆன தொகையொன்று செலவாகுமென மதிப்பிடப் பட்டுள்ளதாக பிரதேசச் செயலாளர் தெரிவித்துள்ளார். |
| 07. | குண்டசாலை பிரதேச செயலகத்தின் 2008 ஏப்ரல் மாதம் மரணித்த ஓய்வுபெற்ற ஒருவரின் ஓய்வூதியத்தை 2008 மே மாதம் முதல் 2012 சனவரி மாதம் வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 428,911 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அது தொடர்பாக நிதிப் பிரமாணம் 104(4) பிரகாரம் விசாரணையொன்று மேற்கொள்ளப் பட்டிருந்ததுடன் அவ்விசாரணை அறிக்கையின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த தரப்பினரிமிருந்து அறவிட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் இதுவரை ரூபா 214,302 ஆன தொகை அறவிடப்பட்டிருந்தது. | மோசடிக்குரிய பரிசோதனையை துரிதமாக மேற்கொண்டு பொறுப்பான தரப்பினர் தொடர்பாக உரிய பரிந்துரை செயற்படுத்தப்படல் வேண்டும். | நிதிப்பிரமாணம் 104(4) இன் பரிசோதனையின் பிரகாரம் இரண்டு கிராத சேவைகளிடமிருந்து பணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் மேலும் கிராம சேவையாளர் ஒருவர், ஓய்வூதிய அலுவலகர் ஒருவர் மற்றும் ஆவண உதவியாளர் ஒருவர் 2016 மே 02 ஆந் திகதிய மேன்முறையீடு சமர்ப்பித்துள்ளதால் அதற்குரிய அமைச்சின் தீர்மானம் கிடைக்கும் வரை நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப் படவில்லையென அறிவிக்கப் பட்டிருந்தது. | உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளரின் HA/3/1/15/4-6 ஆம் இலக்க மற்றும் 2021-11-25 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் அரசிற்கு ஏற்பட்ட நட்டம் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் கூட்டாகவும் / அல்லது தனித்தனியாகச் செலுத்த வேண்டியுள்ளதால் அத்தொகை குறிப்பிட்ட அதிகாரிகளிடமிருந்து அறவிடப்படுவதற்குத் தேவையான |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | நடவடிக்கைகளை எடுக்குமாறு KDS/1/6/2/2/14 ஆம் இலக்க மற்றும் 2021.12.07 ஆந் திகதிய கடிதம் மூலம் பிரதேச செயலக குண்டசாலைக்கு குறிப்பிடப்பட்டிருந் ததுடன் 2022.01.12 ஆந் திகதிய கடிதம் மூலம் நினைவூட்டல்க ளும் செய்யப்பட்டி ருந்தன. |
| 08. | பாத்த ஹேவாஹெட்ட மற்றும் தும்பனைப் பிரதேச செயலகப் பிரிவுகளில் அரசிற்குச் சொந்தமான கூட்டுத்தொகை 417 பேர்ச்சஸ் 23 காணித்துண்டுகள் சட்டவிரோதமாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதுடன் அந்த காணிகளை மீட்டெடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சட்ட விரோதமாக ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளை மீட்டெடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் விரைவில் எடுக்கப்பட வேண்டும். | சட்ட விரோத குடியிருப்பாளர் தொடர்பான பதிவேடொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கான காணிகளை சட்டரீதியாக்குவதற்கு மாகாண காணி ஆணையாளருக்கு அனுப்பி வைப்பதற்கு, காணி கச்சேரி நடாத்துவதற்கான அபிவிருத்தி அறிக்கைகள் தயாரித்தல் காணிகளை அளத்தல் மற்றும் அளவீட்டு உத்தரவுகளை | உடகம மேற்கு கிராம சேவகர் பிரிவில் 2021/04/08 ஆம் திகதி காணிக் கச்சேரி நடைபெற்றதுடன் காணியின் அளவைத் தீர்மானிப்பதற்கு கச்சேரி நில அளவையாளருக்கு அளவீட்டுக் கோரிக்கை அனுப்பட்டுள்ளது. கஹம்பிலியாவ கிராம சேவாகள் பிரிவில் 2020/10/06 இல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அனுப்புவதற்கான ஏற்பாடகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2019 திசெம்பர் 19 இல் காணிக் கச்சேரியொன்றை நடாத்தி காணிகளை சட்டரீதியாக்கு வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ள தாகவும். அரச காணிகளை சட்ட விரோதமாக ஆக்கிரமிப்பதைக் கட்டுப்படுத்துவதற்காக கிராம சேவகர் பிரிவு மட்டத்தில் மாதாந்த அறிக்கை கோரப்பட்டுள்ளதாகவும் தும்பனே பிரதேசச் செயலாளர் தெரிவித்துள்ளார். | நடாத்தப்பட்ட காணிக் கச்சேரிக்கு பங்குபற்றிய இறுதிப் போட்டியாளரின் பட்டியல் மாகாணக் காணி ஆணையாள ரினால் அங்கீகரிக்கப்பட்டி ருந்தது. அதன் பிரகாரம் அதற்கான உரிமங்கள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. தும்பனே பிரதேசச் செயலகத்தின் 2019 திசெம்பர் 19 ஆந் திகதி காணிக் கச்சேரியொன்று நடாத்தப்பட்டு உரிய அங்கீகாரமற்ற நபர்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| 09. | வேலையிலிருந்து நிறுத்தப்பட்ட உத்தியோகத்தர்களின் ரூபா 136,620 ஆன கடன் மிகுதியொன்று மற்றும் வேலையிலிருந்து விலகிச் | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவையின் xxiv ஆம் | கடன் மிகுதியை அறவிடுவதற்கு எடுக்கப்பட்டுள்ள ஒழுக்காற்று நடவடிக்கையை விரைவுபடுத்துவதற்கு | முறையான ஒழுக்காற்று நடவடிக்கைகள் கொவிட் - 19 தொற்று நிலைமை காரணமாக |

| | | | | |
|---|---|---|---|---|
| | சென்ற உத்தியோகத்தர்களின் ரூபா 106,391 ஆன கடன் மிகுதியொன்றும் 2021 திசெம்பர் 31 இல் 08 வருட காலத்திற்கும் மேற்பட்டதாக இருந்த போதிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.. | அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள தாகவும் சேவையிலிருந்து விலகிச் சென்ற உத்தியோகத்தர்களின் அறவிட வேண்டிய ரூபா 106,391 ஆன கடன் தொகை கொடுப்பனவு செய்து முடிக்கப்படுமெனவும் சட்டமா அதிபர் குறிப்பிடப்பட்டிருந்தார்.. | நிறுத்தப்பட்டிருந்த துடன் அந்த ஒழுக்காற்று நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. சேவையிலிருந்து விலகிச் சென்ற உத்தியோகத்தர் களின் கடன் மிகுதிகளை அறவிடுவதற்காக சட்டமா அதிபருக்கு அறிவிக்கப் பட்டுள்ளது. |
| 10. | பஸ்பாக கோரளே பிரதேச செயலக பிரிவில் அதிக ஆபத்துள்ள பிரதேசங்களில் வசிக்கும் குடும்பங்களை மீள்குடியேற்றும் செயற் திட்டத்தின் கீழ் இனங் காணப்பட்ட 53 குடும்பங்களில் 10 பேருக்கு அரசினால் வழங்கப்படும் ரூபா 400,000 பணத்தில் மீள் குடியேற்றத்திற்காக பொருத்தமான காணியொன்றை இனங்காண்பதற்கு உள்ள சிக்கல் மற்றும் அத்தொகைக்கு மேலதிக ஏதேனும் செலவினத்தை மேற்கொண்டு காணியை | எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றுவதற் கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | மேலும் 10 குடும்பங்களுக்காக மாத்திரம் மீள்குடியேற்றத்திற்கு காணியொன்றை இனங்காண வேண்டியுள்ளது. | இதில் ஒரு குடும்பத்திற்கு காணி வழங்கப்பட்டுள்ளத ாகவும் ஏனைய குடும்பங்களைச் சேர்ந்த 06 குடும்பங்கள் உறவினர் வீடுகளில் மற்றும் ஏனைய இடங்களில் இடம் பெயர்ந்துள்ள தாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. அதன் பிரகாரம் 03 குடும்பங்கள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | கொள்வனவு செய்வதற்குரிய இயலுமை இக் குடும்பங்களுக்கு இல்லாமையால் மீள்குடியேற்றத்திற்கு பொருத்தமான காணியொன்றை இதுவரை இனங்காண முடியாதிருந்தது. | | | மாத்திரமே ஆபத்தான பிரதேசங்களில் வசித்து வருவதாகவும் ஆனால் மழைக் காலங்களில் குடும்பங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாகவும் பிரதேசச் செயலாளர் தெரிவித்தார். |
| 11. | உடபலாத்த பிரதேச செயலகத்தின் 2017 மே 25 ஆந் திகதி விபத்திற்குட்பட்ட உத்தியோகபூர்வ கெப் வண்டியின் மதிப்பிடப்பட்ட மொத்த நட்டமான ரூபா 2,223,927 இல் மேலும் அறவிடப்பட வேண்டிய ரூபா 210,093 தொகையை சாரதியிடம் அறவிடுவதாக விசாரணை சபை முடிவெடுத்திருந்தது.<br>எனினும் 2021 திசெம்பர் மாதம் வரை அத்தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நட்டத்திற்கு பொறுப்பான தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விபத்திற்குப் பொறுப்பான சாரதி மரணித்துள்ளதாகவும் அவரின் சட்டரீதியான வாரிசுகள் தொடர்பான தகவல்கள் 2021.03.13 ஆந் திகதிய KDS/UDP/1/1/VEH/9 ஆம் இலக்க உடபலாத பிரதேச செயலாளரால் கடிதத்தின் மூலம் சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | CPPD 6103 ஆம் இலக்க உத்தியோகபூர்வ கெப் விபத்து தொடர்பில் 2021.02.08 ஆம் திகதி சட்டமா அதிபர் திணைக்களத்தினால் கோரப்பட்ட தகவல்கள் 2021.03.13 அன்று பிரதேச செயலாளரினால் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் , 2021.12.27, 2021.10.27 மற்றும் 2021.05.05 ஆகிய |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | தினங்களில் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்ட நிளைவூட்டல் கடிதங்களுக்கு இற்றை வரை பதில் கிடைக்கவில்லை. |
| 12. | 2019 நவம்பர் 22 ஆம் திகதிய BD/GPS/130/9/4/MC-8 ஆம் இலக்க தேசிய பாதீட்டு திணைக்களத்தின் பணிப்பாளரின் கடிதத்தின் 2 ஆம் பந்தியில் ஒரு உத்தியோகத்தருக்கு ஒரு மோட்டார் சைக்கிள் மாத்திரம் உரித்தாவதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2014 வரவு செலவுத் திட்ட முன்மொழிவின் பிரகாரம் சலுகை அடிப்படையில் மோட்டார் சைக்கிள்களைப் பெற்றுக்கொண்ட 07 வெளிக்கள உத்தியோகத்தர்கள் உள்ளூராட்சி மன்றங்களுக்காக தெரிவுசெய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளுக்கு சலுகை அடிப்படையில் வழங்கப்படும் மோட்டார் சைக்கிள்களையும் பெற்றுக் கொண்டிருந்த போதும் | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | மேற்படி விடயத்திற்குரிய 07 உத்தியோகத்தர்கள் தங்களால் பெற்றுக்கொண்ட மோட்டார் சைக்கிளின் சந்தைப் பெறுமதியை 2021.05.20 ஆந் திகதிக்கு முன்னர் மாவட்ட சமுர்த்தி பிரிவிற்கு கொடுப்பனவு செய்து பட்டியலைச் சமர்ப்பிக்குமாறும் அவ்வாறு கொடுப்பனவு செய்வதற்கு தவறினால் அப்பணத்தை தவணைய ரீதியில் சம்பளத்தில் இருந்து அவிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு எழுத்து மூலம் அறிவிக்கப பட்டுள்ளது. | அறவிடுதல் தொடர்பாக சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் KDS/07/2/17 ஆம் இலக்க மற்றும் 2022.01.13 ஆந் திகதிய கடிதம் மூலம் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளமெ தன்பதை தயவுடன் தெரிவிக்கின்றேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| | அவர்களிடமிருந்து ஒரு மோட்டார் சைக்கிளுக்கான சந்தைப் பெறுமதி அறவிடப்பட்டிருக்கவில்லை.. | | | |
| 13. | மீளாய்வாண்டில் சுத்திகரிப்பு சேவைகளை வழங்குவதற்காக தெரிவுசெய்யப்பட்ட நிறுவனத்திற்கு 224 மனித நாட்கள் சேவை வழங்காதிருக்கையில் அதற்காக ரூபா 244,640 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது, | கொடுப்பனவு செய்யப்படும்போது பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு குறித்த பணி நிறைவேற்றப் பட்டால் மட்டும் கொடுப்பனவு செய்யப்படல் வேண்டும். | சுத்திகரிப்பு சேவைக்கு ஈடுபடுத்தப்பட்டுள்ள ஊழியர்களுக்கு ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிய பங்களிப்பு கிடைக்கின்றதா என கண்டு பிடிப்பதற்கு நடவடிக்கை எடுப்பட்டுள்ளது. | இத்தொகை சேவை வழங்குநரிடமிருந் து அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படு மென்பதை தயவுடன் தெரிவிக்கின்றேன |
| **நுவரெலியா மாவட்ட செயலகம்**<br>**------------------------------------------** | | | | |
| | 2018 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | | |
| | 2019 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | | |
| | 2020 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | | |
| **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள பிரதான குறைபாடுகள்**<br>**------------------------** | | **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை**<br>**---------------------** | **நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள்** | **அது தொடர்பான தற்போதைய நிலைமை**<br>**--------------------** |
| 01. | நுவரெலியா பிரதேச செயலகத்திலிருந்து சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து 05 ஆண்டு காலமாக காணப்படும் ரூபா 49,985 ஆன கடன்மீதியும் வேலை இடைநிறுத்தத்திற்கு உட்பட்ட மூன்று | வழங்கப்பட்ட கடனை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட மற்றும் சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்களின் கடன்களை செலுத்தி முடிக்குமாறு அறிவித்து அனுப்பிய | 2022 பெப்ரவரி வரையில் அறவிடப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 01 ஆண்டு முதல் 05 ஆண்டுகள் வரையான நிலுவையாக காணப்படும் ரூபா 459,818 ஆன கடன்மீதிகளும் மீளாய்வாண்டின் இறுதி வரை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | | தொகையிலிருந்து ஒரு பகுதி தீர்வு செய்யப் பட்டிருந்ததுடன் சட்டரீதியாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டிருந்தது. | |
| 02. | வலப்பனே பிரதேச செயலகத்தின் தஹிவெல தெற்கு கிராம சேவையாளர் பிரிவில் வாழை இலையை பயன்படுத்தி சுற்றாடலுக்கு சாதகமான சுகாதார பாதுகாப்பான ‘‘லன்ஷீட்’’ உற்பத்தி செய்வதற்காக ரூபா 1.74 மில்லியன் செலவிட்டு 2018 நவம்பர் மாதத்தின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டங்களின் செயற்பாடுகளை தொடர்ந்து செல்வதற்கு தேவையான பிரதான மூலப்பொருளான வாழைக் கன்றுகளை கொள்வனவு செய்வதற்காக முன்னுரிமை வழங்காமை மற்றும் இயந்திரத்தின் செயற்பாட்டிற்காக தேவையான மின் இயலளவு தொடர்பான கவனம் செலுத்தாமல் அதற்கான கட்டிடத்திற்காக செலவினம் | வாழைக் கன்றுகளை கொள்வனவு செய்து செயற்திட்டத்தினை வெற்றிகர மாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.. | கன்றுகளை பெற்றுக் கொள்வது தாமதமாக இருந்த போதும் மேலே குறிப்பிட்டதன் பிரகாரம் எதிர்கால நடவடிக்கைகள் திட்டமிட்டு செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போதும், உத்தியோகத்தர்களின் முயற்சி மட்டும் இருந்த போதும் குறுங்காலத்தில் கூடுதலான வருமானமொன்று கிடைக்கவில்லையென வும் பிரிவின் மக்களின் அக்கறை குறைவடைவது அவதானிக்கப்பட்டதால் அதன் பிரகாரம் செயற்திட்டம் இப்பிரிவில் செயற்படுத்தப்படாமல் வேறு அக்கறையுள்ள | 2022 பெப்ரவரி வரையில் செயற்திட்டம் ஆரம்பிக்கப் படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மேற்கொள்ளப் பட்டமையால் செயற்திட்டம் தோல்வியடைந்து பின்னர் செயலற்று போயிருந்தது. | | கிராமசக்தி பிரிவிற்கு வழங்குவதன் மூலம் அரசின் நிதியை முறையற்ற பயன்பாட்டினை தவிர்ப்பதற்கு இயலுமை கிடைப்பதாக அறிவிக்கப் பட்டிருந்தது. | |
| 03. | 2013 ஆம் ஆண்டிலிருந்து முன்கொண்டு வரப்படும் ரூபா 900,878 ஆன கட்டுநிதி மீதயொன்று 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. . | தீர்வு செய்யப்படாத முற்பண மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2012 ஆம் ஆண்டிலிருந்து ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு செலுத்தப்படும் முற்பணமொன்று அறவிடப்படாமையால் இந்நிலைமை உருவாகியுள்ளதாகவும் 2018 ஆம் ஆண்டில் பெற்றுக் கொள்ளப்பட்ட அமைச்சரவை தீர்மானமொன்றின் பிரகாரம் எதிர்வரும் நடவடிக்கைகளுக்காக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | 2013 ஆம் ஆண்டிலிருந்து முன்கொண்டு வரப்படும் ரூபா 900,878 ஆன கட்டுநிதி மீதயொன்று 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| 04. | அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிடமிருந்து மீளாய்வாண்டில் மீண்டெழும் மற்றும் மூலதன செலவின விடயங்களை மேற்கொள்வதற்காக மாவட்ட செயலகத்திற்கு கிடைத்த | கிடைக்கும் நிதிஏற்பாடு களிலிருந்து ஆகக்கூடிய மட்டத்தில் பயன்படுத்தப்பட வேண்டும். | கொவிட் நிலைமை காரணமாக செயற்திட்டங்களை நிறைவேற்ற முடியாமல் இருந்தது. | அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிட மிருந்து மீளாய்வாண்டில் மீண்டெழும் மற்றும் மூலதன செலவின விடயங்களை |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிதிஏற்பாடுகளிலிருந்து 3 சதவீதம் முதல் 68 சதவீதம் வரையான வீச்சளவில் சேமிக்கப்பட்டிருந்தது. | | | மேற்கொள்வதற்காக மாவட்ட செயலகத்திற்கு கிடைத்த நிதி ஏற்பாடுகளிலிருந்து 3 சதவீதம் முதல் 68 சதவீதம் வரையான வீச்சளவில் சேமிக்கப் பட்டிருந்தது. |
| 05. | ஹங்குரன்கெத பிரதேச செயலகப் பிரிவில் விதை போஞ்சி பயிரிடும் விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கில் கிராம சக்தி மக்கள் செயற்திட்டம் செயற்படுத்தப் பட்டிருந்ததுடன் 2019 திசெம்பர் 31 இல் திட்டத்திற்காக அரசிடமிருந்து ரூபா 5,311,908 தொகை செலவிடப்பட்டிருந்தது. விதை போஞ்சி குளிர் களஞ்சிய வசதிகளை வழங்குவதற்காக மந்தாரம்நுவர கமநல சேவைகள் நிலைய வளவில் முன்னைய ஆண்டில் நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்ட குளிர் களஞ்சியம் 2021 சனவரி 11 ஆந் திகதி வரை பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திட்டங்களை செயற்திறனாக செயற்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். | எதிர்வரும் காலங்களில் செயற்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்ப்படும். | விதை போஞ்சி குளிர் களஞ்சிய வசதிகளை வழங்குவதற்காக மந்தாரம்நுவர கமநல சேவைகள் நிலைய வளவில் முன்னைய ஆண்டில் நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்ட குளிர் களஞ்சியம் 2021 சனவரி 11 ஆந் திகதி வரை பயன்பாட்டிற்கு எடுக்கப் பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| 06. | கம்பெரலிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மாவட்டத்தின் 85 சமய நிலையங்களுக்கு சூரிய சக்தி முறைமை மூலம் மின்சாரத்தை பிறப்பிப்பதற்காக 2020 ஆம் ஆண்டில் ரூபா 42,500,000 செலவிடப்பட்டிருந்த போதும் கணக்காய்வு திகதியான 2021 மார்ச் 30 ஆந் திகதி வரை அத்திட்டங்கள் செயற்படுத்தப் பட்டிருக்கவில்லை. | திட்டமிடப்பட்ட செயற் திட்டங்களால் வழங்கப்படும் நிதி ஏற்பாடுகளின் பேரில் ஆகக்கூடிய பொது மக்கள் சேவையொன்றை மேற்கொள்ளும் வகையில் அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்ட முன்மொழிவில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தேசிய மின்சார முறைமை மற்றும் தொடர்புபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மின்சார சபைக்கு அறிவிக்கப் பட்டுள்ளது. | கம்பெரலிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மாவட்டத்தின் 85 சமய நிலையங்களுக்கு சூரிய சக்தி முறைமை மூலம் மின்சாரத்தை பிறப்பிப்பதற்காக 2020 ஆம் ஆண்டில் ரூபா 42,500,000 செலவிடப்பட்டிருந்த போதும் கணக்காய்வு திகதியான 2021 மார்ச் 30 ஆந் திகதி வரை அத்திட்டங்கள் செயற்படுத்தப் பட்டிருக்கவில்லை. |
| 07. | 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரை வலப்பனை பிரதேச செயலக பிரிவில் மீள் குடியேற்றுவதற்காக 189 குடும்பங்கள் இனங் காணப்பட்டிருந்தன அதில் மாற்று இடங்களில் 42 குடும்பங்களின் மீள்குடியேற்ற செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன 147 குடும்பங்கள் மேலும் அந்த ஆபத்துடைய பிரதேசங்கள் குடியிருப்பதுடன் 2014 ஆம் ஆண்டில் பழல் பதன | வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகள் மூலம் அனர்த்தங்களுக்கு உள்ளான பொது மக்களுக்கு விரைவில் சலுகை வழங்குவற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | தோட்டங்களை அண்மித்து 20 ஏக்கர் காணி கோரப்பட்டுள்ளதுடன பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு மற்றும் தோட்டக் கம்பனிகள் இணக்கத்தை தெரிவிக்காமை காரணமாக மீள் குடியேற்ற செயற்பாடுகள் தாமதடைந்தன. கிராமங்களை | 147 குடும்பங்கள் மேலும் அந்த ஆபத்துடைய பிரதேசங்களில் குடியிருப்பதுடன் 2014 ஆம் ஆண்டில் பழல் பதன பிரிவில் மண்சரிவு அனர்த்தத்திற்கு உட்பட்ட குடும்பங்கள் 17 ஆக இருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பிரிவில் மண்சரிவு அனர்த்தத்திற்கு உட்பட்ட குடும்பங்கள் 17 ஆக இருந்தது. | | விரிவுபடுத்தும் முறைமையின் கீழ் காணிகளை கையேற்பதற்கு உரிய முன்மொழிவொன்று தயாரிக்கப்பட்டு வருவதாக. | |
| 08. | 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் 2030 ஆண்டளவில் அடைந்து கொள்ளக்கூடிய நோக்கங்கள் தெளிவாக இனங்காணப்பட்டு அதன் பிரகாரம் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை இனங்கண்டு அவற்றை அடைந்து கொள்வதற்கு உரிய திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும்.. | அது தொடர்பாக அனைத்து உத்தியோகத்தர் களுக்கும் தெரியப்படுத்தி உரிய பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக. | நோக்கங்கள் திட்டமிடப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப் படவில்லை.. |
| 09. | நுவரெலியா மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலகங்களும் 2008 பெப்ரவரி 06 ஆந் திகதிய 05/2008 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் சேவை நாடுனர் பட்டயத்தை அறிமுகப்படுத்தி செயற்படுத்தியிருந்த போதும் மின்சாரம் துண்டிக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் அது தடையொன்றாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. விசேடமாக அதிக காற்று மழையுடன் காலநிலை காணப்படக்கூடிய | போதியளவு இயலளவுடன் கூடிய மின்பிறப்பாக்கி இயந்திரமொன்றை வழங்குவதற்காக மேலதிக நிதிஏற்பாடு கோரி தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். | கிடைக்கப்பெறும் நிதி ஏற்பாட்டின் அளவின் அடிப்படையில் மின் பிறப்பாக்கியொன்றை வழங்க நடவடிக்கை எடுப்பதாக. | 2022 பெப்ரவரி வரையில் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | சந்தர்ப்பத்தில் மின்துண்டிப்பினை உரிய நிலைமைக்கு கொண்டு வருவதற்கு அதிக காலமொன்று எடுக்கும் சந்தர்ப்பங்களில் அத்தியவசிய சேவைகளை நிறைவேற்றுவதற்கு வருகை தரும் மக்கள் மிகவும் சிரமங்களுக்கு உள்ளாவதற்கு நேர்ந்தது. | | | |

**இரத்தினபுரி மாவட்ட செயலகம்**

| | | | | |
|---|---|---|---|---|
| ----------------------------------------- | | | | |
| | 2018 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | | |
| | 2019 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | | |
| | 2020 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | | |
| **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள பிரதான குறைபாடுகள்**<br>------------------------ | | **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை**<br>--------------------- | **நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள்**<br>______________________ | **அது தொடர்பான தற்போதைய நிலைமை**<br>--------------------- |
| 01. | இரத்தினபுரி பிரதேச செயலக அதிகார எல்லையில் வெள்ள அனர்தத்தால் பாதிக்கப்பட்ட பொருட்களுக்கு இழப்பீடு வழங்கும் போது அதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் மற்றும் பிரதேச செயலாளரின் விதிந்துரைகளின் பேரில் குறித்த பயன் பெறுனர்கள் கோரிய உச்ச தொகையையும் விஞ்சி 49 சந்தர்ப்பங்களில் ரூபா 2,088,965 மேலதிக இழப்பீடாக செலுத்தப்பட்டிருதது . | நிதிப் பிரமாணம் 104, 109 மற்றும் 156 பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | தடுப்பு நடவடிக்கைகள் குறிப்படப்படவில்லை. | 2021 ஒக்டோபர் 25 இல் விசாரணை சபை நியமிக்கப் பட்டதுடன், 2022 பெப்ரவரி 03 ஆந் திகதி வரையில் இது தொடர்பான விசாரணை அறிக்கையொன்று வழங்கப்பட்டிருக் கவில்லை என்பதுடன் மேலதிக கொடுப்பனவுகளை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக் கவில்லை. |
| 02. | 2017 ஆண்டு இரத்தினபுரி பிரதேச செயலக அதிகார எல்லையில் வெள்ள அனர்தத்தால் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு இழப்பீடு வழங்கும் போது 2017 ஜுன் 25 திகதிய என்டீஆர்எஸ்சீ/01/04/01/2017 கொண்ட சுற்றுநிருப ஆலோசனைகளக்கு மாற்றமாக 9 பிரிவுகளில் 31 | நிதிப் பிரமாணம் 104, 109 மற்றும் 156 பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | பரிசீலனையொன்று மேற்கொள்ளப் படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2021 ஒக்டோபர் 25 இல் விசாரணை சபை நியமிக்கப் பட்டதுடன், 2022 பெப்ரவரி 03 ஆந் திகதி வரையில் இது தொடர்பான விசாரணை அறிக்கையொன்று வழங்கப்பட்டிருக் கவில்லை |

| | | | | |
|---|---|---|---|---|
| | வீடுகள் தொடர்பாக ரூபா 1,187,711 மேலதிகமாக செலுத்தப்பட்டிருதது | | | என்பதுடன் மேலதிக கொடுப்பனவுகளை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக் கவில்லை. |
| 03. | நீர்பாசன மற்றும் நீர்வள முகாமை அமைச்சினால் இபுல்பே பிரதேச செயலக அதிகார எல்லையில் தெஹிஅத்தவெல கால்வாய் பக்க மதில் நிர்மாணத்திற்காக ரூபா 784,000 ஒதுக்கீடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அக் கருத்திட்டத்தை நிறைவேற்றுவதற்காக பிரதேசத்தின் மரண உதவி மற்றும் நலனுதவி சங்கம் ஒன்றுடன் ரூபா 784,000 ஆன ஒப்பந்தம் ஒன்றிற்கு உடன்பட்டிருந்தது. 2018 யூலை 23 திகதி இக்கருத்திட்டத்தின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டு குறித்த சங்கத்திற்கு ரூபா 702,575 (10 சதவீத நிறுத்தி வைத்தற் பணம் கழிக்கப்பட்ட பின்னர்) செலுத்தப்பட்டிருந்த போதும், 2018 திசெம்பர் 11 திகதி பௌதீக ரீதியாக பரீட்சிக்கப்பட்ட போது நிர்மாணிக்கப் பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்திற்காக கொடுப்பனவு செய்கையில் நிதிப் பிரமாண ஏற்பாடுகளிற்கு அமைய மற்றும் அதற்கு முரண்படலிற்காக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படல வேண்டும். | பரிசீலனையொன்று மேற்கொள்ளப்படல் | 2020 திசெம்பர் 20 மற்றும் 31 ஆம் திகதிகளில் மூன்று அதிகாரிகள் தொடர்பாக ஆரம்ப விசாரணை அறிக்கை குற்றப் பத்திரிகையுன் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்தது டன் 2021 நவம்பர் 29 ஆந் திகதி உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் தொழில்நுட்ப அதிகாரிக்கு குற்றப்பத்திரிகையை வழங்கியுள்ளது. அதன் பிரகாரம் 2022 பெப்ரவரி 03 ஆந் திகதி வரையில் குறிப்பிட்ட அதிகாரிகள் தொடர்பான விசாரணை நடவடிக்கைகள் முடிக்கப்பட்டு தேவையான ஒழுக்காற்று |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. |
| 04. | கலகம லதுயாய பாதை அபிவிருத்திக்காக உள்நாட்டலுவல்கள அமைச்சினால் ரூபா 50,653,814 ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்தது. அவ் ஒப்பந்த நிர்மாணப் பணிகள் 37 நாட்களில் பூர்த்தி செய்யப்பட வேண்டும் எனுமடிப்படையில் 2016 திசெம்பர் 14 திகதி மேல் மாகாண பாதை அபிவிருத்தி அதிபார சபையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைசாத்திடப்பட்டிருந்தது. 2017 டிசம்பர் மாதமளவில் வேளையின் நிர்மானப் பணிகள் கைவிடப்பட்டிருந்தது. அரச பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.4.8 (அ) வழிகாட்டி பிரகாரம் மதிப்பிடப்பட்ட ஒப்பந்தத் தொகையின் 5 சதவீதத்திற்குக் குறையாத அதாவது ரூபா 2,532,691 ஆன செயலாற்றுகை காப்பொன்று பெறப்படாமை, அரச பெறுகை வழிகாட்டிக் கோவையின் 8.11.4 வழிகாட்டி பிரகாரம் புறக்கணிக்கப்பட்ட ஒப்பந்தக்காரர் பட்டியலில் ஒப்பந்தக்காரரின் பெயரை உட்படுத்த நடவடிக்கை எடுக்காமை, புரிந்துணர்வு ஒப்பந்தத்தை இரத்துச் செய்து வேறு நிறுவனம்/ஒப்பந்தக்காரர் மூலம் நடவடிக்கையை செய்து கொள்ள மாவட்டச் செயலக | குறித்த ஒப்பந்தக்காரைபுறக்கணிப்பு பட்டியலிற்குட்படுத்தி அத்தரப்பினருடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்காமை மற்றும் அரச பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.4.8(அ) வழிகாட்டி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | செயலாற்று காப்பொன்று பெறப்படாமையால் செயலாற்று காப்பின் பெறுமதியை விட அதிகமான சொத்துக்கள் போதியளவில் ஒப்பந்தக்காரரிடம் அறவிடப்படுகின்றன. இந்த நிறுவகம் முறைகேடு குறித்து ஆவண செய்ய நடவடிக்கை எடுக்கவில்லையாயினும் இச் சம்பவத்திற்குப் பின்னர் வேறு ஒப்பந்தத்திற்கு இந் நிறுவகத்துடன் உடன்படவில்லை. 2017 மே 23 ஆந் திகதிய பெறுகைச் சபையின் முடிவின் பிரகாரம் ஒப்பந்தக் காலம் நீடிக்கப்பட்டாலும் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் முன்னேற்றம் போதியளவு இல்லையென்பது அவதானிக்கப்பட்டது. | "100,000 கிலோ மீற்றர் கிராமப்புற வீதி அபிவிருத்திச் செயற்திட்டத்திற்கு" தேர்ந்தெடுக்கப்பட்ட இவ்வீதி 2022 பெப்ரவரி 03 அந் திகதி வரையில் முடிக்கப்பட்டிருக் கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அலுவலகம் மூலம் நடவடிக்கை எடுக்காமை. | | | |
| 05. | ஓபநாயக பிரதேச செயலகத்திற்குரியதாக ஜனாதிபதி செயலகத்தினால் இலங்கையில் வறுமையை ஒழிக்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட கிராம சக்தி மக்கள் செயற்பாட்டை நடைமுறைப்படுத்த செலவு விடய இலக்கம் 001-2-6-6-2509 கீழ் ரூபா 3,178,000 ஆன ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்தது. ஒவ்வொறு பிரிவுகளிலும் அமைக்கப்பட்டுள்ள மக்கள் சங்கங்களிற்கு பிரிவின் சீவனோபாய அபிவிருத்திக்கு, ஆளுமை விருத்திக்கு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்கு என ஒவ்வொரு பிரிவிற்கும் ரூபா 986,550 வீதம் ரூபா 2,959,650 தொகை 2018 திசெம்பர் 29 திகதி வழங்கப்பட்டிருந்ததுடன் 2019 திசெம்பர் 31 திகதியளவில் தெரிவு செய்யப்பட்ட 03 பிரிவிகளிலும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்கு செலவிட வேண்டிய 20 சதவீதத்தை மாத்திரம் பயன்படுத்தியிருந்ததுடன் மீதித் தொகை செயற்படாத கணக்குகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. | செயற்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி உரிய முறையில் பயன்படுத்தப்பட வேண்டும். | சீவனோபாய அபிவிருத்தி மற்றும் ஆளுமை விருத்திக்காக மீதமுள்ள தொகையை வழங்கப்பட்ட அறிவுறுத்தலின் பிரகாரம் பயன்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை பின்பற்றல். | செயலாளர் , சமுர்த்தி மனைப் பொருளாதார நுண்நிதி , சுய தொழில் மற்றும் வியாபார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் செயலாளரின் SMS/SDB/GS/Dist 01 YD ஆம் இலக்க 2021.02.03 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் கிராம சக்தி மக்கள் சங்கம் கம்பனிப் பதவியிலிருந்து விலகுவதற்கு அறிவுத்தப்பட்டிருந்த துடன் அதற்காகப் பின்பற்றப்பட வேண்டிய செயல் நடைமுறைகள் தற்போதைய தொற்று நோய் நிலைமையில் செயற்படுத்தப்படுவத ற்கு முடியாதிருந்தமை பிரதேசச் செயலாளரினால் தெரிவிக்கப்பட்டது. 2022 பெப்ரவரி 03 ஆந் திகதி வரையில் மிகுதித் தொகை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | செலவிடப்படாது செயற்படாத கணக்குகளில் காணப்பட்டது.. |
| 06. | 2014 ஆகஸ்ட் 18 திகதிய உள்ளக கணக்காய்வு ஆலோசனை இலக்கம் 22/2014 கொண்ட பிரதேச செயலாளரின் கடிதத்தில் கட்டிட நிர்மாணத்தின் கீழ் இலக்கம் 04 ஆலோசனை பிரகாரம் புதிய நிர்மாணத்திற்கு பதிலாக பிரதேசத்தில் பயன்படுத்த முடியுமான கட்டிடங்கள் உள்ளனவா என பரீட்சிக்க வேண்டி இருந்தது. எவ்வாறாயினும் இரத்தினபுரி பேறுகெட்டிய பாடசாலை வளவில் பயன்படுத்தக் கூடிய நிலையிலான வர்க்க அடி 1180 ஆன மூடப்பட்ட பாடசாலை கட்டிடமொன்று இருக்கையில், அக் கட்டிடத்திற்கு முன்பாக மக்கள் பங்களிப்பு ரூபா 961,261 மற்றும் அரச பங்களிப்பு ரூபா 2,000,000 உடன் 729 வர்க்க அடியிலான கள்லின்ன நில செவன காரியாலயம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக பெல்மடுள்ள பிரதேச செயலக அதிகாரப் பிரிவில் அரச கட்டிடம் இல்லாத | 2014 ஆகஸ்ட் 18 திகதிய உள்ளக கணக்காய்வு ஆலோசனை இலக்கம் 22/2014 கொண்ட பிரதேச செயலாளரின் கடிதத்தில் கட்டிட நிர்மாணத்தின் கீழ் இலக்கம் 04 ஆலோசனை பிரகாரம் செயற்பட வேண்டும். | பரிசோதனை சபையொன்றுக்கு அனுப்பப்பட்டள்ளது. | 2021 பெப்ரவரி வரையில் இறுதி பரிசோதனை அறிக்கை வழங்கப்பட்டிருக் கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | கிராம அலுவலர் பிரிவிற்கு இந்த நில செவன அலுவலகம் நிர்மாணிக்கப்படவிருந்த சந்தர்ப்பம் இல்லாமல் போனதில் அரச நிதி போதிய கவனம் செலுத்தப்படாமல் செலவிடப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. | | | |
| 07. | இபுல்பே பிரதேச செயலகத்திற்குரியதாக மேற்கொள்ளப்பட்ட ஹெமர் பரிசோதனை 131 இனுள் உடன்படிக்கை செய்த பெறுமதி ரூபா 3,394,059 ஆன 06 பாதைகளின் பரிசோதனைகள் தோல்வியடைந்து இருந்ததுடன், அப் பாதைகளிற்கு core cutter பரிசோதனை செய்து பெறுபேற்றை உறுதி செய்து கணக்காய்வு திகதியாகிய 2021 பெப்ரவரி 01 வரையும் முன் நடவடிக்கை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும் ஹெமர் பரிசோதனை தோல்வியடைந்த 06 கருத்திட்டங்களில் 05 இனது நிர்மாணப் பணிகள் ஒரே துணை ஒப்பந்தக்காரரினால் மேற்கொள்ளப்பட்டள்ளமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | அப் பாதைகளிற்கு core cutter பரிசோதனை மேற்கொண்டு பெறுபேற்றை உறுதி செய்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஹெமர் பரிசோதனை தோல்வியடைந்த 06 செயற்திட்டங் களுக்கான core cutter பரிசோதனை மேற்கொள்வதற்காக சப்ரகமுவ மாகாண சபையின் பிரதி பிரதான செயலாளர் (பொறியியலாளர்) அலுவலகத்திற்கு பணம் செலுத்தப்பட்டுள்ளது. | இந்த விசாரணைகளில் தோல்வியடைந்த செயற்திட்டங்கள் தொடர்பான பரிந்துரைகளைப் பெற்றுக்கொள்வதற்காக குழுவொன்றை நியமிப்பதற்கு மாவட்டச் செயலாளரினால் கடிதம் மூலம் அனுமதி கோரப்பட்டிருந்தது. |
| 08. | 08 பிரதேச செயலக பிரிவுகளில் 1999 ஆண்டு | குறித்த ஆதனத்தை முறையாக | திருத்த நடவடிக்கைகள் விரைவில் | மாவட்டச் செயலகம்.: பீ 8 - திருத்த |

| | | | | |
|---|---|---|---|---|
| | முதல் பயன்படுத்தப்படாத 31 அரச கட்டிடங்கள் மற்றும் மாவட்ட செயலகத்திற்குரிய 02 வருடங்களாக பயன்படுத்தப்படாத 04 அரச கட்டிடங்களை பயனுள்ள வேலைகளிற்கு பயன்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்படாததுடன் கணக்காய்வு திகதிய 2021 பெப்ரவரி 04 அளவிலும் கட்டிடம் பழுதடைந்த நிலையில் காணப்பட்டமை, புற்கள் முளைத்து அழிவடைந்து காணப்பட்டமை போன்ற விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | பயன்படுத்திக் கொள்ள முயற்சிக்க வேண்டியதுடன் அரச ஆதனங்களின் பாதுகாப்பு தொடர்பாக முறையான வேலைத் திட்டமொன்றை செயற்படுத்த வேண்டும்.. | மேற்கொள்ளப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. . | நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. பீ 14 - திருத்த நடவடிக்கைகள் முடிவடைந் துள்ளன. சீ 31 - திருத்தங்களுக்காக நடவடிக்கைகள் முடிவடைந் துள்ளன. சீ 27 - இடித்து அகற்றப்படு வதற்காக மாவட்டச் செயலாளரின் பரிந்துரைகளைப் பெறுவதற்காக அனுப்பபட்டுள்ளது. பி.செ. பிரிவுகளுக்கான தொடர்ந்தும் பயன்படுத்தப்படாத 31 கட்டிடங்கள் காணப்பட்டமை குறிப்பிடப் பட்டுள்ளது. |
| **கேகாலை மாவட்ட செயலகம்**<br>**---------------------------------------** | | | | |
| | 2018 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | | |
| | 2019 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | | |
| | 2020 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | | |
| **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில்** | | **கணக்காய்வாளர் தலைமை** | **நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள்** | **அது தொடர்பான தற்போதைய நிலைமை** |

| | உள்ளடக்கப்பட்டுள்ள பிரதான குறைபாடுகள் ------------------------ | அதிபதியின் பரிந்துரை ---------------------- | ______________________ | ---------------------- |
|---|---|---|---|---|
| 01. | 2011 இன் 46 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 2010 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் 34 பிரிவின் பிரகாரம் வயல் காணிகள், விவசாய பயிர் செய்கை தவிர்ந்த ஏனைய நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தக் கூடாத போதும், வயல் காணி ஒன்றை நிறைத்து மாவனல்லை பிரதேச செயலகப் பிரிவில் மடுள்போவ விளையாட்டு மைதானம் நிர்மாணிக்கப்பட்டுக் கொணடிருக்கின்றது. | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | எதிர் காலத்தில் விவசாயக் காணிகளைப் பயிர்ச்செய்கை தவிர்ந்த ஏனைய அபிவிருத்தி நடவடிக்கை களுக்காகப் பயன்படுத்தும்போது முதலில் கமநல சேவைகள் ஆணையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பிரதேசச் செயலாளருக்கு பணிப்புரை விடுவிக்கப்பட்டுள்ளது. | இக் காணியைப் பாரிய காணியாகக் கருதி உரிய அனுமதியைப் பெற்றுக்கொள்ளுமாறு அதிபரினால் உரிய விண்ணப்பங்கள் கமநல சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும் இற்றை வரை அனுமதி கிடைக்கப் பெறவில்லை என பிரதேசச் செயலாளர் தெரிவித்துள்ளார். |
| 02. | கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சினால் கேகாலை மாவட்ட பிரதேச செயலக மட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட சிறு அளவிலான 15 புடவை மத்திய நிலையங்களில் 04மத்திய நிலையங்கள் எதிர்பார்த்த மட்டத்தில் செயற்படாததுடன் 11 மத்திய நிலையங்கள் மூடப்பட்டிருந்தன. | சுற்றறிக்கை ஆலோசனைகளை கடைபிடித்தல், கைத்தொழிற்சாலை களிற்கு வழங்கப்பட்டுள்ள நிதிசார் மற்றும் பௌதீக வளங்கள் தொடர்பாக விசாரித்தல் மற்றும் பின் தொடர் நடவடிக்கைகளை எடுக்க வேண்டியமை. | இந்த புடவை நிலையங்களின் நடவடிக்கைகள் தொடர்பாக கவனம் எடுக்குமாறு பிரதேசச் செயலாளருக்கு பணிப்புரை விடுத்துள்ளேன். | 2018 ஆம் வருடத்தில் செயற்படுத்தப்படாத மத்திய நிலையங்கள் தற்போது செயற்படுத்தப்படுவதுடன் றம்புக்கனை மற்றும் வரகாப்பொல இயங்கி வந்த (2018 இல்) இரண்டு மத்திய நிலையங்கள் தற்போது செயற்படுத்தப்படுவதில்லை.. |

| | | | | |
|---|---|---|---|---|
| 03. | கலிகமுவ அரன்தர பிரதேசத்தில் வியாபார அறையுடன் கூடிய உத்தியானம் ஒன்றை நிர்மணிக்க (கிராம சக்தி விழிப்பு நகரம் - 2018) ஜனாதிபதி அலுவலகத்தினால் ரூபா 25 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. முதலாம் கட்டத்தின் கீழ் தொரகஹபிடிய உட்பிரவேச பாதையின் கால்வாய் தொகுதி பாதை கொன்கீட் இடல் மற்றும் பக்க மதில் நிர்மாணத்திற்காக ரூபா 1,911,146 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்த போதும் நிர்மாணிக்கப்பட்ட பக்க மதில் உடைந்து விழுந்திருந்தது. மேலும் உத்தேச காணியை சுவீகரிக்க நடவடிக்கை எடுத்திருக்காததுடன், இக் கருத்திட்டத்தின் நடவடிக்கைகள் நிருத்தப்பட்டிருந்ததால் இது வரை செலவிடப்பட்ட ரூபா 2,068,689 ஆன தொகை விளைவற்ற செலவொன்றாக காணப்பட்டது. | கருத்திட்டமொன்றை தெரிவு செய்யும் போது மற்றும் செயற்படுத்தும் போது அது தொடர்பாக சரியான ஆய்வொன்றை மேற்கொள்ளல் மற்றும் வினைத்திறனாக செயற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | எதிர்காலத்தில் கருத்திட்ட முன்மொழிவு தயாரிக்கப்படும் போது கவனம் எடுக்குமாறு பணிப்பாளர் திட்டமிடலுக்கு பணிப்புரை விடுவிக்கப்பட்டுள்ளது.. | பலத்த மழை காரணமாக ஏற்பட்ட மண்சரிவு காரணமாக சேதமடைந்த பகுதிகள் கலிகமுவ பிரதேச சபையினால் அகற்றப்பட்டுள்ளது. சேதத்திற்குள்ளான மின்கம்பத்தை மீண்டும் திருத்துவதற்கு சப்ரகமுவ மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு விலை மனுக்கள் கோரப்பட்டுள்ளன. |
| 04. | கேகாலை, வரகாப்பொல பிரதேசச் செயலகங்கள் மற்றும் கேகாலை மாவட்டச் செயலகத்தின் 2009 | தாபன விதிக் கோவையில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் நடவடிக்கை | எதிர்காலத்தில் இவ்வாறான மோசடிகள் இடம் பெறாத வகையில் ஓய்வூதியத் | குறிப்பிட்ட தரப்பினருக்கு எதிராக முறையான ஒழுக்காற்று |

| | | | | |
|---|---|---|---|---|
| | தொடக்கம் 2013 ஆன காலப்பகுதிக்குள் இடம் பெற்ற ஓய்வூதிய மோசடிகளில் ரூபா 16,765,760 ஆன தொகையொன்று அறவிடப்பட்டிருக்கவில்லை. | எடுக்கப்பட்டு மோசடிக்கான தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | திணைக்களத்தினால் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | நடவடிக்கை ஆரம்பிக்கப் பட்டுள்ளது. இம் மோசடியில் ஈடுபட்ட இரண்டு அதிகாரிகளின் ஓய்வூதியம் இடை நிறுத்தப்பட்டுள்ள துடன் 2021 நவம்பர் வரையில் இவ்வாறு இடை நிறுத்தப்பட்ட தொகை ரூபா 2,286,490 ஆகும்.<br><br>நிதிப் பிரமாணம் 104(3) மற்றும் 104(4) விசாரணைகள் முடிக்கப்பட்டு அறிக்கை உள்நாட்டலுவல்கள் செயலாளர், அரச நிதித் திணைக்களத்திற்கும் மற்றும் ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்திற்கும் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது. குற்றப் புலளாய்வுத் திணைக்களத்தினால் 14414/4/14 ஆம் இலக்கத்தின் கீழ் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |
| 05. | இலங்கையில் வறுமையை, சமூக கட்டப்பாட்டு முறைமையொன்றின் பயன்பாட்டுடாக ஒழிக்கும் நோக்கில் ஜனாதிபதி செயல நிலைபேறான அபிவிருத்தி அலகினூடாக அறிமுகப்படுத்தியிருந்த கிராம சக்தி மக்கள் செயற்பாட்டின் கீழ் பொது சங்கங்களை நிறுவ 2018 மற்றும் 2019 ஆண்டுகளின் கிடைத்த ஒதுக்கீட்டின் மீது முதலாம் கட்டத்தின் கீழ் 11 பிரதேச செயல பிரிவுகளில் 43 பொது சங்கங்களிற்கு ரூபா 69,575,200 உம் 2019 ஆண்டில் இரண்டாம் கட்டத்தின் கீழ் 11 பிரதேச செயல பிரிவுகளில் 96 பொது சங்கங்களிற்கு ரூபா 4,560,000 உம் வழங்கப்பட்டிருந்தன.<br>எனினும் மீளாய்வாண்டு இறுதியில் முதற்கட்டத்தில் வழங்கிய தொகையில் 71 சதவீதமாக 34 சங்கங்கள் ரூபா 49,812,357 உம், இரண்டாம் கட்டத்தில் வழங்கிய தொகையில் 96 சதவீதமாக 96 சங்கங்கள் ரூபா 4,358,021 உமாக குறித்த செயற்பாட்டிற்காக ஈடுபடுத்தப்படாது அச் சங்கங்களின் வங்கிக் | ஒதுக்கீடு உரிய நோக்கத்திலான செயற்பாடுகளிற்கு ஈடுபடுத்தப்பட வேண்டியமை. | குறிப்பிட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | இது தொடர்பாக சௌபாக்யா பணியகத்திற்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு, இன்னும் இறுதி முடிவொன்று எடுக்கப்படவில்லை யென்பது குறிப்பிடப் பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | கணக்குளில் விளைவற்றதாக தேக்கி வைத்திருக்கப்பட்டன. | | | |
| 06. | இஸ்மாட் இலங்கை வேலைத் திட்டத்தின் கீழ் கேகாலை மாவட்ட செயலகத்திற்கு 2019 இல் கிடைத்த ஒதுக்கீட்டின் மீது கழிகமுவ, ருவன்வெள்ள, தெஹியோவிட மற்றும் றம்புக்கன பிரதேச செயலகங்களிற்கு இஸ்மாட் இலங்கை மத்திய நிலையங்களை அமைக்க ரூபா 1,744,015 உம் அறிமுகம் மற்றும் பயிற்சி வேலைத் திட்டங்களிற்கு ரூபா 241,278 ஆக ரூபா 1,985,293 ஆனது 2020 ஆம் ஆண்டிறுதியில் செலவிடப்பட்டிருந்தன. இதற்கு மேலதிகமாக பிரதேச செயலகங்களில் உரிய வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்த மென்பொருடன் 22 கனணிகள் வழங்கப்பட்டிருந்தன. எனினும் கணக்காய்வு சந்தர்பமான 2021 மார்ச் வரையிலும் இஸ்மாட் இலங்கை வேலைத்திட்டத்தின் எதிர்பார்த்த நோக்கத்தை | உரிய கருத்திட்டத்தை எதிர்பார்த்த நோக்கத்திலான செயற்பாடுகளிற்கு ஈடுபடுத்தப்பட வேண்டியமை. | மனித வளம் மற்றும் தொழில்வாய்ப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் அறிவுறுத்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது | கலிகமுவ NAITA நிறுவனத்தில் ஸ்தாபிக்கப்பட்ட மத்திய நிலையம் தேசிய தொழிற்பயிற்சி மற்றும் பயிற்சி நிறுவனத்திடம் கையளிப்பதற்கு மனிதவள மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இஸ்மாட் இலங்கை வேலைத்திட்டத்தின் கீழ் பிரதேசச் செயலகத்திற்கு வழங்கப்பட்ட கணனிகளில் ஒரு கணனி வீதம் மனிதவள அதிகாரிகளுக்கு கையளிக்குமாறு 2021 யூலை 02 ஆந் திகதிய கடிதத்தில் மனிதவள மற்றும் வேலை வாய்ப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் குறிப்பிடப்பட்டிருந்த |

| | | | | |
|---|---|---|---|---|
| | அடைந்து கொள்வதற்கான செயற்பாட்டு நிலையில் இருக்கவில்லை. | | | துடன், அதன் பிரகாரம் பிரதேசச் செயலகங்களின் மனிதவள அதிகாரிகளுக்கு கணனிகள் கையளிக்கப் பட்டுள்ளன. |
| 07. | மண்சரிவு மற்றும் மண்சரிவு அபாய நிலைமை காரணமாக பாதிக்கப்பட்ட குடும்பங்களை மீள் குடியேற்றும் கருத்திட்டத்தின் கீழ் 2016 ஆண்டு ருவன்வெல்ல பிரதேச செயலக அதிகார பிரதேசத்தில் 78 குடும்பங்கள் இனங்காணப்பட்டிருந்தன. அவற்றில் 28 குடும்பங்கள் பல காரணங்களினால் நலன்கள் வழங்க உள்ளடக்கப் பட்டிருக்காததுடன் எஞ்சிய 50 குடும்பங்களில் 15 குடும்பங்கள் தங்கள் வீடுகளின் நிர்மாணங்களை மீளாய்வாண்டு இறுதி வரை பூர்த்தி செய்யாததால் செலுத்தாது காணப்படும் வீட்டு உதவித் தொகை ரூபா 4,850,000 ஆகும் | காணப்படுகின்ற பிரச்சினையை தீர்த்து வீட்டு உதவி செலுத்த நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | மீள் குடியேற்றத் திட்டத்தின் கீழ் மக்கள் தொடர்ச்சியாக விழிப்புணர்வூட்டப்பட்டது டன் அவ்வப் போது அலுவலகத்திற்கு அழைக்கப்பட்டு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தனர். களப் பரிசோதனைகள் மூலம் தெரியப்படுத்துதல், எழுத்து மூலமான அறிவுறுத்தல் வழங்குதல், தவணை முறையில் பணத்தை விடுவித்தல் போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக ருவான்வெல்ல பிரதேசச் செயலாளர் தெரிவித்துள்ளார். | வசிக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை 05 ஆகும். வீடுகளை நிர்மாணிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை 06 ஆகும். வீடமைப்பு நிர்மாணப் பணிகளில் எவ்வித முன்னேற்றத்தையும் அறிக்கையிடாத குடும்பங்களின் எண்ணிக்கை 04 ஆகும். |
| 08. | இரண்டு மாடிகளுடன் கூடிய துத்திரிபிடிய பேருந்து தரிப்பிடம் ரூபா 23,570,905 | கருத்திட்டத்தை திட்டமிடுகையில் செலவிடும் | எதிர்காலத்தில் இவ்வாறான பிரச்சினைகள் | சப்ரகமுவ மாகாண சபையின் காணி ஆணையாளரினால் |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆன மதிப்பீட்டிற்கு நிர்மாணிக்க 2014 பெப்ரவரி 19 திகதி அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. இக் கருத்திட்டத்திற்காக ரூபா 3,988,900 செலவிடப்பட்டு நிர்மாணப் பணிகள் இடை நடுவே நிருத்தப்பட்டிருந்தது. இக் காணி அரசிற்கு சொந்தமான காணி ஒன்றாகையால் அறநாயக பிரதேச சபைக்கு ஒப்படைக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள 2018 மற்றும் 2019 ஆண்டுகளில் மாகாண காணி ஆணையாளரிற்கு அறிவித்து அனுப்பப்பட்ட போதும் மீளாய்வாண்டு இறுதி வரை இச்செயற்பாடு நிறைவேறி இருக்கவில்லை. | தொகையிற்கு பிரதிபலன் கிடைக்கும் வகையில் திட்டமிட வேண்டியமை. | ஏற்படாமல் இருப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு பணிப்பாளர் திட்டமிடல் அறிவுறுத்தப் பட்டுள்ளனர். | ஒதுக்கப்பட்டிருந்த காணியில் மேற்படி செயற்திட்டம் நடைமுறைப்படுத்த ப்பட்டுள்ள போதிலும் அதன் மிகுதி பணிகளை நிறைவு செய்வதற்காக ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருக்கவ ில்லை. இந் நிலைமையில் அரநாயக்க பிரதேசச் சபைக்கு அபிவிருத்திக்காக காணி வழங்குதல் தொடர்பான சிக்கல் காரணமாக பஸ் நிலையத்தின் பணிகள் நிறுத்தப்பட்டன. எவ்வாறாயினும் இந்த அரச சொத்துக்களை செயற்திறனாகப் பயன்படுத்துவதற்கா க அரநாயக்க பிரதேச சபையிடம் தற்காலிகமாக கையளிக்கப்பட்டுள் ளதுடன் எதிர் காலத்தில் இக் கட்டிடம் செயற்திறனுடன் பயன்படுத்தப்படும். |
| 09. | தேசிய கொள்கைகள், பொருளாதார நடவடிக்கைகள், மீள் | புதிய கருத்திட்டத்தை திட்டமிடுகையில் | தற்போது கருத்திட்டம் தொடர்பான முடிவுகள் கிராமக் குழுக்களின் முன்மொழிவுகளின் | இது தொடர்பாக உரிய அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டுள்ள துடன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | குடியேற்றல் மற்றும் புனர்நிர்மாணம் வடமாகாண அபிவிருத்தி இளைஞர் விவகார அமைச்சின் கிராம உட்கட்டமைப்பு அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் மாவட்ட செயலகத்திற்கு கிதுள்கல நகர அபிவிருத்தி கருத்திட்டத்தை செயற்படுத்த 2019 ஆம் ஆண்டு ரூபா 35,615,876 ஆன ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்தது. அதன் கீழ் 0.8 கிலோ மீட்டர் நீளமான கிதுள்கல நகர மத்திய பாதை இரு புறமும் விரிவாக்கி பக்க கால்வாய் நிர்மாணிக்க ரூபா 25,698,900 தொகைக்கு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்தது. இக் வேலையை மேற்கொள்கையில் வெளித்தரப்பு ஒருவரினால் தொடுக்கப்பட்ட தாக்கம் காரணமாக 2019 நவம்பர் 29 திகதி முதல் நிர்மாணப்பணிகள் இடை நிறுத்தப்பட்டிருந்தன. | செலவிடும் தொகையிற்கு பிரதிபலன் கிடைக்கும் வகையில் திட்டமிட வேண்டியமை.. | பேரில் எடுக்கப்படுவதால் இவ்வாறான பிரச்சினைகள் எழுவதில்லை. | எதிர்காலத்தில் கிதுல்கல நகர அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் ஏற்பாடுகள் வழங்கப்பட்டால் இக் கருத்திட்டத்தைச் செயற்படுத்த முடியுமென பணிப்பாளர் (திட்டமிடல்) தெரிவித்துள்ளார். |
| **பதுளை மாவட்ட செயலகம்**<br>**--------------------------------------** | | | | |
| | 2018 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம | | |
| | 2019 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம | | |
| | 2020 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம | | |

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள பிரதான குறைபாடுகள் ------------------------ | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை --------------------- | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | அது தொடர்பான தற்போதைய நிலைமை --------------------- |
|---|---|---|---|---|
| 01. | ஹல்தும்முல்லை பிரதேச செயலகத்தினால் ரூபா 494,890 தொகை செலவு செய்து உஸ்ஸல்ல வாரச் சந்தையை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் 2018 ஒக்டோபர் 19 ஆந் திகதி வரை அச்செயற்பாட்டிலிருந்து எவ்வித பயனொன்றும் எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | நலனாளிகளின் தேவைப்பாடு மற்றும் நோக்கங்கள் நிறைவேற்றப்படும் வகையில் செயற்திட்டங்கள் திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும். | பிரதேசத்தில் உற்பத்திப் பொருட்களைக் கொள்வனவு செய்யும் மத்திய நிலையமாக இப் பகுதியைப் பராமரிப்பதற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் மூலம் மேற்கொண்ட நடவடிக்கைகள் ஒழுங்கமைக்கப்படும்.. | 2022 பெப்ரவரி வரையில் கட்டிடம் விளைவற்றுக் காணப்பட்டது. |
| 02. | ஊவா பரணகம பிரதேச செயலகத்திற்குரிய கெப் வண்டியொன்று விபத்திற்கு உட்பட்டு 08 ஆண்டுகள் கடந்ததன் பின்னர் அதற்குரிய நட்டம் ரூபா 500,000 என 2019 மே 15 ஆந் திகதி பதுளை மாவட்ட விலை மதிப்பீட்டளரால் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் அந்நட்டத்தை பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஆரம்ப பரிசோதனை யொன்று மேற்கொள்ளப்பட்டு நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | 2022 பெப்ரவரி வரையில் ஆரம்ப பரிசோதனை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| 03. | ஓய்வூதியம் பெறுவோருக்கு ஓய்வூதியம் கொடுப்பனவு | சரியாக ஓய்வூதியம் கணிப்பிட | இவ்வாறான நிலைமையொன்றைத | மேலதிக கொடுப்பனவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | செய்யப்படும் போது சம்பளத்தை கணிப்பிடுவதற்குரியதாக மாற்றங்களுக்கு உட்படக்கூடிய சட்டங்கள், விதிகள், சுற்றறிக்கைகள், ஆலோசனை கடிதங்கள் தொடர்பாக கவனத்துடன் செயற்படாமை மற்றும் கணக்கீட்டு தவறுகள் காரணமாக 06 பிரதேச செயலகங்களுக்குரிய 114 ஓய்வூதியம் பெறுபவோருக்கு ரூபா 12,150,749 ஆன ஓய்வூதியம் கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | வேண்டியதுடன் கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்ட தொகையை அறவிட்டுக் கொள்ளல் வேண்டும். | டுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | அறவிடப்பட்டு வருகின்றது. |
| 04. | பொருளாதார அலுவல்கள், அமைச்சின் நிதிஏற்பாடுகளின் கீழ் லுனுகல பிரதேச செயலகத்தினால் 2017 ஒக்தோபர் 12 ஆந் திகதி தனியார் ஒப்பந்த நிறுவனமொன்றுடன் ரூபா 2,661,859 ஆன உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. 2017 திசெம்பர் 12 ஆந் திகதி செயற்திட்டத்தின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் ஒப்பந்தக்காரரின் வேண்டுகோளின் பேரில் 2019 திசெம்பர் 12 ஆந் | நிர்மாண செயற்திட்டங்கள் அவ்வப்போது கண்காணிக்கப்பட வேண்டியதுடன் பிணை பொறுப்பின் செல்லுபடிக் காலம் நீடிக்கப்பட வேண்டும் | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் சமர்ப்பிக்கப் படவில்லை. | 2022 பெப்ரவரி வகையில் செயற்திட்டம் முடிக்கப்பட்டிருக் கவில்லை. அரசிற்கு அறவிட வேண்டிய ரூபா 133,093 ஆனது அறவிடப்பட்டிருக் கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | திகதி வரை 05 சந்தர்ப்பங்களில் நிர்மாணத்தின் உடன்படிக்கை காலம் நீடிக்கப்பட்டிந்தது. மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 906,558 தொகை ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்த போதும் ஒப்பந்தக்காரர் செயற்திட்டத்தின் வேலைகளை கைவிட்டிருந்தார். ஒப்பந்தக்காரருக்குரிய செயலாற்றல் பிணையின் செல்லுபடிக்காலம் நீடிக்கப் படாமையால் ஒப்பந்தக்காரரால் பிணைப்பொறுப்பினை விடுவித்துக் கொண்டிருந்ததுடன் அரசிற்கு அறவிடக்கூடியதாக இருந்த ரூபா 133,093 தொகையை அறவிடுவதற்கு முடியாமல் இருந்தது. | | | |
| 05. | பதுளை மாவட்டத்தின் 15 பிரதேச செயலகங்களை மேவுகை செய்யும் வகையில் தெரிவு செய்யப்பட்ட 48 கிராம சக்தி மக்கள் சங்கங்களுக்காக வெவ்வேறு செயற்திட்டளுக்கு ஒரு சங்கத்திற்கு ரூபா 1,000,000 வீதம் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் ரூபா | செயற்திட்டம் தொடர்பாக கண்காணிப்பொன்று மற்றும் பின் தொடரல் மேற்கொள்ளப்பட்டு பணம் வழங்கப்பட்டுள்ளன. பனிகளுக்காக பயன்படுத்தப்படுவது | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் சமர்ப்பிக்கப் படவில்லை.. | 20222022 பெப்ரவரி வரையில் ரூபா 38,151,040 தொகை விளைவற்றதாக வங்கிக் கணக்குகளில் வைக்கப் பட்டிருந்தது.. |

| | | | | |
|---|---|---|---|---|
| | 48,000,000 தொகை வழங்கப்பட்டிருந்தது. எனினும் 2021 பெப்ரவரி 25 ஆந் திகதி வரையிலும் அதில் ரூபா 38,151,040 தொகை செயற்திட்டத்திற்காக பயன்படுத்தப்படாமல் வங்கிக் கணக்குகளில் விளைவற்ற வகையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | உறுதி செய்யப்படல் வேண்டும்.. | | |
| 06. | பொருளாதார அலுவல்கள், அமைச்சின் 2014 ஆம் ஆண்டில் மாகாண எழுச்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உஸ்ஸல்ல சிகிச்சை நிலையத்தை நிர்மாணிப்பதற்காக ஹல்துமுல்ல பிரதேச செயலகத்தினால் ஒப்பந்தக்காரருடன் 2014 ஆகஸ்ட் 20 ஆந் திகதி ரூபா 1,999,998 ஆன உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை நிர்மாணத்திற்காக ரூபா 1,773,300 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், இக்கட்டிடம் சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. 2021 பெப்ரவரி 23 கணக்காய்வு திகதி வரையிலும் 7 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் இக்கட்டிடம் சிகிச்சை செயற்பாடுகளுக்காக எடுக்கப்படா திருந்ததுடன் கட்டிடத்தின் உட்கூரை | வேலை பூர்த்தி செய்யப்பட்டு பயன்பாட்டிற்கு எடுக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் சமர்ப்பிக்கப் படவில்லை. | 2022 பெப்ரவரி வரையில் விளைவற்றுக் காணப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அமைக்கப்பட்டிருக்கவில்லை. அத்தோடு நீர், மின்சாரம் மற்றும் ஆரோக்கிய நலன் வசதிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| 07. | ரிதீமாலியத்த பிரதேச செயலகத்திற்குரிய வாகனமொன்று 2017 யூலை 29 ஆந் திகதி விபத்திற்கு உட்பட்டதால் ரூபா 6,349,333 ஆன நட்டமொன்று ஏற்பட்டிருந்ததுடன் அதற்காக காப்புறுதி கம்பனியால் 2020 யூன் 25 திகதி செலுத்தப்பட்ட ரூபா 2,500,000 தொகை பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. 2020 பெப்ரவரி 10 ஆந் திகதி வரையிலும் வாகனம் திருத்தம் செய்யப்படாதிருந்ததுடன் விபத்து இடம்பெற்று 3 ½ ஆண்டுகளாக விபத்திற்குட்பட்ட வண்டியை மாவட்ட செயலகத்தின் வாகன நிறுத்துமிடத்தில் விளைவற்ற வகையில் நிறுத்தி வைக்கப் பட்டிருந்தது. நி.பி 104(4) இன் பிரகாரம் விபத்து தொடர்பாக பரிசோதனை குழுவின் அறிக்கையின் பிரகாரம் காப்புறுதி கம்பனியால் செலுத்தப்படாத அளவினை உரிய தரப்பினரிடமிருந்து அறவிடப் பட்டிருக்கவில்லை. | நட்டங்கள் சேதங்கள் தொடர்பாக பரிசோதனை குழுவின் அறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | 3 ½ வருடங்கள் கடந்து விட்ட போதிலும் 2022 பெப்ரவரி வரையில் பரிசோதனை நடவடிக்கைகள் முடிக்கப்படாததுடன் நட்டம் அறவிடப்பட்டிருக் கவில்லை.. |

**மொனராகலை மாவட்ட செயலகம்**

| | | | | |
|---|---|---|---|---|
| -------------------------------------------- | | | | |
| | 2018 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | | |
| | 2019 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | | |
| | 2020 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | | |
| | | | | |
| **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள பிரதான குறைபாடுகள்** | | **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை** | **நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள்** | **அது தொடர்பான தற்போதைய நிலைமை** |
| -------------------------------------------- | | --------------------------- | ----------------------------- | ------------------------------- |
| 01. | மொனராகலை மாவட்டத்தில் காணப்பட்ட என்ட்டபிறைஸ் ஸ்ரீ லங்கா கண்காட்சிக்காக கண்காட்சி வளவில் 03 நாட்களுக்கு மின்சாரத்தை வழங்குவதற்காக ரூபா 33,582,535 மதிப்பீடு ஒன்றிற்காக மின்சார சபைக்கு செலுத்தப்பட்டிருந்தது. அந்த மதிப்பீட்டில் தொழிலாளர் கட்டணமாக ரூபா 13,066,537 தொகையும், போக்குவரத்து கட்டணமாக ரூபா 1,929,102 தொகையும், நிச்சயமற்ற செலவினமாக ரூபா 3,115,152 தொகையும் மற்றும் மின்பிறப்பாக்கி இயந்திரத்தை வாடகைக்கு பெற்றுக் கொள்ளல் மற்றும் எரிபொருள் கட்டணமாக ரூபா 2,770,396 தொகையும் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 22,724,451 அசாதாரண செலவின மதிப்பீடொன்று தொடர்பாக விசாரணை செய்து மதிப்பீட்டினை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் செலுத்தப்பட்டமையினால் அரசாங்கத்தின் நிதி | நிதிப்பிரமாணம் 137 மற்றும் 139 இன் பிரகாரம் செலவினங்களை அங்கீகரிக்கும் போதும், உறுதிப்படுத்தும் போதும் அரசாங்கத்திற்கு ஆகக்குறைந்த செலவினங்களில் செய்யக்கூடிய வகையில் முறையாக விசாரணை செய்து செலுத்துதல் வேண்டும். | இலங்கை மின்சார சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீட்டின் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. இலங்கை மின்சார சபையிலிருந்து விரிவான அறிக்கையொன்று வழங்கப்படாததாக அறிவிக்கப்பட்டிருந்தது. | மின்சார பட்டியல் தயாரித்த முறை தொடர்பாக முழுமையான விபரங்கள் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. அசாதாரண செலவினம் தொடர்பாக விசாரணை செய்து செலுத்தப்பட்ட மதிப்பீட்டு தொகையில் ஒரு பகுதியையேனும் மின்சார சபையிலிருந்து அறவிடுவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | முறையற்ற வகையில் செலவிடப்பட்டிருந்தது. | | | |
| | | | | |
| 02. | 2018 ஆம் ஆண்டில் றுகுணு கதிர்காமம் மற்றும் கொட்டபோவ குடா கதிர்காமம் தேவாலயங்களில் வருடாந்த எசல விழாவின் மேலதிக மின்சார வசதிகளை வழங்குவதற்காக பாதுகாப்பு மின்விளக்குகளை ஈடுபடுத்தியதற்காக ரூபா 14,664,834 செலுத்தப்பட்டிருந்த போதும் பயன்படுத்தப்பட்ட மின்விளக்குகளின் எண்ணிக்கை, பொருத்தும் கட்டணம், அதற்காக ஈடுபடுத்தப்பட்ட ஊழியர்கள் தொடர்பான முறையான தகவல்கள் இன்றி பட்டியலுக்காக பணம் செலுத்தப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 137 மற்றும் 139 இன் பிரகாரம் செலவினங்களை அங்கீகரிக்கும் போதும், உறுதிப்படுத்தும் போதும் அரசாங்கத்திற்கு ஆகக்குறைந்த செலவினங்களில் செய்யக்கூடிய வகையில் முறையாக விசாரணை செய்து செலுத்துதல் வேண்டும். | இலங்கை மின்சார சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீட்டின் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. இலங்கை மின்சார சபையிலிருந்து விரிவான அறிக்கையொன்று வழங்கப்படாததாக அறிவிக்கப்பட்டிருந்தது. | மின்சார பட்டியல் தயாரித்த முறை தொடர்பாக முழுமையான விபரங்கள் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. அசாதாரண செலவினம் தொடர்பாக விசாரணை செய்து செலுத்தப்பட்ட மதிப்பீட்டு தொகையில் ஒரு பகுதியையேனும் மின்சார சபையிலிருந்து அறவிடுவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| | | | | |
| 03. | “கிராம சக்தி மக்கள் முயற்சி” நிகழ்ச்சித் திட்டத்தின் பணிகளுக்காக பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்காக மாதாந்தம் ரூபா 3,000 உச்ச அளவின் அடிப்படையில் பிரயாணச் செலவினப் படிகள் செலுத்த முடியுமாக இருந்த போதிலும் அதற்கு இணங்காமல், கதிர்காமம் மற்றும் வெல்லவாய மற்றும் தனமல்வில என்ற பிரதேச செயலகங்களால் 10 உத்தியோகத்தர்களுக்கு | சுற்றறிக்கையின் ஆலோசனைகளுக்கு இணங்காத வகையில் அரசாங்க உத்தியோகத்தர் களுக்கு செலுத்தும் போது தாபன பணிப்பாளரின் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். | மாவட்ட திட்டமிடல் பணிப்பாளரின் 2018.09.04 ஆந் திகதிய MO/DS/DPS/D/02/04 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் செலுத்தப்பட்டுள்ளது. | 2022 பெப்ரவரி வரையிலும் மீள அறவிடப் படாதிருந்ததுடன் அந்த கொடுப்பனவு களுக்காக முறையான அங்கீகாரம் பெறப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | கூட்டுமொத்தமாக ரூபா 189,000 மாதாந்த படி முறையற்ற அங்கீகாரமின்றி செலுத்தப்பட்டிருந்தது. | | | |
| | | | | |
| 04. | “எனட்டபிறைஸ் ஸ்ரீ லங்கா” கண்காட்சிக்காக ரூபா 68.25 மில்லியன் செலவிடப்பட்டிருந்த துடன் அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன. | | | |
| (i) | கண்காட்சி நடைபெற்ற நிலத்தை தயாரிப்பதற்காக ஒப்பந்தகாரரால் ஈடுபடுத்தப்பட்ட வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களுக்காக ரூபா 14.34 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் இயந்திரம் பொறிகள் ஓடிய மணித்தியாலங்களின் எண்ணிக்கை, வாகனங்கள் ஓடிய நாட்களின் எண்ணிக்கை என்பவற்றை உறுதிப்படுத்துவதற்காக மேற்பார்வை உத்தியோகத்தர்களின் உறுதிப்படுத்தல்களுடன் போக்குவரத்து வேலை தொடர்பான விபரங்கள் காணப்படாமையின் அடிப்படையில் அதற்காக உள்ளபடியான செலவினங்கள் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | செலுத்துவதற்கு முன்னர் கொடுப்பனவுகளை உறுதிப்படுத்து வதற்கு மேற்பார்வை உத்தியோகத்தர் களின் பரிந்துரை மற்றும் அங்கீகாரத்தை பெற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எதிர்காலத்தின் போது ஒப்பந்தகாரருக்கு கொடுப்பனவுகளைச் செய்யும் போது வேலைப்பத்திரங்கள் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டியமைக்கு ஆலோசனை வழங்கப்படும். | செலுத்துவதற்குரிய முறையான வேலைப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக் க வில்லை. |
| | | | | |
| (ii) | கண்காட்சி நிலத்தில் உள்ளக வீதி முறைமை ரூபா 2.06 | நிர்மாணங்கள் குறித்துரைத்த | எதிர்காலத்தில் நிர்மாணச் | மொனராகலை மாவட்ட |

| | | | | |
|---|---|---|---|---|
| | மில்லியன் செலவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு 05 மாதங்கள் கடப்பதற்கு முன்னர் வீதி உடைந்து காணப்பட்டதுடன் இடப்பட்ட தாரும் கழன்று குழிகள் ஏற்பட்டிருந்தது. | நியமத்தில் மேற்கொள்ளப்படல் வேண்டும். | செயற்பாடுகளின் போது தரத்தன்மை மற்றும் காலாவதியாதல் தொடர்பாக கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்கப்படும். | விளையாட்டுத் தொகுதியை நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்கு இந்த நிர்மாணங்க ளுடனான நிலம் பயன்படுத்தப் பட்டுள்ளது. |
| | | | | |
| (iii) | கண்காட்சி நிலத்தை தயாரிப்பதற்காக ஈடுபடுத்துவதற்கு 143 ஹியூம் குழாய்கள் மற்றும் அதற்குரிய 60 கொலரிற்காக ரூபா 1.6 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. 2019 சனவரி 10 ஆந் திகதி வரையில் கண்காட்சி முடிவடைந்து ஐந்து மாதங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் இந்தக் குழாய்கள் மற்றும் கொலர்கள் விளைவற்றுக் காணப்பட்டது. | மிகுதியாக காணப்படுகின்ற கொலர் மற்றும் ஹியூம் குழாய்களை பொருத்தமான அபிவிருத்தி பணிகளுக்கு ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எதிர்காலத்தின் போது நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட பசுமை பூங்காவிற்காக பயன்படுகின்றமையால் இவைகள் அகற்றப்பட்டிருக்க வில்லை. | 2022 பெப்ரவரி வரையிலும் அந்த நிலைமையில் காணப்பட்டது. |
| | | | | |
| (iv) | கண்காட்சி நிலத்தில் தடாகமொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 2.84 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் அதனை நிர்மாணித்து ஐந்து மாதங்கள் கடப்பதற்கு முன்னர் தடாகத்தின் சில இடங்கள் வெடித்து தண்ணீர் கசிந்து காணப்பட்டதன் அடிப்படையில் நியமம் இன்றி நிர்மாணிக்கப்பட்டுள்ளது. | கண்காட்சிக்காக செய்யப்பட்ட நிர்மாணம் கண்காட்சி முடிவடைந்ததன் பின்னர் வேறு பணிகளுக்கு ஈடுபடுத்துவதற்கு முடியுமான வகையில் திட்டமிடல் வேண்டும். | இந்த தடாகம் பசுமை பூங்காவின் ஒரு பகுதியாக பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் மாவட்ட விளையாட்டரங்கு தயாரிக்கும் போது இந்தப் பகுதியும் விளையாட்டரங்கில் உள்ளடங்கியிருந்தது. | விளையாட்டுத் தொகுதியை நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்கு இந்த நிர்மாணங்க ளுடனான நிலம் பயன்படுத்தப் பட்டுள்ளது. |
| | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 05. | 10 பிரதேச செயலகங்களினால் அமுல்படுத்தப்பட்டிருந்த செயற்திட்டங்களின் வேலைப் பகுதிகள் குறைவாக நிறைவேற்றப்பட்டமை, பிழையான கூறுவிலைகள் பயன்படுத்தப்பட்டமை, வீதிக் கூறுவிலை பட்டேலையில் குறிப்பிடப்பட்ட ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமை, தாமதக் கட்டணம் அறவிடப்படாமை மற்றும் அரசாங்கத்திற்கு நலன் பெறக்கூடியதாக மதிப்பீடுகள் தயாரிக்கப்படாமை போன்றவைகள் அவதானிக்கப்பட்டமையால் ஒப்பந்தகாரருக்கு கூட்டுமொத்தமாக ரூபா 3,616,001 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தின் மதிப்பீட்டை தயாரித்தல், அமுல்படுத்துதல் மற்றும் செயற்திட்டத்தை பூர்த்தி செய்து கையளிக்கும் போது முறையான பிரகாரம் உரிய பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | மேலதிக கொடுப்பனவுகளுக்கான காரண விடயங்கள் விளக்கப்பட்டுள்ளது. | 2022 பெப்ரவரி வரையிலும் மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ள பணத்தில் ரூபா 1,939,152 மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தது. |
| | | | | |
| 06. | வெல்லவாய பிரதேச செயலகத்தால் 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளின் போது “ஜாதிக்க சவிய கமநெகும’ விசேட செயற்திட்டத்தின் கீழ் ரூபா 3,922,914 செலவினத்தில் நிர்மாணிக்கப்பட்ட ஜனசபா அலுவலக கட்டிடம் இலக்கிடப்பட்ட பணிகளுக்காக ஈடுபடுத்தப்படாமல் இயற்கை அனர்த்தங்களுக்கு உட்படும் வகையில் காணப்பட்டது. 2018 மார்ச் 22 ஆந் திகதி கூட்டப்பட்ட அரசாங்கத்தின் கணக்குகள் குழுவின் 148 ஆவது கூட்டத்தின் போது இந்தக் கட்டிடத்தை | விளைவற்றுக் காணப்படுகின்ற அரசாங்கத்தின் கட்டிடங்கள் இலக்கிடப்பட்ட பணிகளுக்காக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்) இன் உத்தியோகபூர்வ இல்லமாக பயன்படுத்தப்படுகின்றது . | 2022 பெப்ரவரி வரையிலும் எதிர்பார்த்த நோக்கத்திற்காக ஈடுபடுத்தப்பட வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆக்கபூர்வமாக பயன்படுத்துதல் தொடர்பாக விசேட கவனம் செலுத்த வேண்டுமென சுட்டிக்காட்டப்பட்ட போதிலும் அந்த தீர்மானம் எடுக்கப்பட்டு 03 வருடங்கள் கடந்திருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| | | | | |
| 07. | பிபில பிரதேச செயலகத்தால் கிராமிய பொருளாதார மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் 2018 இன் கீழ் வேகம தெற்கு மாவத்தையில் நீர் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக 2018 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 902,450 செலவிடப்பட்டிருந்தது. இந்த நீர் செயற்திட்டம் 2019 ஒக்தோபர் 16 ஆந் திகதி வரையிலும் செயற்படு நிலையில் காணப்படாதிருந்த துடன் அதனை செயற்படு நிலைக்கு கொண்டுவருவதற்காக நீர்ப்பம்பியொன்றை பொருத்துதல் மற்றும் பகிர்ந்தளிக்கும் குழாய் முறைமையை அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ள வேண்டியிருந்தது. | செயற்திட்டத்தை ஆக்கபூர்வமாகவும் செயற்படு நிலைக்கும் கொண்டு வருவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | செயற்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாட்டின் அளவின் பிரகாரம் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. செயற்திட்டத்தின் இரண்டாவது கட்டமாக மோட்டார் பம்பியொன்றை பொருத்துவதற்கு நிதியேற்பாட்டை வழங்குவதற்கு கோரப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | 2022 பெப்ரவரி வரையிலும் செயற்திட்டம் செயற்படு நிலைக்கு கொண்டு வரப்பட்டிருக்க வில்லை. |
| | | | | |
| 08. | மரணமடைந்த, வேலை நீக்கம் செய்யப்பட்ட, சேவையை கைவிட்டுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய மொத்தக் கடன் மீதி ரூபா 2,688,119 ஆக | நிலுவைக் கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தடுப்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. | 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் அறவிடப்படாத கடன் பணத்தில் ரூபா 299,912 அறவிடப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | இருந்ததுடன் அதில் ரூபா 1,957,679 தொகை ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாத கடன் மீதியாகும். | | | மிகுதிப் பணம் 2022 பெப்ரவரி வரையிலும் அறவிடப்பட்டிருக்க வில்லை. |
| | | | | |
| 09. | மொனராகலை மாவட்டத்தில் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் அமுல்படுத்தப்பட்ட கிராம சக்தி ஜனத்தா தொழில் முயற்சியின் கீழ் 11 பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட்டிருந்த நிதியில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 77,691,659 தொகை கிராம சக்தி சங்கம் என்ற பெயரில் பேணிச் செல்லப்படுகின்ற 125 வங்கிக் கணக்குகள் ஒரு வருட காலத்திற்கு மேற்பட்ட காலம் பயனற்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | ஒதுக்கப்பட்டிருந்த பணத்தை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இது தொடர்பாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கும் முறை தொடர்பாக சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய மற்றும் சுயதொழில் மற்றும் வணிக அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு 2021 பெப்ரவரி 03 ஆந் திகதிய கடிதம் மூலம் சகல மாவட்ட செயலாளர்களுக்கும் அறிவித்துள்ளதுடன் அதன் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அறியத்தருகின்றோம். | கிராம சக்தி சங்கம் கம்பனி தொகுதியில் பதிவிலிருந்து நீக்கப்பட்டு பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்டு மிகுதி நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அறிவிக்கப்பட்ட போதும், கம்பனி தொகுதியில் பதிவை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. 2022 பெப்ரவரி வரையிலும் காணப்பட்ட நிலைமையில் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கவில்லை |
| | | | | |
| 10. | கிராம சக்தி ஜனதா தொழில் முயற்சியின் முதலாவது கட்டத்தின் கீழ் சீவனோபாய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்தும் போது 07 பிரதேச செயலகங்களினால் 2019 ஆம் ஆண்டின் போது சுழற்சி முறைமையின் கீழ் வழங்கப்பட்டிருந்த கடன் பணத்தில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 8,361,836 | நிலுவை கடன் தாமதமின்றி அறவிடப்படல் வேண்டும். | உரிய சங்கம் மீண்டும் கணக்கு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் நிலுவைக் கடன் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2022 பெப்ரவரி வரையிலும் நிலுவைக் கடன் பணம் அறவிடப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | தொகையான அறவீடுகள் நிலுவையாக காணப்பட்டது. | | | |
| | | | | |
| 11. | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 5.2.3 ஆம் பிரிவின் பிரகாரம் குழாம் இல்லங்களில் (சமரி) சிக்கன வாடகை அதில் குடியிருக்கின்ற சகல உத்தியோகத்தர்களினதும் எண்ணிக்கை மற்றும் சமமான பகுதிகளில் இருந்து அறவிடப்பட வேண்டியதாக காண்பிக்கப்பட்ட போதும், மொனராகலை மாவட்ட பிரதேச செயலகத்தில் பெண்கள் மற்றும் ஆண்கள் குழாம் இல்லங்களுக்காக 2016 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் திசெம்பர் வரையான காலத்திற்கு உரியதாக அறவிட வேண்டிய குறித்துரைத்த சிக்கன வாடகையின் கூட்டுத்தொகை ரூபா 312,325 குறைத்து அறவிடப்பட்டிருந்தது. | மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் நிலுவை வாடகைப் பணம் அறவிடப்படல் வேண்டும். | குழாம் இல்லங்களின் சிக்கன வாடகையை அறவிடும் போது பிரச்சினைகள் காணப்படுகின்ற மையால் அறைகளின் மட்டத்தில் அல்லது குடியிருக்கக்கூடிய நபர்களின் எண்ணிக்கையின் பிரகாரம் புதிய மதிப்பீட்டை வழங்குமாறு மதிப்பீட்டு திணைக்களத்திடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது. | 2022 பெப்ரவரி வரையிலும் நிலுவை வாடகைப் பணம் அறவிடப்பட்டிருக்க வில்லை. |
| | | | | |
| 12. | அரச நிர்வாக, அனர்த்த முகாமைத்துவ மற்றும் கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சின் 2019 ஆம் ஆண்டின் நிதிஏற்பாட்டை பயன்படுத்தி வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கை செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக செலவினங்களை செய்வதற்கு ரூபா 4,750,000 நிதிஏற்பாடு | முன் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாமல் நிதிஏற்பாட்டினை விஞ்சி செலவினங்களை செய்ய முடியாது. | ஏற்றுக் கொள்கின்றோம். நலனாளிகளின் கோரிக்கையின் அடிப்படையில் உபகரணங்கள் மற்றும் நடுகைப் பொருட்களை வழங்குவதற்காக மேலதிகமாக நிதிஏற்பாட்டு பணம் தேவையாக இருந்தது. | அங்கீகாரம் பெறப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக ரூபா 5,763,882 செலவிடப்பட்டிருந்தமையினால் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 449(2)(ஆ) இல் காண்பிக்கப்படுகின்ற ஏற்பாடுகளுக்கு இணங்காமல் முன் அங்கீகாரமின்றி ரூபா 1,013,882 செலவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | அந்த தொகையை வழங்குமாறு 2019 நவம்பர் 16 ஆந் திகதி கடிதத்தில் அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டிருந்த துடன் செலவினத் தலைப்பின் கீழ் நிதிஏற்பாட்டில் சேமிப்பு காணப்பட்டமையால் செலவினங்களை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | |
| | | | | |
| 13. | மொனராகலை மாவட்ட செயலகத்தில் 2020 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 06 வைப்புக் கணக்குகளில் 02 வருடங்கள் முதல் 05 வருடங்கள் வரையிலான காலவீச்சை கடந்திருந்த மூன்றாவது தரப்பினருக்கு மீண்டும் செலுத்துவதற்காக தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்ட வைப்புக்கள் மற்றும் ஒப்பந்தத்திற்கான நிறுத்தி வைத்தல் பணம் ரூபா 9,230,126 நிதிப் பிரமாணம் 571(3) இன் பிரகாரம் அரசாங்க வருமானத்தில் செலவு வைப்பதற்கோ அல்லது மீள செலுத்துவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் காலாவதியான வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அதன் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். ஒப்பந்த நிறுத்தி வைத்தல் மீதியின் ஒரு பகுதி நிறுத்தி விடுவிக்கப்பட்டுள்ளது. திறைசேரியிலிருந்து கிடைக்கின்ற கட்டுநிதியின் பிரகாரம் மிகுதி மீதிகளையும் தீர்த்து வைப்பதற்காக உரிய உத்தியோகத்தர் களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | 2022 பெப்ரவரி வரையிலும் ரூபா 2,414,503 தொகையான நிறுத்தி வைத்தல்கள் வைப்புக்கள் தீர்த்து வைக்கப்பட்டுள்ளது. |
| | | | | |
| 14. | மொனராகலை மாவட்ட செயலகத்தால் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் 2019 ஆம் ஆண்டின் நிதிஏற்பாட்டை பயன்படுத்தி | மதிப்பீடு செய்யப்பட்ட வேலைப் பகுதி உடன்படிக்கை செய்யப்பட்ட | செயற்திட்டத்திற்காக பணம் கிடைப்பதில் தாமதம் மற்றும் பகுதிப் பணம் செலுத்துவதற்காக | சூரிய பெனல் முறைமைக்காக பாதுகாப்பு வேலியினை நிர்மாணிப்பதற்காக |

| | | | | |
|---|---|---|---|---|
| | பொத்துக்கொலபிட்டிய அணைக்கட்டை மீளமைக்கும் செயற்திட்டத்தின் கீழ் சூரிய பெனல் முறையொன்றை தாபிப்பதற்காக ரூபா 8,700,000 மற்றும் விவசாய கிணறு மற்றும் நீர் பம்பிக் கூடம் மற்றும் வாய்க்கால்களை நிர்மாணிப்பதற்காக ரூபா 1,080,309 பெறுமதியுடன் உடன்படிக்கை கைச்சாத்திட்டு சூரிய பெனலை தாபிப்பதற்காக ரூபா 8,700,000 செலுத்தப்பட்டிருந்தது. வாய்க்கால்களின் நிர்மாணம் 2019 செப்தெம்பர் 10 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 2020 செப்தெம்பர் 14 ஆந் திகதி வரையிலும் அந்த நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமையின் காரணமாக செயற்திட்டத்திலிருந்து எதிர்பார்த்த நலன்களை பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது. மேலும் சூரிய பெனல் முறைமையின் பாதுகாப்பிற்காக நடவடிக்கை எடுக்காமையால் பொருத்தப்பட்டிருந்த சூரிய பெனல் பகுதியில் இரண்டு பாதிப்பிற்கு உட்பட்டிருந்தது. | காலத்தில் பூர்த்தி செய்தல் வேண்டும். | போதியளவான பணம் காணப்படாமையின் காரணமாக நிர்மாண நடவடிக்கைகள் தாமதமடைந்துள்ளது. | 2021 இன் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்ததாக அறிவிக்கப் பட்டுள்ளது. 2022 பெப்ரவரி வரையிலும் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வில்லை. |
| | | | | |
| 15. | மொனராகலை மாவட்ட செயலகத்தால் அரச நிர்வாகம் மற்றும் அனர்த்த முகாமைத்து அமைச்சு 2019 ஆம் ஆண்டில் சிறிய குள அணைக்கட்டுக்களை | சரியான மதிப்பீடொன்றைச் செய்து முன்னுரிமை அடிப்படையில் பெறக்கூடிய பணிகளில் | அந்த செயற்திட்ட முன்மொழிவு பிரதேச விவசாய கூட்டத்தின் போது கலந்துரையாடப்பட்டு நோக்கங்களை | 2022 பெப்ரவரி வரையிலும் செயற் திட்டத்திலிருந்து எந்தவொரு விவசாய குடும்பமும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | மீளமைக்கும் செயற்திட்டத்தின் கீழ் சியம்பலாண்டுவ, கரம்மட வெவ மீளமைப்பதற்காக ரூபா 4,916,581 செலவினமொன்றைச் செய்து நிர்மாண நடவடிக்கைகளை பூர்த்தி செய்ததன் பின்னர் குளத்தை பயன்பாட்டிற்கு எடுக்காமையால் பயனற்ற செலவினத்திற்கு உட்பட்டிருந்தமையும் இந்தக் குளத்தை மீளமைப்பதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நலன்பெறும் 20 விவசாய குடும்பங்களின் மூலம் 50 ஏக்கர் வயல்கள் அளவில் பயிரிடும் நோக்கமும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை | நிதியத்தை ஆக்கபூர்வமாக ஈடுபடுத்த வேண்டியதுடன் எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். | நலன்களை பெற்றிருக்கவில்லை |
| | | | | |
| 16. | விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்களத்தின் நிதிஏற்பாட்டை பயன்படுத்தி மொனராகலை மாவட்ட திட்டமிடல் செயலகத்தின் மூலம் 2019 ஆம் ஆண்டின் போது மொனராகலை மாவட்ட விளையாட்டு தொகுதியினை நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக ரூபா 2,019,484,413 செலவின மதிப்பீடொன்று தயாரித்து அதற்காக 2020 ஒக்தோபர் 14 ஆந் திகதி வரையிலும் ரூபா 13,389,919 செலவினம் செய்யப்பட்டிருந்ததுடன் 2019 ஒக்தோபர் மாதத்தின் பின்னர் செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகள் கைவிடப்பட்டிருந்தது. | சரியான மதிப்பீடினைச் செய்து முன்னுரிமை அடிப்படையில் கிடைக்க வேண்டிய பணிகளுக்கு நிதியத்தை ஆக்கபூர்வமாக ஈடுபடுத்த வேண்டியதுடன் எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இந்த நிர்மாணத்தின் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக தேவையான நிதியத்தை பெற்றுக் கொள்ள முடியாமையின் காரணமாக தற்போது வேலை நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளதுடன் அதனால் விளையாட்டுத் தொகுதியினை முழுமையாக பயன்படுத்த முடியாதிருந்தது. | 2022 பெப்ரவரி வரையிலும் நிதிஏற்பாடு கிடைக்காமையின் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்தை அடைய முடியாதிருந்தது. |
| | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 17. | மொனராகலை மாவட்ட செயலகம் மற்றும் 04 பிரதேச செயலகங்களால் அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டங்களில் நிறைவேற்ற வேண்டிய வேலைப் பகுதிகள் குறைவாக நிறைவேற்றப்பட்டமை, உரித்தில்லாத விலை வீதம் பயன்படுத்தப்பட்டமை, வீதி கூறுவிலைகள் பதிவேட்டில் குறிப்பிடப்பட்ட ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமை, பூர்த்தி செய்யப்பட்ட வேலை அளவை விஞ்சி கொடுப்பனவு செய்யப்பட்டமை, அரசாங்கத்திற்கு நலன் பெறக்கூடியதாக மதிப்பீடு தயாரிக்காமை மற்றும் தாமதக் கட்டணம் அறவிடப்படாமை போன்ற விடயங்களுக்குரியதாக ஒப்பந்தகாரர்களுக்கு கூட்டுமொத்தமாக ரூபா 7,472,044 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்ததுடன் அதில் மொனராகலை மாவட்ட செயலகம் மற்றும் மொனராகலை, புத்தள மற்றும் சியம்பலாண்டுவ பிரதேச செயலகங்களுக்குரிய ரூபா 4,517,246 தொகை மேலும் அறவிட வேண்டியிருந்தது. | மதிப்பீட்டை தயாரித்தல் மற்றும் கொடுப்பனவு அறிக்கையை தயாரித்தல் சரியாகவும், பொறுப்புடனும் செயற்பட வேண்டியிருந்ததுடன் மேலதிகமாக செலுத்தப்பட்ட மிகுதிப் பணம் அறவிடப்படல் வேண்டும். | இந்த செயற்திட்டத்திற்குரிய அறவிடல்கள் தொடர்பான விபரம் மற்றும் விளக்கமளித்தல்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளது. | மேலதிகமாக செலுத்தப்பட்ட பணத்தில் ரூபா 2,954,798 இதுவரை அறவிடப்பட்டிருந்த போதும், மேலும் ரூபா 4,517,246 அறவிட வேண்டியிருந்தது. |
| | | | | |
| 18. | கம்பெரலிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் 2018 இன் கீழ் மீயகெட்டுஆர குள மீளமைப்பிற்காக ரூபா 49,310,900 மொத்த கிரய | நிர்மாண நடவடிக்கைகள் மதிப்பீட்டின் பிரகாரம் மேற்கொள்ளப்படல் வேண்டும். | கம்பெரலிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மீயகெட்டுஆர குளத்தை மீளமைக்கும் போது குளத்தின் | 2022 பெப்ரவரி வரையிலும் குளத்தின் அணைக்கட்டின் அலைதாங்கி |

| | | | | |
|---|---|---|---|---|
| | மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. இந்த மதிப்பீட்டில் கருங்கல் பயன்படுத்தி குளத்தின் ஓரப்பகுதியை நிர்மாணிப்பதற்காக ரூபா 4,076,800 தொகை உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் கல் கொள்வனவு செய்வதற்காக மாத்திரம் ரூபா 4,974,900 செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட கிரயத்தை விஞ்சி ரூபா 898,100 கருங்கல் கொள்வனவு செய்வதற்காக மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. குள அணைக்கட்டில் இடப்பட்டிருந்த கருங்கல் மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட தடிப்பத்துடன் இடப்படாதிருந்ததுடன் மிகுதி கருங்கல் குளப் பகுதியில் குவித்து வைக்கப்பட்டிருந்தது. | | அணைக்கட்டின் அலைதாங்கிக்காக கருங்கல் ஈடுபடுத்தப்பட்டு பதிக்கப்பட்டுள்ளதுடன் அதன் ஆரம்ப பகுதி மேற்கொள்ளப் பட்டுள்ளது. மழை கிடைப்பதற்கு அண்மித்ததாக இருந்தமையால் இயந்திரங்கள் மூலம் கருங்கல் பதிக்கப்பட்ட போதிலும் அதன் வேலைகள் பூர்த்தி செய்யப்படாமையால் குறித்துரைத்த தடிப்பம் மற்றும் இடைவெளிகள் பூரணப்படுத்தாதிருந்தமையை அறியத் தருகின்றோம். | நிர்மாணம் பூர்த்தி செய்யப் படாமையால் மிகுதி கருங்கல் குளத்தின் சுற்றாடலில் குவிக்கப் பட்டிருந்ததாக அறிவிக்கப் பட்டுள்ளது. |
| | | | | |
| 19. | மொனராகலை மாவட்ட செயலகத்திற்குரிய 14 வாகனங்கள் 10 வருடங்களிற்கு மேற்பட்ட காலம் அலுவலக வளவில் செயற்பாடற்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் அவற்றை பழுதுபார்ப்பதற்கோ அல்லது விற்றுத் தீர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | பழுதுபார்ப்பதற்கோ அல்லது விற்றுத் தீர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இதனிடையே 09 வாகனங்கள் உடைந்த நிலையில் காணப்பட்டதுடன் 05 வாகனங்கள் பழுதுபார்த்தல் பொருளாதார ரீதியில் ஆக்கபூர்வமானதாக இல்லை. அந்த வாகனங்களை ஏலத்தில் விற்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றது. | உடைந்த நிலையில் காணப்படுகின்ற வாகனங்களின் பதிவு இரத்துச் செய்யப்படாதிருந்த துடன் ஏனைய வாகனங்கள் ஏலத்தில் விற்பனை செய்யப்படவில்லை. |
| | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 20. | 2018 மார்ச் 19 ஆந் திகதிய சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் இலக்கம் 2018/01 இன் பிரகாரம், 2015 யூலை 10 ஆந் திகதிய நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 2015/01 இன் மூலம் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளை பின்பற்றி ஓட்டத்தில் ஈடுபடுத்த முடியாத நிலையில் காணப்படுகின்ற சகல வாகனங்களும் 2018 யூன் 30 ஆந் திகதிக்கு முன்னர் விற்றுத் தீர்க்குமாறு காண்பிக்கப்பட்ட போதிலும் அதற்கு இணங்காமல் மடுல்ல பிரதேச செயலகத்திற்குரிய ஓட்டத்தில் ஈடுபடுத்த முடியாத நிலையில் காணப்படுகின்ற கெப் வண்டி, ட்ரக்டர் வண்டி, ஒரு மோட்டார் சைக்கிள், ஒரு அரிவாள் என்பன 2021 பெப்ரவரி 12 ஆந் திகதி வரையிலும் அலுவலக வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் விற்றுத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் | விற்றுத் தீர்ப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அறியத்தருகின்றோம். | 2022 பெப்ரவரி வரையிலும் விற்றுத் தீர்ப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| | | | | |
| 21. | சியம்பலாண்டுவ பிரதேச செயலகத்திற்கு சொந்மான மின்பிறப்பாக்கி இயந்திரம், ஜீப் வண்டி, டிறக்டர் பௌசர், லொறி பௌசர் வண்டி மற்றும் மோட்டார் சைக்கிள் என்பன நீண்டகாலம் முதல் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | பழுதுபார்ப்பதற்கோ அல்லது விற்றுத் தீர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | மின்பிறப்பாக்கி இயந்திரம் தொடர்பாக எதிர்வரும் பொருள் மெய்மையாய்வு சபையின் தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் ஏனைய வாகனங்களை விற்றுத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வாகனங்களை விற்றுத் தீர்க்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வில்லை. |
| | | | | |
| 22. | வெல்லவாய பிரதேச செயலகத்திற்குரிய கெப் | நட்டத்தை தாமதமின்றி | இந்த விபத்து தொடர்பாக பொறுப்பு | 2022 பெப்ரவரி வரையிலும் ரூபா |

| | | | | |
|---|---|---|---|---|
| | வண்டி 2002 செப்தெம்பர் 19 ஆந் திகதி விபத்திற்கு உட்பட்டிருந்ததுடன் நிதிப் பிரமாணம் 104(4) அறிக்கையின் பிரகாரம் ரூபா 375,000 நட்டத்தை சாரதியிடமிருந்து அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அந்த நட்டத்தை சாரதியிடமிருந்து அறவிடுமாறு 2013 ஏப்ரல் 23 ஆந் திகதி நடைபெற்ற அரச கணக்குகள் குழு கூட்டத்தின் போது கட்டளையிடப்பட்டிருந்தது. அந்த கட்டளை வழங்கப்பட்டு 08 வருடங்களுக்கு அண்மித்த காலம் கடந்திருந்த போதிலும் அந்த நட்டத்தில் ரூபா 92,500 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வாய்ந்த சாரதியிடமிருந்து விபத்திற்குரிய நட்டமான ரூபா 375,000 தொகையில் ரூபா 107,500 இதுவரையில் அறவிடப்பட்டுள்ளதுடன் மாதத்திற்கு ரூபா 2,500 வீதம் தொடர்ச்சியாக அறவிடப்படுகின்றது என அறியத் தருகின்றோம். | 267,500 அறவிடுவதற்கு காணப்பட்டது. |
| | | | | |
| 23. | வெல்லவாய பிரதேச செயலகத்திற்குரிய கெப் வண்டி 2016 திசெம்பர் 17 ஆந் திகதி விபத்திற்கு உட்பட்டமையால் ரூபா 2,630,726 நட்டம் ஏற்பட்டிருந்ததுடன் அந்த விபத்தின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட பழுதுபார்த்தல்களுக்காக காப்புறுதியிலிருந்து மேவுகை செய்யப்படாத ரூபா 188,524 தொகை மொனராகலை மாவட்ட செயலகத்தால் செய்யப்பட்டிருந்தது. விபத்து ஏற்பட்டு 04 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் 2021 மார்ச் 23 ஆந் திகதி வரையிலும் விபத்து | நிதிப்பிரமாணத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் விசாரணை நடவடிக்கைகள் தாமதமின்றி மேற்கொள்ளப்படல் வேண்டும். | இறுதி விசாரணை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக விசாரணை சபையொன்று நியமிக்கப்பட்டுள்ள துடன் அந்தக் குழு உத்தியோகத்தர் களுக்கு மீள் நினைவூட்டல் கடிதம் மூலம் அறிவித்திருந்த போதிலும் இதுவரையிலும் உரிய அறிக்கை வழங்கப்பட்டிருக்க வில்லை. | 2022 பெப்ரவரி வரையிலும் இறுதி விசாரணை அறிக்கை கிடைத்திருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | தொடர்பாக நிதிப் பிரமாணம் 104(4) இன் பிரகாரம் விசாரணைகளை நடாத்தி இறுதி அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அரசாங்கத்தின் செலவினத்தில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 188,524 பழுதுபார்த்தல் செலவின நட்டம் மற்றும் கைவிடல்கள் தொடர்பான கூற்றில் மேலும் அறவிடுவதற்கோ அல்லது பதிவழிப்பதற்கோ அல்லது கைவிடுவதற்கோ உள்ள நட்டத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| | | | | |
| 24. | மொனராகலை பிரதேச செயலகத்தால் சப்ரிகமக் நிகழ்ச்சித்திட்டம் 2020 இன் கீழ் ஹூலந்தாவ தெற்கு முதலாவது கட்டம் 12 கடை அருகில் உள்ள வீதியில் மதகு பழுதுபார்ப்பதற்காக ரூபா 495,000 செலவினமொன்று செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்ட இடத்தில் புதிய பாலமொன்று நிர்மாணிக்கப்படுகின்றமையால் அந்த நிர்மாணத்திற்காக நிர்மாணிக்கப்பட்ட மதகு உடைத்து அகற்றப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இந்த செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்ட செலவினம் பயனற்ற செலவினமாக | நிதியத்தை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கான அபிவிருத்தி செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு முன்னர் அவற்றின் தேவை தொடர்பாக சரியான மதிப்பீடொன்று மேற்கொள்ளப்படல் வேண்டும். | நிர்மாணப் பணிகள் 2020 நவம்பர் 12 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. எனினும் 2020 திசெம்பர் 28 ஆந் திகதி கிராமிய பால செயற்திட்டம் மூலம் அந்த இடத்திற்காக பாலமொன்றை அமைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்த துடன் உரிய மதகை நிர்மாணித்த காலத்தின் போது அறிவித்தல் மேற்கொள்ளப் படாதிருந்ததை அறியத் தருகின்றோம். | இந்த செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்ட இடத்தில் புதிய பாலம் நிர்மாணிக்கப் பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | இருந்தமை அவதானிக்கப்பட்டது. | | | |
| | | | | |
| 25. | 2015 திசெம்பர் 11 ஆந் திகதிய MO/RG/301 ஆம் இலக்க மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது மொனராகலை மாவட்ட பிரதேச செயலகத்திற்குரிய அரசாங்கத்தின் வீட்டிற்கான வாடகை அறவிடப்படாதிருந்தமையின் காரணமாக அந்த ஆண்டுகளுக்குரிய நிலுவை வீட்டு வாடகை ரூபா 1,506,250 ஆகும். அதில் 2021 மார்ச் 30 இல் உள்ளவாறு ரூபா 17,400 மாத்திரம் அறவிடப்பட்டிருந்த போதிலும் ரூபா 1,488,850 மேலும் நிலுவையாக காணப்பட்டது. அரசாங்கத்தின் வீட்டிற்காக இறுதித் தடவையாக மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு 05 வருடங்கள் கடந்திருந்த போதிலும் மதிப்பீட்டு வாடகை திருத்தப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் நிலுவை வீட்டு வாடகை அறவிடப்படல் வேண்டும். | 2016 சனவரி மாதம் முதல் 2018 ஆகஸ்ட் மாதம் வரை நிலுவை வீட்டு வாடகையை அறவிடுவதற்காக உரிய உத்தியோகத்தர் களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் போது உத்தியோகத்தர்கள் சிலரினால் ஒரே தடவையில் செலுத்துவதற்கு முடியாமையினால் தவணைப் பணமாக செலுத்துவதற்கு கோரப்பட்டள்ளதுடன் அந்தக் கோரிக்கை வரிசை அமைச்சிற்கு அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. அங்கீகாரம் கிடைத்ததும் உத்தியோகத்தர் களிடமிருந்து இதுவரையில் தவணையாக அறவிடப்படுவதுடன் ஏனைய உத்தியோகத்தர் களுக்கு மீண்டும் மீள் நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | 2022 பெப்ரவரி வரையிலும் ரூபா 149,107 அறவிடப்பட்டள்ள துடன் அறவிட வேண்டிய வாடகை ரூபா 1,357,143 ஆகும். |
| | | | | |
| 26. | 2001 ஆகஸ்ட் 21 ஆந் திகதிய 2001/18 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் | சுற்றறிக்கையின் பிரகாரம் இடமாற்றங்கள் | வருடாந்த இடமாற்றத்திற்காக விண்ணப்பம் | வருடாந்த இடமாற்றத்திற்காக விண்ணப்பித்த |

| | | | | |
|---|---|---|---|---|
| | பிரகாரம் ஆகக்கூடிய கால எல்லை 05 வருடங்கள் ஒரே பதவியில் / சேவை நிலையத்தில் சேவையாற்றிய சகல உத்தியோகத்தர்களுக்கும் வேறொரு சேவை நிலையத்திற்கு சேவையாற்றுவதற்கு வாய்ப்பு அளிப்பதற்காக இடமாற்றம் வழங்கப்பட்டிருந்த போதிலும் மொனராகலை மாவட்ட செயலகம் மற்றும் 11 பிரதேச செயலகங்களில் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற 584 உத்தியோகத்தர்களுக்கு 06 வருடங்கள் முதல் 29 வருடங்கள் வரையிலான காலம் ஒரே சேவை நிலையத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | தொடர்பாக அமுல்படுத்துதல் வேண்டும். | கோரப்பட்ட போதிலும் அநேகமான உத்தியோகத்தர் களுக்கு வருடாந்த இடமாற்றம் கிடைக்காதிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது. | போதிலும் அநேகமான உத்தியோகத்தர் களுக்கு வருடாந்த இடமாற்றம் கிடைக்காதிருந்த தாக அறிவிக்கப் பட்டுள்ளது. |

**அனுராதபுரம் மாவட்ட செயலகம்**

---------------------------------------------

| | | | |
|---|---|---|---|
| | 2018 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம | |
| | 2019 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம | |
| | 2020 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம | |

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள பிரதான குறைபாடுகள் ------------------------ | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை --------------------- | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | அது தொடர்பான தற்போதைய நிலைமை --------------------- |
|---|---|---|---|---|
| 01. | ஹொரவொப்பொத்தான பிரதேச செயலகப் பிரிவில் தியத்தவெவ புதிய கிராமத்தில் நீர் செயற்திட்டமொன்றை அமுல்படுத்துவதற்காக ரூபா 1,039,947 தொகையான பெறுமதியில் கிணறு நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு நிர்மாணிக்கப்பட்ட கிணற்றின் நீர் குடிப்பதற்கு பொருத்தமான நியமத்தில் இல்லாமையினால் செயற்திட்டத்தில் எதிர்பார்த்த நோக்கம் நிறைவேற்றப்படவில்லை. | செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் சாத்தியவள ஆய்வு மேற்கொண்டு செயற்திட்டத்தின் வினைதிறனை மதிப்பீட்டிற்கு உட்படுத்தி அமுல்படுத்த முடியுமான செயற்திட்டத்தை மாத்திரம் செயற்படுத்த வேண்டும். | இந்தக் கிணற்றிலுள்ள தண்ணீர் குடிப்பதற்குத் தகுதியற்றதாக இருப்பினும் தற்போது மக்கள் தமது அனைத்து நீர் தேவைகளையும் இக் கிணற்றிலிருந்து பூர்த்தி செய்து கொள்கின்றனர். | செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் நிறைவேற்றப் படவில்லை. |
| 02. | அனுராதபுரம் பொதுச் சந்தை வளவில் மீன் கடைத் தொகுதிகளை நிர்மாணிப்பதற்காக 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 6.35 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.<br><br>• இந்த நிர்மாணத்திற்காக நகர அபிவிருத்தி அதிகாரசபையின் | நிர்மாணத்திற்கான அனுமதி பெறப்பட வேண்டியதுடன் திட்டங்களுக்கு மற்றும் பொறியியல் நியமங்களுக்கு இணங்க மற்றும் தேவைப்பாட்டின் பிரகாரம் குறிப்பிட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியமை. . | குறிப்பிட்ட அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்திட்டத்தின் பிரகாரம் நிர்மாணத்தின் போது பழைய கடைகள் புதிய திட்டத்தில் சேர்க்கப்படாமையால் அக் கடைகளை | 2022 பெப்ரவரி வரையில் இந் நிலைமையிலேயே காணப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.<br>• எதிர்பார்த்த திட்டங்களுக்கும் பொறியியலாளர் நியமங்களுக்கும் உரியதாக காணப்படவில்லை.<br>• பொதுச் சந்தை மக்களின் தேவைகளுக்கு இணங்கியதாக இருக்கவில்லை.<br>இந்த கடைத்தொகுதி எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் முழுமையாக உடைத்து அகற்றப்பட்டிருந்தது.. | | இடித்து புதிதாக நிர்மாணிக்கப் பட்டுள்ளது. | |
| 03. | மாவட்ட செயலாளருக்கு சொந்தமான அரசாங்கத்தின் 15 விடுதிகள் 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக வடமத்திய மாகாண சபையின் உத்தியோகத்தரின் பாவனைக்காக வழங்கப்பட்டிருந்தது. அந்த விடுதிகளில் இருந்து தாபன விதிக் கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் வாடகை அறவிடல் மாவட்ட செயலாளரால் மேற்கொள்ளப்படவில்லை. இந்த விடுதிகளின் வசிப்பிடக் காலம் 05 | தாபன விதிக்கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் வாடகை அறவிடல் மற்றும் மாவட்ட செயலாளருடன் விடுதி நலனாளி கைச்சாத்திட்ட உடன்படிக்கையின் பிரகாரம் உரித்தை மீளக் கையளித்தல் வேண்டும். | வட மத்திய மாகாணத்தில் அதிகாரிகள் வசிக்கின்ற 11 வீடுகள் தொடர்பாக உத்தியோகபூர்வ மனைகளை மீண்டும் என்னிடம் ஒப்படைக்குமாறு பிரதான செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ள துடன் மேலும் 04 வீடுகள் சிக்கலில் உள்ளன. அவற்றின் உரிமை மற்றும் நிர்மாணத்தை யார் செய்தார்கள் என்பது | 2022 பெப்ரவரி வரையில் காணப்பட்ட சிக்கல்கள் தீர்க்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வருடங்களின் எல்லையினை விஞ்சிய பின்னர் உரித்தை மீள கையேற்பதற்கான உள்ளகக் கட்டுப்பாடு மாவட்ட செயலாளரால் அமுல்படுத்தப்படாமையின் காரணமாக அந்த விடுதிகளின் நிர்வாகம் மாவட்ட செயலாளரிடமிருந்து விலகி இருந்தது. எவ்வாறாயினும், இந்த விடுதிகளுக்காக ஆதனவரி செலுத்துதல் மாவட்ட செயலாளர் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டிருந்தது. | | குறித்து மேலும் விசாரணை நடாத்தப்பட்டு மேற்கொண்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும். | |
| 04. | மாவட்ட செயலகத்தில் காணப்பட்ட ஆயுதக் களஞ்சியத்தில் பின்வரும் நிர்வாகக் குறைபாடுகள் காணப்பட்டன . | | | |
| | (i) மாவட்ட செயலக வளவில் உள்ள ஆயுதக் களஞ்சியத்தில் கையேற்ற திகதி, கிடைத்த காரணம் மற்றும் ஆயுதங்களின் இலக்கம் என்பவற்றை உள்ளடக்கிய தகவல்கள் பதிவேடுகளுக்குக் கொண்டுவராத 388 பழைய ஆயுதங்கள் காணப்பட்டன. | பெறுகை விநியோகித்தல் மற்றும் வெளியில் காணப்படுகின்ற ஆயுதங்கள் தொடர்பாக இனங்காணக்கூடிய வகையில் பதிவேடொன்று பராமரிக்கப்பட வேண்டும்.. | அந்த ஆயுதங்கள் 2016.05.14 ஆந் திகதி நடாத்தப்பட்ட ஆயுத மதிப்பீட்டுச் சபையினால் பயன்படுத்தப்பட பொருத்தமற்ற ஆயுதங்கள் என வகைப்படுத்தப் பட்டிருந்தமை 2021.08.26 ஆந் திகதி மீண்டும் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின் | 2022 பெப்ரவரி வரையில் இந் நிலைமையிலேயே காணப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | போது கண்டு பிடிக்கப்பட்டிருந்தது. அந்த ஆயுத்ங்க் 2021.12.31 இற்கு முன்னர் களப் படைத் தலைமையகத்திற்கு ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | |
| | (ii) களஞ்சியசாலையில் வைக்கப்பட்டிருந்த 15 கைத்துப்பாக்கிகள் மற்றும் 500 தோட்டாக்கள் எந்த நோக்கத்திற்காகச் சேமித்து வைக்கப்பட்டன என்பதை இனங்காண முடியாதிருந்தது. . | பாதுகாப்பு அமைச்சின் அறிவுறுத்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த 15 கைத்துப்பாக்கிகள் மற்றும் 500 தோட்டாக்கள் 2021.12.31 இற்கு முன்னர் களப் படைத் தலைமையகத்திற்கு ஒப்படைப்பதறகுத் தேவையான நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளது. | -மேற்படி - |
| 05. | திரப்பனே, பலுகஸ்வெவ, ஹொரவப்பொத்தான மற்றும் மிஹிந்தலை போன்ற 04 பிரதேச செயலகப் பிரிவுகளில் அரசாங்கத்தின் காணிகளில் குடியிருந்து வருகின்ற மற்றும் பயிர்ச்செய்கை மேற்கொள்கின்ற விவசாயிகளுக்கு வழங்குவதற்காக சனாதிபதியால் கையொப்பிடமிடப்பட்ட பிரதேச செயலகங்களுக்கு | சனாதிபதி கையொப்பமிட்டு அனுப்பப்பட்ட படி பத்திரங்களை உடனடியாக உரித்தாளிகளுக்கு வழங்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். | மேலும் பகிர்ந்தளிப்பதற்கு 166 படிப்பத்திரங்கள் எஞ்சியுள்ளன. இப்படிப் பத்திரங்கள் தற்போது சுமார் இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னர் தயாரிக்கப்பட்டு அனுப்பட்டமையால் தகவல்களை பெறுவதில் உள்ள சிரமத்தினால் நீண்ட | 2022 பெப்ரவரி வரையில் படிப்பத்திரங்களைப் பெறுவோர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அனுப்பப்பட்டிருந்த 536 படிப் பத்திரங்கள் கிடைத்து நீண்ட காலமாக உரிய நலனாளிகளுக்கு விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | காலமாக பிரதேசச் செயலகத்தில் தேக்கி வைக்கப்பட்டிருந்தன. தொடர்ந்தும் கிராம சேவகர்களுக்கு தகவல்கள் தெரிவிக்கப்பட்டு தகவல்களைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு அவ்வாறு பெறப்படுகின்ற தகவல்களின் பிரகாரம் அவ்வப் போது படிப்பத்திரங்கள் வழங்கப்படுவதற்கு அல்லது இரத்துச் செய்வதற்காக அனுப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | |
| 06. | மதவாச்சி பழைய உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் அமைந்துள்ள காணி வெளித்தரப்பினரால் அனுமதியற்ற வகையில் நீண்டகாலமாக குடியிருந்து வருவதுடன் அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் பிரகாரம் அந்தக் காணியில் 40 பேர்ச் நீண்ட கால குத்தகை | காணி ஆணையாளரின் பரிந்துரையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து 40 பேர்ச்சுக்காக நீண்ட கால அனுமதிப்பத்திரம் வழங்கி எஞ்சிய காணிப்பகுதியை விடுவித்துக் கொள்வதற்கு | குறிப்பிட்ட காணியின் கிராம சேவகர் பிரிவிற்காக நடைபெற்ற காணிச் கச்சேரிக்கு குறித்த தரப்பினர் சமர்ப்பித்துள்ளனர். தெரிவுப் பட்டியல்கள் தயாரிக்கப்பட்டு மாகாணக் காணி ஆணையாளருக்கு (உமெப) அனுப்பி | 2022 பெப்ரவரி வரையில் இந் நிலைமையிலேயே காணப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அடிப்படையில் குடியிருப்பாளருக்கு கையளிப்பதற்கு காணி ஆணையாளர் பரிந்துரை செய்திருந்தார். எனினும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக அந்தக் காணியின் எஞ்சிய பகுதிகளை விடுவித்துக் கொள்வதற்கு முடியாதிருந்தது. | நடவடிக்கை எடுக்க வேண்டும். | அங்கீகாரம் பெறப்பட்ட பின்னர் குடியிருப்பாளருக்கு 40 பேர்ச்சஸ் பகுதியை நீண்டகாலக் குத்தகை அடிப்படையில் விடுவிப்பதற்கு முடியும்.. | |
| 07. | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் II ஆம் பகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 13.2 ஆம் பிரிவின் பிரகாரம் ஆரம்ப பரிசோதனையொன்று எவ்வளவு காலத்திற்குள் நிறைவு செய்ய வேண்டுமென ஆரம்ப பரிசோதனைக்காக கட்டளையிடும் உத்தியோகத்தரால் பரிசோதனை குழுவிற்கு கூறப்பட வேண்டிய போதும் ஆரம்ப பரிசோதனையொன்றை பூர்த்தி செய்யும் காலத்தினை திட்டவட்டமாக பரிசோதனை சபைக்கு குறிப்பிடாததன் காரணமாக மாவட்ட செயலகத்தினால் கடந்த 6 மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இரண்டு அதிகாரிகளின் ஆரம்ப விசாரணை அறிக்கை 2020.06.22 அன்று ஒன்றிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பபட்டுள்ளது. இன்னும் முறையான ஒழுக்காற்று விசாரணைகள் ஆரம்பிக்கப் படவில்லை. தற்போது ஆரம்ப விசாரணை அதிகாரிகளை நியமிக்கும் போது அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டிய கால எல்லை குறிப்பிடப்பட்டு வழங்கப்படு | 2022 பெப்ரவரி வரையில் இந் நிலைமையிலேயே காணப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அவ்வாறான 04 பரிசோதனைகள் 2019 ஆம் வருடத்தில் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | | மென்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | |
| 08. | இஸ்மாட் இலங்கை கட்டிடமொன்றை நிர்மாணிக்கும் போது மதிப்பீட்டுப் பெறுமதியை மிகைத்து ரூபா 2,478,156 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.13.4 இன் பிரகாரம் விலகலுக்காக மொத்த கிரய மதிப்பீடு திருத்தம் செய்யப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | மதிப்பீட்டை விஞ்சியதாக செலவிடப்பட்டமை தொடர்பாக அனுமதி பெறப்பட்டிருக்கவில் லை. |
| 09. | இஸ்மாட் இலங்கை கட்டிடத்திற்கான உப ஒப்பந்தம் வழங்கப்பட்ட பெறுமதி ரூபா 6,006,157 தொகையான 06 வேலை விடயங்களுக்காக பெறுகை வழிகாட்டல் கோவைக்கு புறம்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. . | பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பெறுகை வழிகாட்டல் கோவைக்கு புறம்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | இந் நிலைமையிலேயே தற்போதும் காணப்பட்டது. |
| 10. | இஸ்மாட் இலங்கை கட்டிட நிர்மாணங்களுக்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 186,000 பெறுமதியான 51 உபகரணங்கள் மற்றும் கருவிகள் நிர்மாணத்தில் ஈடுபட்ட நிறுவனத்தினால் மீள ஒப்படைக்கப்பட்டிருக்க வில்லை. | மீளப் பெற்று பொருட் பதிவேட்டில் உள்ளடக்கப்பட வேண்டும். | இஸ்மாட் இலங்கை கட்டிட நிர்மாணத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்கள் மற்றும் கருவிகள் கட்டளைகள் சிவில் பொறியியலாளர்கள் திணைக்களத்தின் | மாவட்டச் செயலகத்தினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த மையால் அவற்றை மீளப் பெற்றுக் கொள்ள வேண்டிய போதிலும், மீண்டும் ஒப்படைக்கப்பட்டிருக் கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | (உ.மெ) பொருட் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ள தாக எனக்கு தெரிவிக்கப் பட்டுள்ளது. (பிண்ணினைப்பு 12) | |
| 11. | மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு, வட மாகாண அபிவிருத்தி இந்து சமய அலுவல்கள் அமைச்சின் கீழ் வடக்கு மற்றும் வடமத்திய மாகாணத்தின் வசிக்கும் கடன் தொல்லையால் பாதிப்புற்ற அநுராதபுரம் மாவட்டத்தில் நுண் நிதிக் கடன் வசதிகளை வழங்குவதற்காக 2018 ஆம் ஆண்டில் ரூபா 250 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டின் சனவரி மாதத்தில் அந்நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துவதற்காக வட மத்திய மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்திற்கு நிதி ஏற்பாடு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அத்திணைக்களத்தினால் அநுராதபுர மாவட்ட கூட்டுறவுச் வங்கி சங்கத்துடன் உடன்படிக்கைக்கு இணங்கியிருந்தது. 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபா 6.5 மில்லியன் மாத்திரமே கடன் வழங்கப்பட்டிருந்த மையால் வழங்கப்பட்டிருந்த | செயற்திட்ட முன்மொழிவுகளில் குறிப்பிடப்பட்ட அளவீடுகள் திருத்தம் செய்யப்பட்டு எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களுக்காக கடன் வழங்கும் வேலைத்திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும். | இச் செயற்திட்டத்தின் கணக்காய்வில் காட்டியுள்ளவாறு 2019.12.31 இல் முன்னேற்றம் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்படுவதற்கு முக்கிய காரணம் அதிகபட்சக் கடன் தொகை போதியளவில் இல்லாமை மற்றும் வருடாந்த வட்டி வீதம் 14 சதவீதத்திற்கும் மேற்பட்ட விகிதமாக காணப்பட்டமை.<br><br>இந்த எல்லைகளை உயர்த்துவதற்கும் வட்டி வீதத்தைக் குறைப்பதற்கும் சமுர்த்தி மனைப் பொருளியல், நுண்நிதி, சுய தொழில் வியாபார அபிவிருத்தி மற்றும் குறைப் பயன்பாட்டு | கடன் வழங்கப்படுவதில் முன்னேற்றமொன்று பெறப்படவில்லை. ரூபா 200 மில்லியனை விஞ்சிய தொகையொன்று விளைவற்றதாக கூட்டுறவுக் கிராமிய வங்கிக் கணக்கில் வைக்கப் பட்டிருந்தது. ගිණුම්වල පවතී. |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிதி ஏற்பாடுகளில் ரூபா 243.5 மில்லியன் அதாவது 97.39 சதவீம் குறித்த செயற்திட்டத்திற்காக பயன்படுத்தியிருக்கவில்லை. | | அரச வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எனினும் இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் 2021.01.18 இல் அங்கீகரிக்கப்பட்டது. இந்த அமைச்சரவைப் பத்திரத்தின் அதிகபட்ச கடன்எல்லை ரூபா 40,000 – 100,000 வரை உயர்த்தப்பட்டு வருடாந்த வட்டி வீதம் 14 சதவீதத்திலிருந்து 6 வரை குறைக்கப்பட்டது. அதன் பிரகாரம் இற்றை வரை குறிப்பிடத்தக்க முன்னேற்றமொன்று ஏற்பட்டுள்ளது. அதாவது 987 கடனாளிகளுக்கு ரூபா 41.531 மில்லியன் கடன் இற்றை வரையில் வழங்கப்பட்டுள்ளது. | |

| | | | | |
|---|---|---|---|---|
| 12. | தம்புத்தேகம பொருளாதார நிலையத்தின் வேலியை நிர்மாணிப்பதற்கான பெறுகை யின் போது பெறுகை வழிகாட்டிக் கோவையின் 7.9.2 ஆம் பந்தியின் பிரகாரம் வேலை ஒப்பந்தங்களின் போது பொறியியலாளர் மதிப்பீட்டுடன் ஒப்பீடு செய்து விரிவான கேள்வி மதிப்பீட்டிற்காக வழங்கப்பட்டிருந்த ஆலோசணையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. அதன் பிரகாரம் தகைமையுடைய ஆகக்குறைந்த விலைகளை சமர்ப்பித்த 5 கேள்விதாரர்கள் நிராகரிக்கப்பட்டு 6 ஆவது இடத்தில் கூறுவிலை சமர்ப்பித்த கேள்விதாரருக்கு கேள்வியை அளிப்புச் செய்ததன் காரணமாக ரூபா 287,821 ஆன நட்டமொன்று இடம்பெற்றிருந்தது. | பெறுகை வழிகாட்டிக் கோவைகளில் காண்பிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் நட்டத்திற்கு பொறுப்பான தரப்பினர் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நடவடிக்கைகள் குறிப்பிடப்பட்டிருக் கவில்லை. காரணங்கள் விளங்கப்படத்தப் பட்டுள்ளன.. | தேசிய பெறுகை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போதும் பெறுகை குறைபாடுகள் ஏற்பட்டிருந்தமை உறுதி செய்யப்பட்டுள்ளது. நட்டங்கள் பொறுப்பானவர்களிட மிருந்து அறவிடப்படவில்லை. |
| 13. | சலவைக் கற்கள் அகழும் போது நிலத்தை புனரமைப்பதற்காக வைப்பாக 1 கியுப் சரவைக் கற்களுக்காக ரூபா 200 வீதம் வைப்புத்தொகையொன்று பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும் 13 பிரதேச செயலகங்களில் 25 சந்தர்ப்பங்களில் நிறுத்தி வைக்க வேண்டிய ரூபா 5,575,600 வைப்புத் தொகையை தொகை நிறுத்தி வைக்கப்படாமை காரணமாக | தொழிற்துறை சுரங்க உரிம நிபந்தனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 06 பிரதேச செயலகப் பிரிவுகளில் 15 காணிகளை புனரமைக்கும் பணிகள் நிறைவடைந்துள்ள மையால் பணம் விடுவிக்கப் பட்டுள்ளது. 02 பிரதேச செயலகப் பிரிவிலுள்ள வைப்புத் தொகைகள் பொது வைப்புக் | 05 பிரதேச செயலகப் பிரிவுகளில் அகழ்வராய்ச்சி செய்யப்பட்ட இடங்கள் புனரமைக்கப் படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | உரிய இடங்களின் சுற்றாடலை உரிய நிலைமைக்கு கொண்டு வரல் சரியாக இடம்பெறவில்லை. | | கணக்கிலிருந்து அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டுள்ளது. | |
| 14. | அநுராதபுரம் மாவட்டத்தில் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் சட்டரீதியான அனுமதிப்பத்திரமொன்று பெற்றுககொள்ளாமல் பெற்றுக் கொண்ட அனுமதிபத்திர மொன்றை முறையற்றதாக பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட சலவை கல் அகழ்வில் இருந்து அரசிற்கு இழக்கப்பட்ட வருமானம் ரூபா 42.9 மில்லியனாக இருந்தது. | புவிச்சரிதவியல் மற்றும் சுரங்க பணியகத்துடன் இணைந்து பொருத்தமான உள்ளக கட்டுப்பாட்டு வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும்.. | சட்டரீதியான அனுமதி பெறாமல் சல்லிக் கற்கள் அகழ்வு மேற்கொள்ளப் படுகின்ற சந்தர்ப்பங்கள் தெரியப்படுத்தப்பட்டு உடனடியாக அவர்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகளை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அறிவிக்கப் பட்டுள்ளது. பெறப்பட்ட உரிமத்தைப் தவறாகப் பயன்படுத்தி மேலதிக அகழ்வாராய்ச்சிகள் செய்யப்படும் சந்தர்ப்பங்களில் அவ்வாறு அகழப்படுகின்ற அளவைக் கணக்கிடுதல் சுரங்கப் பணியகத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டும். | 2022 பெப்ரவரி வரையில் இழக்கப்பட்ட அரச கட்டணம் அறவிடப் பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | ஆகையால் இவ்வாறான சந்தர்ப்பங்களில் நிலுவையை அறவிடுவதற்கு முடியுமான விதத்தில் குறிப்பிட்ட உரிமதாரரிடமிருந்து வைப்புத் தொகையொன்று பெறப்படுதல் பொருத்தமானதென பரிந்துரைக்கப் படுகின்றது. | |
| 15. | அரசாங்க காணி கட்டளைகள் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் வதிவிட மற்றும் விவசாய செயற்பாடுகளுக்காக மதிப்பீட்டு பெறுமதி அறவிடப்பட்டு நீண்டகால அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட வேண்டிய 2 காணித் துண்டுகளை, கிழக்கு நுவரகம்பலாத பிரதேச செயலக பிரிவின் 279 ஆம் இலக்க மஹகலன்வெவ கிராம சேவையாளர் பிரிவின் இரண்டு நபர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. இந்த அனுமதிப்பத்திரங்கள் காணி கட்டளைகள் சட்டத்தின் 19(2) ஆம் பிரிவின் பிரகாரம் வருடாந்த வருமானம் ரூபா 144,000 இற்கு குறைந்த 2 விடுதலை அனுமதிப்த்திரங்கள் என மேலும் அவதானிக்கப்பட்டது. | மதிப்பீட்டுப் பெறுமதி அறவிடப்பட்டு நீண்டகால அனுமதிப்பத்திரம் வழங்கப்பட வேண்டும். | இது தொடர்பாக கிழ்க்கு நுவரகம் மாகாணப் பிரதேசச் செயலாளரினால் காணி ஆணையாளர் நாயகத்தின் ஆலோசனை கோரப்பட்டுள்ளதுடன் காணி ஆணையாளர் நாயகத்தின் 3/4/1/அனு/நானுப/2020/01 மற்றும் 2020.12.01 ஆந் திகதிய கடிதம் மூலம் குறிப்பிட்ட காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட இரண்டு உரிமங்களை இரத்துச் செய்து அக் காணிப் பகுதிக்காக | 2022 பெப்ரவரி வரையில் நீண்ட கால உரிமங்கள் வழங்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அரச காணி கட்டளைச் சட்டத்தின் கீழ் இரண்டு நீண்ட கால குத்தகை உரிமங்களை தயாரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் காணி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள உரிமங்கள் மீண்டும் அரசிற்கு ஒப்படைக்குமாறு பிரதேசச் செயலாளரினால் குறிப்பிட்ட நபருக்கு அறிவிக்கப் பட்டுள்ளது.. | |
| 16. | தேசிய முதியோர் செயலகத்தினால் அனைத்துப் பிரதேச செயலாளர்களுக்கும் அனுப்பப்பட்ட 2020 சனவரி 13 ஆந் திகதிய NSE/DVE/04/02/03/11 ஆம் இலக்கக் கடிதத்தின் பிரகாரம் தங்கள் பிரிவிற்குள் வசிக்கின்ற சிரேஷ்ட குடிமக்களுக்காக ஒரு தடவை மட்டும் செலுத்தப்படுகின்ற ரூபா 30,000 ஆன சுய தொழில் மானியம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 10 பிரதேச செயலகப் | தேசிய முதியோர் செயலகத்தால் செயற்படுத்தப் படுகின்ற செயற்திட்டங்கள் தத்தமது பிரிவிற்குள் செயற்படுத்துவதற்குப் போதியளவு ஊக்கம் காட்டப்படல் வேண்டும். | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தின் போது கலந்துரையாடப்பட்டு பிரதேச செயலாளருக்கு அறிவிக்கப் பட்டுள்ளது. | 2022 பெப்ரவரி வரையில் 2022 செயற்படுத்தப் பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பிரிவுகளில் அச் செயற்திட்டம் நிறைவேற்றப் பட்டிருக்கவில்லை. | | | |
| 17. | மாவட்டத்தில் 21 பிரதேச செயலகங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட பெண்கள் பணியக கடன் செயற் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்களில் வருடத்திற்கும் அதிக காலம் தவணைப் பணம் அறவிடப்படாது காணப்பட்ட கடன்களின் கூட்டுத்தொகை ரூபா 5,530,631 ஆகும். கடன் செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக பெறப்பட்ட ஒதுக்கங்களில் 18 பிரதேசச் செயலகங்களின் வங்கிக் கணக்குகளில் ரூபா 12,560,764 ஆன தொகையொன்று கடன் செயற்திட்டங்களுக்காக பயன்படுத்தப்படாது விளைவற்றதாகக் காணப்பட்டது. | கடன் முன்மொழிவு முறைமையில் எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றக் கூடிய வகையில் செயற்திட்டம் செயற்படுத்தப்படல் வேண்டும். | இது தொடர்பாக பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் களுக்கு நினைவூட்டல்கள் வழங்கப்பட்டு இது மத்தியஸ்த சபைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டு கடனை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்போது மத்தியஸ்த சபைகளின் மூலம் கடன் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2021 செப்டெம்பர் 30 இல் அறவிடப்படாத கடன் நிலுவையின் கூட்டுத்தொகை ரூபா 17,934,807 ஆகக் காணப்பட்டதுடன் அத்தினத்தில் செயலற்ற வங்கிக் கணக்கு மிகுதிகளின் கூட்டுத்தொகை ரூபா 9,589,890 ஆகும்.. |
| 18. | சுப்பர் கிராமம் மக்கள் பங்கேற்கும் கிராமிய அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் நாச்சாதுவ பிரதேசச் செயலாளர் பிரிவில் மஹநெலும்பேவ மதகின் பக்கவாட்டுச் சுவரைப் பழுது பார்ப்பதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 1,980,000 செலவிடப்பட்டிருந்ததுடன் நீர்ப்பாசன | பொறியியலாளரின் அறிவுறுத்தல்களுக்கு முரணாகச் செயற்பட்ட அலுவலர்கள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இச் செயற்திட்டம் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு உரித்தான ஒரு செயற்திட்டமாகும். பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளரின் DEI/NA/W/544 ஆம் இலக்க மற்றும் 2020.02.07 ஆம் திகதிய கடிதம் மற்றும் | மேற்பார்வை செய்த அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை ஆரம்பிக்கப் பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | திணைக்களத்தினால் வழங்கப்பட்ட திட்டத்திற்கு மற்றும் பொறியியலாளரின் அறிவுரைகளுக்கு முரணாக அந் நிர்மாணம் மேற்கொள்ளப்பட்டிருந்த மையால் நிர்மாணிக்கப்பட்டு 06 மாதங்கள் கடக்க முன்னர் கால்வாயின் பக்கவாட்டுச்சுவர் இடிந்து விழுந்ததால் செலவிடப்பட்ட முழுத்தொகையும் விளைவற்ற செலவொன்றாக காணப்பட்டது. | | அனுப்பட்ட திட்டத்தின் பிரகாரம் ஊர் மக்களின் கோரிக்கை காரணமாகப் பிரதேசச் செயலகத்தினால் இச் செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் குறிப்பிட்ட செயற்திட்டம் நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் பிரதேசச் செயலகத்திற்கு வழங்கப்பட்ட திட்டத்தின்படி மேற்கொள்ளப் பட்டிருந்தது என்பதை மேலும் தெரிவித்துக் கொள்கின்றேன். | |
| 19. | புதிய சமுர்த்தி உரிமையாளர்களுக்கு மானியம் வழங்குவது தொடர்பான கிழக்கு நுவரகம் பலாத பிரதேச செயலகப் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட மாதிரிக் கணக்காய்வின் பிரகாரம் 84 பயனாளிகளில் 46 பேர் அதாவது நூற்றுக்கு 55 வீதம் ஆனோர் உரிமைகளைப் பெறுவதற்குத் தகுதி அற்றவர்களௌன்பது அவதானிக்கப்பட்டது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் முன்னுரிமை பட்டியலில் முதலிடத்தில் இருப்பவர்களை விட்டு இறுதியில் இருக்கும் சிலருக்கு இந் நலன்கள் வழங்கப்பட்டிருந்த | கணிப்பீட்டின் பிரகாரம் பொருத்தமானவர் களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். | மேற்குறிப்பிட்ட பயனாளிகளின் அடிப்படையில் சமர்ப்பிக்கப்பட்ட அவதானிப்புக்களின் பிரகாரம் இப்பயனாளிகளுக்க உரிய உரிமைப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த அலுவலகத்தினால் செய்யப்பட்டு வரும் கணிப்பீட்டின் பிரகாரம் நிவாரணம் வழங்குவதற்குப் பொருத்தமான பயனாளிகளின் முன்னுரிமையின் பிரகாரம் | முன்னுரிமைப் பட்டியலின் பிரகாரம் நலன்களுக்கு உரித்துள்ள தகுதியானவர்கள் விடுவிக்கப் பட்டிருந்தனர். . |

| | | | | |
|---|---|---|---|---|
| | சந்தர்ப்பங்கள் காணப்பட்டமை மேலும் அவதானிக்கப்பட்டது. | | பெயர்ப்பட்டியல் தயாரிக்கப்பட்டது. பிரதேசச் செயலாளரினால் அனுமதிக்கப்பட்ட பதிவேடு மாவட்டப் பணிப்பாளர் மூலம் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டது. அதற்குள் தலைமை அலுவலகத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளுக்காக மட்டுமே உரித்துப் பத்திரம் இந்த அலுவலகத்திற்கு கிடைதத்தன் பின்னர் குறிப்பிட்ட பயனாளிகளுக்கு அந்த உரிமை வழங்கப்பட்டது. அதன் பிரகாரம் அதனைத் திருத்தும் அதிகாரம் பிரதேசச் செயலகத்திற்கு இல்லை. | |

| | | | |
|---|---|---|---|
| **பொலன்னறுவ மாவட்ட செயலகம்**<br>**----------------------------------------------------** | | | |
| | 2018 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம | |
| | 2019 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம | |
| | 2020 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம | |
| **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள பிரதான குறைபாடுகள்**<br>**-------------------------** | **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை**<br>**---------------------** | **நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள்**<br>**__________________________** | **அது தொடர்பான தற்போதைய நிலைமை**<br>**---------------------** |

| | | | | |
|---|---|---|---|---|
| 01. | மாவட்ட செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட பூதுர் வீதியில் கூட்டுறவுச் சங்கத்திற்கு அருகில் பக்கச்சுவர் நிர்மாணிக்கும் செயற்றிட்டத்திற்காக தயாரிக்கப்பட்ட ஆரம்ப மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட வைகளுக்கிடையில் ரூபா 1,160,676 தொகையான வேலை நிறைவேற்றப்படவில்லை. இதன் காரணமாக அந்த வேலைக்காக ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாடு முழுமையாக பயன்படுத்தப்படவில்லை. | சரியான மதிப்பீடு தயாரிக்கப்பட்ட பின்னர் ஒதுக்கங்கள் பெறப்படல் வேண்டும்.. | உரிய பிரிவின் மூலம் தகவல்கள் பெறப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இப்பணியை மேற்கொண்ட போது தனியார் வீடொன்று மற்றும் கடையொன்றும் நிர்மாணிக்கப்பட்டிருந்த மையால் மதிப்பீட்டில் 86 மீற்றர் மட்டுமே கட்டப்பட்டுள்ளது. |
| 02. | 2010 யூன் 25 ஆந் திகதியன்று 57-8974 இலக்கமுடைய வாகனத்திற்கு ஏற்பட்ட விபத்துச் சம்பந்தமாக நி.பி 104(4) க்கமைய இறுதி விசாரணை அறிக்கையில் விபத்துக்கான ரூபா 230,000 இழப்பை முன்னாள் திம்புலாகல பிரதேச செயலாளர் ஒருவரிடமிருந்து பெறுவதற்குத் தீர்மானிக்கப்பட்ட போதும், அதனை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இழப்பை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.. | எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | 2022 பெப்ரவரி வரையில் நட்டத்தை அறவிடுவதற்காக ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்திற்கு 2022.01.12 ஆம் திகதிய கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. 2022.02.15 வரையில் அத்தொகை அறவிடப் பட்டிருக்கவில்லை.. |
| 03. | மாவட்டச் செயலகத்தால 2019 இல் நலன் பெறுநர்களுக்கு வழங்கப்படுவதற்கென கட்டளை சமர்ப்பிக்கப்பட்டிருந்த ரூபா 160,902 பெறுமதியான 84 கூரைத் தகடுகள் பழுதடைந்த போதும், வழங்குநரிடமிருந்து | இழப்பை அறவிட வேண்டும்.. | பழுதற்ற தகடுகளை வழங்குவதற்கு அந்த நிறுவனம் இணங்கி உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | 2022 பெப்ரவரி வரையில் வழங்குனரிடமிருந்து இழப்புக்கள் அறவிடப்பட்டிருக்கவில் லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அந்த இழப்பு அறவிடப்படவில்லை. | | | |
| 04. | மனனம்பிடிய மணல் திட்டத்தின் கீழ் திம்புலாகல, மெதிரிகிரிய, வலிகந்த ஹிங்குரக்கொட மற்றும் தமன்கடுவ பிரதேச செயலகத்தினால் விநியோகிப்பதற்காக 2018/2019 ஆம் வருடங்களில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 330,595 பெறுமதியான 185 கூரைத் தகடுகள் பழுதடைந்திருந்ததுடன் அது தொடர்பில் புதிய கூரைத்தகடுகளை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கொள்வனவு செய்யும் போது தரம் தொடர்பில் கவனம் செலுத்துவதுடன் உரிய நிறுவனங்களிடமிருந்து பழுதான தகடுகளுக்குப் பதிலாக புதிய தகடுகளை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | பழுதடைந்த தகடுகளுக்குப் பதிலாக புதிய தகடுகளை வினியோகிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | 2022 பெப்ரவரி வரையில் பழுதடைந்த கூரைத்தகடுகளுக்குப் பதிலாக புதிய கூரைத்தகடுகள் வழங்குநரிடமிருந்து பெறப்பட்டிருக் கவில்லை. அவற்றின் தற்போதைய பெறுமதி (வட் நீங்கலாக) அண்ணளவாக ரூபா 547,970 ஆகும். |
| 05. | தாபன விதிக் கோவையின் xxiv ஆம் அத்தியாயத்தின் 4.6 ஆம் பந்தியின் பிரகாரம் வேலை நீக்கத்திற்கு உட்பட்டிருந்த உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட அறவிட வேண்டிய ரூபா 408,048 ஆன கடன் மீதிகயை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.. | குறித்த உத்தியோகத்தருக்கு எதிராக வழக்கு தொடருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2022 பெப்ரவரி 10 வரையில் அறவிடப்பட்டி ருக்கவில்லை. |
| 06. | பொலன்னருவ மாவட்ட செயலகத்தினால் வ/ப பொலன்னருவ மாவட்ட அரிசி உற்பத்தியாளர்களிட மிருந்து கூட்டுறவுச் சங்கங்கத்திற்கு 2019 மார்ச் 26 ஆந் திகதி முதல் 2019 ஆகஸ்ட் 06 ஆந் | அரசிற்குரிய பணத்தை உரிய தரப்பினரிடமிருந்து தாமதமின்றி பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உடன்படிக்கையின் பிரகாரம் 06 மாதங்கள் கடப்பதற்கு முன்னர் பூர்த்தி செய்யுமாறு அவ்வப்போது குறித்த தரப்பினர் அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.. | குறிப்பிட்ட தொகையை அறவிடுவதற்காக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் விசாரணையொன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | திகதி வரை 118-02-03-48-1409 ஆம் இலக்க செலவின விடயத்தின் கீழ் கொள்வனவு செய்வதற்காக ரூபா 206 மில்லியன் கடன் தொகை வழங்கப்பட்டிருந்தது. எனினும் அத்தொகையிலிருந்து ரூபா 66.4 மில்லியன் இதுவரை செலுத்தப்படாதிருந்ததுடன் ரூபா 139.5 மில்லியன் தாமதமாக அறவிடப்பட்டிருந்தது. | | | |
| 07. | பொலன்னருவ மாவட்டத்தில் முதலாவது கட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள 29 கிராம சக்தி மக்கள் வியாபார சங்கங்களில் 10 சங்கங்கள் செயலற்று உள்ளதாக இனங்காணப்பட்டுள்ளதுடன் அவ்வாறு செயற்பாடற்ற சங்கங்களுக்காக வாழ்வாதார அபிவிருத்தி, இயலளவு அபிவிருத்தி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி நிதியங்களிலிருந்து வழங்கப்பட்டிருந்த ரூபா 5,308,349 தொகை விளைவற்றுக் காணப்பட்டன. | செயலற்ற சங்கங்களை செயற்படக்கூடிய சங்கங்களாக நடாத்திச் செல்லப்பட வேண்டியதுடன் நிதியத்தை செயற்திறனாகப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | செயலற்ற சங்கங்கள் கலைக்கப்பட்டுள்ள துடன் விளைவற்றுக் காணப்படும் காசு மற்றும் சொத்துக்கள் என்பவற்றை மீள கையேற்குமாறு பிரதேச செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | இந்த செயலற்ற சங்கங்கள் தொடர்பாக மேற்கொண்ட நடவடிக்கைகளை எடுப்பதற்காக சமுர்த்தி மனைப் பொருளியல் நுண்நிதி சுய தொழில் இராஜாங்க அமைச்சினால் அறிவுறுத்தல்கள் கோரப்பட்டிருந்ததுடன் 2022 பெப்ரவரி வரையில் பதில் வழங்கப்பட்டிருக் கவில்லை. |
| 08. | கிராம சக்தி மக்கள் வியாபாரத்தின் செயற்படக்கூடிய சங்கங்களில் முதலாம் கட்டத்தின் கீழ் வாழ்வாதார அபிவிருத்தி, இயலளவு அபிவிருத்தி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 8,963,712 தொகை 2020 ஆம் | நிதியம் செயற்திறனாக பயன்படுத்த வேண்டியதுடன் அது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். . | மாதாந்த செயன் முன்னேற்றத்தை பெற்றுக் கொள்ளுமாறும் வெளிக்கள பரிசோதனைகளை மேற்கொண்டு பயன்பாட்டிற்கு எடுக்குமாறும் சங்கத்தின் உத்தியோகத்தர் | 2021 வருட இறுதியில் ரூபா 4,711,927 ஆனது பயன்பாட்டிற்கு எடுக்கப் பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆண்டில் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | களுக்கு அவ்வப்போது ஆலோசணை வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | |
| 09. | கிராம சக்தி மக்கள் வியாபாரத்தின் செயற்படக்கூடிய சங்கங்களில் இரண்டாம் கட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட 26 சங்கங்களில் 23 சங்கங்கள் செயலற்று உள்ளதாக இனங்காணப்பட்டுள்ளதுடன் வாழ்வாதார அபிவிருத்தி, இயலளவு அபிவிருத்தி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தியின் கீழ் வழங்கப்பட்டிருந்த ரூபா 9,374,289 தொகை பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டன. | சங்கங்களை செயற்படக்கூடிய சங்கங்களாக நடாத்திச் செல்லப்பட வேண்டியதுடன் நிதியத்தை செயற்திறனாகப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | செயலற்ற சங்கங்களை கலைத்து அரசினால் வழங்கப்பட்ட அனைத்து காசு மற்றும் சொத்துக்கள் என்பவற்றை மீள கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | குறிப்பிட்ட சங்கங்களின் வங்கிக் கணக்குகளில் விளைவற்றுக் காணப்பட்ட அரச பணம் தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய மேற்கொண்ட நடவடிக்கைகள் தொடர்பாக சமுர்த்தி அமைச்சிடம் விசாரிக்கப்பட்டுள்ளது. 2022 பெப்ரவரி வரையில் பதில் வழங்கப்பட்டி ருக்கவில்லை. |
| 10. | பொலன்னருவ கட்டி யெழுப்புதல் செயற் திட்டத்தின் கீழ் ரூபா 4,425,190 ஆன கிரயத்தில் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட “லக்ஷி உயன ரணவிரு பூங்காவிற்கு” உரிய செயற் திட்டத்தின் ரூபா 1,276,161 இற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த 11 உருப்படிகள் நிறைவேற்றப் பட்டிருக்கவில்லை. மேலும் பௌதீக ரீதியாக காணப்பட்ட நிர்மாண அளவினை விட ரூபா 348,089 தொகை கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.<br>அவ்வாறே ரூபா 470,611 ஆன செலவினமொன்று | உரிய தரத்துடன் மற்றும் மேற்பார்வையுடனும் செயற்திட்டங்களை செயற்படுத்த வேண்டியதுடன் மிகை கொடுப்பனவை அறவிடுவதற்கும் குறைபாடுகளை சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முன்னாள் ஜனாதிபதியுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் பிரகாரம், திட்டங்களை அவ்வப்போது மாற்றப்பட்டதுடன், மேலதிக கொடுப்பனவுகளை பிடிகாசில் இருந்து மீளப் பெற்றுக் கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. உத்தரவாத காலம் முடிவதற்குள் குறைபாடுகளை சரி செய்து தருமாறு | பிடிகாசில் மேலதிகக் கொடுப்பனவுகள் ரூபா 348,089 மட்டுமே அறவிடப்பட்டிருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்டிருந்த டைடேனியம் கழன்று போயிருந்தது. | | ஒப்பந்ததாரருக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளது. | |
| 11. | ஓய்வு பெற்ற தொழில்நுட்ப உதவியாளர் ஒருவர் ஒப்பந்த காலம் முடிவடைந்தும் 32 வருடங்களாக மாவட்ட செயலக விடுதியில் குடியிருப்பதனால் அறவிடப்பட வேண்டிய தண்டப்பண வாடகை ரூபா 319,849 தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை | வீட்டுரிமையை பிரதேச செயலகத்திற்கு மீண்டும் பெற்றுக்கொள்ள மற்றும் தண்டப்பண வாடகையை அறவீடு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.. | விடுதி உரிமையை கையகப்படுத்தல் தொடர்பாக வழக்குப்பதிவு செய்வதற்கு மற்றும் தண்டப்பண வாடகை தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | அந்த வீடு மாவட்டச் செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது டன் ஓய்வூதியப் பணிக்கொடை தயாரிக்கப்பட்டு வருவதுடன் அதன் மூலம் குறிப்பிட்ட தண்டப் பண வாடகையை அறவிடுவதற்கு மேற்கொண்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| 12. | மாவட்ட செயலகத்திற்குரிய அரச வீடொன்று 2014 ஆம் ஆண்டிலிருந்து 2020 மே மாதம் வரை மோட்டார் வாகன பரிசோதகர்கள் குடியிருந்ததுடன் அவர்களிடம் அறவிட வேண்டிய நிலுவை வாடகையை கணக்கிட்டு அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | முன்னைய நிலுவை வாடகையை கணக்கிட்டு உரியவர்களிடம் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.. | நிலுவை வாடகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | 2022 பெப்ரவரி வரையில் நிலுவை வாடகை அறவிடப்படவில்லை. |
| 13. | எலஹெர மற்றும் அந்தனகடவல சமுர்த்தி சமூக அடிப்படையிலான வங்கி மூலம் 163 கணக்கு உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 5,800,123 தொகையான கடன் பணத்தை | செலுத்துவதற்கு புறக்கணித்துள்ள கடன்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும. | கடன் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | 2022 பெப்ரவரி 16 வரை நிலுவைத் தொகை ரூபா 1,824,402 ஆகும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | | | |
| 14. | எலஹெர பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான நிலசெவன அலுவலகம் அமைந்துள்ள 24 காணிகளது உரித்தை மஹாவலி அதிகார சபையிடமிருந்து பிரதேச செயலகம் சுவீகரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | காணிகளின் உரித்தைச் சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும. | உத்தியோகத்தர் களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.. | குறிப்பிட்ட காணியை மகாவலி அதிகார சபைக்கு ஒப்படைப்பதற்கு கோரிக்கை சமர்ப்பிக்கப் பட்டுள்ளது. |
| 15. | 2015 ஆம் ஆண்டில் 549 காணிக் குழுவினரின் பொருட்டு நடாத்தப்பட்ட காணிக் கச்சேரி எலஹெர பிரதேச செயலகத்தால் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. குழுவினர் தொடர்பாகப் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | இரத்துச் செய்யப்பட்ட காணிக் கச்சேரிக்குப் பதிலாக மீண்டும் காணிக் கச்சேரி நடாத்தப்பட வேண்டும்.. | காணி ஆணையாளருக்கு நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதாக பதில் கிடைத்தவுடன் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | வன சீவராசிகள் வலயமொன்றாக வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள இக் காணிகளை விடுவிப்பதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பான பரிந்துரைகள் வனசீவராசிகள் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து இற்றை வரையில் பெறப்படவில்லை. காணி ஆணையாளர் நாயகத்திடமிருந்து 2020.02.12 மற்றும் 2021.11.20 ஆந் திகதிய கடிதங்கள் மூலம் பரிந்துரைகள் கோரப்பட்டுள்ளன. |
| 16. | எலஹெர பிரதேச செயலகத்தில் வழங்கற் பத்திரத்தின் மூலம் அளிக்கப்பட்ட காணி ஒன்று வழங்கற் பத்திர நோக்கத்திற்கப்பால் இரு | வழங்கற் பத்திரத்துடனான காணி குறித்த நிபந்தனைகளின் கீழ் பயன்படுத்தப்பட வேண்டும். | முறையாக அகற்றப்படவில்லை என்றும் காணி உரித்தாளர் படிப் பத்திரம் அரசாங்கத்திடம் | 2022 பெப்ரவரி வரையில் பிரச்சினை தீர்க்கப்பட்டிருக் கவில்லை. முறையான குத்தகை அனுமதிப் |

| | | | | |
|---|---|---|---|---|
| | கோர்புரங்களை அமைப்பதற்குப் பயன்படுத்தப்பட்டிருந்தது.. | | ஒப்படைக்கப்பட வில்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.. | பத்திரமொன்று பெறப்படவில்லை. |
| 17. | 2019/2020 பெரும்போகத்தில் அரசின் ஈடுபாட்டுடன் பேரில் செயற்படுத்தப்பட்ட நெல் கொள்வனவு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தம்மன்கொட்டுவ, மெதிரிகிரிய எலஹர மற்றும் வெலிகந்த ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் நெல் ஆலை உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்த நெல் இருப்புக்களில் அரசிற்கு வழங்க வேண்டிய 996,223 கிலோ கிராம் அரிசி பெற்றுக்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | அரசிற்கு வழங்க வேண்டிய அரிசி இருப்பை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.. | உடன்படிக்கை பிரகாரம் அரிசியை வழங்குவதற்கு அரிசி உடமையாளர் பொறுப்பாக இருப்பதால் அரசிற்கு எந்தவிதமான ஆபத்தொன்று இல்லையென்றும் அரிசி இருப்பை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக பிரதேச செயலாளரால் அறிவிக்கப்பட்டிருந்தது. | இந்த நெல் இருப்பின் பெறுமதி தவணை முறையில் அறவிடப்பட்டு வருவதுடன் 2022 சனவரி வரையில் மெதிரிகிரிய, தம்மன்கொட்டுவ, வெலிகந்த பிரதேசச் செயலகங்களின் மூலம் அறவிடப்பட வேண்டிய நிலுவைத் தொகை ரூபா 6,524,043 ஆகும். |
| 18. | எலஹர பிரதேச செயலகத்தின் பிரிவில் தனியார் உரித்துள்ள காணியொன்று அரச காணியாக, கருதி பகிர்ந்து 2000 ஏப்ரல் 26 ஆந் திகதி காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் நீதவான் நீதிமன்றத்தில் 2017 செப்தெம்பர் 28 ஆந் திகதி தனியார் உரித்தாளருக்கு இக் காணி உரித்தாதென தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தது. இதனால் 8 காணி உடமையாளர்களுக்கு காணி கிடைக்காமல் போயிருந்ததுடன் காணி உரித்து தொடர்பாக கருத்திற் கொள்ளாமல் காணி பகிர்ந்தளிக்கப்பட்டதால் அக்காணியை அபிவிருத்தி | முறையான பரிசோதனையொன்று இல்லாமல் தனியார் காணி காணியொன்றாக பகிர்ந்தளித்த அதிகாரிகள் தொடர்பான முறையான நடவடிக்கை எடுக்க வேண்டும். . | வேறு காணியொன்று முன்மொழியப்பட்டு அதற்காக விவசாயிகள் விருப்பம் தெரிவித்துள்ளதுடன் வனசீவராசிகள் பணிப்பாளர் நாயகத்தின் இணக்கப்பாடு கிடைக்கப் பெற்றதன் பின்னர் காணித்துண்டை பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | தனிப்பட்ட காணியொன்று அரச காணியாக கருதப்பட்டு பகிர்ந்தளித்த அதிகாரிகள் தொடர்பாக இற்றை வரையில் பரீட்சிக்கப்படவில்லை. தமனேயாய பிரிவில் படுவன்ஹல பிரதேசத்தில் அமைந்துள்ள காணி ஒன்றினை பாதிக்கப்பட்ட தரப்பினரிடம் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | செய்த அனுமதிப்பத்திரதாரர்கள் நிர்க்கதியாக்கப்பட்டிருந்தனர். | | | |
| 19. | எலஹர பிரதேச செயலகப் பிரிவில் சமூர்தி உத்தியோகத்தர்களால் ரூபா 2,428,067 தொகை நிதி மோசடி செய்யப்பட்டிருந்ததுடன் அவர்களால் முதலாவது உப அட்டவணைக்கு எடுக்கப்படும் அம் மோசடி செய்யப்பட்டுள்ளதாக ஒழுக்காற்று பரிசோதனையின் பிரகாரம் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. இருந்தும் சமூர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்தினால் அந்த உத்தியோகத்தர்கள் இரண்டாம் உப அட்டவணைக்கு எடுக்கும் போது தவறொன்று இடம்பெற்றிருப்பதாக தீர்மானிக்கப்பட்டு மீண்டும் சேவையில் அமர்த்தியிருந்ததுடன், ஏற்பட்ட நட்டத்தினை அறவிடுவதற்கும் நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | அரச உத்தியோகத்தர்களின ால் மேற்கொள்ளக்கூடிய பிழைகள் தொடர்பில் முதலாவது அட்டவணை மற்றும் இரண்டாம் அட்டவணைக்கு எடுக்கப்படும் நிதி மோசடியை அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஒழுக்காற்று அதிகாரியின் இறுதித் தீர்மானத்தின் கீழ் இவ் உத்தியோகத்தர்களை மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்டிருந்தனர். நட்டத்தினை அறவீடு செய்வது தொடர்பில் குறிப்பிப்படவில்லை என்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | ஒழுக்காற்று உத்தரவில் நட்டத்தை அறவிடுவதைக் குறிப்பிடாது பின்னர், இது பிழையெனக் குறிப்பிட்டு கடிதமொன்று அனுப்பபட்ட போதிலும் அந் நட்டம் கணக்கிடப்பட்டு புலனாய்வுப் பிரிவிற்கு அறிவிக்கப்பட்ட போதிலும் இற்றை வரை எவ்வித பதிலும் கிடைக்கவில்லை. |
| 20. | மெதிரிகிரிய, தமன்கடுவ, எலஹர மற்றும் ஹிங்குரக்கொட பிரதேச செயலக அதிகாரப்பிரிவினுள் மத்திய அரசுக்குச் சொந்தமான 51 காணி உரிமையாளர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 7,299,210 ஆன நிலுவை குத்தகை வருமானத்தைத் | நிலுவை குத்தகை தொகைகளை குறித்த தினத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | மெதிரிகிரிய பிரதேச செயலகத்தினால் குத்தகை இடத்தை இடை நிறுத்துவதற்கு காணி ஆணையாளரிடம் ஆலோசனை கேட்டுள்ளதாகவும், ஹிங்குரக்கொட, தமன்கடுவ, மற்றும் | ஹிங்குரான்கொட மற்றும் எலஹர பிரதேசச் செயலகங்களில் இன்னும் அறவிடப்படவேண்டிய நிலுவைக் குத்தகை வருமானம் ரூபா 4,274,012 ஆகும்.. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | எலஹர பிரதேச செயலகத்தினால் குத்தகை தொகைகளை அறவிடுவதற்கு உத்தியோகத்தர் களுக்கு அறிவித்துள்ளதாகவும், குத்தகை சலுகை பெற்றுக் கொள்வதற்குமான இயலுமை தொடர்பாக விசாரித்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. | |
| 21. | வெலிக்கந்த மற்றும் தமன்கடுவ பிரதேச செயலகங்களால் கிராமிய பொருளாதார அபிவிருத்தி செயற்திட்டங்களுக்குரிய வீதிகளை அபிவிருத்தி செய்யும் போது பிரதேச செயலகத்தின் மூலம் உள்ளக இணைப்பு கற்களைக் கொள்வனவு செய்யாமல் ஒப்பந்தகாரரினாலேயே வழங்குவதற்கு சந்தர்ப்பமளித்து அதற்காக மாகாண விலைகளின் படி கொடுப்பனவு செய்யப்பட்டதன் காரணமாக ரூபா 3,134,751 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.. | கொள்வனவு செய்யும் போது அரசாங்கத்திற்கு மிகவும் பொருளாதார நலனுடனான முறைமையொன்று பயன்படுத்தப்பட வேண்டி அதிகமாகக் கொடுப்பனவு செய்யப்பட்ட தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | செயற்திட்டம் அங்கீகரிக்கப்பட்ட முறைமையின் அடிப்படையில் அது மேற்கொள்ளப் பட்டுள்ளது. | விழித்தெழு பொலன்னறுவை செயற்திட்டத்திற்காக சனாதிபதி செயலகத்தின் பணிப்புரைக்கு அமைய மிகக் குறைந்த விலையில் ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட கற்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. கிராமியப் பொருளாதார அபிவிருத்திச் செயற்திட்டங்களை நடைமுறைப் படுத்துவதில் ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட கற்களுக்கு வட மத்திய மாகாணங்களின் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்படுவதால் அதற்காக மேலதிக கொடுப்பனவுகள் செலுத்த வேண்டியிருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| 22. | தமன்கடுவ பிரதேச செயலகப் பிரிவில் படி பத்திரம் மற்றும் ஜயபூமி பத்திரங்களின் 559 பிரதிகள் அளவு அளவிடை செய்யாமலும் நில வரைபடங்களைப் பெற்றுக் கொள்ளாமல் வழங்கப்பட்டுள்ள படி பத்திரம் மற்றும் ஜயபூமி பத்திரங்களின் அளவு எவ்வளவு என இனங்கண்டு அதனை அளவிடுவதற்கும் நில வரைபடங்களைப் பெற்றுக் கொள்வதற்கும் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | அளத்தல் கட்டளை மற்றும் வரைபடங்களைப் பெற்றுக் கொள்ளாமல் வழங்கப்பட்டுள்ள படிப் பத்திரங்கள் மற்றும் ஜயபூமி பத்திர எண்ணிக்கைகள இனங்கண்டு மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிலைபேறான தீர்வு வழங்கப்படும்.. | 168168 ஜயபூமி படிப்பத்திரங்கள் வழங்கப்பட்ட காணிகளை அறவீடு செய்வது தொடர்பில் காணி அமைச்சு மற்றும் நில அளவைத் திணைக்களம் இன்னும் தெளிவான முடிவொன்றை எடுக்கவில்லை. |
| 23. | சனாதிபதியினால் கையொப்பமிடப்பட்ட லங்காபுற பிரசே செயலகப் பிரிவிற்குரிய 292 உரித்துறுதிகள் மற்றும் 113 அனுமதிப்பத்திரங்கள் மற்றும் தமன்கடுவ பிரதேச செயலகப் பிரிவிற்குரிய 25 உரித்துறுதி படி பத்திரங்கள் என்பவற்றை பகிர்ந்தளிப்பதற்கோ அல்லது இனங்காண முடியாத மற்றும் பிரச்சினைகளுள்ள உரித்துறுதி மற்றும் அனுமதிப்பத்திரங்களை இரத்துச் செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நலனாளிகளை இனங்கண்டு பகிர்ந்தளிப்பதற்கு அல்லது இனங்காண முடியாத மற்றும் பிரச்சினைக்குள்ள உரித்துறுதிகள் மற்றும் அனுமதிப் பத்திரங்களை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.. | மிகுதி செயற்பாடுகளுக்காக பிரதேச செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | 2022 வரையில் பகிர்ந்தளிக்கப்படு மென்பது உறுதி செய்யப்படவில்லை. |
| 24. | 2020 ஆம் வருடத்தினை அடிப்படையாகக் கொள்ளப்பட வேண்டிய வடமத்திய மாகாண பெறுகை வீதங்கள் (Building work rate) தொடர்பாக 2020 யூன் 30 ஆம் திகதிக்குப் பின்னர் பிரதேச செயலகங்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளதால் அத் | நிலையான கட்டணங்களின் அடிப்படையில் கொடுப்பனவு செய்யப்பட வேண்டியதுடன் மேலதிகமாகச் செய்யப்பட்ட கொடுப்பனவுகள் உரிய | பிடிகாசு விடுவிக்கப் படாமையால் மேலதிகமாகச் செய்யப்பட்ட கொடுப்பனவுகளை அறவிடுவதற்கு நடவடிக்கைகளை எடுப்பதாக மெதிரிகிரிய, தம்பன் கொட்டுவ மற்றும் லங்காபுர | வெலிகந்த மற்றும் மெதிரிகிரிய பிரதேசச் செயலக அலுவலகங்களில் 2022 பெப்ரவரி வரையில் அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 2,333,135 ஆகும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | திகதிக்குப் பின்னர் ஒப்பந்தம் செய்யப்பட்ட நிர்மாண ஒப்பந்தங்களுக்காக அப்பெறுகை வீதங்கள் அடிப்படையாகக் கொள்ளப்பட வேண்டிய போதிலும் பொறியியல் மதிப்பீடு தயாரித்தல் மற்றும் கொடுப்பனவு செய்வதற்கு 2019 ஆம் வருடத்தின் வடமத்திய மாகாண பெறுகை வீதங்கள் பயன்படுத்தப்பட்டிருந்தமையால் தம்பன்கடுவ, லங்காபுர, மெதிரிகிரிய, மற்றும் வெலிகந்த பிரதேச செயலகத்திற்கான பிரதேசங்களில் 48 வீதி அபிவிருத்திச் செயற்திட்டங்களுக்காக ரூபா 3,437,624 அதிகமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பிரதேசச் செயலகத்தினால் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் அதே செயற்திட்டத்தின் உப செயற்திட்டங் களுக்காக ஒரே வீதமே பின்பற்றப்பட்டுள்ளதாக வெலிகந்த பிரதேசச் செயலாளர் தெரிவித்துள்ளார். | |
| 25. | தம்மன்கொட்டுவ, வெலிகந்த மற்றும் மெதிரிகிரிய ஆகிய பிரதேச செயலகங்களுக்குரிய சமூர்த்தி சமுதாய வங்கிச் சங்கங்களின் கணக்குகளிலிருந்து சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் மீளளிப்பு அடிப்படையில் சலுகை செயற்பாடு மற்றும் சஹன அருணலு படிகள் கொடுப்பனவிற்காக ரூபா 86,384,000 செலவிடப்பட்டிருந்த போதும் அப்பணம் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் மீளளிக்கப்படவில்லை. | சமூர்த்தி அபிவிருத்தி திணைக்களத்திடமிருந்து மீளளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அப்பணத்தை மீளளிக்குமாறு கோரப்பட்ட போதும் மீளளிக்கப்படவில்லை என அறிவிக்கப்பட்டிருந்தது.. | 2022 சனவரி வரையிலும் இத் தொகை மீளளிக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| 26. | 2017 மற்றும் 2019 ஆண்டுகளில் பொலன்னறுவை கட்டியெழுப்புவோம் வீதி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் தமன்கடுவ பிரதேச செயலக அதிகாரப்பிரிவில் கையேற்கப்பட்ட 1.6564 ஹெக்டேயர் 67 காணித் துண்டுகள் தொடர்பாக நாளது வரையான தேவையான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படாமையால் உரிய காணி உரிமையாளர்களுக்கு நட்டஈடு செலுத்தப்பட்டிருக்கவில்லை. இதனால் கொடுக்க வேண்டிய தொகை தொடர்பில் தாமதமாகும் காலத்திற்கு எதிர்காலத்தில் வருடாந்தம் 7% வட்டியடன் கொடுப்பனவு செய்வதனால் அரசிற்கு மேலதிக செலவினைப் பொறுப்பொன்று மேற்கொள்ள நேரிடலாம். | விரைவாக நட்டஈட்டுத் தொகையை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதனூடாக அரசிற்கு ஏற்படும் நட்டத்தினை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | நட்டஈடு செலுத்தும் செயற்பாடு தொடர்பில் குறிப்பிடத்தக்களவு காலம் எடுப்பதுடன் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | இழப்பீடுகள் வழங்கப்படாத 58 காணித்துண்டு களுக்கான உரிமைகள் பரிசோதனை செய்யப்பட்டு மதிப்பீட்டு அறிக்கைகளைப் பெற்றுக் கொள்வதற்காக அனுப்பப்பட்டுள்ளது. சர்ச்சைகுரிய காணித்துண்டுகள் நீதி மன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன. 09 காணித்துண்டு களுக்கான இழப்பீடுகள் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. |
| 27. | ஹிங்குரக்கொட பிரதேச செயலக அதிகாரப்பிரிவினுள் அபிவிருத்தித் திட்டம் மற்றும் அரச நிறுவனங்களின் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் தொடர்பாக 1984 – 2011 கால எல்லைக்குள் கையேற்கப்பட்ட 0.97 ஹெக்டேயர் காணி தொடர்பில் நாளதுவரையாக செயற்பாடுகள் நிறைவேற்றாமையினால் உரிய காணி உரிமையாளர்களுக்கு நட்டஈடு செலுத்தப்பட்டிருக்கவில்லை. அதனால் செலுத்த வேண்டிய | விரைவாக நட்டஈட்டுத் தொகையை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதனூடாக அரசிற்கு ஏற்படும் நட்டத்தினை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | விமானப்படையினரால் அவசரத் தேவையின் நிமித்தம் காணிகள் சுத்திகரிக்கப் பட்டதனால் காணி எல்லைகளை அறிந்து கொள்ள முடியாமையினால் இந்நிலைமை ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது.. | விமானப்படையினரால் அவசரத் தேவையின் நிமித்தம் காணிகள் சுத்திகரிக்கப்பட்ட தனால் எல்லைகளைக் கண்டுபிடிக்க முடியாதிருந்தமையால் காணித்துண்டுகளை மதிப்பீடு செய்வதற்கு முடியாதிருந்தமையால் உரிமையாளர்களுக்கு இழப்பீடு செலுத்துவதற்கு முடியாதிருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | தொகை தாமதமாகும் காலத்திற்கு வருடாந்தம் 7% வட்டியுடன் செலுத்த வேண்டியேற்பட்டதனால் அரசிற்கு மேலதிக செலவீடொன்று ஏற்பட்டதுடன் காணி உரிமையாளர்களுக்கு வாழும் காலத்தில் நட்டஈடு பெறமுடியாத நிலை ஏற்பட்டிருந்தது. | | | |
| 28. | பொது நிரவாக உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி நிர்வாக அமைச்சின் செயலாளரின் 20/02/2020 ஆம் திகதிய 6/2020 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 03 ஆவது பந்தியின் பிரகாரம் 10 தீர்மானங்களின் அடிப்படையில் கிராம சேவையாளர் பிரிவு மட்டத்தில் நேர்முகப்பரீட்சை நடாத்தி பிரதேச செயலகங்களுக்கு பல்பணி அபிவிருத்தி உதவியாளர்கள் இணைக்கப்பட்டிருந்ததுடன் ஆனால் பிரிவுகளில் அதிக புள்ளிகளைப் பெற்றவர்கள் இருந்தும் குறைவான மற்றும் பூச்சிய புள்ளிகளைப் பெற்றவர்கள் தெரிவு செய்யப்பட்டு இணைத்துக் கொள்ளப் பட்டிருந்தமையால் ஆட்சேர்ப்பு முறையாக செய்யப்படிருக்கவில்லை. | ஒரு இலட்சம் அரச தொழில்கள் வழங்கும் வேலைத்திட்டத்தின் அடிப்படை நோக்கம் நிறைவேறும் விதத்தில் வெளிப்படைத் தன்மையுடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். | ஆட்சேர்ப்பு செய்தல் மற்றும் தெரிவு செய்யும் நடவடிக்கைகள் பல்பணி அபிவிருத்தி செயலணி திணைக்களத்தினால் மேற்கொள்ளப் பட்டதாக.. | நியமனம் வழங்கப்படுதல் மற்றும் தெரிவு செய்தலானது பல் பணி அபிவிருத்தி செயலணி திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. இது தொடர்பாக நேர்முகப் பரீட்சை மாத்திரம் பிரதேசச் செயலகங்களினால் மேற்கொள்ளப் படுகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| 29. | விளையாட்டு அமைச்சினால் செயற்படுத்தப்படுகின்ற நடமாடும் வீதிக்கூறு நிர்மாணச் செயற்திட்டத்தின் கீழ் திம்புலாகல பிரதேச செயலகப் பிரிவில் மக்களுக்கு நடமாடும் வீதி கூறொன்று ரூபா 1,959,698 தொகை செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. எனினும் நடமாடும் வீதிகளின் தேவை உறுதிப்படுத்தப்படாத எந்தவொரு நபரினாலும் பராமரிப்பு மற்றும் பயன்படுத்தப்படாத செயற்திட்டமாகக் காணப்பட்டது. | முறையான சாத்திய வள ஆய்வின் பின்னர் செயற்திட்ட முன்மொழிவு தயாரிக்கப்பட வேண்டும்.. | நடமாடும் வீதிக் கூறை பயன்படுத்துவதற்கு பிரதேசத்தின் தொண்டர் அமைப்புக்கள் ஊடாக மக்களுக்கு தெளிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | 2022 பெப்ரவரி 10 ஆந் திகதி கணக்காய்வினால் சுயாதீன பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்ட போது நடைபாதை நிரம்பியிருந்ததால் அதைப் பயன்படுத்திய மைக்கான அல்லது பயன்டுத்துவதற்கான சான்றுகள் காணப்படவில்லை.. |
| 30. | மெதிரிகிரிய பிரதேச செயலகப் பிரிவில் பயிர்ச் செய்கை கிணறுகளை அமைப்பதற்காக ரூபா 20,000 வீதம் 22 பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட ரூபா 440,000 ஆன பொருள் உதவிகள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படவில்லை.. | செயற்திட்டத்தை ஆரம்பித்து அதன் விளைவுகளைப் பெறும் வரை பின்தொடர் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ள வேண்டியதுடன் வழங்கப்பட்டுள்ள பொருள் உதவிகள் பயன்படுத்தப்ப டாமைக்கான காரணம் பரீட்சிக்கப்பட்டுத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பயனாளிகளிடமிருந்து உரிய பணத்தை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.. | 04 பயனாளிகளிடம் ரூபா 13,000 மட்டுமே அறவிடப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள நபர்களுக்கு அரச பணத்தை அபகரித்தமை தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் பொறுப்பதிகாரி மெதிரிகிரிய விற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. |
| 31. | மெதிரிகிரிய பிரதேச செயலகத்திற்குரிய உத்தியோகபூர்வ மனையில் | நிலுவையை அறவிடுவதற்கு | மேற்கொண்டு நடவடிக்கை | நிலுவைத் தொகையை அதிகாரியின் விதவைகள் மற்றும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | குடியிருக்கும் உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து வீட்டு வாடகை நிலுவையாகிய ரூபா 153,600 அறவிடப்படவில்லை. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எடுக்கப்படுவதாகத் அறிவிக்கப்பட்டுள்ளது.. | அனாதைகள் ஓய்வுதியத்திலிருந்து அறவிடுவதற்கு அல்லது அவரது மனைவி அரச சேவையில் இருப்பதால் அவரது சம்பளத்தில் நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு மேற்கொண்ட நடவடிக்கைகளை எடுப்பதாக 2021.10.22 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் மாவட்டச் செயலாளரினால் தெரிவிக்கப்பட்டுள்ள. |
| 32. | ரூபா 1,479,000 செலவில் லங்காபுற சோமபுற பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட பொதுக் கிணறுகள் மற்றும் கரப்பந்து விளையாட்டு மைதானம் என்பன விளைவற்றுக் காணப்பட்டன. | செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு அதன் பெறுபேறுகள் கிடைக்கும் வரை பின்தொடர் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் பயன்படுத்தப் படாமைக்கான காரணம் பரீட்சிக்கப்பட்டுத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பொதுக் கிணறுகளுக்காக நீர் தாங்கி ஒன்றைப் பொருத்தி விளையாட்டு மைதானத்தைச் சுற்றி வலை மேவுகை செய்து பாவனைக்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.. | பொதுக் கிணறுகளின் பயன்பாட்டிற்காக மீள்சுழற்சி நீர் அமைப்பொன்றை அமைப்பதற்காக 2022 ஆம் வருடத்தில் கிராமியக் குழுவிடம் முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது. தற்போது இவ்விரு செயற்திட்டங்களும் பயன்பாட்டில் உள்ளனவா என்பது வெளிப்படுத்தப் படவில்லை. |
| 33. | சனாதிபதி அலுவலத்தின் கிராம சக்தி மக்கள் தொழில் முயற்சியின் கீழ் லங்காபுற தேவால கொடெல்ல விவசாய | செயற்திட்டத்திற்கு மின்சாரம் பெறப்பட்டுச் செயற்படுவதற்கு தேவையான | கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரி செய்வதற்கு | 2022 சனவரி 15 ஆந் திகதி கணக்காய்வினால் பரிசோதிக்கப்பட்ட |

| | | | | |
|---|---|---|---|---|
| | நீர் செயற்திட்டத்தின் மின்சார இணைப்பிற்காக தேவையான பொருட்கள் 2017 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்த போதிலும், மின் இணைப்பு பெறப்படாமையினால் அந்த பொருட்கள் / உபகரணங்கள் பயனற்றுக் காணப்பட்டது. | நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். . | நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.. | சந்தர்ப்பத்தில் மின்சாரத்தைப் பெற்றுக்கொள்வ தற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| 34. | வீட்டுத்தோட்ட செய்கைக்காக மாற்று எரிசக்தியாக சூரிய சக்தியை வழங்கும் செயற்திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட இரண்டு பாடசாலைகளால் அச்செயற் திட்டத்தை செயற்படுத்தாமை காரணமாக அதற்காக ரூபா 166,500 வீதம் கொள்வனவு செய்யப்பட்டிருந்த இரு சோலா நீர் பம்பிகள் முறைமைகள் விளைவற்றுக் காணப்பட்டன. | கொள்வனவை மேற்கொள்வதற்கு முன்னர் தேவையுள்ள நலனாளிகளை தெரிவுசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும | வேறு பாடசாலைக்கும் மற்றும் பிரதேச செயலக காணியில் பயிரிடுவதற்கு பயன்படுத்த தீர்மானிக்கப்பட்டது. | இந்த அமைப்பை அமைப்பதற்காக 2021 ஆம் வருடத்தில் ஒதுக்கங்கள் கோரப்பட்ட போதிலும் அது கிடைக்காமையால் மீண்டும் ஒதுக்கங்கள் கோரப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| 35. | வெலிகந்த பிரதேசச் செயலகத்திற்குச் சொந்தமான 10 புதிய டிராக்டர் 2018 ஆம் வருடத்திலிருந்து இயற்கை அனர்த்தங்களுக்கு உட்பட்டு 3 வருடத்திற்கும் மேற்பட்ட காலமாக அலுவலக வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. | சொத்துக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். | பெறுகை செய்யப்பட்டதன் பின்னர் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். | குறிப்பிட்ட வாகனத் தரிப்பிடத்திற்கான மதிப்பிடப்பட்ட செலவு ரூபா 3,729,445 என்பதுடன் 2021 ஆம் வருடத்தில் அதற்காக ரூபா 752,640 ஆன ஒதுக்கங்கள் கிடைத்தமையால் இரண்டு பவுசர் வாகனங்களை மட்டுமே நிறுத்தப்படுவதற்கு முடியுமான விதத்தில் நிர்மாணிக்கப் பட்டுள்ளது. |

| திருகோணமலை மாவட்ட செயலகம் | | | | |
|---|---|---|---|---|
| ------------------------------------------- | | | | |
| | 2018 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | | |
| | 2019 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | | |
| | 2020 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | | |
| **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள பிரதான குறைபாடுகள்** ------------------------ | | **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை** --------------------- | **நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள்** | **அது தொடர்பான தற்போதைய நிலைமை** -------------------- |
| 01. | 2017 திசெம்பர் 21 ஆம் திகதிய 02/ 2017 இலக்க நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் மூதூர் பிரதேச செயலகத்தில் காணப்படுகின்ற 07 வாகனங்களுக்கான உரிமை தொடர்பான பதிவுகள் அந்நிறுவனங்களில் காணப்படாததுடன் உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் உரிமை தொடர்பான பதிவுகளைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய சுற்றறிக்கையின் அறிவுறுத்தல் களுக்கு அமைவாக நடவடிக்கை மேற் கொள்ளப்பட வேண்டும்.. | பயன்படுத்தப்பட முடியாத நிலையில் ஏலத்தில் விடப்படுவதற்காக மாவட்டச் செயலாளரின் பெயரில் இவ் வாகனம் இல்லாமையால் அது தொடர்பாக அறிவுறுத்தல் கோரப்பட்டு கொம்ப்ரோலர் ஜெனரால் அலுவலகத்திற்கு அனுப்புவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | 2022 பெப்ரவரி வரையில் உரிமை தொடர்பான பதிவுகள் பெறப்படவில்லை. |
| 02. | மாவட்டச் செயலகங்களில் மற்றும் பிரதேச செயலகங்களில் ஐந்து (05) வருடங்களுக்கு மேல் சேவையாற்றும் | இடமாற்ற கொள்கையை நடைமுறைப்படுத்த நடவடிக்கை | வருடாந்த இடமாற்றக் கொள்கை மற்றும் எதிர்காலத்தில் உள்ளக இடமாற்ற முறைமை நடைமுறைப்படுத்தப்ப | 2022 ஆம் வருடம் வரையில் இடமாற்றக் கொள்கையொன்று நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | உத்தியோகத்தர்களுக்கான ,இடமாற்ற கொள்கை நடைமுறைப்படுத்தப் படாமையால் நகரத்திலிருந்து நீண்ட துாரத்தில் உள்ள பிரதேச செயலகங்களில் நீண்ட காலமாக இடமாற்றத்திற்காக காத்திருக்கும் உத்தியோகத்தர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது. | மேற்கொள்ளப்படல் வேண்டும். | டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.. | |
| 03. | கட்டுநிதிகளை விடுவிப்பது தொடர்பான திறைசேரி அறிவுறுத்தல்களின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் விடுவிக்கப்பட்ட கட்டுநிதிகள் குறித்துரைக்கப்பட்ட நோக்கத்திற்காக மாத்திரமே பயன்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் கிராமிய வீடமைப்பு மற்றும் கட்டிடப் பொருள் கைத்தொழில் இராஜாங்க அமைச்சு மற்றும் சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார நுண் நிதிய, சுயதொழில் மற்றும் வியாபார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு என்பவற்றிடமிருந்து பெறப்பட்ட ரூபா 63.99 மில்லியன் தொகையான கட்டுநிதி உரிய நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்காத போதிலும் ஏனைய நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டது. | பெறப்பட்ட கட்டுநிதிகள் உரிய நோக்கத்திற்காக மாத்திரமே பயன்படுத்தப் படுவதற்கான நடவடிக்கை மேற் கொள்ளப்பட வேண்டும். | கட்டு நிதி கிடைக்காமையால் முன்னுரிமை மற்றும் அவசரத் தேவைகளை கருத்திற் கொண்டு பெறப்பட்ட கட்டு நிதி அந் நேரத்தில் முன்னுரிமை கொடுக்க வேண்டிய செலுவுகளைச் செய்வதற்காகப் பயன்படுத்தப்பட்டது. | ஒதுக்கங்கள் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| 04. | 2020 ஆம் ஆண்டிற்காக ரூபா 3,014 மில்லியன் கட்டுநிதி தொகை கோரப்பட்ட போதிலும், ரூபா 2,667 மில்லியன் கட்டுநிதி மாத்திரமே பெறப்பட்டதன் காரணமாக கோரப்பட்ட கட்டுநிதிக்கும் பெறப்பட்ட கட்டுநிதிக்கும் இடையேயான வேறுபாடு ரூபா 347.52 மில்லியன் தொகையாகும். இதன் விளைவாக 2020 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 196.68 மில்லியன் தொகை மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்த வேண்டிய விலைப் பட்டியல்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. . | கட்டுநிதி விண்ணப்பங்களை உரிய காலத்தில் சமர்ப்பித்து கட்டுநிதிகளை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பெறப்பட்ட கட்டு நிதி அந் நேரத்தில் முன்னுரிமை கொடுக்க வேண்டிய செலுவுகளைச் செய்வதற்காகப் பயன்படுத்தப்பட்டது. | கட்டு நிதித் தொகை எதிர்வரும் வருடத்திற்காக மதிப்பிடப்பட்டு பெறப்பட்டிருக்க வில்லை. |
| 05. | 2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் திருகோணமலை மாவட்ட செயலகத்தின் நிதி நிர்வாகத்துக்கு வினைத்திரனுள்ள உள்ளக நிர்வாக செயற்குழுவொன்று உருவாக்கப்பட்டு செயற்படுத்தி வருவதாக பிரதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும், கணக்கீட்டு உத்தியோகத்தர் உத்தரவாதம் வழங்க வேண்டும் என்பதுடன், அச் செயற்குழுவின் வினைத்திரன் தொடர்பில் காலத்துக்குக் காலம் மீழ் மதிப்பீடுகளைச் செய்து அதன்படி அக் குழு வினைத்திறன் கொண்டதாக | தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | முறைமையின் செயற்திறன் தொடர்பான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் எழுத்துப் பிரதி எதிர்காலத்தில் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படும். | செயற்திறனான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்படவில்லை. . |

| | | | | |
|---|---|---|---|---|
| | செயற்படத் தேவையான மாற்றங்களை மேற்கொள்வதாகவும் அக் கணிப்பீடுகள் எழுத்துமூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதிகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டி இருந்ததுடன் அவ்வாறான கணிப்பீடுகள் மேற்கொள்ளப்படவில்லை. | | | |
| 06. | 2016 ஏப்ரல் 11 ஆம் திகதிய 06/2016 ஆம் இலக்க மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் கந்தளாய் பிரதேச செயலகத்தனால் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ரூபா 20,000 தொகையான ஊட்டச்சத்து படி நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்ப்படுத்தி கண்காணிக்கும் போது பதிவு செய்யப்பட்ட வர்த்தகர்களினால் பரிந்துரைக்கப்பட்ட உணவுகள் மாத்திரம் வழங்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கும் அவற்றின் தரத்தை சரிபார்ப்பதற்கும் தொடர்ச்சியான பொறிமுறையொன்று ஸ்தாபித்திருக்கப்படாததுடன் 2020 ஆம் ஆண்டிற்காக ரூபா 13,377,000 உணவுப் பொருட்கள் கொள்வனவு செய்தமை தொடர்பான பரிந்துரைக்கப்பட்ட உணவுப் பட்டியல் மற்றும் அவற்றின் தர அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | முறையான பொறிமுறையொன்றை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | முறையான பொறிமுறையொனறு. உருவாக்கப் படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| 07. | மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் சபிரிகம செயற்திட்டத்தின் கீழ் 2020 ஆம் ஆண்டில் 03 கிராம சேவையாளர் பிரிவுகளில் எடுத்துச்செல்லக்கூடிய நீர் குழாய்களை அமைப்பதற்காக நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு ரூபா 3,462,632 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் அதற்கான செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்தக் காலத்திற்குள் நிர்மாணம் முடிக்கப்படல் வேண்டும். | அக் காலத்தில் கொரோனா தொற்றுநோய் பரவியமை மற்றும் தேவையான மூலப்பொருட்களை கொள்வனவு செய்வதில் சிரமம் காரணமாக சில பகுதிகள் தாமதமாகியிருந்தன. | செயற்திட்டம் ஆரம்பிக்கப் படுவதற்கும் முடிக்கப்படுவ தற்குமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை.. |
| 08. | 2019/20 பெரும்போகத்திற்கான நெல் அறுவடையின் துரித கொள்வனவு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2020 ஆம் ஆண்டின் போது நெல் கொள்வனவு செய்யும் போது கந்தளாய், தம்பலகமுவ மற்றும் சேருவில பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட விவசாயிகளிடமிருந்து நெல் கொள்வனவு செய்து அவற்றை நெல் ஆலைகளிற்கு விடுவிக்கும் போது அப் பிரதேச செயலகங்களில் முறையே 821 கிலோகிராம், 8,072 கிலோகிராம் மற்றும் 28,457 கிலோகிராம் ஆகிய அளவுகளால் ரூபா 1,868,000 பெறுமதியான நெல் கையிருப்புக்கள் குறைவாக காணப்பட்டன. | சனாதிபதி செயலக சுற்றறிக்கையின் பிரகாரம் இந்த விடயம் தொடர்பில் புலனாய்வு செய்து உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இவ் விடயத்தை விசாரிப்பதற்கு நியமனம் செய்யப்பட்ட குழுவின் பரிந்துரைகள் விவசாய அமைச்சின் அபிவிருத்தி நிதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | இருப்புக்கள் குறைவடைந்தமை தொடர்பில் விசாரணையொன்று மேற்கொள்ளப் படவில்லை. |
| 09. | நெல்லிலிருந்து வழங்கப்படும் அரிசியின் சதவீதத்தையும், கீரி | சனாதிபதி செயலக சுற்றறிக்கையின் | நிறை இழப்பை மீளப்பெறுவதற்கு | இருப்புக்கள் குறைவடைந்தமை |

| | | | | |
|---|---|---|---|---|
| | சம்பாவிற்கு 60 சதவீதத்தையும், ஏனைய ரகங்களுக்கு 65 சதவீதத்தையும் கணிப்பிட்டு அதற்குரிய அரிசி அளவை அருகிலுள்ள லங்கா சதொச களஞ்சியசாலைகளுக்கு வழங்குவதற்கு இரண்டாவது தரப்பினர் இணங்க வேண்டிய போதிலும் பிரதேச செயலகங்களினால் 2020 ஆம் ஆண்டில் அரைக்கும் ஆலைகளுக்கு வழங்கப்பட்ட நெல் இருப்பின் அளவிலிருந்து கந்தளாய் பிரதேச செயலகத்திற்கு 75,130 கிலோவாகவும், சேருவில பிரதேச செயலகத்திற்கு 3,465 கிலோவாகவும், தம்பலகமுவ பிரதேச செயலகத்திற்கு 2,939 கிலோவாகவும் ரூபா 8,319,959 தொகையான அரிசி இருப்புக்கள் குறைந்த அளவிலேயே மேற்படி பிரதேச செயலகங்களுக்கு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. | பிரகாரம் இந்த விடயம் தொடர்பில் புலனாய்வு செய்து உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.. | பரிந்துரைகளை வழங்குவதற்காக நியமனம் செய்யப்பட்ட சபையினால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் விவசாய அமைச்சின் அபிவிருத்தி நிதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அங்கீகாரம் கிடைத்ததும் தேவைப்பட்டவாறு நடவடிக்கை எடுக்கப்படும். | தொடர்பில் விசாரணையொன்று மேற்கொள்ளப் படவில்லை.. |
| 10. | கொவிட் 19 காரணமாக வாழ்க்கை கடினமாக இருக்கும் குடும்பங்களுக்கு 2020 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ரூபா 5,000 படிகளின் கொடுப்பனவு தொடர்பாக நகரங்கள் மற்றும் கடவத்தை, கிண்ணியா, தம்பலகமுவ மற்றும் கந்தளாய் ஆகிய 04 பிரதேச செயலகங்களில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | பரிசோதனைகளின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | | |
| | (அ) குடும்பம் ஒன்றிற்கு மாதம் ஒரு முறை மாத்திரமே செலுத்தப்பட வேண்டிய இச் சமூக நலன் படி 04 பிரதேச செயலகப் பிரிவுகளில் 861 தடவைகளில் ரூபா 4,305,000 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ளது, | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் படிகள் செலுத்தப்பட வேண்டும். | ஏற்கனவே இரண்டு முறை செலுத்தப்பட்ட படிகள் அறவீடு செய்யப்பட்டிருந்தன. | மேலதிக கொடுப்பனவுகள் அறவிடப்பட்டிருக் கவில்லை. |
| | (ஆ) 2020 ஏப்ரல் 17 மற்றும் 2020 ஏப்ரல் 03 ஆம் திகதிய பிரதமரின் செயலாளரின் பிரீஎவ்/03/2020 (III) மற்றும் பிரீஎவ்/03/2020 (I) ஆம் இலக்க சுற்றறிக்கைகளுக்கு முரணாக 4 பிரதேச செயலகங்களைச் சேர்ந்த 527 பயனாளிகளுக்கு 2020 ஆம் ஆண்டின் போது ரூபா 5,255,000 கூட்டுமொத்தம் செலுத்தப்பட்டிருந்தது. | - மேற்படி - | மீண்டும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| | (இ) கந்தளாய் பிரதேச செயலக பிரிவில் சமுர்த்தி பயனாளிகளின் பட்டியலின் பிரகாரம் | பயனாளிகளின் உண்மையான ஆவணங்களின் அடிப்படையில் கொடுப்பனவுகள் | கிராமிய குழு உறுப்பினர்கள் சங்கத்தின் உறுப்பினர்களாக உள்ளதன் காரணமாக | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| | பயனாளிகளுக்கு ரூபா 5,000 உதவித்தொகையை செலுத்தும் போது செலுத்த வேண்டிய தொகை 1,519 ஆக உள்ள போதிலும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சமுர்த்தி கிராமிய சங்கங்களுக்கு 2020 ஆம் ஆண்டில் 10 தடவைகளில் அத் தொகையை விட அதிகமாக ரூபா 1,275,000 தொகை வழங்கப்பட்டுள்ளது. | மேற்கொள்ளப்பட வேண்டும்.. | இந் நிலைமை ஏற்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இதுபோன்ற தவறுகளை மேற்கொள்ளாதிருப்பதற்கு அறிவுறுத்தப் பட்டுள்ளது . | |
| 11. | நிலைபேறுடைய இலக்குகள் பற்றி உத்தியோகத்தர்களுக்கு போதுமான அளவு தெளிவுபடுத்தப் பட்டிருக்கவில்லை. என்பதுடன், நிலைபேறுடைய இலக்குகள் சரியாக இனங்காணப்படாமையால் கணிப்பீட்டாண்டில் இலக்குகளை அடைந்தமை பற்றிய மதிப்பீடுகளை மேற்கொள்ள முடியவில்லை. | நிலைபேறுடைய அபிவிருத்தி இலக்குகளை இனங்கண்டு செயற்படுத்தல் நடைபெற வேண்டும். . | மாவட்டத்திற்கு பொருத்தமான நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இனங்கண்டு அவற்றை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.. | நிலைபேறுடைய அபிவிருத்தி இலக்குகள் இனங்காணப் பட்டிருக்கவில்லை. |
| 12. | சிரேஷ்ட மட்ட உத்தியோகத்தர்களிற்கான 18 வெற்றிடங்கள், மூன்றாம் நிலை உத்தியோகத்தர்களிற்கான 19 வெற்றிடங்கள், இரண்டாம் நிலை உத்தியோகத்தர்களிற்கான 166 | தேவையான பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உரிய வெற்றிடங்களை நிரப்புமாறு உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு பல தடவைகள் கோரிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. | 2022 பெப்ரவரி 23 இல் மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 257 ஆக காணப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வெற்றிடங்கள் மற்றும் ஆரம்ப நிலை உத்தியோகத்தர்களிற்கான 35 வெற்றிடங்கள் உள்ளடங்கலாக 2021 ஆம் ஆண்டின் இறுதியில் மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 238 ஆக காணப்பட்டது. | | | |
| **மட்டக்களப்பு மாவட்ட செயலகம்**<br>**----------------------------------------** | | | | |
| | 2018 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | | |
| | 2019 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | | |
| | 2020 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | | |
| **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள பிரதான குறைபாடுகள்**<br>**----------------------** | | **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை**<br>**--------------------** | **நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள்**<br>________________ | **அது தொடர்பான தற்போதைய நிலைமை**<br>**--------------------** |
| 01. | மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள நீச்சல் வீர வீராங்கனைகளுக்கு நீச்சல் பயிற்சி வழங்கி அவர்களின் திறமைகளை வெளிக்கொணரும் நோக்கில் விளையாட்டுத்துறை அமைச்சினால் 2017 ஆம் ஆண்டில் ரூபா 197.47 மில்லியன் கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்டு மட்டக்களப்பு மாநகரசபைக்கு ஒப்படைக்கப்பட்ட நீச்சல் தடாகமானது மாவட்டத்திலுள்ள வீர | இது நிர்மாணிக்கப்பட்ட குறிக்கோளை அடைந்து கொள்ளும் வகையில் நீச்சல் தடாகம் பயன்படுத்தப்படுதல் வேண்டும். | இத்தடாகமானது மட்டக்களப்பு மாநகர சபைக்கு கையளிக்கப் பட்டிருந்ததுடன் இதனை சுத்தமானதாகவும் சுகாதாரமானதாகவும் பராமரிப்பதற்கு மாநகர சபைக்கு மாதாந்தம் ரூபா 76,220 செலவு ஏற்படுகின்றமையினால் இச்செலவினை ஈடுசெய்வதற்காக பகுதிநேர வேளைகளில் | 2022 பெப்ரவரி வரையில் அவ்வாறே காணப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வீராங்கனைகளுக்கு நீச்சல் பயிற்சி பெற்றுக்கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படாமல் வருமானம் ஈட்டும் நோக்கில் தனியார் நீச்சல் பயிற்சி நிறுவனம் ஒன்றிற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது. இதனால் இச்செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்கள் அடைந்து கொள்ளப்படவில்லை. | | வருமானம் உழைப்பதற்காக இத்தடாகம் வழங்கப்படுகின்றது. | |
| 02. | சுனாமியால் பாதிக்கப்பட்டோரை மீளக் குடியமர்த்துவதற்காக காணிகளை கையேற்று அக்காணிகளுக்கு இழப்பீடு செலுத்தும் நடவடிக்கைகள் மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தினால் 2017 ஆம் ஆண்டில் பூரணப்படுத்தப்பட்டிருந்த போதிலும், அதன் பின்னர், மூன்று நபர்களால் போலி ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டு ரூபா 6.3 மில்லியன் இழப்பீடு பெறப்பட்டிருந்தது. இருப்பினும், குறித்த பிரதேச செயலகத்திலுள்ள பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களால் குறித்த ஆவணங்களின் சரியானதன்மை தொடர்பில் கவனம் செலுத்தாது இந்த இழப்பீடு செலுத்தப்படுவதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த உத்தியோகத்தர்களுக்கு | உத்தியோகத்தர்கள் கவனயீனமாக செயற்பட்டதற் காகவும், கடமையினை அலட்சியம் செய்ததற்காகவும், அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்படுத்தியதற் காகவும் நிதிப்பிரமாணத்தின் படி ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | காணி சுவீகரிப்பில் ஈடுபட்ட உத்தியோகத்தர் களுக்கு எதிராக பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்காக செயலாளர், உள்ளக, உள்நாட்டலுவல்கள் மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் முறையற்ற விதத்தில் நட்டஈடு பெற்ற நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு மண்முனை வடக்கு பிரதேச செயலாளருக்கு அறிவிக்க செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | 2022 பெப்ரவரி வரையில் மேலதிகமாக கொடுப்பனவு செய்யப்பட்ட இழப்பீட்டுத் தொகையை அறவிடுவதற்கு அல்லது சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக் கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | எதிராக எந்தவொரு ஒழுக்காற்று நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. | | | |
| 03. | மட்டக்களப்பு மாவட்ட சமூர்த்தி அலுவலகத்தில் காசோலை மூலம் கொடுப்பனவு செய்தல், ஏடுகளைப் பராமரித்தல் தொடர்பாக போதியளவு உள்ளகக் கட்டுப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு முகாமைத்துவம் தவறியதன் காரணமாக அந்த அலுவலகத்தில் கடமையாற்றிய அலுவலகர் ஒருவரினால் ரூபா 5,700,000 பெறுமதியான காசோலைக்கு மோசடியாக பணத்தை பெற்றுக் கொள்வதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாண ஏற்பாடுகளிற்கமைய காசோலை பயன்பாட்டு முறைமைகள் தொடர்பான சிறந்த உள்ளகக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | நாளாந்தம் காசோலைகள் உரிய உத்தியோகத் தர்களால் சரி பார்த்து உறுதிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. எனினும் தற்போது சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் ஒழுக்காற்று விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு தற்போது இடமாற்றம் செய்யப்படட்டுள்ளார். எதிர்காலத்தில் இத் தவறுகள் இடம் பெறாதிருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஏற்பட்ட மோசடியை அறவிடுதல் தொடர்பான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில் லை. அலுவலகருக்கு இடமாற்றமொன்று வழங்கப்பட்டிருந்தது. |
| 04. | ஏறாவூர்பற்று பிரதேசத்தில் பல்வேறு குறைபாடுகளுடன் காணப்படும் சிறுவர் பூங்காக்களினை மேம்படுத்தும் நோக்கில் தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்க மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சினால் 2018 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ரூபா 6,700,000 நிதியேற்பாட்டினை உரிய நோக்கத்திற்கு பயன்படுத்தாது திட்ட முன்மொழிவிற்கு முரணாக காணி மீள் நிரப்புதல் | ஏறாவூர்பற்று பிரதேசத்தில் சிறுவர் பூங்காக்களினை மேம்படுத்தும் நோக்கில் வழங்கப்பட்ட நிதியேற்பாட்டினை அந்நோக்கிற்கு மாத்திரமே பயன்படுத்தப்படுதல் வேண்டும். | ஏறாவூர்பற்று சிறுவர் பூங்கா தொடர்பான ஐயவினா பற்றிய தகவல்கள் திரட்டப்படுகின்றது. விரைவில் இவ் ஐயவினாவிற்கான பதில்கள் தங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். | குறிப்பிட்ட நோக்கத்திற்காக ஒதுக்கங்கள் பயன்படுத்தப்பட்டிருக் கவில்லை.. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அபிவிருத்தி நிறுவனத்தின் அனுமதியின்றி நீர் தேங்கி நிற்கும் குமாரவேலியார் கிராமத்தில் புதிய சிறுவர் பூங்கா ஒன்று நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்டிருந்தது. | | | |
| 05. | தேசிய ஒருங்கிணைப்பு நல்லிணக்க மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சினால் யுத்தத்தினால் வாழ்வாதாரத்தை இழந்த மக்களின் வருமான மட்டத்தினை உயர்த்தும் நோக்கில் ஆடு மற்றும் கோழி வளர்ப்பிற்காக மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகத்திற்கு 2018 ஆம் ஆண்டில் ரூபா 2,969,635 நிதியேற்பாடாக வழங்கப்பட்டிருந்தும் இச் செயற்றிட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டத்தினை அடையக் கூடிய வகையில் முறையான சாத்தியவள ஆய்வினை மேற்கொண்டு பிரதேச செயலகத்தினால் நடைமுறைப்படுத்தாமையினால் இச் செயற்றிட்டம் குறுகிய காலத்தினுள் விளைவற்றுக் காணப்பட்டிருந்தது. | செயற்திட்டங்களின் உரிய இலக்கினை அடையக்கூடிய வகையில் அவற்றை செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.. | எதிர்காலத்தில் இத் தவறுகள் ஏற்படாதவாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இலக்கினை அடையக்கூடிய வகையில் செயற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படு வதுடன் தொடர்புடைய உத்தியோகத்தர் களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமத் என்பதையும் அறியத்தருகின்றேன். | ஒருங்கிணைப்பு அதிகாரிக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக் கவில்லை. |
| 06. | கோறளைப்பற்று மேற்கு பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட காவத்தமுனையில் அமைந்துள்ள கைவிடப்பட்ட | இச் செயற்றிட்டத்தினை அமுல்படுத்த முன் முறையான சாத்தியவள | மக்களைப் பாதிக்கக் கூடிய திட்டங்களை பொருத்தமான தொழினுட்ப வல்லுனர்களின் | சாத்தியக் கூறு ஆய்வொண்றை நடத்தாது செயற்திட்டத்தை செயற்படுத்தியமை |

| | | | | |
|---|---|---|---|---|
| | கிணற்றின் மூலம் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வீட்டுத் திட்ட மக்களுக்கு குடிநீர் வழங்கும் செயற்றிட்டத்திற்காக கிராமிய உட்கட்டமைப்பு விசேட நிகழ்ச்சித் திட்டத்தின் மூலமும் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டிற்கும், நல்லிணக்கத்திற்குமான அலுவலகத்தினாலும் ரூபா 2,954,000 தொகை செலவிடப்பட்டிருந்தன. இருப்பினும், தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபையினால் வழங்கப்பட்ட தர அறிக்கையின் பிரகாரம் இக் கிணற்று நீரில் அதிகளவான அமோனியா காணப்படுவதுடன் இவ் நீரைப் பயன்படுத்தும் மக்களுக்கு கடுமையான வயிற்றுப் போக்கு, மஞ்சட்காமாலை, இரைப்பை குடல் நோய்கள், மற்றும் சிறுநீரக நோய்கள் போன்றவைகள் அதிகம் ஏற்படக் கூடிய வாய்ப்புகள் காணப்படுவதனால் இச் செயற்றிட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நலன்களைப் பெற்றுக் கொள்ள முடியாதிருந்தன. | ஆய்வுகள் மற்றும் கிணற்று நீரின் தர அறிக்கையை பெற்று அதனை நடைமுறைப்படுத்த வேண்டியதுடன் குடியேற்றப்பட்ட மக்களுக்கு குடிநீரை உரிய முறையில் மக்கள் நலன் பெறக் கூடிய முறையில் வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | ஆலோசனையைப் பெற்று செயற்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்படல் வேண்டுமென பிரதேச செயலாளருக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தது. எதிர்வரும் காலங்களில் இவ்வாறான தவறுகள் ஏற்படாத வகையில் திட்டங்களைச் செயற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | தொடர்பாக பொறுப்பு வாய்ந்த அதிகாரிக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| 07. | ஓட்டமாவடிப் பிரதேசத்தில் இரு சிறிய ஆடைத் தொழிற்சாலை நிறுவுவதற்காக 2016 ஆம் ஆண்டில் கிராமிய பொருளாதார அலுவல்கள் | இவ் ஆடைத் தொழிற்சாலைகள் இரண்டினையும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை | ஓட்டமாவடிப் பிரதேச இரு ஆடைத் தொழிற்சாலை நிறுவுதல் தொடர்பான ஐயவினா பற்றிய தகவல்கள் | 2022 பெப்ரவரி வரையில் பயன்படுத்தப்பட்டிருக் கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அமைச்சினாலும் மற்றும் 2017 ஆம் ஆண்டில் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சினாலும் ரூபா 4,912,500 தொகை செலவிடப்பட்டிருந்தும் நிர்மாணிக்கப்பட்ட இவ் இரு ஆடைத் தொழிற்சாலைகளும் 02 வருடங்களிற்கு மேலாக உரிய நோக்கங்களிற்குப் பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டிருந்தன. | எடுக்கப்படுதல் வேண்டும். | திரட்டப்படுகின்றது. விரைவில் இவ் ஐயவினாவிற்கான பதில்கள் தங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். | |
| 08. | பொருளாதார வலுப்படுத்தல் மற்றும் சமூக உட்கட்டமைப்பு அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் ஏறாவூர்பற்று பிரதேச செயலகத்திற்கு சந்தைக் கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்கு ரூபா 16.96 மில்லியன் நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும், முன்மொழியப்பட்ட திட்டத்தில் மாற்றம் காரணமாக ரூபா 2.6 மில்லியன் தொகை பெறுமதியான வேலைகள் மேற்கொள்ளப்படாமலும், கட்டிடம் பயன்படுத்தப்படாமலும் காணப்படுகின்றது. | குறிப்பிட்ட செயற்திட்டத்தின் இலக்கினை அடையக்கூடிய வகையில் அவற்றை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | நீர் வழங்கல் கட்டமைப்பில் சீர்திருத்தங்களை செய்து நீர்வழங்க முற்பட்டுக் கொண்டிருக்கும் போது Covid – 19 சூழ்நிலையால் நடவடிக்கைகளில் தாமதம் ஏற்பட்டுள்ளது. | - மேற்படி - |
| 09. | கைத்தொழில் அமைச்சின் “நன்வெமு லங்கா வேலைத்திட்டத்தின் கீழ் கைத்தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் | சரியாக பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு நிதியளிப்பு கிடைக்கப்பெறுகின்ற வேலைத்திட்டங்களை உரிய காலத்தினுள் | நிதி அமைச்சின் BD/GPS155/09/01/HA-2019 ஆம் இலக்க 2019 நவம்பர் 20 ஆந் | சரியாக பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்கு 2022 வரையில் |

| | | | | |
|---|---|---|---|---|
| | வேலைத்திட்டத்திற்காக 2019 ஆம் ஆண்டு கோரளைப்பற்று தெற்கு பிரதேச செயலகத்தில் 79 முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்கான ரூபா 1,705,000 நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும், பயனாளிகளின் தெரிவில் குறைபாடுகள் காரணமாக பிரதேச செயலகத்தினால் குறித்த திட்டம் கைவிடப்பட்டிருந்தது. | நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.. பயனாளிகளைச் சரியாகத் தெரிவு செய்யாமை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். . | திகதிய கடிதத்தின் அறிவுறுத்தல் களுக்கமைய இச் செயற்திட்டத்திற்குரிய அனைத்து செயற்பாடுகளும் இடை நிறுத்தப் பட்டிருக்கின்றன. | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| **அம்பாறை மாவட்ட செயலகம்** ------------------------------------- | | | | |
| | 2018 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | | |
| | 2019 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | | |
| | 2020 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | | |
| **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள பிரதான குறைபாடுகள்** ------------------------ | | **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை** --------------------- | **நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள்** | **அது தொடர்பான தற்போதைய நிலைமை** --------------------- |
| 01. | 15 பிரதேச செயலாளர் அலுவலகங்களுக்கான காணிகள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கேடுகளில் பதியப்படவில்லை. | பிரதேச செயலாளர் அலுவலகங்களுக் குரிய எல்லா காணி கட்டிடங்களும் கணிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளில் காட்டப்பட வேண்டும். | 2019.07.15 ஆம் திகதி மதிப்பீட்டுத் திணைக்களம் இவ் அலுவலகத்துக்கு வருகைதந்து மதிப்பீடுகளை மேற்கொண்டதுடன் அறிக்கை பெறப்படவுள்ளது. | 12 பிரதேச செயலாளர் அலுவலகங்களுக்கான காணிகள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கேடுகளில் பதியப்படவில்லை. |
| 02. | கைத்தோழில் மற்றும் வர்த்தக அமைச்சின் சிறிய மற்றும் நடுத்தர கைத்தோழில்களை அபிவிருத்தி செய்யும் பிரிவு, | சகல சொத்துக்களும் எதிர்பார்க்கப்படும் அதி உச்ச பிரதிபலன்களை | பயனாளிகள் சங்கங்களுடன் இணைந்து செயற்பட விரும்பாததன் | 2021 திசெம்பர் 31 வரையில் தையல் இயந்திரங்கள் மற்றும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | மகளிர்களை பொருளாதார ரீதியில் உறுதி வாய்ந்தவர்களாக மாற்றி யமைப்பதற்கு சிறிய அளவிலான ஆடைக் கைத்தொழிற்சாலைகளை உருவாக்கும் கருத்திட்டமொன்றை செயற்படுத்தியிருந்தனர். அதன்படி 2017 ஆம் அண்டில் அம்பாறை மாவட்டத்தில் 08 பிரதேச செயலாளரட அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூ. 19,525,600 பெறுமதிவாய்ந்த தையல் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் 2019 பெப்ரவரி 11 ஆம் திகதி வரை செயற்படாமல் இருந்தன. | அடையத்தக்க வகையில் பயன்படுத்தப்பட வேண்டும். . | காரணமாக நடைமுறைப் படுத்தப்பட்டபோது பிணக்குகள் எழுந்தன. | உபகரணங்கள் செயற்படாமல் இருந்தன. |
| 03. | 2018 ஆம் வருடத்தின் சொத்துக்கள் வெளியேற்றம் அல்லது அழித்தொழிக்கப்படாத போதிலும் மூலதனக் கூற்றில் (AcA6) மற்றும் ரூ 26,316,881 பெறுமதி வாய்ந்த சொத்துக்கள் விற்பனை என காட்டப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டின் போதும் இது சீர்செய்யப்பட்டிருக்கவில்லை. | நிதிக் கூற்று சமர்ப்பிக்கப்படும் பொது குறித்த படிவத்துக்கு அமைவாக அறிக்கையிடப்பட வேண்டும்.. | ஏதேனும் சொத்தொன்று (Cigass) கனிணியில் பதிவேற்றப்படும் போது ஏதேனும் பிழைகள் ஏற்படின் அதனை திருத்தும் வகையில் செயற்கட்டளை யினுள் விற்பனை அல்லது அழிக்கப்பட்டதாக குறிப்பிட வேண்டும். | 2021 திசெம்பர் 31 வரையில் சீர்செய்யப்பட்டிருக் கவில்லை. |
| 04. | குறைநிரப்பு மதிப்பீடுகள் மூலம் ரூபா 4,050,000 கிறீன் கிளப் (Green Clubs) நிகழ்ச்சித்திட்டத்திற்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த | உரிய நிகழ்ச்சித் திட்டத்திற்காக குறைநிரப்பு மதிப்பீடுகளின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட | அந்நேரத்தில் காணப்பட்ட அரசியல் அழுத்தம் காரணமாக இது தற்காலிகமாக | முழுமையான நிதியேற்பாடு குறிப்பிட்ட வேலைத்திட்டத்தில பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | போதிலும் பெறப்பட்ட நிதியேற்பாட்டில் ரூபா 2,675,592 தொகை மாத்திரமே உரிய நோக்கத்திற்காக செலவிடப்பட்டிருந்தது.. | ஒதுக்கீடுகளை முழுமையாகப் பயன்படுத்துதல் வேண்டும். | பிற்போடப்பட்டிருந்தது.. | |
| 05. | நீண்டகாலமாக இடம்பெயர்ந்தவர்களை மீள்குடியேற்றுதல் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் கீழ் வழங்கப்பட்ட ரூபா 13 மில்லியன் பெறுமதியான 12 வேலைகள் மற்றும் ரூபா 3.5 மில்லியன் பெறுமதியான 05 வேலைகளை அக்கறைப்பற்று பிரதேச செயலகம் கணணக்காய்வுத் திகதியான 2020 சனவரி 23 வரை ஆரம்பித்திருக்கவில்லை. | அமைச்சினால் வழங்கப்படும் பணம் இடம் பெயர்ந்தவர்களின் மீள்குடியேற்றத்திற் காகப் பயன்படுத்தப்பட்டு அவர்களின் மீள்குடியேற்றத்திற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | 03 செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந் ததுடன் 02 செயற்திட்டங்களின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக் கவில்லை. | ரூபா ஒரு மில்லியன் பெறுமதியான 02 செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக் கவில்லை. |
| 06. | தேவாலயத்தை புனரமைப்புச் செய்தல், விளையாட்டு உபகரணங்கள், வாராந்தச் சந்தை, கொங்கிறீட் வீதிகளை புனரமைத்தல் போன்ற பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களிற்காக RIDP, ONUR, Task Force on Resettlement of Protected IDPS, Lagoon Conservation and Development, Let’s together for nation and DCB போன்ற செயற்திட்டங்களின் கீழான நிதியொதுக்கீடுகளுடன் 15 பிரதேச செயலகங்களுக்கான முழு நிகழ்ச்சித்திட்டத்திற்கும் ரூபா 170,631,000 தொகை அங்கீகரிக்கப்பட்டிருந்த | பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களிற் காக ஒதுக்கப்பட்ட தொகை அது தொடர்பாக காணப்படுகின்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு பயன்படுத்தப்படுவதற் கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தெஹிஅத்தகண்டிய, கல்முனை (மு), சம்மாந்துறை, திருக்கோவில் மற்றும் பொத்துவில் ஆகிய 05 பிரதேச செயலகங்களில் அமுல்படுத்தப்படு வதற்கு அங்கீகரிக்கப்பட்ட ரூபா 1.14 மில்லியன் பெறுமதியான 09 செயற்திட்டங்கள் மாத்திரமே 2019 ஆம் ஆண்டில் | கூட்டுத்தொகை ரூபா 1.14 மில்லியன் பெறுமதியான 09 செயற்திட்டங்கள் அமுல்படுத்தப் படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | போதிலும் காணிப் பிரச்சனைகள், தவறாக புரிந்துகொள்ளுதல் மற்றும் கரையோரப் பாதுகாப்பு திணைக்களத்திடமிருந்து அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமை போன்ற காரணங்களினால் உரிய செயற்திடங்களை மீளாய்வாண்டின் போது அமுல்படுத்த முடியாதிருந்தன. | | அமுல்படுத்தப்பட முடியாதிருந்தன. | |
| 07. | சம்மாந்துறை பிரதேச செயலகத்தின் "சபூர்" சனச சங்கத்திற்கு 2000 மார்ச் 23 இல் அரச காணி அதிகாரச்சட்டத்தின் கீழ் மாதிரிப் பண்ணையொன்றை உருவாக்குவதற்காக நீண்ட கால குத்தகை (30 ஆண்டுகள்) அடிப்படையில் சென்னல் கிராமம் 01 இல் அமைந்துள்ள 0.847 ஹெக்டெயர் அரசாங்க காணியை வழங்கியிருந்தது. காணி உரிய நோக்கத்திற்கு பயன்படுத்தப்படாமல் பல துண்டுகளாக காணி பிரிக்கப்பட்டுள்ளதுடன் 22 பூர்த்தி செய்யப்பட்ட வீடுகள், 04 பகுதியளவில் பூர்த்தி செய்யப்பட்ட வீடுகள் மற்றும் அடித்தளங்களுடனான 03 நிரந்தரக் கட்டிடங்கள் என்பன காணப்படுகின்றதென கிராம உத்தியோகத்தர் மற்றும் குடியேற்ற உத்தியோகத்தர் ஆகியோர் 2011 யூலையில் அறிக்கையிட்டிருந்தனர். எனினும் 2020 பெப்ரவரி 18 | நீண்ட கால குத்தகைக்கு வழங்கும் போது அவை உரிய நோக்கங்களிற்காக பயன்படுத்தப் படுவதை உறுதிப்படுத்திக் கொள்வதுடன் அவ்வாறு செய்ய தவறினால் அதற்கெதிராக பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மாகாண காணி ஆணையாளர் இக்குத்தகையை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்காக ஆவணங்களை வழங்குமாறு 2020.05.26 ஆம் திகதிய ஈபி/28/எல்பீ/எல்எஸ்/ஏ எம்பி/ஜீஈஎன் ஆம் இலக்க கடிதத்தின் மூலம் குறிப்பிட்டிருந்தார். அதற்கிணங்க பிரதேச செயலகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. | நீண்ட கால குத்தகையை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வரை காணியை மீளக் கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| 08. | தமன பிரதேச செயலாளர் அலுவலகம் 'தேசத்துக்கு மகுடம் 2013' அபிவிருத்திக் கருத்திட்டத்தின்கீழ் செயற்படுத்துவதற்காக ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டிருந்த 5 கருத்திட்ங்களையும் நடைமுறைப்படுத்துகையில் ரூ. 6,512,909 ஆன பணம் கையாடப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட பிரச்சினையான சூழலில் தற்போது நடைபெற்று வரும் விசாரணைகளை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பொலிஸ் விசேட குற்றப்புலனாய்வுப் பிரிவினர் இது தொடர்பில் விசேட விசாரணை நடாத்தி வருவதுடன் மேலதிக விசாரணை நடவடிக்கைகளுக்கு குறித்த கோவை அவர்களது பொறுப்பில் எடுக்கப்பட்டுள்ளதை தயவுடன் அறியத்தருகின்றேன். | விசாரணை நடவடிக்கைகள் முடிக்கப்படவில்லை. |
| 09. | 2020 ஆம் ஆண்டின் போது நிலையான சொத்துக்களை விற்பனை செய்தமையால் கிடைத்த ரூபா 522,734 ஆன ஏனைய செலவினத் தலப்பின் கீழ் (2006-0-2-0-20) ரூபா 218,830 எனக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பற்கு முன்னர் அனைத்து வருமானங்களுக்குரிய வருமானம் உரிய வருமானத் தலைப்புகளில் பதிவு செய்யப்பட்டுள்ளதா என சரி பார்த்து சீராக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2020 இவ்வாறான தவறுகளை வருமானத் தலைப்பிற்கு பதிவு செய்யாமல் உரிய வருமானத் தலைப்பிற்கு வைக்குமாறு உரிய பிரதேச செயலகங்களின் உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | சீராக்கப்பட்டிருக் கவில்லை. |
| 10. | 2020 திசெம்பர் 31 இல் 03 பிரதேச செயலகங்களுக்குரிய மூன்று உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 776,750 தொகையை | நிலுவை தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும | குறித்த கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2021 திசெம்பர் 31 இல் ரூபா 572,750 அறவிடப்பட வேண்டியதாகக் காணப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| 11. | 2020 ஆம் ஆண்டின் போது 08 பிரதேச செயலகங்களினால் பயன்படுத்தப்பட்டிருந்த 32 அலுவலக கட்டிடங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அலுவலக கட்டிடங்களின் பெறுமதியை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கட்டிடத்திற்குரிய மதிப்பீட்டுப் பெறுமதி விலை மதிப்பீட்டு திணைக்களத்தினால் வழங்கப்படவில்லை. நினைவூட்டல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. கிடைத்தவுடன் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக் கவில்லை. |
| 12. | நிதிப் பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்பு பதிவேடொன்று பேணப்படவில்லை. | நிதிப் பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்பு பதிவேடொன்று பேணப்பட வேண்டும். | பொறுப்பு பதிவேடொன்று நி. பி. 214 இன் பிரகாரம் பேணப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | பொறுப்பு பதிவேடொன்று பேணப்படவில்லை.. |
| 13. | நடைமுறையல்லாச் சொத்துக்கள் கூற்று ஏ.சீ.ஏ. 6 இல் குறிப்பிடப்பட்டிருந்த 2020.01.01 இல் உள்ளவாறு ஆரம்ப மீதி திருத்தம் செய்யப்பட்டமையால் சொத்துக்களின் பெறுமதிக்கு சேர்க்கப்பட்ட ரூபா 35,949,298 தொடர்பான உறுதிப்படுத்தல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதிக் கூற்றுக்களுடன் ஆரம்ப மீதிகள் திருத்தங்களுக்குரிய கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கு இணக்கக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | அடுத்த ஆண்டில் ஆரம்ப மீதிகளுக்காக கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிய தருகின்றேன். | மீதிகள் திருத்தங்களுக்குரிய இணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டி ருக்கவில்லை. |
| 14. | 2017 மார்ச் 29 ஆந் திகதிய 08/2017 ஆம் இலக்க சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் | சுற்றறிக்கைக்கு முரணாக செலுத்தப்பட்ட | சமுர்த்தி நலனாளிகளுக்கு கூடுதலாக வழங்கிய | 2022 பெப்ரவரி வரையில் ரூபா 937,840 ஐ அறவிடுவதற்கான |

| | | | | |
|---|---|---|---|---|
| | வாழ்வாதார சுற்றறிக்கை மற்றும் 2019 செப்தெம்பர் 10 ஆந் திகதிய டீஎஸ்டீ/எச்டீ/ எஸ்டப்ளியு/14/16 ஆம் இலக்க திருத்திய சுற்றறிக்கையின் பிரகாரம் குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கையை அடிப்படையாக கொண்டு சமுர்த்தி உதவி முத்திரை வழங்கப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக 10 சமூர்தி வங்கிகளால் 43 குடும்பங்களுக்காக கூடுதலாக செலுத்தப்பட்ட ரூபா 2,993,215 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | கூடுதலான கொடுப்பனவை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். . | உதவித்தொகையை பகுதி பகுதியாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| 15. | உஹன பிரதேசத்தில் கலாசார நிலைய நிர்மாணிப்பதற்காக புத்தசாசன, கலாசார மற்றும் சமய அலுவல்கள் அமைச்சினால் 2020 பெப்ரவரி 02 ஆந் திகதி ரூபா 4,026,559 ஆன நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்த போதும் இந்த நிர்மாணத்திற்குரிய பெறுகை செயற்பாடுகள் மேற் கொள்ளாமையால் இந்த நிதி ஏற்பாடு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டு செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது. | ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருந்த நிர்மாண நடவடிக்கைகளை விரைவில் மேற் கொள்வதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கொவிட் 19 தொற்று காரணமாக அலுவலக செயற்பாடுகள் மந்த கெதியான நிலைமையில் காணப்பட்டமையால் செயற்திட்டத்தை செயற்படுத்த முடியாதிருந்தது. | நிர்மாண நடவடிக்கை கைவிடப்பட்டிருந்தது. |
| 16. | கல்முனை பிரதேச செயலக அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள கமு.்.கமு.்.கார்மேல் பாதிமா தேசிய பாடசாலையின் உள்ளக | உரிய காலப்பகுதியில் செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்கு | இச்செயற்திட்டம் 2020 ஆம் ஆண்டில் தொடர் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் | செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அரங்கினை நிர்மாணிப்ப தற்காக பொருளதார வலுவூட்டல் மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செயற் திட்டத்திற்காக தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சினால் 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 1,000,000 ஆன நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்த போதும், இச்செயற்திட்டம் உரிய காலப்பகுதியில் ஆரம்பிக்கப்படாமல் கைவிடப்பட்டிருந்தது. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | உள்ளடக்குவதற்காக அங்கீகாரம் மற்றும் நிதியை விடுவிக்குமாறு வேண்டுகோள் விடப்பட்ட போதும் அதற்காக அங்கீகாரம் கிடைக்காமையால் செயற்திட்டம் கைவிடப்பட்டது. | |
| 17. | நீண்டகால குத்தகை அடிப்படையில் காணிகளை வழங்கும் போது 04 பிரதேச செயலகங்கள் அறவிடப்பட வேண்டிய நிலுவை குத்தகை ரூபா 5,271,471 தொகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குத்தகை வருமானத்தை உரிய காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | குறித்த குத்தகையாளர் களிடமிருந்து நிலுவையை அறவிடுவதற்கு ஆலோசணை வழங்கப்பட்டுள்ளது. | 2022 பெப்ரவரி வரையில் ரூபா 2,400,078 அறவிடப்பட வேண்டியதாக இருந்தது. |
| 18. | மாவட்ட செயலகத்திற்குரிய 06 அரச வீடுகளிலில் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 338,531 தொகை 2002 ஆம் ஆண்டிலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அரச வீடுகளிலில் இருந்து அறவிடப்பட வேண்டிய வாடகையை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது | 2022 பெப்ரவரி வரையில் நிலுவை வாடகைப்பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| 19. | 2015 ஆம் ஆண்டில் மாவட்ட செயலகத்திற்குரிய வாகன மொன்றுக்கு ஏற்பட்ட விபத்து தொடர்பாக காப்புறுதி கம்பனியிடமிருந்து பெற்றுக் | காப்புறுதி கூட்டுத்தாபனத்திடமிருந்து பெற்றுக் கொள்ளக் கூடிய இழப்பீட்டை பெற்றுக் | இழப்பீட்டினைப் பெற்றுக் கொள்வதற்காக 2021.10.08 ஆந் திகதி அமைச்சின் | 2022 பெப்ரவரி வரையில் காப்புறுதி உரித்தினைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | கொள்ள கூடியதாக இருந்த ரூபா 4.8 மில்லியனான வாகன காப்புறுதி உரித்து, உரிய காலப்பகுதியில் வேண்டுகோள் விடுக்கப்படாமை காரணமாக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பெற்றுக் கொள்ள முடியாதிருந்தது. | கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படாது இதற்குப் பொறுப்பான தரப்பினருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் இழப்பீட்டை பெற்றுக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அங்கீகாரம் கோரப்பட்டுள்ளது. | எடுக்கப்பட்டிருக்கவில்லை . . |
| 20. | மாவட்ட செயலகத்திற்குரிய வாகனமொன்று 20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக திருத்தம் செய்வதற்கு கராஜ் ஒன்றுக்கு கையளிக்கப்பட்டிருந்த போதும் அதனை மீளப்பெற்றுக்கொள்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கராஜ் ஒன்றுக்கு கையளிக்கப்பட்டிருந்த வாகனம் தொடர்பாக பின்தொடரல் இல்லாமை தொடர்பில் சம்பந்நப்பட்ட பொறுப்பு வாய்ந்த தரப்பினருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அதன் தற்போதைய நிலைமை பரிசோதிக்கப்பட்டு தேவையான நடவடிக்கை விரைவில் எடுக்கப்பட வேண்டும். | 42-8880 ஆம் இலக்க வாகனத்தை இந்த அலுவலகத்திற்கு கொண்டு வருவதற்காக மோட்டார் வாகன போக்குவரத்து பரிசோதகரின் அறிக்கை கோரப்பட்டுள்ளது. | 2022 பெப்ரவரி வரையில் வாகனம் மீளப்பெற்றுக்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| 21. | 2020 ஆம் ஆண்டிறுதியில் வெற்றிடமாக காணப்படும் 76 கிராம சேவையாளர் பதவிகளுக்கு நிரந்தரமாக ஆட்சேர்ப்பு செய்யாமையால் | கடமை தேவைப்பாடுகளை கருத்திற் கொண்டு ஊழியர் | கிராம சேவையாளர் வெற்றிடங்களின் எண்ணிக்கை தொடர்பாக அமைச்சிற்கு | 2022 பெப்ரவரி வரையில வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | கிராம சேவையாளர் பிரிவுகளில் நிர்வாக நடவடிக்கைகள் மந்தமான நிலைமையில் காணப்பட்டது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தெரியப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| 22. | 2020 ஆம் ஆண்டிற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 2,364 ஆக இருந்த போதும் உள்ளவாறான 2,163 ஆக இருந்தது. எவ்வாறாயினும் வெற்றிடங்கள் காணப்படுகின்ற 201 பதவிகளுக்காக ஆட்சேர்ப்பதற்கு பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடமை தேவைப்பாடு அடிப்படையில் பிரதேச செயலக மட்டத்தில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உள்நாட்டு அலுவல்கள் அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | 2022 பெப்ரவரி வரையில வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| **கிளிநொச்சி மாவட்ட செயலகம்**<br>----------------------------------------------------- | | | | |
| | 2018 - | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | | |
| | 2019 - | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | | |
| | 2020 - | முனைப்பழியுள்ள அபிப்பிராயம | | |

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள பிரதான குறைபாடுகள் ------------------------- | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை --------------------- | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | அது தொடர்பான தற்போதைய நிலைமை -------------------- |
|---|---|---|---|---|
| 01. | கண்டாவளை பிரதேச செயலகத்தின் வாகனமொன்றினைக்கு 2017 யூன் 16 ஆந் திகதி ஏற்பட்ட விபத்திற்கு அதன் திருத்த வேலைக்காக ரூபா 1,348,904 செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக நிதிப் பிரமாணத்திற்கமைவாக நடவடிக்கைகள் பூரணப் படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் படி செயற்பட வேண்டும். | நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவின் அறிக்கை கிடைத்ததும் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும். | 2022 பெப்ரவரி வரையிலும் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| 02. | பள்ளிக்குடா வளர்மதி றைகமுக கட்டுமானப் பணிகளின் போது கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் 2007 சனவரி 02 ஆந் திகதிய வழிகாட்டல்களின் பொது நிபந்தனை 01 இன் 11.1, 11.3 மற்றும் 11.4 பிரிவுகளுக்கு முரணாக முடிக்கப்படாத வேலைக்காக ரூபா 368,929 செலுத்தப்பட்டிருந்தது. | சுற்றுநிருபத்திற்கு அமைவாக செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் முடிக்கப்படாதிருக்கும் வேலையில் ஏற்படும் நட்டத்தினை கணக்கிடுவதற்காக அவற்றை கழிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | 2022 பெப்ரவரி வரையிலும் இத்தொகையினை அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| 03. | 04 பல்நோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த ரூபா 28,756,571 க்கான கட்டிடங்கள் மற்றும் உபகரணங்கள் 01 முதல் 02 வருட காலமாக பாவனை செய்யப்படாது விடப்பட்டிருந்தது. | பாவனைக்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | இப் பொறுப்பு பல்நோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு கையளிக்கப் பட்டமையால் அவர்களின் கவனத்திற்கு விடப்பட்டுள்ளது. | 2022 பெப்ரவரி வரையிலும் 02 கட்டிடங்கள் பாவனை செய்யப்படாது விடப்பட்டிருந்தன. |

| | | | | |
|---|---|---|---|---|
| 04. | கரைச்சி வடக்கு பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் அரிசி ஆலையினை செயற்படுத்தும் பொருட்டு தேவைப்படும் ரூபா 2,001,500 க்கான இயந்திர உபகரணங்களை பெற்றுக் கொடுக்கப்பட்டு 2 வருடங்களுக்கு மேல் கழித்து போய் விட்ட போதிலும் அவ்வுபகரணங்கள் பாவனை செய்யப்படாது உள்ளன. | அரிசி ஆலைக்காக பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள உபகரணங்களை பயன்படுத்தப்பட்டு அரிசி ஆலையினை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | தேவைப்படும் வசதிகளினை சங்கத்தால் வழங்கப்படும் எனும் அடிப்படையில் இத்திட்டத்திற்கான நிதியம் வழங்கப்பட்டது. | 2022 பெப்ரவரி வரையிலும் அவ் உபகரணங்கள் பாவனைக்கு பயன்படுத்தப்பட வில்லை. |
| 05. | வறட்சியின் போது நீரினை வழங்குவதற்காக 2018 வருடம் நீர்ப்பாசன நீர் வழங்கல் மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சினால் நன்கொடையளிக்கப் பட்டிருந்த கொள்ளளவு 1,000 லீட்டர் கொண்ட 50 நீர்த் தொட்டிகள் மற்றும் 40 நீர் வடிகட்டிகளும் ஒரு வருடத்திற்கு மேலாக பாவனை செய்யப்படாது உள்ளன. | பாவனைக்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | தேவைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் விநியோகிக்கப் படுவதுடன் நீர் வடி கட்டிகள் ஒரு வாரத்தினுள் பெற்றுக் கொடுக்கப்படும். | 2022 பெப்ரவரி வரையிலும் 50 நீர்த் தொட்டிகள் பாவனை செய்யப்படாது இருந்தன. |
| 06. | பெறுகைக்குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு தீர்மானத்திற்கு முரணாக விநாயகபுரம் விவசாய கூட்டுறவு சங்கத்தின் பழங்கள் மற்றும் மரக்கறி பதனிடும் தொழிற்சாலைக்கு ரூபா 11,595,798 க்கான உயர்த்து கருவிகள் மற்றும் மின் உற்பத்தி இயந்திரமும் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. | தொழில்நுட்ப கணிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைக்கு அமைவாக இயந்திர சாதனங்கள் கொள்வனவு செய்யப்படல் வேண்டும். | தொழில்நுட்ப அத்தாட்சிப் பத்திரத்தினை இன்னும் பெற்றுக் கொடுக்கப் படாமையினால் பெறுகை செயற்பாடுகள் இதுவரையிலும் நிறைவேற்றப்படாத துடன் தொழில்நுட்பத் தேவைப்பாடுகள் இன்னும் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வில்லை. | 2022 பெப்ரவரி வரையிலும் சம்பந்தப்பட்ட தேவைப்பாடுகள் நிறைவேற்றப் பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |
| 07. | நெற் கொள்வனவுக்காக கிளிநொச்சி மாவட்டத்தில் 03 பலநோக்கு கூட்டுறவு சங்கங்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்ட ரூபா 3.42 மில்லியன் முற்பணத் தொகையினை 07 வருட காலம் மேலாகியும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | தீர்க்கப்படாத முற்பணத்தினை தீர்த்துக் கொள்வதற்கு அல்லது பணத்தினை மீளப் பெறுவதற்கான நடவடிக்கையினை உடன் மேற்கொள்ளப்படல் வேண்டும். | மாதாந்த கொடுப்பனவு செலுத்துவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | 2022 பெப்ரவரி வரையிலும் ரூபா 700,000 முற்பண தொகையினை தீர்க்கப்படாதிருந்தது. |
| 08. | அரச அதிகாரிகளின் முற்பணக் கணக்குகளுக்கான இணக்கக்கூற்றின் பிரகாரம் சேவையிலிருந்து விலகிச் சென்ற மற்றும் சேவையினை இடைநிறுத்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 10 வருடங்களுக்கு மேல் பழமையான ரூபா 820,425 மீதியொன்றினை அறவிடுவதற்கு இதுவரை நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | நிலுவை மீதியினை உரிய காலத்தில் அறவிடுவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளல். | உத்தியோகத்தர்களின் நிலுவைக் கடனினை அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | நிலுவை மீதியினை 2022 பெப்ரவரி வரையிலும் அறவிடப்படவில்லை. |
| 09. | இரண்டு வருடங்களுக்கு மேல் பழமையான மொத்தம் ரூபா 5,424,688 க்கான 36 வைப்புக்களுடன் தொடர்புடைய நிதிப் பிரமாணம் 571 படி செயற்படுவதற்கு மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகம் ஊடாக நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் செயற்பட வேண்டும். | கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டும் மற்றும் கொடுப்பனவுகள் மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | 2022 பெப்ரவரி வரையிலும் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| 10. | ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிலிருந்து | ஏனைய நிறுவனங்களிலிருந்து | சில வைப்புக்களை விடுவிக்கவும் இன்னும் | 2022 பெப்ரவரி வரையிலும் ரூபா |

| | | | | |
|---|---|---|---|---|
| | பெற்றுக் கொள்ளப்பட்ட ரூபா 3,274,966 சம்பந்தப்பட்ட குறிக்கோள்களுக்காக பாவனை செய்யாது சென்ற 01 வருடம் முதல் 03 வருடங்கள் இடையேயான காலம் வைப்புக் கணக்கில் இடப்பட்டிருந்தது. | பெறப்பட்ட பணத்திலிருந்து சம்பந்தப்பட்ட காரியங்களை நிறைவேற்றிக் கொடுப்பதற்கு செயற்பட வேண்டியதுடன் அவ்வாறு செய்யாதிருப்பின் அப் பணத்தினைப் திரும்பி அனுப்பி வைப்பது தொடர்பான காரியத்தினை மேற்கொள்ளப்படல் வேண்டும். | சில வைப்புக்களை வருமானத்தில் சேர்க்கவும் மீதி வைப்புக்களிலிருந்து திட்டங்களை ஆரம்பிக்கவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும். | 1,299,448 மீதியாக இருந்தது. |
| 11. | 2017 யூலை 04 ஆந் திகதிய இலக்கம் 2017/01 கொண்ட காணி ஆணையாளர் தலைமை அதிபதி திணைக்கள சுற்று நிருபத்தின் படி அரசாங்கத்தினால் நன்கொடையாக பெற்றுக் கொடுக்கப்பட்ட சொத்தினை பயன்படுத்தி 169 வியாபார நிறுவனங்களை 08-10 வருட காலமாக நடாத்திச் செல்லப்படுவதாயினும் அச் சொத்து பெறுநர்களுடன் ஒப்பந்தங்கள் மேற்கொண்டு குத்தகை பணத்தினை அறவிடுவதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | சுற்றுநிருபப் படி செயற்பட வேண்டும். | காணி அளவை வரை படத்தினை தயாரிப்பதற்கு நில அளவையாளர் திணைக்களத்திடம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் படி மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும். | 2022 பெப்ரவரி வரையிலும் செயற்பட்டிருக்க வில்லை. |
| 12. | 1996 ஆகஸ்ட் 01 ஆந் திகதிய இலக்க் 96/05 கொண்ட காணி ஆணையாளர் தலைமை | நிலுவை குத்தகைப் பணத்தினை அறவிடுவதற்கான | அறவிடுவதற்கான நடவடிக்கை | 2022 பெப்ரவரி வரையிலும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | அதிபதி திணைக்கள சுற்று நிருபத்தின் 5(iii) மற்றும் 6(இ) பந்தியின் படி, குத்தகைக்கு விடப்பட்ட காணிகளிலிருந்து 2014 முதல் 2020 வருடம் வரையிலும் ரூபா 7,875,400 நிலுவை குத்தகைப் பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | மேற்கொள்ளப் பட்டுள்ளது. | செயற்பட்டிருக்க வில்லை. |
| 13. | பாடசாலை ஒன்றினை சுற்றி கட்டப்பட்ட மதிலுக்காக ரூபா 142,988 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | மேலதிகமாக செலுத்தப்பட்டமை யினை மீள அறவிடப்பட வேண்டும். | மீள அறவிடுவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | 2022 பெப்ரவரி ரூபா 63,429 அறவிடப்பட வேண்டியிருந்தது. |
| 14. | பூநகரி பிரதேச செயலகத்தினால் ரூபா 3,960,000 செலவிடப்பட்டு 2020 வருடம் நிர்மாணிக்கப்பட்ட 03 செம்மண் பாதைகள் குறுகிய காலத்தில் அதாவது 2021 மார்ச் மாதம் ஆகும் போது மிக மோசமாக பழுதடைந்து பொது மக்களை கஷ்ட நிலைமைக்கு தள்ளப்பட்டு இருந்த போதும் அதற்காக ஆக்கபூர்வ நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | பாதைகளை முறையாக செய்து முடித்துக் கொள்ள வேண்டியதுடன் அவ்வாறு செய்து முடிக்கப்படாவிடின் தேவையான நடவடிக்கையினை மேற்கொள்ளப்படல் வேண்டும். | இப்பாதை வேலைகள் பிரதேச சபையின் மேற்பார்வையின் கீழ் நடந்தமையினால் பிரதேச சபையிடமிருந்து அறிக்கையினை கோரப்பட்டுள்ளது. | 2022 பெப்ரவரி வரையிலும் நடவடிக்கையினை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| **யாழ்ப்பாண மாவட்ட செயலகம்**<br>----------------------------------------------------- | | | | |
| | 2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | | | |
| | 2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | | | |
| | 2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம | | | |
| **கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட முக்கியமான குறைபாடுகள்**<br>------------------------------------------------ | | **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை**<br>---------------------------- | **நிறுவனத்தில் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள்**<br>---------------------------- | **அது தொடர்பான தற்போதைய நிலைமை**<br>------------------------------ |

| | | | | |
|---|---|---|---|---|
| 01. | காரைநகர் பிரதேச செயலக கட்டிடத்தினை ரூபா 58 மில்லியன் செலவிடப்பட்டு தனியார் காணியொன்றினுள் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இக்காணியின் பெறுமதி ரூபா 02 மில்லியன் நிதிக்கூற்றில் நடைமுறையல்லாச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்த போதிலும் 2020 யூன் 30 ஆந் திகதி வரையிலும் அக்காணியின் உரிமையினை கையேற்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | காணியின் உரிமையினை கையேற்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | காணியினை கையேற்பதற்கான கோரிக்கை விடப்பட்டுள்ளது. | இந்த ஆதனத்தினை கையேற்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |
| 02. | வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலக பிரிவில் உள்ள மானிப்பாய் சந்தை கட்டிட தொகுதியினை நிர்மாணித்தல். | | | |
| i. | நிர்மாணப் பணிக்காக ரூபா 348,998 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | மேலதிக செலுத்துதலினை அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | மேலதிக செலுத்துதலினை ஒப்பந்த காரரிடமிருந்து அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. | இத்தொகையினை அறவிடப்பட்ட போதிலும் ஒப்பந்தக் காரரால் மேற்கொள்ளப்பட்ட மீள்முறையீட்டின் பயனாக நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவினால் மேற்கொண்ட தீர்மானத்திப் படி இத்தொகையினை திருப்பிச் செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |
| ii. | இந்த நிர்மாணப் பணியினை செய்து முடிப்பதற்கு தாமதமான 145 நாட்களுக்காக தண்டப் பணமாக ரூபா 1.09 | ஒப்பந்தத்தின் பிரகாரம் வேலையினை உரிய காலத்திகுனுள் | மானிப்பாய் பிரதேச சபையினால் இக்கட்டிடத்தினை பாவனை செய்வது | இத்தொகையில் ரூபா 377,109 அறவிடப்பட்டிருந்த போதும், |

| | | | | |
|---|---|---|---|---|
| | மில்லியன் ஒப்பந்த உடன்படிக்கையின் இலக்கம் 6.4 பந்தியின் பிரகாரம் ஒப்பந்தகாரரிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. | முடிக்கப்படாது தொடர்பாக தாமதக் கட்டணம் அறவிடப்படல் வேண்டும். | தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அது போன்றே காலதாமதத்திற்கான கட்டண பணத்தினை ஒப்பந்தக்காரரிடமிருந்து அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. | ஒப்பந்தக்காரரால் மேற்கொள்ளப்பட்ட மீள் முறையீடு காரணமாக நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவினால் மேற்கொண்ட தீர்மானத்தின் ப இத்தொகையினை திருப்பி செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |
| 03. | வடமராட்சி வடக்கு பிரதேச செயலகப் பிரிவின் சாலம்பை வியாபாரம் சார்ந்த பாதையின் திருத்த பணிகளின் போது ரூபா 115,169 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | கூடுதல் தொகையினை அறவிடப்படல் வேண்டும். | விடையளிக்கப் பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |
| 04. | நல்லூர் பிரதேச செயலகக் கட்டிடத் தொகுதி நிர்மாணப் பணியினை முறையாக மேற்கொள்ளப் படாமையினால் 2018 ஒக்தோபர் 21 ஆந் திகதி ஒப்பந்தத்தினை முடிக்கப்பட்டிருந்தது. ஆயினும், 03 மாத கால தாமதத்திற்காக ரூபா 1.65 மில்லியன் ஒப்பந்த உடன்படிக்கையின் 4.9.1 பந்தியின் பிரகாரம் ஒப்பந்தக்காரரிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. | திட்டத்தினை சம்பந்தப்பட்ட காலத்தினுள் செய்து முடிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டியதுடன் ஒப்பந்தப்படி தாமதக் கட்டணம் அறவிடப்பட வேண்டும். | காலதாமதத்திற்கான கட்டணத்தினை ஒப்பந்தக்காரரிடமிருந்து அறவிடுவதற்கான ஏற்பாடு மேற்கொள்ளப் பட்டுள்ளது. | சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரரோடு செய்து மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையினை கட்டிடத் திணைக்களத்திடம் அறிவிக்கப்பட்டுள்ளது அதற்கு கிடைக்கப் பெறும் பதிலுக்கமைய மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும். |
| 05. | வடமராட்சி வடக்கு பிரதேச செயலகப் பிரிவில் நிர்மாணிக்கப்பட்ட 02 பாதைகளுக்காக ரூபா 466,000 | கூடுதலாக செலுத்தப்பட்ட பணத்தினை அறவிடுவதற்காக நடவடிக்கை | திட்டங்களை அமுல் செய்தவர்களிடமிருந்து விளக்கத்தினை பெற்றுக் கொண்டு அதற்கான | இத்தொகையினை அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | மேற்கொள்ளப்படல் வேண்டும். | நடவடிக்கையினை உடன் மேற்கொள்ளப்படும். | |
| 06. | வலிகாமம் கிழக்கு பிரதேச செயலக பிரிவினுள் உள்ள நீர்வேலி வாழைக்குழை உற்பத்தியாளரல் கூட்டுறவுச் சங்க கட்டிடம் மற்றும் வாழை உற்பத்தி மத்திய நிலையத்தினை அமைக்கும் பணிக்காக ரூபா 10,223,189 செலவிடப்பட்டிருந்தது. 2018 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னர் முடிக்கப்பட வேண்டியிருந்த இச் செயற்பாடுகள் 2019 யூலை 31 ஆந் திகதி வரையிலும் முடிக்கப்பட்டிருக்கவில்லை. | திட்டத்தினை சம்பந்தப்பட்ட காலத்தினுள் முடிக்கப்படுவதற்குரிய ஏற்பாடு மேற்கொள்ளப்படல் வேண்டும். | திட்டத்திற்கான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. இயந்திரங்கள் அமைக்கப் பெற்று அதன் தொழில்நுட்ப அறிக்கையினை பெற்றுக் கொண்டதன் பிறகு தொடர்ந்து நடவடிக்கை செயற்பாடுகளை மேற்கொண்டுநம்மால் செயற்படுத்தப்படும். | இத்திட்டம் முழுமையாக சாத்தியப்படாது போயிற்று. |
| 07. | யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தினால் வேலை தேடுபவர்களுக்கு பயிற்சியின் அளிக்கும் குறிக்கோளாக கொண்டு SMART Sri Lanka திட்டத்தின் கீழ் ரூபா 13.75 மில்லியன் பெறுமதியான 2019 யூலை மாதம் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடம் மற்றும் உபகரணங்கள் சம்பந்தப்பட்ட தேவைப்பாடுகளுக்காக இதுவரையில் பாவனை செய்யப்படவில்லை. | பிரயோசனப் படுத்தப்படாதிருக்கும் சொத்துக்களை பாவனைக்கு தகுந்த வகையில் ஏற்பாடு செய்து கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | இத்திட்டத்தினை தொடர்பாக மேற்கொண்டு ஆலோசனை மற்றும் நிதி ஒதுக்கீடு பெறப்படாமையினால் கட்டிடத்தினை குறித்த குறிக்கோளிற்காக பயன்படுத்த முடியாது போயிற்று. | குறித்த குறிக்கோளுக்காக இக்கட்டிடத்தினை பயன்படுத்தப்படாத துடன் இளைஞர் சங்கத்திற்கு அதனை பயன்படுத்துவதற்காக பெற்றுக் கொடுக்கப் பட்டிருந்தது. |
| 08. | வலிகாமம் வடக்கு பிரதேச செயலக பிரிவில் மின்சக்தி இயந்திர கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்கு மற்றும் | திட்டங்களை அமுல்படுத்துவதற்கு முன்னர் முறையாக திட்டங்கள் மற்றும் | சிற்சில குறைபாடுகளை சரி செய்யும் போது கால தாமதம் ஏற்பட்டது. | பயன்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 8.32 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் அவற்றின் இதுவரையும் குறித்த குறிக்கோளுக்காக பயன்படுத்தப்படவில்லை. | தொழில்நுட்பக் கணிப்பினை மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் குறித்த குறிக்கோள் களுக்காக பயன்படுத்தப்பட வேண்டும். | தற்போது வடமாகாண தொழிற் திணைக்களத்தில் பயிற்றப்பட்ட பணிக் குழுமம் மூலம் செயற்படுத்துவதற்கு உத்தேசிக்கப் பட்டுள்ளது. | |
| 09. | வலிகாமம் வடக்கு பிரதேச செயலக அலுவலக கட்டிடத்தினை ரூபா 56,023,874 செலவிடப்பட்டு பிறருக்குச் சொந்தமான காணியில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அதன் உரிமையினை கையேற்பதற்கான நடவடிக்கையினை 2021 மார்ச் 31 வரையிலும் மேற்கொள்ளப்படாது இருந்ததுடன் காணியின் பெறுமதியினை நிதி நிலைமைக் கூற்றில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | காணியினை கையேற்கப்பட்டு காணியின் பெறுமதியினை நிதி நிலைமைக் கூற்றில் வெளிப்படுத்து வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | கையேற்பதற்கான நடவடிக்கையினை மேற்கொள்வேன். | குறித்த கையேற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| 10. | யாழ்ப்பாண பிரதேச செயலக அலுவலகத்தின் சில பல திட்டங்கள் உரிய காலத்தினுள் முடிக்கப்படவில்லை. ஆயினும் அதற்காக ரூபா 547,766 க்கான தாமதக் கட்டணம் ஒப்பந்தத்தின் படி சம்பந்தப்பட்ட ஒப்பந்தக் காரரிடமிருந்து அறவிடப்படவில்லை. | திட்டங்களை உரிய காலத்தில் நிறைவேற்றிக் கொள்வதற்கும் தாமதப்படும் சந்தர்ப்பங்களில் ஒப்பந்தப்படி தாமதக் கட்டணம் அறவிடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | ஒப்பந்த நிறுத்தி வைப்பு பணத்திலிருந்து அல்லது நேரடியாக இத்தொகையினை செலுத்தும் படி ஒப்பந்தக்காரரிடம் அறிவிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே குறித்த தாமதக் கட்டணங்களிலிருந்து யாதேனும் ஒரு தொகையினை அறவிடுவதற்கும் நடவடிக்கை | இத்தாமத தொகையினை அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | மேற்கொள்ளப் பட்டுள்ளது. | |
| 11. | சுன்னாகம் அஞ்சல் அலுவலகம் மற்றும் அஞ்சல் நிலைய பொறுப்பதிகாரியின் உத்தியோகபூர்வ இல்லத்தினை நிர்மாணிப்பதற்காக தொழில்நுட்ப கணிப்புக் குழுவினால் பரிந்ரைக்கப்படாத விலை மனுதாரருக்கு பெறுகையினை அளிக்கப்பட்டிருந்தது. அவரால் அக்காரியத்தினை முடிக்கப்படாமையினால் முடிக்கப்பெற்ற அலுவலுக்கு மாத்திரம் செலுத்துவதற்கான அடிப்படையின் கீழ் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி இரு தரப்பினரதும் உடன்பாட்டுடன் ஒப்பந்தத்தினை முடிக்கப்பட்டிருந்தது. அவ்வாறியினும் உடன்படிக்கையின் ஒப்பந்த தரவின் 60.1 படி அத்தாட்சிப்படுத்தப்பட்ட பணிக்கான செலுத்தலின் போது முடிக்கப்படாத பணிகளில் நூற்றுக்கு 25 அதாவது ரூபா 1,169,074 அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்த தரவு 60.1 படி குறித்த தொகையினை அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | இரு தரப்பினரதும் உடன்பாட்டுடன் ஒப்பந்தத்தினை முடிக்கப்பட்டமையினால் இத்தொகையினை அறவிடப்படவில்லை. | இப்பணத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வில்லை. |
| 12. | தென்மராட்சி பிரதேச செயலகப் பீவில் 56 பெறுநர்களுக்கு தலா ரூபா 5,000 வீதம் பெற்றுக் கொடுக்கப்பட்டதாக விடயங்களை முன்வைத்து மேற்கொள்ளப்பட்ட ரூபா | மோசடிகளை தவிர்க்கும் பொருட்டு ஏற்றவாறான உள்ளக கட்டுப்பாட்டுக்கான முறைமையொன்றினை ஏற்படுத்தப்பட வேண்டியதுடன் | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரின் சேவையினை இடைநிறுத்தப் பட்டுள்ளதுடன் ஏனைய உத்தியோகத்தர் களுக்கு | 2022 பெப்ரவரி வரையிலும் அத்தொகையினை அறவிடப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | 280,000 ஆன நிதி மோசடி தொடர்பாக விசாரணையினை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | கூடுதலாக செலுத்தப்பட்ட தொகையினை அறவிடுவதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ளப்படல் வேண்டும். | எச்சரிக்கையுடனான இடமாற்றங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன. குறித்த தொகையினை உரிய உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | |
| 13. | ஒரு திட்டத்திற்காக பெறப்பட்ட ரூபா 13,458,697 சரியாக உபயோகப்படுத்தப் படாது 03 வருட காலம் முதலாக மாவட்ட செயலக அலுவலகத்தில் வைப்புக் கணக்கில் தேக்கப்பட்டிருந்தது. | குறித்த வைப்பு மீதிகளை தாமதமின்றி தீர்ப்பதற்காக நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும். | இவ்வைப்புக்களை தாமதமின்றி தீர்ப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | 03 அலுவல்களுடனான இத்திட்டத்தில் ஒரு அலுவலினை முடிக்கப்பட்டுள்ளது. அதன் முன்னேற்றத்தினை பரீட்சித்து மீதி 02 அலுவல்களையும் நிறைவேற்றுவதற்கு உத்தேசிக்கப் பட்டுள்ளது. |
| 14. | 50 சிறு தொழிற்சாலைகள் அமைக்கும் வேலைத் திட்டத்தின் கீழ் நல்லூர் பிரதேச செயலக பிரிவிலுள்ள யோக்கட் உற்பத்தி நிலையத்திற்கு பெற்றுக் கொடுக்கப்பட்ட ரூபா 1,336,300 கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரம் (Batch Pasteurizer) ஒரு வருடத்திற்கும் மேலாக செயற்படாது உள்ளது. | உதிரிப்பாகங்கள் இல்லாத இயந்திரத்தினை கொள்வனவு செய்யப்பட்டது தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்படல் வேண்டும் பொறியினை உபயோகப்படுத்து வதற்கு தேவையான நடவடிக்கையினை மேற்கொள்ளப்படல் வேண்டும். | இப்பொறியினை செயற்படுத்துவதற்கு தேவைப்படும் முக்கிய உதிரிப்பாகங்களை குறித்த விநியோகத்தர் இதுவரை பெற்றுத் தராமையினால் அது செயற்படாத நிலையில் உள்ளது. அவ்வுதிரிப் பாகங்கள் கிடைத்ததும் அவ் இயந்திரத்தினை உரிய நிலைப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | தொடர்ந்தும் இவ் இயந்திரம் செயற்படாது உள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| 15. | மீனவர் குடும்பங்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்காக 2017 ஆம் ஆண்டு பெறப்பட்ட ரூபா 690,849 பெறுமதியான 152 வலைகள் 03 வருட காலம் தொட்டு வடமராட்சி பிரதேச செயலக அலுவலகத்தில் இடப்பட்டிருந்தன. | கொள்வனவு செய்வதற்கு முன்பு தேவையினை நன்கு இனங்காணப்பட வேண்டியதுடன் காரியத்திற்கு உதவா சொத்துக்களை பயனுள்ள வகையில் உபயோகப்படுத்து வதற்கு செயற்பட வேண்டும். | இவ்வலைகள் ஆழமான கடலில் மீன் பிடிப்பதற்கு தகுந்ததென அறியப்பட்டது. இதனால் அவ் வலைகள் தேவைப்படும் பெறுநர்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு மாவட்ட செயலக அலுவலகங்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | இவ்வலைகளினை பெறுநர்களுக்கு இதுவரையிலும் பெற்றுக் கொடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| **வவுனியா மாவட்ட செயலகம்**<br>------------------------------------------------- | | | | |
| 2018 - | | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | | |
| 2019 - | | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | | |
| 2020 - | | முனைப்பழியுள்ள அபிப்பிராயம | | |
| **கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட முக்கியமான குறைபாடுகள்**<br>------------------------------------------------------ | | **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை**<br>---------------------------- | **நிறுவனத்தில் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள்**<br>---------------------------- | **அது தொடர்பான தற்போதைய நிலைமை**<br>------------------------------ |
| 01. | 280 உருப்படிகளைச் சார்ந்த உபகரணங்கள் மற்றும் வீட்டுத் தளபாடங்கள் ஒரு வருடம் முழுக்க உபயோகப்படுத்தப்படாது பாதுகாப்பின்றி களஞ்சியப் படுத்தப்பட்டிருந்தன. | சொத்துக்களை பாவனை செய்வதற்கும் மற்றும் பாதுகாப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். | கொடுப்பனவு மேற்கொள்வதற்கு ஒதுக்கீடு இல்லாமையினால் காவலர் வைக்கப்படவில்லை. | 2022 பெப்ரவரி வரையிலும் இப்பொருட்கள் பாவனைக்கு எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| 02. | வெங்காலச் செட்டிக்குளம் கட்டிடத்தினை நிர்மாணிக்கும் போது ரூபா 116,157 | ஒப்பந்தக்காரரினால் முன்வைக்கப்பட்ட விலைமதிப்பின் படி செலுத்துதல்கள் | மதிப்பீட்டினை சரியாக தயாரிக்காமையினால் இவ்வாறு நேர்ந்துள்ளதுடன் | 2022 பெப்ரவரி வரையிலும் கூடுதல் செலுத்துதல்களினை |

| | | | | |
|---|---|---|---|---|
| | மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | மற்றும் கூடுதலாக செலுத்தப்பட்ட தொகையினை அறவிடப்படல் வேண்டும். | எதிர்காலத்தில் இவ்வாறு நேராவண்ணம் குறித்து கொண்டேன். | அறவிடப்பட்டிருக்க வில்லை. |
| 03. | A9, ஓமந்தை வவுனியா என்னும் இடத்தில் அமைந்துள்ள முடிக்குரிய காணியில் அனுமதியற்ற நிர்மாணிப்பொன்று மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக தேவையான சட்ட நடவடிக்கையினை வவுனியா பிரதேச செயலளாரினால் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | அனுமதியற்ற நிர்மாணிப்பு தொடர்பாக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | பிரதேச செயலகம் மூலமாக கட்டிட நிர்மாணத்திற்காக அனுமதி வழங்கப்படுவது இல்லை. | 2022 பெப்ரவரி வரையிலும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| 04. | 2018 ஒக்தோபர் மாதம் ரூபா 12,956,898 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட ஓமந்ததை கலாசார மத்திய நிலையம் 2020 யூலை மாதம் வரையிலும் மக்களின் பாவனைக்காக திறந்து வைக்கப்படாததுடன் மத்திய நிலைய பூமியில் காடு வளர்ந்து காணப்பட்டது. | இந்த இடத்தினை மக்கள் பாவனைக்காக திறந்து வைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | திறந்து வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும். | 2022 பெப்ரவரி வரையிலும் திறந்து வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்க வில்லை. |
| 05. | வவுனியா தெற்கு சிங்கள பிரதேச செயலக அலுவலகத்தினால் 2014 ஆம் வருடம் இரட்டை பெரியகுளம் கிராமத்தில் காணிகள் அற்ற 57 பேருக்காக தலா 80 பர்சஸிலான நிலத்துண்டுகள் பெற்றுக் கொடுக்கப் பட்டிருந்த போதிலும் 2019 ஆகஸ்ட் மாதம் வரையிலும் 08 பேர் மாத்திரம் காணியினை | காணியினை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாத பெறுநர் குறித்து விசாரிப்பு நடாத்தி தேவைப்படும் நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | வதிய வராதுள்ள காணிகளை தேடிப் பார்த்து எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கை மேற்கொள்வேன். | 2022 பெப்ரவரி வரையிலும் இப்பிரச்சினை தீர்க்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அபிவிருத்தி செய்து வீடு கட்டி வதிய வந்தனர். | | | |
| 06. | வவுனியா தெற்கு சிங்கள பிரதேச செயலக அலுவலகத்தினால் 2011 வருடம் இரட்டை பெரிய குளம் வேறகமை, அரச ஊழிய வீட்டுத் திட்டத்தின் கீழ் 113 அரச ஊழியர்களுக்கு தலா 40 பர்சஸிலான நில துண்டுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. ஆயினும், 2019 வருடம் ஆகுகையில் 08 வருடங்கள் கழிந்து விடப்பட்டிருந்த போதிலும் அந்த 113 நில துண்டுகளில் 45 நிலத் துண்டுகளில் மாத்திரம் வீடுகள் கட்டி வதிவாகி இருந்தனர். | திட்டத்தின் முன்னேற்றத்தினை சீர்தூக்கிப் பார்த்து குறித்த நோக்கினை அடைந்து கொள்வதற்கு செயற்படாத காணி பெறுநர் தொடர்பாக தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | வதிய வராதுள்ள காணிகளை தேடிப்பார்த்து எதிர்காலத்தில் தகுந்த நடவடிக்கை மேற்கொள்வேன். | இப்பிரச்சினை தீர்ந்து இருக்கவில்லை. |
| 07. | ரூபா 291.64 மில்லியன் பெறுமதிக்கு மதிப்பீடு செய்யப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட வவுனியா பொருளாதார மத்திய நிலையத்தினை 2018 வருடம் மாவட்ட செயலக அலுவலகத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. ஆயினும், அந்த மையத்தினை இதுவரையிலும் பாவனை மேற்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மத்திய நிலையத்தினை நிர்மாணிக்கப்பட்ட குறிக்கோளினைக்கா க பயன்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | இம்மத்திய நிலையத்தினை திறந்து வைப்பதற்காக கோடு அமைச்சின் அங்கீகாரம் இதுவரையும் கிடைக்கப் பெறவில்லை. | 2022 பெப்ரவரி வரையிலும் இம்மத்திய நிலையத்தினை பயன்படுத்துவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வில்லை. |
| 08. | மாவட்ட திட்டமிடல் செயல அலுவலகத்திற்கு சொந்தமான 03 வாகனங்கள் 10 வருடங்களுக்கு அதிக காலம் | வாகனங்களை தள்ளுபடி செய்வதற்கு அல்லது பாவனைக்கு | புதுப்பிக்கப்படுவது பயனற்றது என கிடைக்கப்பெற்ற பரிந்துரைக்கு அமைய | 2022 பெப்ரவரி வரையிலும் பாவனையிலிருந்து தள்ளுபடி செய்வதற்கான |

| | | | | |
|---|---|---|---|---|
| | தொட்டு பாவனை செய்யப்படாது இருந்தன. | சேர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ளப்பட வேண்டும். | பாவயையிலிருந்து தள்ளுபடி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. | நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| 09. | வவுனியா வடக்கு பிரதேச செயலக அலுவலக கட்டிடத்தினை நிர்மாணிக்கும் பொழுது நிறைவேற்றப்படாத 02 வேலை விடயங்களுக்காக ரூபா 223,200 செலுத்தப்பட்டிருந்தது. அது போன்றே, வேலைத் தளத்தில் காணப்பட்ட மூலப்பொருட்களுக்காக ரூபா 3,338,560 செலுத்தப்பட்டிருந்த போதிலும் அத்தொகை அளவினை தொடர்பாக உரிய பதிவினை பேணப்பட்டிருக்கவில்லை. | நிறைவேற்றப்படாத அலுவலகர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் அறவிடப்பட வேண்டியதுடன் மூலப்பொருள் தொகையினைக்கான முறையான பதிவினை பேணப்படல் வேண்டும். | நிறைவேற்றப்படாத வேலை விடயங்களில் சில வேலைப் பகுதிகள் நிறைவேற்றப் பட்டுள்ளதுடன் மீதி வேலைகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. | 2022 பெப்ரவரி வரையிலும் கூடுதலாக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் அறவிடப்படுவதற்கும் சரியான தொகையினையின் பதிவுகள் சமர்ப்பிக்கவும் ஏற்பாடு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| **முல்லைத்தீவு மாவட்ட செயலகம்**<br>-------------------------------------------------------- | | | | |
| 2018 - | | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | | |
| 2019 - | | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | | |
| 2020 - | | முனைப்பழியுள்ள அபிப்பிராயம | | |
| **கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட முக்கியமான குறைபாடுகள்**<br>---------------------------------------------------- | | **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை**<br>---------------------------- | **நிறுவனத்தில் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள்**<br>---------------------------- | **அது தொடர்பான தற்போதைய நிலைமை**<br>------------------------------ |
| 01. | மாந்தை கிழக்கு, ஒட்டுச்சுட்டான், துணுக்காய் மற்றும் கரைத்துறைப்பற்று பிரதேச செயலக அலுவலகங்களினால் செயற்படுத்தப்பட்ட மொத்தம் ரூபா 183.9 மில்லியனால் நிர்மாணிக்கப்பட்ட 118 வீடுகள் | இவ்வீடுகளை பயனுள்ள வகையில் பிரயோசப்படுத்து வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | இத்தவறுகள் எதிர்காலத்தில் சரி செய்வதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | இதுவரையிலும் இவ்வீடுகளை பாவனைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | 02 முதல் 06 வருடங்கள் இடைப்பட்ட காலமாக பிரயோசப்படுத்தப் படாது இருந்தன. | | | |
| 02. | 07 கெப் வாகனங்கள், 02 லொறிகள் மற்றும் 06 மோட்டார் சைக்கிள்கள் சென்ற 01 வருடம் முதல் 06 வருட இடைப்பட்ட காலமாக முறையான பராமரிப்பு மற்றும் திருத்துதல் எதுவும் இன்றி அலுவலக பரப்பில் இடப்பட்டிருந்தன. | திருத்துதல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றினை முறையாக மேற்கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும் | தடுப்பதற்கான செயல்முறையினை முன்வைக்கப் பட்டிருக்கவில்லை. | 2022 பெப்ரவரி வரையும் இது தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| 03. | சென்ற 04 வருட காலத்திற்கு மேலாக மின் உற்பத்தி இயந்திரம் ஒன்றினை பாவனைப்படுத்தப் பட்டிருக்கவில்லை. அதனை பாவனை செய்வதற்கு பதிலாக தேவைப்படும் மாதாந்த சராசரியின் மின் பாவனையினை விடவும் அதிக லோவொட் 502 மின் சக்தி கொண்ட புது மின் உற்பத்தி இயந்திரத்தினை ரூபா 9.80 மில்லியன் பெறுமதியினைக்கு வெளிநாட்டிலிருந்து (துருக்கி) சரவ்தேச போட்டி விலைமனு கோரலுக்கு செயற்பாட்டினையும் கடை பிடிக்கப்படாது கொள்வனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. | மின் இயந்திரத்தினை திருத்தப்பட்டு பாவனை செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டியதுடன் மின் உற்பத்தி இயந்திரம் இருக்கையில் தேவையான உள்ளவினையும் மீறப்பட்டு பெறுகை முறைமையினையும் கடைப்பிடிக்கப்படாது கொள்வனவு செய்யப்பட்டது தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | பழைய இயந்திரத்தினை பாவனைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. |
| 04. | சேவையினை இடைநிறுத்தப்பட்ட ஓய்வுபெற்ற, சேவையினை விட்டுச் சென்ற மற்றும் இறந்து | நிலுவைக் கடனினை உரிய காலப் பகுதியினுள் அறிவிடப்படுவதற்காக | இரு அதிகாரிகளின் நிலுவைக் கடனினை அறவிடப்படுவதுடன் ஏனைய அதிகாரிகளின் | மொத்தம் ரூபா 223,057 கடன் மீதியினை தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டியுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | போன அதிகாரிகளின் ஊழியர் கடன் மீதித் தொகையான ரூபா 321,560 அறவிடப்படுவதற்காக தாபனக் கோவையின் XXIV பந்தியின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் சென்ற 05 வருடம் முதற்கொண்டு 26 காலம் வரையிலும் பயனுள்ள செயற்பாட்டினை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | கடன் நிலுவை தொடர்பாக குறித்த அமைச்சு மற்றும் திறைசேரியிடம் விபரங்கள் அனுப்பப்பட்டன. | |
| 05. | நெற்கொள்வனவுக்காக 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் 02 ற்கு பெற்றுக் கொடுக்கப்பட்ட ரூபா 17,929,775 முற்பணத்தினை 05 வருட காலத்திற்கும் மேலாக தீர்க்கப்படவில்லை. | பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள முற்பணத்தினை மீளப் பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | மீளப் பெறும் செயற்பாடுகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | பெற்றுக் கொடுக்கப்பட்ட முற்பணத்தின் ரூபா 17,829,785 க்கான கடன் மீதி மேலும் அறவிடப்பட வேண்டியுள்ளது. |
| 06. | உதாசீனப்படுத்தப்பட்ட நிர்மாணப் பணியொன்றினை இரத்துச் செய்யப்பட்ட போதிலும் அவ் ஒப்பந்தத்திற்காக 2018 வருடம் பெற்றுக் கொள்ளப்பட்ட ரூபா 1,458,504 வைப்புத் தொகையினை வருமானத்தில் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. அது போலவே நெற் கொள்வனவு செய்வதற்காக 2017 வருடம் பெறப்பட்ட ரூபா 1,800,000 இதுவரையும் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டிருந்த ஒப்பந்தங்களுக்கு குறித்த வைப்பினை வருமானத்துடன் சேர்க்கப்பட வேண்டியதுடன் பெற்றுக் கொள்ளப்பட்ட முற்பணத்தினை மீளப் பெற்றுக் கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்படல் வேண்டும். | நிதிப்பிரமாணத்தின் படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | 2022 பெப்ரவரி வரையிலும் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| 07. | துணுக்காய் மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக அலுவலகங்களுக்கு 2019 வருடம் பெற்றுக் கொடுக்கப்பட்ட 02 தண்ணீர் பவுசர்களை இதுவரையும் பாவனைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. இவ்வாகனங்களுக்கான காப்புறுதி அத்தாட்சி மற்றும் வருமான உரிமம் கணக்காய்வினைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | குறிக்கோளிற்காக பாவனை செய்யவும் வருமான உரிமப் பத்திரம் மற்றும் காப்புறுதி அத்தாட்சியினை பெற்றுக் கொள்ளவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | புதுப்பிக்கவும் வருமான உரிமம் மற்றும் காப்புறுதி அத்தாட்சி ஆகியவற்றை பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. | தேவையான விடயங்கள் இதுவரையும் நிறைவேற்றப் பட்டிருக்கவில்லை. |
| **மன்னார் மாவட்ட செயலகம்**<br>------------------------------------------------ | | | | |
| | 2018 - | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | | |
| | 2019 - | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | | |
| | 2020 - | முனைப்பழியுள்ள அபிப்பிராயம | | |
| **கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட முக்கியமான குறைபாடுகள்**<br>------------------------------------------------ | | **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை**<br>---------------------------- | **நிறுவனத்தில் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள்**<br>---------------------------- | **அது தொடர்பான தற்போதைய நிலைமை**<br>---------------------------- |
| 01. | வரிசை அமைச்சு செயலாளரின் மற்றும் வட மாகாண ஆளுநரின் ஆலோசனைகளுக்கு முரணாக மாந்தை மேற்கு பிரதேச செயலக அலுவலகத்தினால் 08 பயன்பெறுநர்களுக்கு மிருக வளத்தினை பெற்றுக் கொடுக்க வேண்டியிருந்த போதும், அதற்குப் பதிலாக ரூபா 685,000 தொகையினை கொடுக்கப்பட்டிருந்தது. | குறித்த சுற்றுநிருப ஆலோசனைகளின் படி செயற்பட வேண்டியதுடன் அதற்கு முரணாக செயற்பட்டதன் தொடர்பாக அதற்கு பொறுப்பான தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டு இதுபோன்ற தவறுகள் ஏற்படாவண்ணம் தடுப்பதற்கு ஏற்பாடு மேற்கொள்ளப்படல் வேண்டும். | கணக்காய்வுக் குழுவின் தீர்மானப்படி விசாரணை குழுவொன்று நியமிப்பதற்கு தீர்மானித்திருந்த போதிலும் 2022 பெப்ரவரி வரையிலும் அதற்கான முன்னேற்றம் ஏற்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| 02. | மாந்தை மேற்கு செயலக அலுவலகத்தினால் விலை மதிப்பு தீர்மானிக்கப்படாது ரூபா 11,900,000 கால்நடைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | குறித்த சுற்றுநிருப ஆலோசனைகளுக்கு அமைவாக செயற்பட வேண்டியமை. | - மேற்படி - | - மேற்படி - |
| 03. | மாந்தை மேற்கு செயலக அலுவலகத்தினால் ரூபா 199,800 க்கும் நானாட்டான் பிரதேச செயலக அலுவலகத்தினால் ரூபா 2,160,000 க்கும் விலைமதிப்பு தீர்மானிக்கப்படாமல் ஆட்டுக் கிடாய்கள் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்தன. | குறித்து சுற்றுநிருப ஆலோசனைப்படி செயற்பட வேண்டியமை. | - மேற்படி - | - மேற்படி - |
| 04. | 2006 அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.14.1 மற்றும் 8.9.1 (ஆ) வழிகாட்டல்களுக்கு முரணாக முறையான அங்கீகாரம் எல்லையினை மீறப்பட்டு ரூபா 22 மில்லியன் மிருக வளத்தினை கொள்வனவு மேற்கொள்ளவும் ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்படாது இருக்கவும் நானாட்டான் பிரதேச செயலக அலுவலகம் செயற்பட்டு உள்ளது. | பெறுகை வழிகாட்டல்கள் பின்பற்றப்பட்டு ஒப்பந்தங்கள் ஏற்படுத்திக் கொள்வதற்கு செயற்பட வேண்டும். | பெறுகை செயற்பாடு சம்பந்தப்பட்ட அறிவினை பெற்றுக் கொடுத்து இவ்வாறான தவறுகள் தடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும். | வழிகாட்டல்களுக்கு அமைவாக செயற்படாமைக்கான காரணத்தினை விசாரணை செய்து உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளப்பட வில்லை. |
| 05. | 2006 அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.14.1 வழிகாட்டலுக்கு முரணாக ரூபா 10 மில்லியனுக்கான அங்கீகரிக்கப்பட்ட எல்லையினை மீறி ரூபா 15,499,800 மிருக வளங்கள் மற்றும் ஏனைய கொள்வனவுகள் | பெறுகை வழிகாட்டல் ஆலோசனைகளுக்கு அமைய செயற்பட வேண்டும். | பெறுகை செயற்பாடுகள் சம்பந்தப்பட்ட அறிவினை பெற்றுக் கொடுத்து இவ்வாறான தவறுகள் தடுப்பதற்கு ஏற்பாடு மேற்கொள்ளப்படும். | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| | மேற்கொள்வதற்கு மாந்தை மேற்கு பிரதேச செயலக அலுவலகம் செயற்பட்டு உள்ளது. | | | |
| 06. | முருங்கன் அரச வைத்திய அதிகாரியால் 151 பசுக்கள் ரூபா 13,212,500 கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்த போதும், அதற்கான விலை மதிப்பினை தீர்மானிக்கப் பட்டிருக்கவில்லை.<br>நானாட்டான், முசலி மிருகவள கருவூட்டல் சங்க பெயருக்கு காசோலை எழுதப்பட்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டு இருந்தது. | பெறுகை வழிகாட்டல் கோவையினைக்கு அமைய செயற்பட வேண்டும். | நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. உரிய காலத்தில் பதில் பெற்றுக் கொடுக்கப்படும். | கணக்காய்வுக் குழுவின் தீர்மானப்படி விசாரணைக் குழுவொன்று அமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் 2022 பெப்ரவரி வரையிலும் அதற்கான முன்னேற்றம் காணப்படவில்லை. |
| 07. | முருங்கன் அரச மிருக வைத்திய அதிகாரியின் ஆலோசனைப் படி அவருடைய மூன்று ஊழியர்களின் பெயரில் ரூபா 7,525,000 காசோலை எழுதப்பட்டு அவர்கள் மூலமாக அவற்றை காசாக மாற்றிக் கொள்ளப்பட்டிருந்தது. | விநியோகம் செய்பவரின் பெயரில் நேரடியாக எழுதப்பட வேண்டியுள்ளதுடன் ஊழியர் பெயரில் காசோலை எழுதப்பட்டமை தொடர்பாக பொறுப்பான தரப்பினருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | - மேற்படி - | - மேற்படி - |
| 08. | 07 பலன்பெறுனர் பெயரில் ரூபா 4,025,000 காசோலை எழுதப்பட்டு, முருங்கன் அரச மிருக வைத்தியரால் காசு பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. | பயன்பெறுனர் பெயரில் காசோலை எழுத முடியாததுடன் விநியோகித்தர் பெயரில் மாத்திரம் காசோலைகள் நேரடியாக | - மேற்படி - | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| | | எழுதப்படல் வேண்டும். | | |
| 09. | மாந்தை மேற்கு பிரதேச செயலக அலுவலகத்தின் மூலமாக மிருக வளங்கள் கொள்வனவு மேற்கொள்வதற்காக நானாட்டான், முசலி மிருகவள கூட்டுறவு சங்கத்திற்கு 2016 வருடம் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டதாக காட்டப்பட்டிருந்த போதிலும், மாந்தை மேற்கு மிருக வைத்தியரின் சொந்த பெயருக்கு ரூபா 2,206,750 காசோலை எழுதப்பட்டிருந்தது. | விநியோகிப்பவருக்கு மாத்திரம் காசோலையினை நேரடியாக எழுதப்பட வேண்டியதுடன் தனிப்பட்ட பெயரில் காசோலை எழுதப்ப்டு கொடுப்பனவு மேற்கொள்வது தொடர்பாக பொறுப்பான தரப்பினருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | - மேற்படி - | - மேற்படி - |
| 10. | விநியோகிப்பவரின் பெயரில் நேரடியாக காசோலை எழுதப்பட வேண்டியிருந்த போதிலும் மிருக வைத்திய அதிகாரியின் பெயருக்கு 2016 பெப்ரவரி 28 ஆந் திகதி ரூபா 318,000 வைப்பிலிடப்பட்டு இருந்தமை வைப்பு பற்றுச்சீட்டின் மூலம் உறுதியாக இருந்தது. | விநியோகிப்பவரின் பெயருக்கு மாத்திரம் காசோலை எழுதப்படல் வேண்டும். முறையாக விசாரணை மேதற்கொள்ளப்பட்டு தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | - மேற்படி - | - மேற்படி - |
| 11. | மாந்தை மேற்கு பிரதேச செயலக அலுவலக முகாமைத்துவ உதவியாளர் ஒருவரினால் மொத்தம் ரூபா 2,516,812 க்கான 121 காசோலைகள் 2014 வருடம் முதல் 2017 வருடம் வரையிலான காலம் தொட்டு | மோசடியினை தொடர்பாக விசாரித்து பொறுப்பான தரப்பினருக்கு எதிராக துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | ஆரம்பகட்ட விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அமைச்சின் ஆலோசனை கிடைக்கப் பெற்றதும் மேற்கொண்டு விசாரணை செய்யப்படும். | நிகழ்கால நிலைமையினை பற்றி உறுதிப்படுத்தல் முன்வைக்கப் பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மோசடியாக பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தன. | | | |
| 12. | எருக்கலம்பிட்டி கடற்கரை பாதை மற்றும் எருக்கலம்பிட்டி ஆமைப்படுக்கை படகுத்துறை பாதையினை நிர்மாணிக்கும் போது மன்னார் பிரதேச செயலக அலுவலகத்தினால் ரூபா 1,674,732 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | முறையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு கூடுதல் கொடுப்பனவினை அறவிடப்பட வேண்டும். | விசாரணை மேற்கொள்ளப்பட்டு கூடுதல் கொடுப்பனவினை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | கூடுதல் கொடுப்பனவினை அறவிடப்படவில்லை. |
| 13. | மீளாய்வாண்டில் மாவட்ட செயலக அலுவலகம் மற்றும் பிரதேச செயலக பிரிவுகள் 05 இல் அமைந்துள்ள மொத்தம் ரூபா 334,900,000 ஆகும். 33 வீட்டுத் தொகுதிகள் அவ்வீடுகளின் சொந்தக் காரர்களால் பராமரிக்கப்படாமை, அவர்கள் வேறு இடங்களில் வதித்திருத்தல், பொருத்தமற்ற தாழ்நிலங்களில் வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு இருத்தல் ஆகிய காரணங்களினால் 01 வருடம் முதல் கொண்டு 09 வருடங்கள் இடைப்பட்ட காலமாக பிரயோசனப்படாது இழப்பாகி உள்ளது. | அவ்வீடுகளை பாவனை மேற்கொள்ளப்படாமை தொடர்பாக தற்போதைய நிலைமையினை பரீட்சித்து செயற்படாமை மற்றும் இழப்புக்குள்ளானமை தொடர்பாக தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | பலதரப்பட்ட சொந்தக் காரணங்களினால் குறித்த காணிகளில் வதியவில்லை. | 2022 பெப்ரவரி வரையிலும் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருக்காததுடன் வீடுகள் செயலற்று உள்ளன. |
| 14. | மன்னார் மாவட்ட செயலக அலுவலகம் மற்றும் பிரதேச செயலக அலுவலகம் 05 இன் பாவனையில் மற்றும் கட்டுப்பாட்டில் உள்ள மொத்தம் ரூபா 30,358,345 பெறுமதி வாய்ந்த கட்டிடங்கள் மற்றும் 17 இயந்திர அலகுகள் 02 வருடம் முதல் 07 வருடங்கள் இடைப்பட்ட | இக்கட்டிங்களை பாவனை மேற்கொள்வதற்கு தேவையான துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கட்டிடங்கள் திருத்தப்பட்டு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு முழுமையான பாவனைக்காக நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. | 2022 பெப்ரவரி வரையிலும் கட்டிடங்கள் விநியோகிக்கப்படாது உள்ளன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | காலமாக உபயோகப்படுத்தப்படாது உள்ளன. | | | |
| 15. | முசலி பிரதேச செயலகப் பிரிவில் சிலாவத்துறை கிராமத்தில் முடிக்குரிய காணிகளை 18 பயன்பெறுனர்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு அங்கீகரிக்கப்பட்டு பின்னர் அக்கோரிக்கையினை எவ்வித காரணமுமின்றி நிராகரிக்கப்பட்டு தனியார் நிறுவனமொன்றுக்கு நீர்வாழ் கருவூட்டல் திட்டமொன்றுக்கு நீண்டகால குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொடுக்கப்பட்டது. | விசாரணை மேற்கொள்ளப்பட்டு பயன்பெறுனர்களுக்கு வழங்கப்பட வேண்டும். | ஆரம்ப கட்ட விசாரணையினை மேற்கொள்ளப்பட்டு அமைச்சினை அறிவுறுத்தப்பட்டுள்ளது. | 2022 பெப்ரவரி வரையிலும் இப் பிரச்சினை தீர்க்கப்பட்டிருக்க வில்லை. |
| 16. | மாந்தை மேற்கு பிரதேச செயலக அலுவலகத்திற்கு சொந்தமான புனித தோமஸ் விளையாட்டு மைதான திருத்த வேலைகள் முடிக்கப்படாமையினால் செலுத்தப்பட்ட ரூபா 96,955 முற்பணம் பயனற்ற செலவாகியுள்ளதுடன் அதற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 388,040 க்கான விளையாட்டு உபகரணங்கள் பொருளாதார பெறுமதியற்ற செலவாகிப் போயுள்ளது. | ஒப்பந்தப் பணிகள் உரிய கால எல்லையினுள் முடிக்கப்பட வேண்டும். | அறவிடுவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருந்தது. | 2022 பெப்ரவரி வரையிலும் இது தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| 17. | மாந்தே மேற்கு பிரதேச செயலக அலுவலகம் மூலமாக 2017 வருடம் பொது சன மண்டபம் ஒன்றினை | உரிய காலத்தினுள் பணியினை முடிக்கப்பட்டு அதனை பாவனை | நிதி ஒதுக்கீடு பெற்றதும் பணியினை முடிக்கப்படும். | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிர்மாணிப்பதற்கு ரூபா 495,000 செலவிடப்பட்ட போதும், அந்நிர்மாணப் பணியினை முடிக்கப்பட்டு இருக்காமையினால் செலவிடப்பட்ட தொகையினை பயனற்ற செலவாகியுள்ளது. | மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | | |
| 18. | பணியினை முடிக்கப்பட்டதான அறிக்கையினை (Completion Report) தயாரிக்கப்பட்டு இருக்காமையினால் மொத்தம் ரூபா 3,914,565 சம்பந்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் கணக்காய்வின் போது திருப்திகரமான முறையில் உறுதிப்படுத்துவதற்கு முடியாது போயிற்று | நிதிப்பிரமாணம் 780 இன் பிரகாரம் செயற்பட வேண்டும். | தொழில்நுட்ப அதிகாரிகளின் அதிக வேலைப்பளு இதற்கு காரணமாக இருந்தது. | 2022 பெப்ரவரி வரையிலும் பணியினை முடிக்கப்பட்டதற்கான அறிக்கையினை கணக்காய்வு சமர்ப்பிக்கப்பட வில்லை. |
| 19. | இலக்கம் 08/2019 மற்றும் 2019 மார்ச் 27 ஆந் திகதிய உள்நாட்டு விவகார அமைச்சின் சுற்றுநிருபத்திற்கு முரணாக மாவட்ட செயலாளரினால் 2019 மே மாதம் முதல் 2020 ஆகஸ்ட் மாதம் வரையிலான காலத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட எல்லையினை மீறி ரூபா 260,119 உபசரிப்பு கொடுப்பனவாக பெற்றுக் கொள்ளப்பட்டு இருந்தது. | மாதாந்த உபசரிப்பு கொடுப்பனவுக்கு மேலதிகமாக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளை சம்பந்தப்பட்ட அதிகாரியிடமிருந்து அறவிடப்பட வேண்டியமை. | அதிக கூட்டங்கள் நடாத்தப்பட்டமை யினால் மேலதிக செலவுகள் ஏற்பட்டன. | உபசரிப்பு கொடுப்பனவுக்கு மேலதிகமாக பெற்றுக் கொள்ளப்பட்ட தொகையினை அறவிடப்படவில்லை. |
| 20. | இலக்கம் 11/2006 மற்றும் 2006 யூலை 14 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றுநிருபத்தின் 3(ix) பிரிவின் படி மாவட்ட செயலாளரினால் 2019 சனவரி | சுற்றறிக்கைக்கு முரணாக செலுத்தப்பட்ட எரிபொருள் செலவினை அதிகாரியிடமிருந்து | நிலவிய தொற்று நிலை மற்றும் கொழும்பில் நடாத்தப்பட்ட மேலதிக கூட்டங்கள் ஆகிய விடயங்களினால் | 2022 பெப்ரவரி வரையிலும் அத்தொகையினை அறவிடப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | முதல் 2020 ஆகஸ்ட் மாதம் வரையிலான காலத்தினுள் மாதாந்த எரிபொருள் கொடுப்பனவாக ரூபா 470,045 பெற்றுக் கொண்டிருந்தது. ஆனால் அதற்கு புறம்பாக மற்றும் அந்த சுற்றுநிருபத்திற்கு முரணாக அரச எரிபொருள் கோரிக்கை மூலமாகவும் ரூபா 444,875 க்கான எரிபொருள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. | அறவிடப்பட வேண்டும். | மேலதிக எரிபொருள் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. | |
| 21. | 02 வருடங்கள் கழிந்துள்ள மொத்தம் மூரூபா 1,585,834 க்கான ஒப்பந்தங்களுக்காக தேக்கி வைக்கப்பட்டிருந்த 20 வைப்புக்கள் பொது வைப்புக் கணக்கில் மீதியாக உள்ளன. | வைப்பு மீதிகளை துரிதமாக தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல். | தேக்கி வைக்கப்பட்டிருக்கும் வைப்புக்களை மீளச் செலுத்துவதற்கு அல்லது பொது வருமானத்தில் மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | 2022 பெப்ரவரி வரையிலும் மீதிகள் தீர்த்து வைக்கப்பட்டிருக்க வில்லை. |
| 22. | ஒன்று திரப்பட்ட பெறுமதியினை மீதான வரி செலுத்தலுக்காக பதிவு செய்யப்படாத ஒப்பந்தக் காரர்களுக்காக அந்த வரியினை செலுத்த வேண்டியுள்ளதாக கருதி ரூபா 425,752 வரிப் பணத்தை வைப்புக் கணக்கில் சேர்க்கப்பட்டிருந்தது. போதிய அளவிலான காலம் கழிந்து விடப்பட்டிரந்த போதிலும் அவற்றினை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | பதிவு செய்யப்படாத ஒப்பந்தக் காரர்களுக்காக வரி உரிமையினை இல்லாமையினால் அப் பணத்தினை பொது வருமானக் கணக்கில் சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | வரிக்காக பதிவினை பெற்றுக் கொண்டு அதனை சமர்ப்பிப்பதற்கு சொந்தக்காரருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | வரிக்காக பதியப்பட்டிராத காலத்திற்கு தொடர்பாக வரித் தொகையினை வருமானத்தில் சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| 23. | மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 10 மில்லியனுக்கான பாதையின் நிர்மாணிப்பினை 2019 நவம்பர் மாதம் முடிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2021 மார்ச் மாதம் வரையும் அதனை முடிக்கப்படாது இருந்தது. இதற்காக நாட்களை நீடித்துத் தரும்படியாகவும் கோரப்படாமையினாலும் மற்றும் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டதன் பிரகாரமும் காரியங்கள் நடைபெறாமையினாலும் ஒப்பந்தத்தினை இரத்துச் செய்து செயற்பாட்டு பிணை முறியினை பொது வருமானத்தில் சேர்ப்பதற்கு துரித தீர்மானம் மேற்கொள்ளப்படவில்லை. அதன் காரணமாக அப்பிணை முறியினை ஒப்பந்தக்காரர் விடுவித்துக் கொண்டிருந்தார். வேலைத்தளத்திற்கு கொண்டு வரப்பட்ட மூலப் பொருட்களுக்காக ஒப்பந்தக்காரருக்கு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்ட போதிலும் பாதுகாப்பதற்காக குறிப்பிடத்தக்க வேலைத் திட்டமொன்று இல்லாமையினால் அவை காணாமற்போய்க் கொண்டும் மற்றும் அழந்து கொண்டும் இருந்தன. கைவிடப்பட்ட இத்திட்டத்திற்கான செயலாற்றல் பிணை முறிப் | அரச நிதியத்தினைக்கு எவ்வித இழப்பும் ஏற்படாத வண்ணம் உரிய காலத்தினுள் அந்த நிர்மாணப் பணிகளினை முடிக்கப்பட வேண்டியதுடன் அவ்வாறு மேற்கொள்ளாமை தொடர்பாக நடவடிக்கையினை மேற்கொள்ளாத பொறுப்பான தரப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | இந்த திட்டத்தினை தொடர்பாக விசாரணைக் குழுவினை அமைக்கப் பட்டிருக்கிறது. விசாரணைக் குழு அறிக்கைக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு எதிர்காலத்தில் பதிலினை பெற்றுக் கொடுக்கப்படும். | விசாரணையினை முடிக்கப்பட்டுள்ள போதும், 2022 பெப்ரவரி வரையிலும் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பெறுமதி மூலப்பொருள் கிரயம் மற்றும் ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்ட கொடுப்பனவாக மொத்தம் ரூபா 1,995,318 இழப்பினை அரசுக்கு ஏற்பட்டிருந்தது. | | | |
| 24. | மொத்தம் ரூபா 1,371,155 க்கான 49 கொவிட் கொடுப்பனவுகளை இனங்காண முடியாமல் 2015 வருடம் முதல் இருந்து வருவதாயினும் அவற்றினை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | விசாரணையை துரிதமாக முடிக்கப்பட்டு தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | இது தொடர்பாக விசாரணையினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | ஆரம்ப கட்ட விசாரணை முடிக்கப்பட்டு குற்றச்சாட்டு பத்திரங்கள் சமர்ப்பிக்கப் பட்டுள்ளன. |

**புத்தளம் மாவட்ட செயலகம்**

**---------------------------------**

| | | | |
|---|---|---|---|
| | 2018 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | |
| | 2019 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | |
| | 2020 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | |

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள பிரதான குறைபாடுகள் ------------------------ | | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை --------------------- | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | அது தொடர்பான தற்போதைய நிலைமை --------------------- |
|---|---|---|---|---|
| 01. | 19 வாகன விபத்துக்களுக்குரிய கோவைகள் மாவட்ட செயலகத்தில் இல்லாததன் காரணமாக ரூபா 1,318,233 கூட்டு மொத்தமான நட்டங்கள் தொடர்பாக திருப்திகரமாக சான்றுறுதி செய்யமுடியாதிருந்தது. | முறையான பரிசோதனைகளை மேற்கொண்டு பொறுப்பான உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக தேவையான நடவடிக்கை எடுத்தல். | உரிய கோவைகள் தொடர்பாக தேடிப்பார்ப்பதற்கு ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. | 2022பெப்ரவரி வரையில் குறித்த பரிசோதனைகள் மேற்கொள்ளப் படவில்லை. |
| 02. | மாவட்டத்திலுள்ள 71 உத்தியோகபூர்வ | உத்தியோகபூர்வ இல்லங்களின் | நிதி ஏற்பாடுகள் கிடைத்த உடன் இந்த | 2022பெப்ரவரி வரையில் , |

| | | | | |
|---|---|---|---|---|
| | இல்லங்களில் 10 இல்லங்கள் பயன்பாட்டிற்கு பொருத்தமற்ற நிலையில் காணப்பட்ட போதிலும் அது சம்பந்தமாக முறையான நடவடிக்கைகள் எடுக்காததன் காரணமாக அவை அழிவுக்கு உள்ளாகி விளைவற்றுக் காணப்பட்டது | பாதுகாப்பிற்காக முறையான நடைமுறைகள் பின்பற்றுதல் வேண்டும். | உத்தியோகபூர்வ இல்லங்களை உடைத்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.. | உத்தியோகபூர்வ இல்லங்களை உடைத்து அகற்றப்பட்டமை அல்லது திருத்த றுவதற்கு நடவடிக்கைகள் முடிக்கப்படவில்லை. |
| 03. | சமூக சேவைகள் திணைக்களத்தின் மூலம் புத்தளம் பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் ஊனமுற்ற 79 நபர்களுக்கு 2018 ஆம் ஆண்டின் போது ஊனமுற்ற படியாக (வாழ்வாதாரம்) ரூபா 2,844,000 செலுத்தப்பட்டிருந்தது. எனினும் உண்மையாக இன்னும் 66 நபர்களுக்கு ஊனமுற்றோர் வாழ்வாதாரம் வழங்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டு காத்திருத்தல் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | பொது மக்களின் தேவைப்பாட்டை விரைவாகப் பூர்த்தி செய்வதற்கு தேவையான ஏற்பாடுகள் செய்யப்படுதல் வேண்டும். ශුකය. | காத்திருத்தல் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டு தற்பொழுது 66 நபர்கள் தகைமை பெற்றிருந்தும் நிதி ஏற்பாடு இல்லாததனால் அந்த நலன் பெறுனர்களுக்கு கொடுப்பனவு செய்வதற்கு முடியாதிருந்தது. தேவையான நிதி ஏற்பாடுகளைப் பெற்றுக் கொள்வதற்கான கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | இந்நிலைமை அனைத்து வருடங்களிலும் அவதானிக்கப் பட்டுள்ளது. |
| 04. | 2019 கம்பெரலிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மஹவெவ பிரதேச செயலகப் பிரிவிலுள்ள குடாவெவ குளத்திலிருந்து நீர்த் தாவரங்களை அகற்றுவதற்காக ரூபா 1,923,000 தொகையான செய்த வேலைகளின் பெறுமதிக்கு பணம் செலுத்தப்பட்டிருந்தும் 2020 சனவரி 04 ஆந் திகதிய கணக்காய்வு பரிசோதனையின் பிரகாரம் | செயற்திட்டத்திற்காக அரசாங்கத்தின் பணத்தை செலவு செய்யும் போது உச்சளவு விளைவினை பொது மக்களுக்கு கிடைக்கக் கூடிய வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 47 ஏக்கர் பரப்பளவானதுடன் உரிய மதிப்பீட்டிற்கு இணங்க 17 ஏக்கர் நீர்த் தாவரங்களை அகற்றுதல் செய்யப்பட வேண்டிய போதிலும் 20 ஏக்கர் அளவான நீர்த்தாவரம் அகற்றப்பட்டிருந்தது. | தற்போது இக்குளம் நீர்த் தாவரங்களினால் நிறைந்திருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | குளத்தில் பெரிய பிரதேசத்தில் செல்வீனியா மழைநீர்த் தாவரம் வளர்ந்திருந்ததனால் மேற்கொள்ளப்பட்ட செலவு விளைவற்றதாகியிருந்தது. | | | |
| 05. | 2014 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட தெயட்ட கிருல நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட நவகத்தேகம நாடக அரங்கினை உரிய முறைப்படி பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்வதற்கு உரிய பிரதேசத்திலுள்ள உள்ளூராட்சி நிறுவனத்திற்கு ஒப்படைக்க வேண்டுமென தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், அவ்வாறு செய்யாமையினால் உரிய நாடக அரங்கு விளைவற்று அழிவடைந்து காணப்பட்டது. | உரிய உள்ளூராட்சி நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டு பயன்படுத்தப்படுவ தற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நவகத்தேகம நாடக அரங்கு அமைந்துள்ள காணியை பிரதேச செயலகத்தினால் பொறுப்பேற்பதற்கு உரிய திட்ட வரைபடத்தை (உருவரிப் படம்) பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டள்ளது. | 2022பெப்ரவரி வரையில் ,இந் நாடக அரங்கு விளைவற்று அழிவடைந்து காணப்பட்டது. |
| 06. | சிலாபம் பிரதேச செயலகப் பிரிவில் 30 நலன் பெறுநர்களின் வீடுகளுக்கு மின்சாரத்தை வழங்குவதற்காக ஒரு நலன்பெறுனருக்கு ரூபா 20,000 வீதம் நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. மேலும், கம்பெரலிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வீடமைப்பு உதவிச் செயற்திட்டத்தினை அமுல்படுத்தும் போது ஒரு நலன்பெறுநருக்கு ரூபா 100,000 வீதம் 46 நலன்பெறுநர்களுக்கு 2019 | சரியாக நலன்பெறுநர்கள் தெரிவு செய்யப்பட்டு பிரதேச அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்ட தொகையில் உச்ச அளவு பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 46 வீடமைப்பு உதவி நலன்பெறுநர்களும் வீடுகளை நிர்மாணித்தலை 2019-12-31 ஆந் திகதி வரை பூர்த்தி செய்வதற்கு முடியவில்லை எனத் தெரிவித்து உதவிப் பணத்தைப் பெற்றுக்கொள்ளுதல் நிராகரிக்கப் பட்டுள்ளது. நிதி அமைச்சின் திறைசேரி செயலாளரினால் வழங்கப்பட்ட | இந்நிலைமையே தற்போதும் அவதானிக்கப் பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆம் அண்டில் ரூபா 4,600,000 உதவிப் பணம் அங்கீகரிக்கப்பட்டிருந்தும் நலன்பெறுநர்களைத் தெரிவு செய்யும் நடைமுறையில் இருந்த குறைபாடுகளின் காரணமாக அந்த உதவி தேவைப்படுகின்ற நபர்களை இனங்காணாமையின் காரணமாக அச்செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்க வில்லை. | | BD/GPS/155/09/01/HA-2019 ஆம் இலக்க 2019-11-20 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் தற்பொழுது வேலை ஆரம்பிக்கப்படாத அனைத்து செயற்திட்டங்களையும் மீண்டும் தெரிவிக்கும் வரை கைவிடப்பட்டதனால் இச்செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | |
| 07. | முந்தல் பிரதேச செயலகத்தில் 2019 பாதீட்டு பிரேரணையின் பிரகாரம் 2019 செப்தெம்பர் 30 ஆந் திகதிக்கு முன்னர் அங்கீகரிக்கப்பட்ட 33 செயற்திட்டங்கள் 2019 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்டிருக்க வில்லை. | பிரதேச அபிவிருத்திக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பணத்திலிருந்து உச்ச அளவு பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எதிர் காலத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட பணத்திலிருந்து உச்ச அளவு பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்வதற்கு முடியுமானளவு செயற்திட்டங்கள திட்டமிடப்படும். | இந்நிலைமையே தற்போதும் அவதானிக்கப் பட்டது. |
| 08. | மாதம்பை பிரதேச செயலகப் பிரிவில் 557 சீ தம்பகல்ல மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் சமூக அடிப்படை அமைப்புக்களின் மூலம் அமுல்படுத்தப்பட்ட நீர்ச் செயற்திட்டத்திற்காக 2014, 2015 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் ரூபா 2,674,434 பணம் செலவு செய்யப்பட்டிருந்தது. | செயற்திட்டத்திற்காக அரசாங்கத்தின் பணத்தை செலவு செய்யும் போது உச்சளவு பெறுபேறுகள் மக்களுக்கு கிடைக்கும் வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எதிர் காலத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட பணத்திலிருந்து உச்ச அளவு பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்வதற்கு முடியுமானளவு செயற்திட்டங்கள திட்டமிடப்படும். | 2022பெப்ரவரி வரையில் ,இச்சிக்கல் தீர்க்கப்பட்டிருக் கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | எவ்வாறாயினும், இரு தரப்பினர்களுக்குமிடையே ஏற்பட்ட சிக்கல்களின் காரணமாக 2019 ஆம் ஆண்டின் இறுதி வரை மேற்கூறிய செயற்திட்டத்திற்கு வேலைகளை முடிவுறுத்துவதற்கு முடியாதிருந்தது. | | | |
| 09. | மஹகும்புக்கடவல பிரதேச செயலகத்தின் குளாம் வாகனங்கள் மிகவும் உடைந்த நிலையில் காணப்படுவதுடன் அதனை முறைப்படியாக திருத்தம் செய்து ஒடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இடர் முகாமைத்துவ அமைச்சிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட உழவு இயந்திரமும் நீர் பவுசரும் முறைப்படியாக பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படாததனால் விளைவற்று துருப்பிடித்துக் காணப்பட்டது. | அரசாங்கத்தின் ஆதனங்களை முறைப்படியாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உழவு இயந்திர பவுசர்களின் இரண்டு தாங்கிகள் திறந்த வெளியில் நிறுத்தி வைக்கப்பட்டதானது அதனை நிறுத்தி வைப்பதற்கு பாதுகாப்பான இடம் இல்லாததத்தினாலாகும். வாகன தரிப்பிடத்தை நிர்மாணிப்பதற்கு நிதி ஏற்பாடுகள் கோரப்பட்டுள்ளது. | 2022பெப்ரவரி வரையில் இச்சிக்கல் தீர்க்கப்பட்டிருக் கவில்லை. |
| 10. | தேசிய இடர் நிவாரண சேவைகள் நிலையம், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு, இடர் முகாமைத்துவ நிலையம் என்பவற்றின் மூலம் வறட்சியினால் இன்னல்களுக்கு உள்ளாகிய மக்களுக்கு குடிநீரினைப் பகிர்ந்தளிப்பதற்காக | உரிய வாகனங்களைப் பொறுப்பேற்று கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். | புத்தளம் மாவட்ட செயலகத்தினால் பொறுப்பேற்கப்பட் டுள்ள அனைத்து வாகனங்களும் 2020 ஆம் ஆண்டளவில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இடர் முகாமைத்துவ | 2022பெப்ரவரி வரையில் இச்சிக்கல் முழுமையாகத் தீர்க்கப்பட்டிருக் கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வழங்கப்பட்ட உழவு இயந்திர பவுசர், லொறி பவுசர் என்பன முறையே 25, 09 மற்றும் 08 ஆக மொத்தம் 42 எண்ணிக்கையானவை வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த பவுசர்களை மாவட்ட செயலகம் பொறுப்பேற்று கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | அமைச்சினால் வழங்கப்பட்ட வாகனங்கள் இதுவரை பொறுப்பேற்கப்படாத தனால் பொறுப்பேற்கப்படுவதற் கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | |
| 11. | ஐந்து பிரதேச செயலகங்களில் இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலப் பகுதியாக எதுவித பயன்பாட்டிற்கும் எடுத்துக் கொள்ளப்படாத ரூபா 5,650,000 பெறுமதியான 11 வாகனங்களை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு அல்லது ஏதாவது பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாதுவிடின் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் பயன்படுத்தப்படாது காணப்பட்ட வாகனங்களைப் பொறுப்பேற்கும் நடவடிக்கைக்காக நிதி அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டது. | - மேற்படி - |
| 12. | ஆனமடுவ பிரதேச செயலகப் பிரிவில் கம்பெரலிய துரித நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கிராமிய வீதிகளுக்கு கிரவல் இட்டு அபிவிருத்தி செய்யும் போது கிரவலைப் பெற்றுக் கொள்ளுவது சம்பந்தமாக மிகை மதிப்பீடு தயாரித்ததன் காரணமாக 42 சந்தர்ப்பங்களின் போது ரூபா 3,667,149 மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. | நிர்ணயிக்கப்பட்ட வேலை விடயங்களின் பிரகாரம் சரியாக பொறியியலாளர் மதிப்பீட்டினைத் தயாரித்து கொடுப்பனவு செய்ய வேண்டியிருத்தல் மற்றும் தொழில்சார் கவனமின்றி பொறியியலாளர் | இது சம்பந்தமாகப் பரீட்சித்து அறிக்கையிடுவதற்கு என்னால் மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் நிறைவேற்று பொறியியலாளரின் தலைமைத்துவத்தில் மூன்று நபர் புலனாய்வுக்குழு நியமிக்கப்பட்டது. | பணத்தை மீள அறவிடுவதற்கு தீர்மானிக்கப் பட்டிருந்தும் 2022 , பெப்ரவரி வரையில் பணத்தை மீள அறவிடுவதானது முடிக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மதிப்பீடு தயாரித்ததனால் இடம்பெற்றுள்ள முழுமையான நட்டத்தையும் பொறுப்பான தரப்பினரிடமிருந்து மீள அறவிடுதல் வேண்டும். | அவ்வறிக்கை பெற்ற பின்னர் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | |
| 13. | மஹகும்புக்கடவல பிரதேச செயலகத்திற்கு இணைத்துக் கொள்ளப்பட்டு சேவையாற்றிய கிராம உத்தியோகத்தர் இலஞ்சம் பெற்றுக் கொண்டதன் காரணமாக சேவையை கைவிட்டு நீதிமன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்த போதிலும், தாபன விதிக் கோவையின் II ஆம் பகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 27.11 ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்கள விசாரணையானது தனியாக நடாத்தப்பட்டு பிழை அல்லது சரி நிர்ணயிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | தாபன விதிக் கோவையிலுள்ள ஒழுங்கு விதிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | திணைக்கள விசாரணையை மேற்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது . | 2022பெப்ரவரி வரையில் விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. |
| 14. | 1992 இன் 33 ஆம் இலக்க சுரங்கங்கள் மற்றும் கனிய வளங்கள் அதிகாரச்சட்டத்தின் கீழ் மண், கிரவல் மற்றும் மணல் தோண்டி எடுப்பதற்காக அனுமதிப்பத்திரங்களை வழங்கும் அதிகாரம் புவிச்சரிதவியல் ஆய்வு | சட்டவிரோதமாக இடம்பெறும் மண் கிரவல், மணல் என்பன தோண்டி எடுக்கும் நடவடிக்கையைக் கட்டுப் படுத்துவதற்காக புவிச்சரிதவியல் | பிரதேச செயலாளரின் சிபார்சினைக் கருத்திற் கொள்ளாது அகழ்வு அனுமதிப் பத்திரங்களை வழங்கியமை தொடர்பாக குறிப்பிட்ட அமைச்சின் செயளாளருக்கு | பிரதேச செயலாளரின் சிபார்சினைக் கருத்திற் கொள்ளாது புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கங்கள் பணியகத்தினகல் அனுமதிப் |

| | | | | |
|---|---|---|---|---|
| | மற்றும் சுரங்கங்கள் பணியகத்தின் மூலம் இடம்பெறுவதுடன் அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு முன்னர் கருவலகஸ்வெவ பிரதேச செயலாளர் சிபார்சு செய்யாத சந்தர்ப்பத்தில் பல்வேறு நிறுவனங்களின் அங்கீகாரத்தின் கீழ் மண் கிரவல், மணல் என்பன சட்டவிரோதமாக தோண்டி எடுத்தல் இடம்பெற்றிருந்தது. | ஆய்வு மற்றும் சுரங்கங்கள் பணியகத்தின் மூலம் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் சம்பந்தமாக பிரதேச செயலாளருக்குத் தெரியப்படுத்துதல் வேண்டும்.. | அறிவிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | பத்திரங்கள் வழஙகப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. |
| 15. | வைப்புச் செய்யப்பட்ட திகதியிலிருந்து இரு வருடங்களுக்கு மேற்பட்ட 07 வைப்புக் கணக்கு வகைகளுக்கான மொத்தப் பெறுமதி ரூபா 50,679,629 ஆன பொது வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வைப்புச் செய்யப்பட்ட திகதியிலிருந்து இரு வருடங்களுக்கு மேற்பட்ட வைப்புக்கள் தொடர்பாக நி.பி 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | எதிர்வரும் வருடத்திற்குள் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | 2022பெப்ரவரி வரையில் தீர்க்கப்படவில்லை. |
| 16. | இலங்கை உயர்தொழில் நுட்ப நிறுவனமொன்று கறுவலகஸ்வேவ பிரதேசச் செயலகப் பிரிவில் நிறுவப்பட்டமைக்கான 2019 ஆம் ஆண்டில் கம்பெரலிய வேலைத்திட்டத்தின் கீழ் 2019 ஒக்டோபர் 15 ஆந் திகதி அணுகல் சாலைக்கு சல்லிக் கற்கள் போடுவதற்காக ரூபா 1,374,333 உம், 2019 நவம்பர் 29 ஆந் திகதி மேலே கூறப்பட்ட இடத்தைச் சுத்திகரிப்பதற்காக ரூபா | இது சம்பந்தமான பொறுப்பு வாய்ந்த தரப்பினருக்கு தெரியப்படுத்து வதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | முன்மொழியப்பட்ட பல்கலைக் கழகங்கள் மற்றும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி நிர்மாணப் பகுதிக்கு அணுகுசாலைகள் அமைப்பது மற்றும் நிலத்தை தனியாக இனங்காண்பதின் தேவைப்பாட்டின் அடிப்படையில் அப்போதைய அரசின் திட்டங்களின் அடிப்படையில் இச் | முன்மொழியப்பட்ட பல்கலைக் கழக நிர்மாணம் மேற்கொள்ளப்படவில்லை லயெனக் குறிப்பிடப்பட்டிருந் ததடன் ,வேறு வேலைத்திட்டங்களுக்கா க பிரதேச அபிவிருத்தி குழு அங்கீகாரம் வழங்கியிருந்ததாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | 251,991 உம், செலவிடப்பட்டிருந்தன. ஆயினும், இத்தொழில் நிர்மாணத்திற்கு குறிப்பிட்ட திட்டங்கள் இல்லாதபடியால் கம்பெரலிய வேலைத் திட்டத்திற்கு மேற்கூறப்பட்ட பணம் செலவு செய்யப்பட்டிருந்ததுடன், மேற்கொண்டு எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படாமையால் அப்பகுதி மீண்டும் காடுகளாக்கப்பட்டுள்ளதால் செலவிடப்பட்ட முழுத் தொகையும் விளைவற்ற செலவாகக் காணப்பட்டது. | | செயற்திட்டம் செயற்படுத்தப் படுவதுடன் நிர்மாண நடவடிக்கைகள் சம்பந்தமான பொறுப்பு இலங்கை உயர் தொழில்நுட்ப நிறுவனத்திற்குரியது என்பதால் அது எனது கடமைகள் எல்லைக்கு அப்பாற்பட்டது என்பதை தயவுடன் சுட்டிக் காட்டுகின்றேன். | |
| 17. | தங்கொட்டுவ நீர் வழங்கல் சபைக்குச் சொந்தமான அழுத்த சமநிலைத் தாங்கி நிறுவப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தமை தங்கொட்டுவப் பிரதேசச் செயலாளர் பிரிவிற்கான ம/கஹடவிலக்கிராம சேவகர் பிரிவில் ஆகும். இதற்காக அக்கிராம சேவகர் பிரிவில் பிரதேசச் சபைக்குச் சொந்தமான தெல்கஹவத்த எனும் பெயரிலான காணியிலிருந்து 0.2023 ஹெக்டயர் ஆன அளவொன்று (றூட் 02) கைப்பற்றுவதற்காக இலக்கம் 1716/15 ஆன 2011 யூலை 26 ஆந் திகதிய அதிவிசேட | ஒரு பெரிய நிலப்பரப்பில் செயற்படுத்தக் கூடிய செயற் திட்டங்களை விரைவில் செயற்படுத்து வதற்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். | வென்னப்புவ பிரதேச சபை, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை மற்றும் பிரதேச செயலக அதிகாரிகளுடன் தங்கொட்டுவ அழுத்த சமநிலையை நிர்மாணிப்பதற்கான எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள் ளது. அதன் பிரகாரம் தங்கொட்டுவ தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு உரித்தான | 2022பெப்ரவரி வரையில் சிக்கல் தீர்க்கப்பட்டிருக் கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் கைப்பற்றுதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. கைப்பற்றுதல் பூர்வாங்க நடவடிக்கைகள் மற்றும் நட்டஈட்டுக் கொடுப்பனவு நடவடிக்கைகள் ரூபா 773,220 ஆன தொகையொன்று பிரதேசச் செயலகத்தில் வைப்பிலிடப்பட்டிருந்ததுடன் வென்னப்புவ பிரதேச சபையின் மூலம் காணியின் உரிமை கைப்பற்றப்படா மையால் தங்கொட்டுவ பிரதேசச் செயலாளர் பிரிவில் உள்ள 28 கிராம சேவகர் பிரிவுகள், நாத்தாண்டியா பிரதேசச் செயலாளர் பிரிவின் 07 கிராம சேவகர் பிரிவுகள், வென்னப்புவ பிரதேசச் செயலாளர் பிரிவில் 52 கிராம சேவகர் பிரிவுகளுக்காக அதிக பரப்பளவு கொண்ட இத்திட்டத்திற்கு முன்னுரிமை வழங்குவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை. | | அழுத்த சமநிலைத் தாங்கியை நிர்மாணிப்பதற்காக ப.்.கஹடவிலப் பிரிவில் 2 றூட் ஆன தெல்கஹவத்த காணியின் உரிமையை வழங்குவதற்கு வென்னப்புவ பிரதேச சபை இணக்கம் தெரிவித்துள்ளது. அத்துடன் அழுத்த சமநிலைத் தாங்கியின் நிர்மாண நடவடிக்கை களுக்காக நீர் வழங்கல் சபை தயாராக உள்ளது. அதன் பிரகாரம் தங்கொட்டுவ, நாத்தாண்டியா, மற்றும் வென்னப்புவ பிரதேச செயலகத் தொகுதிகளில் 52 கிராம சேவகர் பிரிவுகளினூடாக நீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க முடியுமென்பதைத் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | |
| 18. | மஹவெவப் பிரதேச செயலகத்தில் ஓய்வு நேரத்தைக் கழிப்பதற்கான சிறுவர் சந்ததியை உருவாக்கும் நோக்குடன் மேற்கு இரணவில சிறுவர் பூங்காவை நிர்மாணிக்கும் செயற்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளதுடன், அது மேற்கு இரணவில | இவ்வாறான குறைபாடுகள் மீண்டும் ஏற்படாதவாறு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதுடன் முறையான கவனத்துடன் | பிரதேசச் செயலகப் பிரிவின் மேற்கு கரையோரப் பகுதி கடல் அரிப்பிற்கு உள்ளானது. கணக்காய்வு ஐயவினாவிற்கு உட்பட்ட சிறுவர் பூங்காவும் மேற்குக் கடற்கரையில் | தற்போது சாத்தியக்கூறு ஆய்வுக்குப் பின்னர் செயற்திட்டம் நடைமுறைப் படுத்தப்படுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் இச்செயற்திட்டம் திட்டமிடப்பட்டபோது |

| | | | | |
|---|---|---|---|---|
| | தொடரிலக்கம் PU/MHW/2016/122 ஆன காணிப் பகுதியில் கட்டப்பட்டுள்ளது. இது கடலோரப் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு சொந்தமானதுடன், கணக்காய்வுத் திகதி வரையில் கடல்நீர் செயற்திட்டம் கட்டப்பட்டுள்ள இடத்திற்கே வந்துள்ளதாக அவதானிக்கப்பட்டது. மேலும் கடலரிப்பு ஏற்பட்டால் செயற் திட்டத்திற்காகச் செலவிடப்பட்ட ரூபா 927,000 ஆன தொகை விளைவற்ற செலவொன்றாகவும், கடலரிப்பைத் தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படாமை மற்றும் செயற்திட்டத்திற்காக இடத்தை தெரிவு செய்வதில் தவறொன்று ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | செலவிடப்பட்ட பணத்தில் உயர்ந்த பலனைப் பெறுவதற்குத் தேவையான முடிவொன்று எடுக்கப்படல் வேண்டும். | அமைந்துள்ளதால் மேற்கூறப்பட்ட இயற்கை காலநிலைச் சீற்றத்தின் தாக்கங்கள் இச்சிறுவர் பூங்கா அமைந்துள்ள பகுதியிலும் பாதிப்பை ஏற்படுத்தியது. நிர்மாணத்திற்கான நிலத்தை தேர்ந்தெடுக்கும் போது இது போன்ற கடுமையான கடலரிப்பிற்கு ஆளாகாததால் நிலத்தின் சாத்தியக்கூறு அப்போது உகந்த மட்டத்தில் காணப்பட்டதால் குறிப்பிட்ட செயற்திட்டத்தை தேர்ந்தெடுப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. | அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| 19. | ஆராச்சிக்கட்டுவ பிரதேசச் செயலகப் பிரிவில் குமாரக்கட்டுவ நீர்ச் செயற்திட்டத்திற்காக 2014 வருடாந்த வரவு செலவு முன்மொழிவுகளின் கீழ் ரூபா 3,884,248 செலவிடப்பட்டிருந்ததுடன், குமாரக்கட்டுவ சமூக சங்கங்களினூடாக ரூபா 2,204,798 செலவிடப்பட்டிருந்தது. 2021 ஆம் ஆண்டு வரையில் | மிகுதிக் குறைபாடுகள் பூரணப் படுத்தப்பட்டு பலன்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 2021 ஆம் ஆண்டின் ஒதுக்கங்களைப் பயன்படுத்தி பலன்களை விரைவில் வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | 2022பெப்ரவரி வரையில் இச்சிக்கல் தீர்க்கப்பட்டிருக் கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அப்பிரதேச மக்களுக்கு குடிநீர் வழங்க முடியாத நிலை காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | | | |
| 20. | வனாத்துவில்லுப் பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள தெற்கு கிளினிக் மத்திய நிலையம் ரூபா 4,646,356 ஆன செலவில் 2014 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. 2021 ஆம் ஆண்டு வரையில் பயன்படுத்தப்படாது விளைவற்றதாகக் காணப்பட்டது. | செயற்திட்டத்தை நடைமுறைப் படுத்தும் நோக்கம் நிறைவேற்றப் படுவதற்கு பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். | இந்த நிர்மாண பிரதேசச் சுகாதார பணிப்பாளர் அலுவலகத்திற்குக் கையளிக்கப்பட்டுள்ளது. மருத்துவர்கள் மற்றும் ஊழியர்களின் வெற்றிடங்கள் காணப்பட்டதால் இக்கிளினிக் மத்திய நிலையத்தை நடாத்திச் செல்வதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | 2022பெப்ரவரி வரையில் கிளினிக் நடாத்தப்படவில்லை. |
| 21. | ஆனமடுவ பிரதேசச் செயலகத்தினால் 2017 ஆம் ஆண்டு கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி செய்தல் விசேட செயற்திட்டத்தின் கீழ் ரூபா 1,500,000 ஒதுக்கத்தின் அடிப்படையில் நிர்மாணிக்கப்பட்ட விசைத்தறி நெசவு மத்திய நிலையத்தின் கட்டிடம் அத்திவாரம் வரையில் மட்டுமே நிர்மாணிக்கப் பட்டிருந்ததுடன், 2021 ஆம் ஆண்டு வரையில் அதன் மிகுதி வேலைகள் பூரணப் படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஒதுக்கங்கள் பெறப்பட்டு மிகுதி பணிகள் முடிக்கப்பட்டு பயன்படுத்து வதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும் | இந்நிர்மாணம் ஆனமடுவ வி.சே.ச சங்கத்திற்கு கையளிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது | மிகுதி பணிகள் 2022 பெப்ரவரி வரையில் பூரணப் படுத்தப்பட்டிருக கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| 22. | ஆனமடுவ பிரதேசச் செயலகத்தினால் 2015 ஆம் ஆண்டிலிருந்து 2019 வரையான காலப்பகுதியில் ரூபா 7,725,000 ஆன தொகையொன்று செலவிடப்பட்டிருந்த 18 செயற்திட்டங்கள் முடிவடையாது கைவிடப்பட்டிருந்ததுடன், அச்செயற்திட்டங்களை முடிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் தொடர்பாகப் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரின் கவனம் கோரப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டம் செயற்படுத்தப் படாமைக்கான காரணம் கண்டுபிடிக்கப் படல் வேண்டும். செயற்திட்டம் பூரணப்படுத்தப் பட்டு பலன்கள் பெறப்படல் வேண்டும். | கட்டம் கட்டமாக நிர்மாணித்தல் எதிர்பார்ப்பின் அடிப்படையில் வழங்கப்படுகின்ற ஒதுக்கத் தொகைக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. ஆனால் மீண்டும் நிதி ஒதுக்கப்படாமையால் இச் செயற்திட்டங்கள் பாதியில் முடிக்கப்பட்ட திட்டங்களாக மாறியுள்ளன. | 2022பெப்ரவரி வரையில் இச்சிக்கல் தீர்க்கப்பட்டிருக் கவில்லை. |
| 23. | வடக்கு சிரிகம்பல மற்றும் தெற்கு கொலின்ஜாடிய காணிகளில் அமைந்துள்ள நிலசெவன அலுவலகங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் குறிப்பிட்ட காணிகள் வென்னப்புவ பிரதேசச் செயலகத்திற்கு கையளிக்கப்பட்டிருக்க வில்லை. | காணிகளை கையேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | வ/சிரிகம்பல மற்றும் தெ/கொலினஜாடிய அரச காணிகளில் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் ஒதுக்கங்களின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட நிலசெவனக் கட்டிடங்களாகும். இக்காணிகள் அரசிற்குச் சொந்தமானவை என்பதுடன், பிரதேச செயலகத்திற்கு உரிமை கையளிக்கப்பட்ட இடமல்ல என்பது தெரிவிக்கப் படுகின்றது. எனினும் பிரதேசச் செயலகப் பிரிவில் உள்ள அனைத்து அரச | 2022பெப்ரவரி வரையில் , குறிப்பிடப்பட்டிருந்த நிலைமையே காணப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | காணிகள், காணிப் பிரிவின் மூலம் பராமரிக்கப்பட்டு வருகின்ற அரசின் காணிகள் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தாக தெரிவிக்கப் பட்டுள்ளது. | |
| 24. | “சுப்பிரிகமக்” சமூக அடிப்படை கிராமிய அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் 2020 ஆம் ஆண்டில் ரூபா 990,184 ஆன தொகையொன்று செலவிடப்பட்டு கற்பிட்டி பிரதேச செயலாளர் பிரிவில் இலந்தடிய மீன்பிடித் துறைமுகத்திற்குச் செல்லும் கச கலேவெல்ல வீதியைத் தார் இட்டு அபிவிருத்தி செய்தல் செயற்திட்டத்தின் மதிப்பீட்டின் பிரகாரம் பாதையின் நீளம் 155 மீற்றர் மற்றும் அகலம் 2.74 மீற்றர் ஆகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் மதிப்பீட்டின் அளவை விட பாதையின் அகலம் இடத்துக்கிடம் 2.5, 2.6 மீற்றருக்கு இடைப்பட்டதான மதிப்பாகக் காணப்பட்டது. பாதைக்கான எவ்வித நியமங்களின் பிரகாரம் தார் போடப்படாமையினால் பாதையின் கல் பதித்தல் மற்றும் வீதியின் இருபுறமும் உள்ள மண் அள்ளப்பட வேண்டியுள்ளதால் வீதியின் இருபுறமும் வழுக்கி விழக்கூடிய அபாய நிலை | பௌதீக அளவு பிரமாணங்களின் பிரகாரம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப் பட வேண்டியதுடன், மதிப்பீட்டின் படி நிர்மாணிக்கப் படுவதற்கு முறையான மேற்பார்வை யொன்று இருத்தல் வேண்டும். நிர்மாண குறைபாடுகள் இனங்காணப்பட்டு ஒப்பந்தக் காரரினால் நிறைவேற்றப் படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கணக்காய்வில் கண்டுபிடிக்கப்பட்ட குறைபாடு ஒப்பந்தக்காரரினால் நிறைவேற்றப்பட்டு தேக்கி வைக்கப்பட்ட பணத்தை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.. | செயற்திட்டத்தின் குறைபாடுகள் ஒப்பந்தக்காரரினால் நிறைவேற்றப் படுமெனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், மேற்பார்வை அதிகாரிகள் மீது எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | | | |
| 25. | புத்தளம் மாவட்டச் செயலகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 13 பதவிகளுக்கு உரிய ஊழியர்களின் வெற்றிடங்களின் எண்ணிக்கை 25 ஆகும். புத்தளம் மாவட்டச் செயலகத்திற்குரிய பிரதேசச செயலகங்களின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 18 பதவிகளுக்கான ஊழியர்களின் வெற்றிடங்கள் 390 ஆகக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | தேவைப்பாடு பகுப்பாய்வு செய்யப்பட்டு தேவைப்பட்டால் மாத்திரம் ஆட்சேர்க்கப்பட வேண்டியதுடன் பிரதேச செயலகத்தில் காணப்படும் வெற்றிடங்கள் இனங்காணப்பட்டு முன்னுரிமை அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்படல் வேண்டும். | தற்போது காணப்படுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்காக உரிய பிரிவுகளுக்குத் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது. | இந் நிலைமை 2022 வரையில் காணப்பட்டது. |
| **குருநாகல் மாவட்ட செயலகம்**<br>**-----------------------------------** | | | | |
| | 2018 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | | |
| | 2019 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | | |
| | 2020 | முனைப்பழியற்ற அபிப்பிராயம் | | |
| **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள பிரதான குறைபாடுகள்**<br>**------------------------** | | **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை**<br>**---------------------** | **நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள்** | **அது தொடர்பான தற்போதைய நிலைமை**<br>**---------------------** |
| 01. | விவசாய அமைச்சின் நிதி ஏற்பாட்டின் கீழ் விவசாய திணைக்களத்தின் பழவகைகள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் செயற்பாட்டில் மாவட்ட செயலாளரினூடாக | எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | • விவசாயத் திணைக்களத்தின் மூலம் குறிப்பிட்ட அதிகாரிகளுக்கு முறைமைகள் மற்றும் | செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், கேவெண்டிஸ் தாவரங்கள் அழிக்கப்பட்டதனால் |

| | | | | |
|---|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்ட பழவகைகள் உற்பத்தி கூட்டு தொழில்முயற்சி மாதிரி செயற்திட்டத்தின் கீழ் மாஹோ பிரதேசத்தில் 50 ஏக்கர்கள் பரப்பளவில் பயிர் செய்கை செய்வதற்கு வழங்கப்பட்ட ரூபா 03 மில்லியன் பெறுமதியான 37,500 கெவண்டிஸ் வாழை நாற்றுக்களில் 3,350 நாற்றுக்கள் உரிய தரத்தில் இல்லாததன் காரணமாக அழிவடைந்திருந்தது. ரூபா 4.8 மில்லியன் நிதி ஏற்பாட்டில் கெவண்டிஸ் வாழைப் பயிர்செய்கைக்கு நீர் தேவைகளை வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தும் தெளிக்கும் நீர் முறைமை வழங்கப்படாததன் காரணமாக ரூபா 1.18 மில்லியன் பெறுமதியான 11,800 நாற்றுக்கள் நடப்பட்டிருக்கவில்லை. நிலத்தை தயார்படுத்துதல் மற்றும் ஏனைய நடவடிக்கைகளுக்காக 09 விவசாயிகளால் ரூபா 5.70 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் பயிர் செய்கைக்குத் தேவையான நீர்த் தேவைகள் பூர்த்தி செய்யப்பட முடியாமையால் பயிர்ச்செய்கையில் காணப்பட வேண்டிய ஆகக் குறைந்த அபிவிருத்தி மட்டம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவி ல்லை. விளைச்சலை | | பரிந்துரைக்கப்பட்ட நியமங்களின் பிரகாரம் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்து வதற்கு ஆலோசனைகளை வழங்குதல்.<br>• அமைச்சின் ஒதுக்கங்கள் வழங்கப்படும் போது பணிகளை உரிய நேரத்தில் முடிப்பதற்கு பொருத்தமான விதத்தில் ஒதுக்கங்களை வழங்குதல், தேவையான அளவு பலன்களை தட்டுப்பாடின்றி வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் குறிப்பிடப்பட் டுள்ளது.<br>• இவ்வாறான செயற்திட்ட ங்களை நடைமுறைப்படுத்து வதற்கு முன்னர் செயற்திட்டத்தை திட்டமிடுதல், செயற்படுத்தும் நிறுவனத்தினால் செய்யப்பட்டவற் றைக் குறிப்பிடுதல். | செயற்திட்டம் தோல்வி அடைந்திருந்தது. 2021 ஆம் ஆண்டிலும் இவ்வாறான செயற்திட்டமொன்று மஹவ பிரதேசச் செயலகத்தில் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் அதுவும் முறையற்ற செயற்பாட்டினால் தோல்வி அடைந்திருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அறுவடை செய்யததன் பின்னர் விற்பனை செய்வதற்காக பொருத்தமான ஒரு சந்தை அல்லது ஒரு நபர் அல்லது ஒரு நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்து கொள்ளாமையால் எதிர்பார்த்த குறிக்கோள்களை அடைந்து கொள்வதில் சிக்கல்கள் காணப்பட்டது. | | | |
| 02. | கைத்தொழில் மற்றும் வணிக நடவடிக்கைகள் அமைச்சினால் குருனாகல் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 10 பிரதேச செயலகப் பிரிவுகளின் 10 நிலையங்களில் சிறுகைத்தொழில் ஆபரண செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு ரூபா 122,264,445 பெறுமதியான இயந்திரங்களும் உபகரணங்களும் வழங்கப்பட்டிருந்தன. இச் செயற்திட்டத்திற்காக 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் செயற்பாட்டுச் செலவாக ரூபா 3,776,180 செலவு செய்யப்பட்டிருந்தது.<br><br>இது சம்பந்தமாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.<br><br>(i) மாவட்ட செயலகத்தால் பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட இடங்கள் | • செயற்திட்டத்தின் எதிர்பார்த்த குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காகவும் செலவு செய்யப்பட்ட பணத்திலிருந்து உச்ச அளவு நலன்களை அடைந்து கொள்ளக்கூடிய வகையில் செயற்திட்டங்களை வெற்றி பெறச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கைத்தொழில் மற்றும் வணிக நடவடிக்கைகள் அமைச்சிற்கு இது தொடர்பாக அறிவிக்கப்பட்டிருந்தது டன் உரிய பிரதேச செயலாளருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. மஹவ, படுவஸ்நுவர (மேற்கு), ரீதிகம, உடுபந்தாவ போன்ற மத்திய நிலையங்கள் திறக்கப்பட்டு வெற்றிகரமாக நடாத்தப்பட்டு வருவதுடன் சில சந்தர்ப்பங்களில் எழுந்த நியாயமான நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக தற்காலிகமாக மூடப்பட்டமை அனைத்து மத்திய நிலையங்களிலும் காணப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | 10 பிரதேச செயலகப் பிரிவுகளில் 10 மத்திய நிலையங்களுக்காக ரூபா 122,264,445 பெறுமதியான இயந்திரம் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்தன. இவற்றில் 04 மத்திய நிலையங்களின் செயற்பாடுகள் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்ப ட்ட போதிலும், குருநாகல் மத்திய நிலையம் தவிர்ந்த ஏனைய அனைத்து மத்திய நிலையங்களும் தோல்வியினால் செயற்பாடற்றுக் காணப்பட்டன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மற்றும் நபர்கள் தொடர்பான விபரம் கைத்தொழில் மற்றும் வணிக நடவடிக்கைகள் அமைச்சின் பணிப்பாளருக்கு அனுப்பப்பட்டிருந்தும் அதற்கு மாற்றமான இடம் மற்றும் நபர்கள் கைத்தொழில் மற்றும் வணிக நடவடிக்கைகள் அமைச்சின் செயலாளரால் தெரிவு செய்து அனுப்பப்பட்டதனால் ரூபா 138,290 மேலதிக மின்சாரச் செலவுகளை செலவு செய்வதற்கும் பயிற்சி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதில் தாமதமும் ஏற்பட்டிருந்தது.<br><br>(ii) 06 மாத பயிற்சியின் பின்னர் சுய வலு தொழிற்சாலையாக செயற்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தும் கணக்காய்வுத் திகதியான 2019 பெப்ரவரி 26 ஆந் திகதி வரை பொல்கஹவெல, குருனாகல், பண்டுவஸ்நுவர (மேற்கு), மஹோ, ரிதிகம மற்றும் உடுபத்தேவ ஆபரணத் தொழிற்சாலைகள் மூடப்பட்டு இயந்திரங்கள் செயற்பாடற்றுக் காணப்பட்டன. | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 03. | ஹெட்டிபொல நல்லூர் மஹவெவ குளத்திலிருந்து சேற்று மண்ணை அகற்றுவதற்கு வடமேல் மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் ஆலோசனை மற்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு நீர் மேடையின் உயர்வான ஓரப்பகுதியில் மண் அகற்றப்பட்டிருந்ததுடன் சேற்றுமண் அதிகமாக குவிக்கப்பட்டிருந்த குளக்கட்டிற்கு அருகாமையிலுள்ள பகுதி தோண்டப்பட்டிருக்கவில்லை. கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் 2017 யூன் 07 ஆந் திகதிய 9/2017 ஆம் இலக்க சுற்றறிக்கையிலுள்ள அறிவுறுத்தல்களை கவனத்திற்கு எடுத்துக் கொள்ளாது குவித்து மேடையின் உயர்வான ஓரப்பகுதியிலிருந்து மதிப்பீட்டின் பிரகாரம் 1 ½ மீற்றர் ஆழமான 35 X 35 மீற்றர் அளவான பிரதேசத்தில் மண் அகற்றப்பட்டிருந்ததுடன் நியாயமற்ற வகையில் ஆழமாக்கியதன் காரணமாக ஒன்றுசேர்ந்து நீர் வடிந்தோடுவதற்கு நீர் மேடையிலிருந்து குளத்திற்கு நடுப்பகுதியில் ஒரு கால்வாய் வெட்டப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது. | குளத்தை ஆழமாக்கும் போது கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் 9/2017 ஆம் இலக்க சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | குளத்தை ஆழமாக்கும் போது கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் 9/2017 ஆம் இலக்க சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. குளத்தை புனரமைக்கும் அனைத்து பணிகளையும் அந்த தொழில்நுட்ப அறிவுள்ள நிறுவனங்களால் மட்டுமே மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது . | அகற்றப்பட்ட மண்ணிலிருந்து ரூபா 264,668 தொகையொன்று நட்டமாக அறவிடப்பட்டிருந்த துடன் மண் அகற்றப்பட்ட பகுதிகள் மண்ணினால் நிரப்பப்பட்டு முறையாகத் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| 04. | கம்பெரலிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கிரிபாவ பிரதேச செயலகம் தொடர்பாக புனரமைப்புச் செய்யப்பட்ட 05 நீர்ப்பாசனச் செயற்திட்டங்களின் பொறியியல் மதிப்பீடு சரியாகத் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக ரூபா 2,457,550 மிகை மதிப்பீடு செய்யப்பட்டதன் அடிப்படையில் அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்பட்டிருந்தது.. | சரியாக பொறியியலாளர் மதிப்பீட்டினைத் தயாரித்து கொடுப்பனவு செய்தல் வேண்டும். மேலும் பிழையான பொறியியலாளர் மதிப்பீட்டினைத் தயாரிப்பதன் மூலம் இடம்பெற்றுள்ள முழு நட்டத்திற்கும் பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர் களிடமிருந்து மீள அறவீடு செய்தல் வேண்டும். | மதிப்பீடு தயாரிக்கப்படும் போது ஏற்படுகின்ற நட்டம் பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடுதல், மிகுதி மதிப்பீடு தயாரிக்கும் போது சரியாக மதிப்பீட்டை தயாரிக்குமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த மிகை மதிப்பீட்டுத் தொகையில் ரூபா 170,253 மட்டுமே அறவிடப்பட்டுள்ளது. | மேலதிகக் கொடுப்பனவுகள் பிடிகாசிலிருந்து அறவிடப்படுமெனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் ரூபா 170,253, மட்டுமே அறவிடப்பட்டிருந்தது டன் மிகுதி ரூபா 2,287,297 ஆன தொகை அறவிடப்பட்டிருக்க வில்லை. |
| 05. | இப்பாகமுவ பிரதேச செயலகப் பிரிவில் மெதகெதர கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலுள்ள ஹீனபாமுல குளத்தை ரூபா 1,261,000 தொகைக்கு புனரமைப்புச் செய்வதற்காக இஹல பெரகும் விவசாய அமைப்புடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. வேலை விடயம் 1.1 இன் கீழ் வான் கதவுகளைத் தயார்ப்படுத்துவதற்காக குளத்து அணைக்கட்டை வெட்டுதலை பெகோ இயந்திரத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு அதற்காக மனிதவேலைகளை ஈடுபடுத்துவதற்காக ஒரு கன மீற்றருக்கு ரூபா 1,615 வீதமான விலையை அடிப்படையாகக் கொண்டு ரூபா 80,750 செலுத்தப்பட்டது. | - மேற்படி - | நீர்ப்பாசன மதிப்பீடு தயாரிக்கும் போது மிகை மதிப்பீட்டின் அடிப்படையில் மதிப்பீட்டைத் தயாரிக்க வேண்டாமென்று குறிப்பிடப்பட்டுள்ளது. மதிப்பீடு மிகவும் சரியாகத் தயாரிக்கப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. நட்டம் ரூபா 11,412 கொடுப்பனவு செய்யப்பட்ட போது குறைக்கப்பட்டுள்ளது. | ரூபா 431,165 ஆன தொகையில் ரூபா 11,412 மட்டுமே அறவிடப்பட்டிருநததுடன், மிகுதி ரூபா 419,753 ஆன தொகையொன்று அறவிடப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் 2019 ஆம் ஆண்டிற்கான நீர்ப்பாசன அங்கீகரிக்கப்பட்ட விலை விகிதங்களின் பிரகாரம் ஒரு கனமீற்றர் மண்ணை வெட்டுவதற்கு அங்கீகரித்த விலை ரூபா 109 ஆகும். இந்த விலை விகிதம் பயன்படுத்தப் படுமாகயிருந்தால் செலவு ரூபா 5,450 என்பதனால் அரசாங்கத்திற்கு ரூபா 75,300 சேமிப்பு ஏற்பட்டிருக்கும் என்பது அவதானிக்கப்பட்டது. மேலும், வேலை விடயம் 1.5 இன் பிரகாரம் குளத்தின் அணைக்கட்டைத் தயார்ப்படுத்துவதற்காக 58.85 கனமீற்றர்கள் வெளியிலிருந்து கொண்டு வரப்பட்டது எனக் காட்டி ரூபா 595 வீதம் ரூபா 35,015 செலுத்தப்பட்டிருந்தும் பயன்படுத்தப்பட்ட மண் வெளியிலருந்து அல்லாது குளத்திலிருந்தே பெற்றுக் கொள்ளப்பட்டமை அவதானிக்கப்பட்டது. குளத்திலிருந்து மண்ணை அப்புறப்படுத்தும் போது பிழையாக விலை விகிதங்களைப் பயன்படுத்தியதன் காரணமாக ரூபா 431,165 பணம் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. | | | |
| 06. | வெளியிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட மண்ணை உழவு இயந்திரங்களின் மூலம் குளக்கட்டில் போட்டு | - மேற்படி - | மதிப்பீடு தயாரிக்கப்படும் போது ஏற்படுகின்ற நட்டம் பொறுப்பு வாய்ந்த | 10 பிரதேச செயலகங்களிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 2,426,429 |

| | | | | |
|---|---|---|---|---|
| | பரப்புவதற்காக மாகாண நீர்ப்பாசன ஏற்றுக்கொள்ளப்பட்ட விலை விகிதம் இலக்கம் (ISR) 12 இன் மூலம் வெட் வரியின்றி மற்றும் வெட் வரியுடன் கனமீற்றருக்கு முறையே ரூபா 580 மற்றும் ரூபா 595 விலையைப் பயன்படுத்தி 10 பிரதேச செயலகங்களின் 40 குளங்களுக்காக மொத்தமாக 20,194 கனமீற்றர் மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், வெட் இல்லாது விலை ரூபா 447 ஆக இருந்ததன் காரணமாக ரூபா 2.426,429 மிகையாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. | | தரப்பினரிடமிருந்து அறவிடுதல் மற்றும் எதிர்காலத்தில் மதிப்பீடு தயாரிக்கும் போது மிகவும் சரியாக தயாரிக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | மேலதிக கொடுப்பனவுகளில் 03 பிரதேச செயலகங்களுக்கான ரூபா 1,909,775 ஆன தொகை அறவிடப்பட்ட போதிலும் மிகுதி 07 பிரதேசச் செயலகங்களுக்கான ரூபா 516,654 ஆன தொகையொன்று அறவிடப்பட்டிருக் கவில்லை. |
| 07. | 08 பிரதேச செயலகங்களின் குளங்களை ஆழமாக்குவது தொடர்பாக அகற்றப்பட்ட மண்ணை ஏலத்தில் விற்கும் போது ஏலத்தில் விற்ககூடிய மண்ணின் அளவினை விட குறைவாக ஏலமிட்டதனால் 31 குளங்களிலிருந்து ரூபா 3,160,338 தொகையான நட்டம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருந்தது. | இலகு மண்ணின் அளவை சரியாகக் கணிப்பிட்டு ஏலத்தில் விற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | மதிப்பீடு தயாரிக்கப்படும் போது ஏற்படுகின்ற நட்டம் பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடுதல் மற்றும் எதிர்காலத்தில் மதிப்பீடு தயாரிக்கும் போது மிகவும் சரியாக தயாரிக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | 2022 பெப்ரவரி வரையில் முழுமையான நட்டம் ரூபா 3,160,338 இல் ரூபா 536,069 அறவிடப்பட்ட போதிலும் மிகுதி ரூபா 2,624,269 ஆனது அறவிடப்பட்டிருக் கவில்லை. |
| 08. | பெறுமதி சேர்க்கப்பட்ட வரி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் பதிவு செய்யப்படாத வழங்குனர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படுகின்ற | இயந்திரங்களுக்கு கொடுப்பனவு செய்யும் போது பெறுமதி சேர்க்கப்பட்ட வரி | ஒப்பந்தக்காரர் வெட் இற்காகப் பதிவு செய்யாவிட்டால் வெட் வரி செலுத்தப்படாது மேலதிகமாகச் | மேலதிகக் கொடுப்பனவுகள் முழுமையாக மீண்டும் அறவிடப்பட்டிருக் கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | சேவைகளுக்காக கொடுப்பனவு செய்யும் போது வெட் வரியற்ற விலை விகிதங்கள் பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும், 11 பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள 59 குளங்களில் மொத்தமாக 87,582 கனமீற்றர் மண்ணை வெட்டி ஏற்றி எடுத்துச் சென்று குவிக்கும் செயற்பாட்டிற்காக ISR 60.16 இல் குறிப்பிட்ட கனமீற்றருக்கு ரூபா 392 விலை விகிதத்திற்குப் பதிலாக வெட் வரியுடன் ரூபா 450 விலை விகிதம் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் காரணமாக ஒரு கனமீற்றருக்கு ரூபா 58 வீதம் ரூபா 5,079,756 மொத்த தொகை ஒப்பந்தக்காரர்களுக்கு மிகையாகச் செலுத்துதல் இடம்பெற்றதன் மூலம் அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்பட்டுள்ளது. | செலுத்துவதற்கு தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களுக்கு மட்டும் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி உள்ளடங்கலாக கொடுப்பனவு செய்ய வேண்டும். பெறுமதி சேர்க்கப்பட்ட வரிக்கான பதிவு செய்தலை உறுதிப்படுத்தாதவர்களுக்கு வரியுடன் கூடிய கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுவது தொடர்பாக பொறுப்புவாய்ந்த தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.. | செலுத்தப்பட்ட வெட் வரித் தொகையை அறவிடுமாறு மொத்த வெட் வரியின் பிரகாரம் தனித்தனியாகச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் பிரதேச செயலாளருக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளது. | |
| 09. | அகற்றுவதற்கு போதியளவு சேற்று மண் படிவு காணப்படாத வாரியபொல பிரதேச செயலகப் பிரிவில் மெதகம தங்கஹமுல குளத்திலிருந்து சேற்று மண்ணை அகற்றும் சாடையில் மணல் கல் என்பவற்றுடனான 6000 கனமீற்றருக்கு மேற்பட்ட அளவான மண் அகற்றப்பட்டுள்ளன என தொழில்நுட்ப உத்தியோகத்தரின் அளவீட்டு அறிக்கை மற்றும் | குளம் சம்பந்தப்பட்ட வேலைகளின் போது குளத்திலிருந்து மண், மணல் என்பன அகற்றுதல் சிறப்பாக மேற்பார்வை செய்யப்பட வேண்டுமெனவும் கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் 2017 யூன் 07 ஆந் திகதிய 9/2017 ஆம் இலக்க சுற்றறிக்கையின் | விவசாய அபிவிருத்தி ஆணையாளரின் நாயகத்தின் 2017 யூன் 07 ஆந் திகதிய 9/2017 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறும் மேற்பார்வை செய்ய வேண்டிய நடவடிக்கைகளை எடுக்குமாறும் குளம் தொடர்பான நடவடிக்கைகளை | விவசாய அமைப்பினால் அகற்றப்பட்ட ரூபா 2,650,176 ஆன மண் இருப்புக்களில் ரூபா 848,000 ஆன தொகையொன்று அறவிடப்பட்டிருந்ததுடன் மிகுதி ரூபா 1,802,176 ஆன தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | குறிப்புக்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டது. அகற்றப்பட்ட மண் 500 மீற்றர் அளவான தூரத்தில் குவித்து மண் இருப்பு முழுவதும் அகற்றப்பட்டிருந்தது. மாவட்டத்தில் மணல் 01 கியூப் ரூபா 1000 இற்கு மேற்பட்ட விலைக்கு ஏலமிட்டதற்கு இணங்க 6000x125x1000 2.83x100 ஆக ரூபா 2,650,176 பெறுமதியான மண் இருப்பு விவசாய அமைப்புக்களால் அகற்றப்பட்டிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. | பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எடுக்கும் போது குளம் தொழில்நுட்பம் கொண்ட நிறுவனங்களினால் செய்யப்பட வேண்டுமென்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது . | . |
| 10. | சனாதிபதி செயலகத்தின் மூலம் கிராம சக்தி மக்கள் தொழில் முயற்சியை அமுல்படுத்துவதற்காக 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் ரூபா 35,568,218 நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. இத் தொழில்முயற்சியின் குறிக்கோளானது 2020 ஆம் ஆண்டளவில் சமூக மேம்பாட்டு மற்றும் உற்பத்திச் சேவைகளை முன்னிலைப்படுத்தி 5000 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உருவாக்குவதனூடாக அந்த கிராம சக்தியினுள் குடியிருக்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தலாகும். அதற்காக மக்களின் மாதாந்த வருமானத்தை | அரசாங்கத்தின் பணம் முடியுமான அளவிற்கு உரிய நிகழ்ச்சித் திட்டத்தின் குறிக்கோள்களை அடைந்து கொள்ளக் கூடிய வகையில் செலவு செய்யப்படுதல் வேண்டும். | கிராம சக்தி நிதியத்தின் வளங்கள் உரிய நோக்கத்திற்கும் மற்றும் வினைத்திறனாகவும் பயன்படுத்துமாறும் பிரதேசச் செயலாளர்களுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளது. வாழ்வாதார அபிவிருத்திச் செயற்திட்டங்க ளுக்கான சுழற்சிக்கடன் வேலைத்திட்டம் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்ப டுவதாக குறிப்பிடப்பட்டிருந்தது. இதில் செயற்பாடுகள் சிறப்பாக | 2022 பெப்ரவரி வரையில் இத்தொகையில் ரூபா 42 மில்லியன் மட்டுமே சுழற்சிக் கடனாக வழங்கப்பட்டுள்ளது. மிகுதி ரூபா 127 மில்லியன் தொகையொன்று வங்கிக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது. . |

| | | | | |
|---|---|---|---|---|
| | இரட்டிப்பாக்குதல் இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் குறிக்கோளாக இருந்த போதிலும், அது நிறைவேறியிருக்க வில்லை. இந்த நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்துவதற்காக 360 கிராம சக்தி சங்கங்களுக்கு வழங்கப்பட்ட பணத்தில் வங்கி கணக்குகளில் 2019 திசெம்பர் 30 ஆந் திகதி வரை ரூபா 169,669,778 தொகை விளைவற்றுக் காணப்பட்டது. | | நடைபெறுவதாக அலுவலகங்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. கிராம சக்தி செயற்திட்ட நடவடிக்கைகளுக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது. | |
| 11. | 2015 திசெம்பர் 30 ஆந் திகதிய 2016/1 ஆம் இலக்க நிதி ஆணைக்குழு சுற்றறிக்கையின் பிரகாரம் நிர்மாணிக்கப்படுகின்ற அனைத்து வீதிகளும் தேசிய வீதி முறைமையுடன் இணைக்கப்பட வேண்டுமெனக் காட்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், தேசிய கொள்கைச் செயற்பாடு மீள்குடியேற்றம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு நிதி ஏற்பாட்டின் கீழ் நாரம்மல பிரதேச செயலகத்தின் மூலம் அமுல்படுத்தப்பட்ட ரூபா 1,200,000 மதிப்பீட்டுப் பெறுமதியான 02 வீதிச் செயற்திட்டங்களுக்குரிய நிர்மாணங்களை தேசிய வீதி முறைமையுடன் இணைக்காத வகையில் இடத்துக்கிடம் பகுதி பகுதியாக நிர்மாணிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இவ்வாறான செயற்திட்டங்களில் தேசிய வீதி முறைமைக்கு இணைக்கப்பட்டதாக வேலைப் பகுதிகள் செயற்படுத்தப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஒதுக்கங்கள் மட்டுப்படுத்தப்பட்டமை யால் அத்தியாவசிய அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டதாக வும் அடுத்த ஒதுக்கங்களில் அந்த பூர்த்தி செய்யப்படாத வேலைப் பகுதிகள் செய்யப்படுவதற்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | ஒதுக்கங்கள் பெறப்படாத காரணத்தினால் அப்பகுதிகள் பூர்த்தி செய்யப்பட்டிருக் கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| 12. | 2012 சனவரி 05 ஆந் திகதிய 1/2012 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் 04 பிரதேச செயலகங்களால் பதிவு செய்த 60 சமூக அடிப்படை அமைப்புக்களுக்கு நேரடி முறைமையின் கீழ் வழங்கப்பட்ட ரூபா 93,827,150 மொத்த விலையான 72 ஒப்பந்தங்கள் அச்சுற்றறிக்கைக்கு முரணாக செய்த வேலைப் பெறுமதிக்காக கிடைத்த பணத்தில் 5 சதவீதத்தை தங்களது அமைப்பிற்கு பெற்றுக் கொள்ளும் குறிக்கோளில் உப ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் உப ஒப்பந்தம் வழங்குதல் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | சமூக அடிப்படை அமைப்புக்களின் மேற்பார்வை நடவடிக்கைகளை மிகவும் முறையான முறையில் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. உப ஒப்பந்தம் வழங்காமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச செயலாளருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | உப ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ள சமூக அடிப்படை அமைப்புக்கள் தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாததுடன் தற்போதும் இந்நிலைமை காணப்படுவது அவதானிக்கப்பட்டது. |
| 13. | 2019 கம்பெரலிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இப்பாகமுவ பிரதேச செயலகப் பிரிவிலுள்ள மெதகெதர பிரிவில் ரூபா 2,000,000 நிதி ஏற்பாட்டில் நிர்மாணிக்கப்பட்ட கரப்பந்தாட்ட விளையாட்டு மைதானத்தில் பாதுகாப்பு வேலியினை நிர்மாணிப்பதற்காக ஈடுபடுத்தப்பட்ட உள்ளக விட்டம் 50 மி.மீற்றர் கல்வனயிஸ் குழாய்கள் குறுக்காகவும் 40 மி.மீற்றர் கல்வனயிஸ் குழாய்கள் நீட்டாகவும் பொருத்துவதற்காக மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. பொருத்தப்பட்ட குழாய்களின் | பிழையான அளவீட்டு அறிக்கைகளைச் சமர்ப்பித்த தரப்பினர்கள் சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் திருத்தம் செய்தலும் சரியாக மேற்கொள்ளப் படாமையால் மிகையாகச் செலுத்தப்பட்ட பணத்தை மீண்டும் கணித்து மீள அறவிடுதல் வேண்டும்.. | உரிய செயற்திட்டத்தில் குறைபாடுகள் ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச செயலாளருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அறவீடுகளைச் செய்யுமாறு பிரதேச செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | சுட்டிக் காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் திருத்தப்படாததுடன் குறிப்பிட்ட தரப்பினர் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | விட்டம் 2019, BSR விலை விகிதத்தின் பிரகாரம் 50 மி.மீற்றர் குழாயில் இருக்க வேண்டிய விட்டத்தினை விட 8.7 மி.மீற்றரினால் குறைவடைந்திருந்ததுடன் குறுக்காகப் பொருத்தப்பட்ட 40 மி.மீற்றர் கல்வனைஸ் குழாய்களின் வெளிப்பக்க விட்டமானது 5.7 மில்லி மீற்றரினால் குறைவடைந்திருந்தன் காரணமாக உறுதிப்பாடு மிகவும் பலவீனமானதாகும். மேலும் இக்குழாய்களில் துரப்பிடித்தலை தடுப்பதற்கான பூச்சு பூசப்பட்டிருந்தது என்பது உறுதிப்படுத்தப்படாததுடன் தூண் பொருத்தப்பட்ட 09 அடித்தள நிலையங்களின் அனைத்து பக்கங்களிலும் வெடிப்புக் காணப்பட்டிருந்தது. | | | |
| 14. | அலவ்வ பிரதேச செயலகப் பிரிவின் அதிகாரப் பிரதேசத்திலுள்ள ஓதர திருவம்பொல பிரிவில் கிரவல் தோண்டிய 17 இடங்கள் சம்பந்தமாக மேற்கொண்ட பௌதீக கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | | |
| | (i) புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கங்கள் பணியகத்தின் மூலம் வழங்கப்பட்ட தோண்டுதல் அனுமதிப்பத்திர | சுற்றாடல் பாதிப்புக்களை குறைக்கும் வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். மற்றும் அதற்குப் பொறுப்பான நிறுவனங்களுக்கு | இதற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இவ்வாறான | சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போதிலும் இன்னும் அனுமதியின்றி கிரவல் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | நிபந்தனைகளின் பிரகாரம் தோண்டிய நிலத்தின் மேற்பரப்பிலுள்ள மண் தட்டை தோண்டிய மண்ணைக் குவித்து களஞ்சியப்படுத்த வேண்டியதுடன் தோண்டியதன் பின்னர் அம்மண்ணை புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்த வேண்டிய போதிலும், கிரவல் மேற்பரப்பு மண் தட்டினை அகற்றி தோண்டுதல் முதல் மேற்கொண்டிருக் கவில்லை. | தெரியப் படுத்துவதற்கு தொடர்ச்சியாக தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நிலைமையொன்றைத் தவிர்ப்பதற்கு மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உரிய அரச நிறுவனங்களுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளது. | வெட்டப்படுதல் மேற்கொள்ளப்படுவது அவதானிக்கப்பட்டது. |
| | (ii) | தோண்டும் நிலத்தில் ஒன்று சேர்கின்ற நீரை அகற்றுவதற்காக பொருத்தமான நீர் வடிகாலமைப்பு முறைமையத் தயார்படுத்தி வெட்டிய கால்வாயை இலக்கம் 45 ஆக பேண வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிருக் கவில்லை. | - மேற்படி - | | |
| | (iii) | இக்காணிகள் அனைத்தும் அரசாங்கத்தினால் விவசாய நடவடிக்கைகள் மற்றும் வீடுகளை நிர்மாணிப்பதற்காக | - மேற்படி - | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | வழங்கிய அரசாங்கத்தின் காணிகள் என்பதனால் காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்ற அனுமதிப்பத்திரத்தின் இரண்டாவது பட்டோலையின் 1 ஆவது நிபந்தனையின் கீழ் கனியப் பொருட்களைத் தோண்டுதல் மற்றும் அகற்றுதல் அனுமதிப்பத்திர தாரர்களுக்கு அதிகாரம் இல்லை. எவ்வாறாயினும், இந்த நிபந்தனைகளை மீறி மண் அகற்றப்பட்டிருந்தது. | | | |
| | (iv) இந்த கிரவல் தோண்டப்பட்ட 17 இடங்களும் புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கங்கள் பணியகத்தின் பிராந்திய தோண்டுதல் பொறியியலாளரினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரதாரர்களின் பட்டியலில் குறிப்பிடப்படாத அனுமதியற்ற கிரவல் தோண்டப்பட்ட இடமாகும். | - மேற்படி - | | |
| | (v) வில்கமுவ வத்த கிராம உத்தியோகத்தர் | - மேற்படி - | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | பிரிவில் அரசாங்கத்தின் தேவைப்பாட்டிற்காக நியாயமற்ற வகையில் கிரவல் தோண்டுதல் இடம்பெற்ற 04 சந்தர்ப்பங்கள் மண்சரிவு ஆபத்தை ஏற்படுத்தியுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. | | | |
| 15. | 04 பிரதேச செயலகங்களின் கம்பெரலிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட 15 வீதிகளுக்குரிய பொருத்துக் கற்களின் அழுத்தத்தை (நிவ்டன் அளவு) பரீட்சித்த போது 10 வீதிகளின் பொருத்துக் கற்களில் காணப்பட வேண்டிய நிர்ணயிக்கப்பட்ட அழுததம் காணப்படவில்லை. பொருத்துக் கற்களில் காணப்பட வேண்டிய நிர்ணயிக்கப்பட்ட நியமம் இல்லாததன் காரணமாக உரிய வீதிகளின் வெற்றியளித்தல் தொடர்பாக ஆபத்து நிலைமை காணப்படலாம். | பொருத்துக் கற்களின் அழுத்தத்தை ஏற்கனவே பரீட்சித்தல் தொடர்பாக ஐயப்பாடான செயற்பாட்டுத் தன்மை அவதானிக்கப் பட்டதுடன் இது தொடர்பாக முறையான ஒரு குழுவினை நியமித்து விசேட பரிசோதனை மேற்கொள்ளுதல் பொருத்தமானதாகும். | கணக்காய்வுப் பிரிவினால் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் அனைத்து அறவீடுகளையும் செய்யுமாறு பிரதேச செயலாளர்களுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளது. | 04 பிரதேச செயலகங்களில் 15 வீதிகளுக்கான மதகுகள் தரமில்லாத காரணத்தினால் வீதிகள் முறையாகப் பராமரிக்கப்படா ததுடன் இந்த விதி மீறலுடன் தொடர்பான பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை. . |
| 16. | உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் விசேட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2018 ஆம் ஆண்டின் போது 34 செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக பொல்பிதிகம பிரதேச செயலகத்திற்கு ரூபா | நிர்ணயிக்கப்பட்ட வேலை விடயங்களின் பிரகாரம் சரியாக பொறியியலாளர் மதிப்பீட்டினைத் தயாரித்து கொடுப்பனவு செய்யப்பட | மதிப்பீடுகளில் மேலதிகமாக காட்டப்பட்டுள்ள அனைத்து தொகையும் அறவிடப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் செயற்திட்டங்களின் | மேலதிகக் கொடுப்பனவுகள் முழுமையாக அறவிடப்பட்டிரா ததுடன் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் மீது இற்றை வரையில் |

| | | | | |
|---|---|---|---|---|
| | 62,922,034 நிதிஏற்பாடு அங்கீகரிக்கப்பட்டிருந்தது. இப்பணத்தில் 17 குளங்களை புனரமைப்புச் செய்வதற்காக ரூபா 32,937,462 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் 05 செயற்திட்டங்கள் 2018 ஆம் ஆண்டில் முழுமையாக நிறைவேற்றப்பட்டிருந்தது. அவ்வாறே 04 செயற்திட்டங்கள் 2019 ஆம் ஆண்டிற்கு முன்கொண்டு செல்லப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன் 08 செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்க வில்லை. இதற்கு மேலதிகமாக 2019 ஆம் ஆண்டின் போதும் மீண்டும் 07 குளங்களை புனரமைப்புச் செய்வதற்காக ரூபா 13,790,000 நிதி ஏற்பாடு கிடைத்திருந்தது.<br><br>i. மேற்கூறிய நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் குளங்களை புனரமைப்பது தொடர்பாக 16 குளங்கள் சம்பந்தமாக மேற்கொண்ட கணக்காய்வு பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன. திவுகீ .<br><br>• பொறியியலாளர் மதிப்பீட்டினை பிழையாக தயாரித்ததனால் ரூபா 9,863,754 தொகையும் செய்யப்படாத வேலைகளுக்காக ரூபா 3,576,953 | வேண்டும். அவ்வாறு பிழையாக மதிப்பீட்டினைத் தயாரித்திருப்பதனால் இடம்பெற்றுள்ள முழுமையான நட்டத்தை பொறுப்புக் கூறக்கூடிய தரப்பினர் களிடமிருந்து மீள அறவீடு செய்தல் வேண்டும். | மதிப்பீடு தயாரிக்கும் போது சரியான ரேட்டைப் பயன்படுத்துமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.<br><br>இது தொடர்பாக விசேட பரிசோதனையொன்று மேற்கொள்ளப்ப டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | தொகையும் மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.<br><br>• உடன்படிக்கையின் 17 ஆம் பிரிவிற்கு முரணாக அதிகாரமின்றி ஒப்பந்த உடன்படிக்கைகளில் கையொப்பமிட்ட அனைத்து சமூக அடிப்படையிலான அமைப்புக்களினாலும் உப ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தன.<br><br>• மணல் பிரித்தெடுப்பதற்கு பொருத்தமான மண் உள்ள 03 குளங்களிலிருந்து 8,562 கனமீற்றர் மண் மதிப்பீட்டினை மிகைத்து வெட்டப்பட்டிருந்தது.<br><br>• 06 குளங்களுக்கு வான் கதவுகள் முழுமையாக பொருத்துவதற்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தும் சில வேலை விடயங்கள் மற்றும் துணைக் கருவிகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் கவில்லை.<br><br>• 9/2017 ஆம் இலக்க கமநல ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களை மீறி குளங்கள் ஆழமாக்கப்பட்டிருந் ததுடன் இரண்டு குளங்களின் | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | அணைக்கட்டிற்கு அதிகளவு சேதம் ஏற்பட்டிருந்தது..<br>• சேற்று மண்ணை அகற்றுவதற்காக டோசர் இயந்திரங்கள் மாத்திரம் பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும், இந்த அனைத்து குளங்களையும் ஆழமாக்குவதற்காக பெகோ இயந்திரங்கள் பயன்படுத்தப்பட் டிருந்தன. | | | |
| 17. | 2009 மே 06 ஆந் திகதிய 1600/18 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியின் பிரகாரம் குருநாகலை பிரதேச செயலகப் பிரிவில் அரசாங்க காணி ஒன்றின் கருங்கற்களுக்கான குத்தகை 2015 முதல் 8087 கியூப்களுக்குரிய கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் கட்டணம் அறவிடப்பட வேண்டும். | நிலுவை குத்தகைப் பணம் அறவிடுதல் தொடர்பாக குருநாகல் பிரதேச செயலாளருக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளது. அதன் பிரகாரம் ரூபா 110,000 ஆன தொகையொன்று அறவிடப்பட்டுள்ளது. | கருங்கற்களை குத்தகைக்கு எடுத்தமைக்காக 8,087 கியூப் கருங்கற்களுக்காக ரூபா 110,000 ஆன தொகையொன்று அறவிடப்பட்டிருந் ததுடன் அதற்கான முழுத் தொகையும் அறவிடப்படவில்லை. |
| 18. | கிராமிய அடிப்படை வசதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2019 ஆம் ஆண்டில் குருநாகலை மாவட்டச் செயலகத்திற்கு வழங்கப்பட்ட நிதியேற்பாட்டின் அடிப்படையிலான மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 611.13 மில்லியன் ஆகும். இதன் மூலம் 09 வீதி அபிவிருத்தி வேலைகளை வடமேல் மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களம் | அரசாங்கத்திற்கு ஏற்பட்ட இழப்பை உரிய உத்தியோகத்தர்களிட மிருந்து அறவிட வேண்டியதுடன் பொருட் கொள்வனவு சட்டங்கள், விதிகள் என்பவற்றிற்கு அமைய பொருட் கொள்வனவுகள் | வடமேல் மாகாண தலைமைச் செயலாளருக்கு இது தொடர்பாகத் தெரிவிக்கப்பட்டிருந்தும் பதில் . வழங்கப்படவில்லை. | நட்டம் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளிடமிருந்து அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததுடன் அது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | நேரடித் தொழிலாளர்களைப் பயன்படுத்தி மேற்கொண்டிருந்தது. இது தொடர்பான கணக்காய்வுப் பரிசோதனையில் பின்வருவன அவதானிக்கப்பட்டன.<br><br>i. போட்டியுடனான பொருட் கொள்வனவுக்கு அப்பால் நேரடித் தொழிலாளரைப் பயன்படுத்தி இச் செயற்திட்டம் மேற்கொள்ளப்பட்டமை இற்கு முறையான அங்கீகாரம் இருக்கவில்லை.<br><br>ii. நேரடித் தொழிலாளருடன் செயற்திட்டத்தை நிறைவேற்றுவதற்குத் தேவையான இயந்திர சாதனங்கள் திணைக்களத்திடம் இருக்கவில்லை. அவ்வாறிருக்க அத் திணைக்களத்திற்கு இச் செயற்திட்டம் வழங்கப்பட்டிருந்தது. .<br><br>iii. இவ் வீதிச் செயற்திட்டத்திற்கான பொருட்களும் இயந்திரங்களும் பெறப்பட்டமை வெளிப்படையாக அமையாதிருந்தது. போட்டி வரம்புக்குட்பட்டதாக வும் பொருட் கொள்வனவுக்கான முறையான அதிகாரம் இல்லாதிருந்தும் என்பன உள்ளடங்கிய அரசாங்க பொருட் கொள்வனவு | மேற்கொள்ளப்பட வேண்டும். | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | வழிகாட்டி மற்றும் வடமேல் மாகாண 419 ஆம் நிதிப் பிரமாணம் என்பன புறக்கணிக்கப்பட்டிருந்தன.<br><br>iv. செயற்திட்டத்திற்கான 04 பிரதான மூலம் பொருட்களைக் கொள்வனவு செய்கையில் சந்தை விலையிலும் கூடிய பெருமளவு விலை ஏற்பட்டதால் கிட்டத்தட்ட ரூபா 153.75 மில்லியன் இழப்பு ஏற்பட்டிருந்தது. | | | |
| 19. | கிராமிய அடிப்டை வசதிகள் அபிவிருத்தியின் கீழ் பொல்பித்திகம பிரதேச செயலகப் பிரிவில் 11 குளங்களைப் புனரமைக்கையில் கொங்ரீட் இடுதல், மேற் பகுதியில் பண்ணை அகற்றி புதிதாக மண் இடுதல் வடிகால் அமைத்து புற்களைப் பதித்தல் என்பவற்றிற்கு தொழில்நுட்ப உத்தியோகத்தரும் ஏனைய பொறுப்பான உத்தியோகத்தர்களும் முறையாகப் பணி ஆற்றாதால் ரூபா 6,928,609 கூடுதலாக வழங்கப்பட்டிருந்தது. | கூடுதல் கொடுப்பனவை அங்கீகரித்து 156(1) ஆம் நிதிப் பிரமாணத்தின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். | மேலதிகமாக கொடுப்பனவு செய்யப்பட்ட பணத்தை அறவிடுவது தொடர்பாக பொல்பிதிகம பிரதேச செயலாளர் மற்றும் உரிய பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் ரூபா 2,684,771 ஆன தொகையொன்று அறவிடப்பட்டுள்ளது. | இத்தொகையில் ரூபா 2,684,771 ஆன தொகையொன்று அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் மிகுதி 4,243,838 ஆன தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளின் கவனக் குறைவினால் மற்றும் முடிக்கப்படாத வேலைகள் மற்றும் பொய்யான விலை மனுக்களைப் பயன்படுத்தியமை தொடர்பாக அந்த அதிகாரிகள் மீது எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | கவில்லை. |
| 20. | குளியாப்பிட்டி (மேற்கு) பிரதேச செயலகப் பிரிவில் உள்ள அரசாங்க காணி ஒன்றில் ஏறக்குறைய 10 ஆண்டுகளாக கருங்கற்கள் உடைக்கப்பட்டவாறிருந்தன. அதனை அத்திகதி பிரதேச செயலகம் அறிந்திருக்கவில்லை. அதனால் அரசாங்கத்திற்கு 10 ஆண்டுகளாக இறைவரியை பெறமுடியாது போனது. | அரசாங்கத்திற்குரிய தொகை அறவிடப்பட வேண்டும். அத்து மீறிய கல் உடைததலுக்கு எதிராக சட்டபூர்வ நடவடிக்கை எடுக்க வேண்டும். | அங்கீகரிக்கப்படாத கருங்கல் உடைத்தல் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த தரப்பினருக்கு தெரியப்படுத்துவ தற்காக மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய அரச பங்குகளை அறவிடுவதற்காக குளியாப்பிட்டி (மேற்கு) பிரதேச செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இது தொடர்பாக புவியியல் சுரங்கப் பணியகத்திற்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. | 2021 பெப்ரவரி வரையில் அரச பங்குகளை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்ட போதிலும் அறவிடப்படவில்லை. |
| 21. | சப்பிரிகம அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மஹவ பிரதேச செயலகம் பெற்ற ஒதுக்கத்தில் நான்கு வீதி நிர்மாண வேலைகள் வடமேல் மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களத்தினால் நிறைவேற்றப்பட்டிருந்தது. இச் செயற்திட்டங்களில் ரூபா 2 மில்லியன் மதிப்பீட்டுப் பெறுமதியுடைய நாகொல்லாகம தோட்டத்திற்குச் செல்லும் வீதி அபிவிருத்திச் செயற்திட்டம் பரீசிலிக்கப்பட்ட போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் தயாரிக்கப்பட்ட அந்த அளவிற்குக் கொடுப்பனவு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இச்செயற்திட்டம் வடமேல் மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தினால் நிறைவேற்றப்பட்டிருந் தமையினால் அவர்களிடம் விசாரிக்குமாறு மஹவ பிரதேச செயலாளருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | பிடிகாசில் ரூபா 300,000 ஆன தொகை தேக்கி வைக்கப்பட்டு செலுத்தப்பட்டிருந்த துடன் அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவி ல்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | i. 2012 சனவரி 05 ஆந் திகதிய 1/2012 ஆம் இலக்க சுற்றறிக்கையைப் புறக்கணித்து அதிகாரத்துக்கு காட்டப்படாத பிரதேசத்தில் இல்லாததும் ஏனைய வசதிகள் இல்லாததுமான விவசாய சங்கத்திடம் அமைப்பிடம் இந்த ஒப்பந்தம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.<br><br>ii. அவ்வாறே, அச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளைப் புறக்கணித்து செயற்திட்டத்தின் 05 சதவீத கிரயத்தை தரகாக மதிப்பீடு செய்து இருந்ததுடன் மேற்பார்வை, செய்து அளவைப் பத்திரத்தைத் தயாரித்த தொழில்நுட்ப உத்தியோகத்தருக்கு உப ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது.<br><br>iii. கொடுப்பனவுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட விலைப் பட்டியலின் பிரகாரம் செயற்திட்டத்திற்கு தேவையான மண், சிறுகற்கள், ABC போன்ற மூலப் பொருட்கள் என்பவற்றினது போக்குவரத்துச் செலவினம் தவறுடன் கூடியதாக இருந்தமையால் ரூபா 298,893 கூடுதலாக கோரப்பட்டிருந்தது. | | | |
| 22 | குளியாப்பிட்டிய (மேற்கு) பிரதேச செயலகத்திற்குரிய | சாத்தியக் கூறு ஆய்வின் மூலம் | வடுகெதர நீர்ச் செயற்திட்டத்தை | வடுகெதர நீர்ச் செயற்திட்டம் 2022 |

| | | | | |
|---|---|---|---|---|
| | வடுகெதர நீர்ச் செயற்திட்டத்தின் மூலம் விவசாயக் கிணறு ஒன்றும் நீர்த்தாங்கி ஒன்றும் ரூபா 10,000,000 செலவில் செய்யபடாதிருந்து அது நிறைவேற்றப்பட்டிருந்தும் அவை பயன்படுத்தப்படாதிருந்தன.. | செயற்திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும். | செயற்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டதாகக் குளியாப்பிட்டி (மேற்கு) பிரதேச செயலகம் மற்றும் திட்டமிடல் பணிப்பாளர் உள்ளடங்கலா பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. தற்போது இக்கிணற்றிலிருந்து நீரை வெளியேற்றுவதற்கான முறைமையொன்று இல்லாமையால் கிணறு மாசடைந்துள்ளதால் குடிநீர் விநியோகத்திற்காக நிர்மாணிக்கப்பட்ட கிணறு அந்தக் கிணற்றுடன் இணைக்கப்பட்டு நீர்ச் செயற்திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. | வரையில் முறையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. |
| 23. | கொங்கறீட் இட்டு வீதியை புனரமைக்கும் வேலைக்கு (RSI-017) வீதிகளுக்கான ஏற்றுக் கொள்ளப்பட்ட விகிதம் தவறாக அமைந்ததால் கம்பெரலிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சமூக அடிப்படையிலான நிறுவனம் ஒன்றினால் மேற்கொள்ளப்பட்ட 100 செயற்திட்டங்களில் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட | அரசாங்கத்திற்கு ஏற்பட்ட இழப்பை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | வடமேல் மாகாண சபையின் பிரதான செயலாளரின் விபரங்கள் விசாரிக்கப்பட்டுள்ளது. | அரசிற்கு ஏற்பட்டுள்ள நட்டமான ரூபா 5,508,631 ஆன தொகையொன்று அறவிடப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | இழப்பு 5,508,631 ஆகும். | | | |
| 24. | பல்விடய அபிவிருத்தி பணி உதவியாளர் பதவிக்கு குருநாகலை பிரதேச செயலகத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட 73 விண்ணப்பதாரர்களில் பெற வேண்டிய புள்ளிகளுக்கும் குறைவான மட்டத்திலான புள்ளிகளைப் பெற்றிருந்த 49 விண்ணப்பதாரர்கள் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர். | ஆட்சேர்ப்பின் போது சுற்றறிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சனாதிபதி செயலகச் சுற்றறிக்கைப் பிரகாரம் குறித்த விண்ணப்பங்கள் பிரதேச செயலகத்தால் மற்றும் கிராம உத்தியோகத்தர் அலுவலகங்களால் அனுப்பப்படுகையில் நடவடிக்கை எடுக்குமாறு அனைத்து பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | சனாதிபதி செயலக சுற்றறிக்கை அறிவுறுத்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாது குருநாகல் பிரதேச செயலகத்தின் பல்நோக்கு உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்க்கப்பட்டி ருந்தார். |
| 25 | குருநாகலை பிரதேச செயலகத்தில் பல்விடய அபிவிருத்திப் பணி உதவியாளர் பதவிக்குத் தகுதி உடையோரைத் தெரிவு செய்கையில் 2020 சனவரி 20 ஆந் திகதிய புதினப் பத்திரிகை விளம்பர் புறக்கணிக்கப்பட்டு 40 வயதுக்கு மேற்பட்ட 10 விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். . | தகுதி உடையோரை ஆட்சேர்ப்பதில் சிக்கல் ஏற்படாதவாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | புதினப் பத்திரிகை விடயப்பரப்பும் சுற்றறிக்கையும் சனாதிபதி செயலகத்தால் வெளியிடப்பட்டிருந்தது டன் சுற்றறிக்கைப் பிரகாரம் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்துக்கு ஏற்ப தேவையான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன. | ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு முரணாக குருநாகல் பிரதேச செயலகத்தின் பல்நோக்கு உதவியாளர் பதவிக்காக ஆட்சேர்க்கப்பட் டிருந்தார். |
| 26. | 2020 மே 14 ஆந் திகதிய 20/0796/212/015-1 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்திலிருந்து விலகியவாறு கொவிட் 19 காரணமாக வாழ்வது | அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். | 2020 மே 14 ஆந் திகதிய 20/0796/212/015-1 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தை | அமைச்சரவைத் தீர்மானத்திற்கு முரணாக இக்கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | கடினமாகியுள்ள வசதியற்ற குடும்பங்களுக்கு ரூபா 5,000 நலனளிக்கும் தொகையாக வழங்கப்படுகையில், சமுர்த்தி மாதாந்த உதவிப் பணமாக ரூபா 5000 பெறுபவர்களுக்கு இரண்டினதும் வித்தியாசத் தொகையே வழங்கப்பட வேண்டிடுமாயினும், சமுர்த்தி உதவிப் பணத்துடன் ரூபா 5,000 வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பிரதேச செயலகப் பிரிவில் 30 பிரிவுகளில் 173,316 சமுர்த்தி நலன் பெறுநர்களுக்கு ரூபா 424,346,960 கூடுதலாக வழங்கப்பட்டிருந்தது. | | உள்ளடக்கிய அறிவுறுத்தல்கள் மாவட்டச் செயலாளரால் பெறப்படவில்லை. சமுர்த்த அபிவிருத்தி பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கைப் பிரகாரம் ஏப்ரல் மாதத்திற்கான சலுகைக் கடன் மே மாதத்திற்கான சமூக நலனாக வழங்கப்பட்டுள்ளது. | |
| 27. | 2020 ஆம் ஆண்டில் 22 நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ரூபா 67.3 மில்லியன் நிதி ஏற்பாடு செய்யப்பட்ட போதும், முன்னேற்றம் காணப்படவில்லை. 2020 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடங்கிய 12 நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்படவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கினை செயல் நடவடிக்கைத் திட்டத்தின்படி இயன்றவரை செயல்படுத்த வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டத்தினை இயன்றளவு நிறைவேற்றுமாறு அனைத்து பொறுப்பு வாய்ந்த தரப்பினர்களுக்கு தெரியப்படுத்தி இருந்த போதிலும் மாவட்டச் செயலகத்திற்காக ஒதுக்கங்கள் பெறப்படும் போது நாட்டில் நிலவிய கொரோனா சூழ்சிலை காரணமாக மக்கள் / வாடிக்கையாளர்களைத் திரட்ட முடியவில்லை. | நிலைபேறான அபிவிருந்தி நோக்கம் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |